# இலக்கணம்: பொருளதிகாரம் (தொல்காப்பியம்)
# (இளம்பூரணம்)

**பார்வை நூல்:**

**மு. இராகவய்யங்கார் - தொல்காப்பிய ஆராய்ச்சி**


| கூறு | பாடங்கள் | பக்கம் |
|---|---|---|
| 1 | அகத்திணையியல் | 2 |
| 2 | புறத்திணையியல் | 32 |
| 3 | களவியல் | 62 |
| 4 | கற்பியல் | 91 |
| 5 | பொருளியல் | 110 |
| 6 | மெய்ப்பாட்டியல் | 125 |
| 7 | உவமயியல் | 150 |
| 8 | செய்யுளியல் | 167 |
| 9 | மரபியல் | 230 |
| 10 | பொருளிலக்கணக் கொள்கைககளின் விளக்கம்: தமிழ்க் காதல் - வ.சுப மாணிக்கம் (நூல் முழுவதும்) | |

# தொல்காப்பியம் - பொருளதிகாரம்

## கூறு: 1

## அகத்திணை இயல்

### பொருளதிகாரத்தின் சிறப்பு இயல்கள்:

ஒல்காப் பெரும்புகழ் வாய்ந்த தொல்காப்பியரால் இயற்றப்பெற்ற தொல்காப்பியம் என்னும் இலக்கணக்கடல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டது. இது தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூலும் ஆகும். எழுத்திலக்கணமும் சொல்லிணக்கணமும் உணர்த்திய பின்னர் பொருளிலக்கணத்தைத் தெளிவு செய்கின்றார் ஆசிரியர். எழுத்தையும் சொல்லையும் கருவியாக-அடிப்படையாகக் கொண்டு உணர்ந்து கொள்ளப் பெறுவதே பொருள் நெறி. அதுவே வைப்பு முறையும் ஆகும்.

தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமன்று இலக்கிய நூலும் ஆகும் என்ற சிறப்பிற்கு இலக்கணமாக அமைந்துள்ளது இப்பொருளதிகாரமே. இலக்கியம் என்பது காலக் கண்ணாடி எள்ளிலிருந்து எண்ணெய் போல:
வயலுக்கு வரப்பு போல இலக்கியத்திலிருந்து பிறக்கின்ற இலக்கணம் அவ்விலக்கிய வயலுக்கு வரம்பாகவும் விதிமுறைகளை வகுத்தளிக்கிறது என்பதனை இப்பொருளதிகாரம் கற்பார் நன்கு விளங்கிக் கொள்வர்.

காதலையும் வீரத்தையும் தமது இருகண்களாகக் கொண்டு வாழ்ந்த சங்ககால மக்களின் அகம் மற்றும் புற வாழ்வியல் முறைகளைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது பொருளதிகாரம். இவ்வதிகாரம் அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இயல்கள் அனைத்தும் வாழ்க்கைக்கும், செய்யுள் இலக்கியத்திற்கும் இலக்கணம் கூறுவதாக அமைந்துள்ளது இவ்வதிகாரத்தின் தனிச்சிறப்பு ஆகும்.

இயல் பெயர்களுள் முதல் இரண்டு இயல்கள் திணை என்ற பெயரைப் பெற, ஏனையவை வெறும் இயல் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது நோக்கத்தக்கது. திணை என்பதற்கு ஒழுக்கம் என்ற பொருளும் உண்டு. சங்ககால மக்களின் வாழ்வியல் ஒழுக்க நெறி அகம், புறம் என்ற இரண்டின் பாற்பட்டது என்பதனை இப்பெயர் விளக்குவதாக உள்ளது. அத்துடன் அகத்திணையியல், களவியல், கற்பியல் என்ற மூன்று இயல்களில் அகம் பற்றி விளக்கி புறத்திணையியல் என்ற ஒரு இயலில் புறம் பற்றி விளக்கியுள்ள முறை சங்ககால மக்களின் வாழ்வியலில் அகவாழ்வு பெற்றிருந்த சிறப்பிடத்தை விளக்குவதாக அமைகின்றது.

இனி, முதல் இயலாக அமைந்துள்ள அகத்திணையியலின் செய்திகளை விரித்தும் தொகுத்தும் அறிவோம்.

## அகத்திணையியல்

அகத்திணைக்கெல்லாம் பொது இலக்கணம் உணர்த்துதலால் அகத்திணையியல் என்னும் பெயர் பெற்றது. இது மக்கள் வாழ்வின் காதல் அறமாண்புகளைச் செவ்விதின் விளக்கும் பகுதி ஆகும்.

ஒத்த அன்பினால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவர் தத்தமக்குப் புலனாக நிற்குமேயன்றிப் புறத்தார்க்குப் புலனாகாது என்ற இயல் நோக்கி இது அகம் எனப் பெயர்பெற்றது என்பர் இளம்பூரணர். அகத்தே நிகழுகின்ற இன்பத்திற்கு அறம் என்பது ஓர் ஆகுபெயராக அமைந்தது. இவ்வியல் சூத்திரங்களை இளம்பூரணர் 58 ஆகவும், நச்சினார்க்கினியார் 54 ஆகவும் கொண்டு உரை கூறியுள்ளார்கள்.

### இயல் செய்திகள்:

அகத்திணைகளின் எண்ணிக்கை - முப்பொருள் விளக்கம் - திணைப்பெயர் - திணைநிலைப்பெயர் மற்றும் - அகப்பொருள் மரபுகள் - பிரிவு வகைகள் - பிரிவுக்கூற்றுகள்- கைக்கிளை மற்றும் பெருந்திணை இலக்கணங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இனி, இவற்றை விரிவாகக் காண்போம்.

### அகத்திணை எண்ணிக்கை அல்லது – அகத்திணை விளக்கம்

அகத்திணை என்பது தமிழர் கண்ட காதல் நெறியாகும். இந்நெறி கொள்கைகளே திணை என்ற பெயரில் விளக்கப்பட்டுள்ளன.

"***கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்***

***முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (அகத்.1)***

என்ற நூற்பா கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக உள்ள அகத்திணைகள் ஏழு என்று கூறுகிறது. அவையாவன: கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை ஆகும்.

முற்படக் கிளந்த எழுதிணை எனவே பிற்படக் கிளக்கப்படுவன (கூறப்படுவன) ஏழு திணைகள் உள என்பதும் பெறப்படும் எனக் கூறி, அவை வெட்சி முதலாகப் பாடாண் திணை ஈறாக உள்ள புறத்திணைகள் என்று இளம்பூரணர் விளக்குகின்றார்.

இவற்றுள் கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். கை என்பது சிறுமை என்ற பொருள் பற்றியது. கிளை என்பது உறவு. எனவே பெருமை இல்லாத தலைமக்கள் உறவு கைக்கிளை ஆகும். கைக்குட்டை, கையேடு, கைவாள், என்ற உலக வழக்கிலும் கை என்பது சிறியது என்ற பொருள் தருவது நோக்கற்பாலது.

பெருந்திணையாவது பொருந்தாக் காமம். ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்து வருவது. வடவர் கூறும் எண்வகை மணத்தினுள்ளும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன பெருந்திணைப் பாற்படுவது. இவை நான்கும் மேன்மக்கள் இடத்து நிகழ்பவை. மேலும் இவையே உலகினுள் பெருவழக்கு என்பதாலும் இது பெருந்திணை என்று பெயர்பெற்றது என்பர்.

மேற்குறிப்பிட்ட எழுதிணையுள் கைக்கிளை, பெருந்திணை நீங்கலாக நடுவிலுள்ள ஐந்தும் நடுவண் ஐந்திணை எனப் பெயர் பெறும். அன்பின் ஐந்திணை என்றும் சிறப்பிக்கப்பெறும். அஃதாவது ஒத்த அன்புடைய தலைவன் தலைவியரிடை தோன்றும் காதலாகும்.

**நடுவண் ஐந்திணையுள் நிலம் பெறுவன:**

முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்ற நடுவண் ஐந்திணையுள் நடுவதாகிய பாலை ஒழிய ஏனைய நான்கும் நிலம் பெறும் இயல்பினை உடைத்து, இச்செய்திகளை, அவற்றுள்

"*நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்*
*படுதிரை வையம் பாத்திய பண்பே" (அகத்.2)*

என்ற சூத்திரம் விளக்குகின்றது.

அகத்திணைக்கு இணையாகப் புறத்திணையும் ஏழு என்று வகுக்கப்பட்டுள்ளது. இவற்றை,

| | | |
|---|---|---|
| அகம் | - | புறம் |
| குறிஞ்சி | - | வெட்சி |
| முல்லை | - | வஞ்சி |
| மருதம் | - | உழிஞை |
| நெய்தல் | - | தும்பை |
| பாலை | - | வாகை |
| கைக்கிளை | - | பாடாண் |
| பெருந்திணை | - | காஞ்சி |

என்று பின்வரும் புறத்திணையியல் வகுக்கின்றது.

**அகப்பாடல்களில் பொருள் முறைமை:**

சான்றோர் செய்யுளகத்து இடம்பெறும் அகப்பொருள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், என்று மூன்று வகைப்படும். இந்த மூன்றின் அடிப்படையில் பாடல் பொருள் சிறப்பிக்கப்பெறும் என்பதனை,

"*முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே*
*நுவலுங்காலை முறைசிறந் தனவே*
*பாடலுள் பயின்றவை நாடுங் காலை"* (*அகத். 3)*

என்று உரைத்துள்ளார் தொல்காப்பியர்.

முறைமையிற் சிறத்தலாவது ஒரு செய்யுளில் முதல், கரு, உரி என்ற மூன்றும் வரின் முதற்பொருளால் திணையும், கருப்பொருளும், உரிப்பொருளும் வரின் கருப்பொருளால் திணையும், உரிப்பொருள் மட்டுமே வரின் அதனால் திணை அமையும் என்று இளம்பூரணர் உரை கூறியுள்ளார்.

### முப்பொருள் விளக்கம்:

### முதற் பொருள்:

"***முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்***

***இயல்பென மொழிப இயல்பு உணர்ந்தோரே" (அகத்.4)***

என்ற சூத்திரத்தின்படி, நிலம் பொழுது(காலம்) இவற்றின் இயல்புகளைக் கூறுவது முதல் பொருளாகும். அவற்றுள் நிலமாவது காடுரை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம் என்று நில இயலின் அடிப்படையில் நான்காகப் பகுக்கப்பெற்றுள்ளது. அவை முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என பெயர்பெற்றன. நிலங்களின் பெயரினைச் சுட்டுகின்ற ஆசிரியர் அவற்றை அந்நிலங்களுக்குரிய தெய்வங்களோடு இணைத்துச் சுட்டுகின்ற நிலம் நோக்குதற்குரியது. அவற்றை அந்நிலங்களுக்குரிய தெய்வங்களோடு இணைத்துச் சுட்டுகின்ற நிலம் நோக்குதற்குரியது.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர்தம் வாழ்க்கை எளிமையானது. இன்பம் நிறைந்தது. அன்பும் அறமும் தழுவப்பெற்றது. எனவே அவர்தம் வாழ்வில் தெய்வத்திற்கு முதலிடம் கொடுத்து வாழ்ந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை. முதற்பொருளில் ஒன்றான நிலம் பற்றிச் சுட்டும் தொல்காப்பியர் கருப்பொருட்களில் ஒன்றாகிய தெய்வத்தையும் இணைத்தே காட்டுகிறார். முல்லை, குறிஞ்சி, எனும் நிலப்பெயர்கள் காரணக்குறியோ? அல்லது இடுகுறியா?

மேற்கண்ட வினாவிற்கு இளம்பூரணர் விடை கூறும்போது காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்பர், எடுத்துக்காட்டாக,

"***நெல்லோடு***

***நாழிகொண்ட நறவீ முல்லை***

***அரும்பவிழ் அலரி தூஉய்"***

என்ற வரிகள் காடும் காடு சார்ந்த பகுதியாகிய முல்லை நிலத்திற்கு முல்லைப்பூ சிறந்தது என உணர்த்துகிறது.

"***கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு***

***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்-3)***

என்ற வரிகள் மலையும் மலைசார்ந்த பகுதியாகிய குறிஞ்சிக்குக் குறிஞ்சி மலர் சிறந்தது என உணர்த்துகிறது.

"***இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்***

***தாழ்சினை உறங்குந் தண்துறை ஊர"*** ***(அகம்.286)***

என்ற வரிகள் வயலும் வயல்சார்ந்த பகுதியாகிய மருதத்திற்கு மருதம் சிறப்புடையது என்று உயர்த்துகிறது.

"***பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்***
***இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்***
***கயமூழ்கிமகளிர் கண்ணின் மானும்" (குறுந்-9)***

என்ற வரிகளால் கடலும் கடல் சார்ந்த பகுதியாகிய நெய்தலுக்கு நெய்தல் மலர் சிறந்தது என்று அறிகிறோம்

பாலை என்பது மணல், மணல் சார்ந்த வறண்ட நிலம் ஆகும். இப்படிப்பட்ட குறிப்பிட்ட நிலம் இல்லை என்றாலும் வேனில்காலத்துக் காணப்படுவதொரு நிலம் ஆகும் என்றும் அவ்வேனிற்காலத்தும் தளிரும் சினையும் வாடுதல் இன்றி நிற்கும் பாலை என்பதோர் மரம் உண்டு. அது பற்றி அந்நிலம் பாலை என்னும் பெயர் பெற்றது என்று நிலப் பெயர்களுக்கான காரணம் காட்டுகின்றார் இளம்பூரணர். இப்பெயர் அமைப்புகள் சங்க கால மக்களின் இயற்கை ஈடுபாட்டினையும் உணர்த்துவதாக உள்ளது அவ்வந்நிலத்தில் சிறப்பாக மலருகின்ற மலர்ப்பெயரே அவ்வந்நிலத்தின் பெயராக அமையப்பெற்றது.

**பொழுது அல்லது காலம்:**

காலம் என்பதைத் தொல்காப்பியர் பொழுது என்று குறிப்பிடுகிறார். இது உலக நிகழ்வுகளுக்குத் துணையாய், முன்னும் பின்னும் நடுவுமாகி என்றும் உள்ளத்தோர் அருவப் பொருள். பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். பெரும்பொழுது, என்பது ஓர் ஆண்டின் காலப்பிரிவு. அவையாவன: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறாகும்.

சிறுபொழுது என்பது ஒரு நாளின் காலப்பிரிவு அல்லது உட்கூறு. அவையாவன: மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என ஆறாகும்.

மாலை என்பது இராப்பொழுதின் முதற்கூறு: யாமம் - நடுப்பொழுதின் நடுக்கூறு: வைகறை - இராப்பொழுதின் பிற்கூறு: விடியல் - பகற்பொழுதின் முதற்கூறு: நண்பகல் - பகற்பொழுதின் நடுக்கூறு: எற்பாடு – கதிரவன் படும்(மறையும்) பொழுது என விளக்குகின்றார் இளம்பூரணர்.

ஒவ்வொரு திணைக்கும் உரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுதுகளைத்
தொல்காப்பியர் ஏழு நூற்பாக்களில் அமைத்துள்ளார் அவையாவன:

***காரும் மாலையும் முல்லை. குறிஞ்சி,***
***கூதிர் யாமம் என்மனார் புலவர்***
***பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப***
***வைகறை விடியல் மருதம். எற்பாடு***
***நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.***

*நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலோடு*
*முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே*
*பின்பனிதானும் உரித்தென மொழிப (அகம்.6 -12)*

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| 1. முல்லை | கார்காலம் | மாலை |
| | (ஆவணி, புரட்டாசி) | |
| 2. குறிஞ்சி | கூதிர்(ஐப்பசி, கார்த்திகை) | |
| | முன்பனி (மார்கழி, தை) | யாமம் |
| 3. மருதம் | கார், கூதிர், முன்பனி, | |
| | பின்பனி (மாசி, பங்குனி) | |
| | இளவேனில் (சித்திரை, வைகாசி) | வைகறை |
| 4 .நெய்தல் | பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| 5. பாலை | இளவேனில்,முதுவேனில்(ஆனி,ஆடி)பின்பனி | நண்பகல் |

பொழுதுகள் ஐந்திணைக்கும் பொருந்துமாற்றை இளம்பூரணர் இன்னவாறு விளக்குகிறார்.

**முல்லை:**

முல்லை நிலத்திற்கு உரிய பெரும்பொழுது கார்காலம் ஆகும். வேனிற்காலத்து வெப்ப மிகுதியால் மரமும், புதரும், கொடியும் அழகிழ்ந்து வாடிக் கிடந்தன. கார்காலத்தில் மழை பெய்ய இந்நிலம் அழகு பெறுதலால் கார்காலம் முல்லைக்கு உரித்தாயிற்று.

சிறுபொழுது மாலை நேரம். இந்நேரம் முல்லை மலரும் காலம். முல்லை நிலத்தின் கருப்பொருளாகிய ஆநிரைகள் இல்லத்திற்குத் திரும்பிவரும் காலம். மேலும் தலைவனைப் பிரிந்து ஆற்றியிருக்கும் இந்நிலத் தலைவியருக்கு முல்லை மலர்தல், ஆநிரைகள் மீண்டு வரல் ஆகியன கண்டபோது வருத்தம் மிகும் ஆதலாலும் மாலைநேரம் முல்லைக்குரிய சிறுபொழுது ஆயிற்று.

**குறிஞ்சி, கூதிர், யாமம்:**

குறிஞ்சிக்குப் பெரும்பான்மையும் களவிற்புணர்ச்சியே ஒழுக்கம் ஆகும். இப்புணர்ச்சிக்குத் தனியிடம் வேண்டும். கூதிர் காலத்தில் பகலும் இரவும் நுண்நுளி சிதறுவதால் ஆங்கு இயங்குவோர் இலர். அச்சூழலில் தலைவனும், தலைவியும் சந்தித்தல் எளிதாயிற்று. யாமப் பொழுதினும் இயங்குவார் இலர். அப்போது புணர்ச்சிக்கு வாய்ப்பு மிகுதி எளிது. எனவே கூதிர், யாமம் குறிஞ்சிக்காயிற்று.

**மருதம், வைகறை, விடியல்:**

வைகறை என்பது இராப்பொழுதின் பிற்பகுதி; விடியலாவது பகற்பொழுதின் முற்பகுதி. வயலும் வயல் சார்ந்த பகுதியுமாகிய மருத நிலத்தில் வாழ்பவர் மேன்மக்கள். ஆடவர் பரத்தையின் பிரிந்த வழி, அவர் அங்குத் தங்கியதை மறைக்க வேண்டி வைகறையில் தம் வீடு நோக்கி வருவர். இதனால் மனைவி ஊடல் கொள்வாள். இவ்வூடல் விடியற்காலத்தும் நீட்டிக்கும். எனவே வைகறை, விடியல் மருதத்திற்காயிற்று.

**நெய்தல்:**

நெய்தலின் உரிப்பொருள் இரங்கல் ஆகும். தலைவனைப் பிரிந்த தனிமையில் வருந்துவோர்க்குப் பகற்பொழுதைக் காட்டிலும் இராப்பொழுது மிக்குத் தோன்றும். அம்மாலை நேரம் வருவதற்குக் காரணமான ஏற்பாடு கண்டார், இனி வருவது மாலை என்று வருத்தம் கொள்வார்.

(எல்பாடு – எற்பாடு, எல் - பகலவன்; பாடு – படுதல்)

**பாலை:**

பாலையின் உரிப்பொருள் பிரிவு, பிரிவின் போது தலைமகனுக்குத் துன்பம், ஏற்படும் என்று தலைமகள் வருந்துவாள், நிழலும் நீரும் இல்லாத வழியில் செல்வாரே என்று பெரிதும் கவலை கொள்வாள். நிழலும் நீரும் இல்லாமைக்கு வேனிற் காலமும் நண்பகலும் சிறக்குமாதலால் வேனிலும் நண்பகலும் பாலைக்கு ஆயின என்று இளம்பூரணர் விளக்குகிறார்.

கருப்பொருளாவது யாது?

இடத்தினும் காலத்தினும் அவ்வந்நிலத்தில் தோன்றும் பொருட்களே கருப்பொருள் ஆகும். அதாவது முதற்பொருட்கள் தோன்றும் பொருள்கள்.

அவையாவன : தெய்வம், உணவு, மா, மரம், பறவை, பறை, தொழில், யாழ் மற்றும் அத்தன்மையன பிற. புல் முதல் மக்கள் ஈறாக உள்ள உயிர்ப்பொருள்களும் ஏனைய உயிரல் பொருள்களாகும். இன்னின்ன கருப்பொருள் இன்னின்ன நிலத்திற்கு என்று தொல்காப்பியர் விரித்துரைக்கவில்லை. எனினும் இளம்பூரணர் தம் உரையில் அதனைத் தெளிவு செய்கிறார். அதனைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

## ஐவகை நிலங்களுக்கான கருப்பொருள்கள்

| கருப்பொருள் | முல்லை | குறிஞ்சி | பாலை | மருதம் | நெய்தல் |
|---|---|---|---|---|---|
| 1. தெய்வம் | திருமால் | முருகன் | கொற்றவை | இந்திரன் | வருணன் |
| 2. உணவு | வரகு, முதிரை | தினை, ஐவனம் | வழிப்பறிப் பொருள் | நெல் | உப்பு, மீன் விற்று வந்த பொருள் |
| 3. மா(விலங்கு) | மான், முயல் | யானை, எலி, பன்றி, கரடி | யானை,எலி செந்நாய் | எருமை, நீர்நாய் | சுறா |
| 4. மரம் | கொன்றை, புதல்,குருத்து | வேங்கை கோங்கு | பாலை இருப்பை | மருதம், தாழை | புன்னை |
| 5. புள்(பறவை) | கானாங்கோழி | மயில், கிளி பருந்து | எருமை, அன்றில் | அன்னம் | கடல்காகம் |
| 6. பறை | ஏறுகோள் | வெறியாட்டு | ஆறலை | நெல்லரி | நாவாய் |
| 7. செய்தி (தொழில்) | ஆநிரை மேய்த்தல் | தேன்எடுத்தல் | வழிப்பறி | உழவு | மீன்பிடித்தல் |
| 8. பண் | சாதாரி | குறிஞ்சி | பாலை | மருதம் | செவ்வழி |
| 9. பிற 1. பூ | முல்லை | குறிஞ்சி, வேங்கை, காந்தள் | பாலை, மராம் | தாமரை, கழுநீர் | நெய்தல் |
| 2. நீர் | காட்டாறு | சுனை,அருவி | வறண்ட கூவல்நீர் | ஆற்றுநீர் குளநீர் | கேணி, கடல்நீர் |

**உரிப்பொருள்:**

ஒவ்வொரு திணைக்கும் உரிய காதல் ஒழுக்கமே உரிப்பொருள் ஆகும். அது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஐவகையும் அவற்றின் நிமித்தமும் ஆகும்.(நிமித்தம் நிகழ்வு). இவை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் அந்தந்த திணைக்குப் பெரும்பான்மை உரியதாகவும், சிறுபான்மை எல்லாப் பொருளும் எல்லாத்திணைக்கும் உரியதாகவும் கொள்ளப்படும்.

இவற்றுள் இருத்தலாவது, பிரிந்து சென்ற தலைவன் வருமளவும் ஆற்றியிருத்தல். இரங்கலாவர் ஆற்றாமை.

மேற்குறிப்பிட்ட உரிப்பொருள்கள் தவிர, கொண்டு தலைக்கழிதல், பிரிந்தவண் இரங்கல் என்ற இரண்டு உரிப்பொருள் ஒழுக்கங்களை,

"***கொண்டு தலைக் கழிதலும் பிரிந்து அவன் இரங்கலும்***
***உண்டென மொழிப ஓரிடத்தான்"*** ***(அகத்17)***

என்ற சூத்திரத்தில் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

இளம்பூரணர் இவற்றை விளக்கும்போது கொண்டு தலைக்கழிதல் பாலையிலும், பிரிந்தவண் இரங்கல் பெருந்திணைக் கண்ணும் இடம்பெறும் என்கிறார். கொண்டு தலைக் கழிதலாவது தலைவியை உடன் கொண்டு பெயர்தல். இந்நிகழ்வு நிலம் பெயர்ந்து (கடந்து) செல்லுதலால் புணர்தல் என்ற உரிப்பொருளுள் அடங்காது. உடன்கொண்டு செல்லுதலால் பிரிதல் என்ற உரிப்பொருளினுள் அடங்காமையின் தனியே கூறப்பட்டது.

பிரிந்தவன் இரங்கல் என்பது தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் பிரிந்து இடத்து இரங்கல். அது நெட்டாறு (நீண்ட தொலைவு) சென்ற வழி இரங்குதல் இன்மையாலும், ஊரின் கண் பிரிந்திருக்கும் போது(ஒருவழித் தணந்தபோது) ஆற்றியிருக்க இயலாது. வேட்கை மிகுதியால் இரங்குதலான் இது இரங்கல் என்ற உரிப்பொருளினுள் அடங்காது வேறு ஓதப்பட்டது என்கிறார். இதனை ஏறியமடல்திறம் மற்றும் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்று விளக்கி, பெருந்திணைக்கு உரியன என்பர்.

தொடர்ந்து,

"***கலந்த பொழுதும் காட்சியும் அருண"*** ***(அகத்.18)***

என்ற நூற்பாவழி தலைவனைக் காணுற்றவழி(பார்த்த போது) மனநிகழ்ச்சி ஏற்படும் காலமும், பின்னர் மனக்குறிப்பு அறியும் வரை நிகழும் நிகழ்ச்சியும், தலைவியை எதிர்படுதலும் ஓரிடத்து நிகழும் உரிப்பொருளாகும் என்ற செய்தி இடம்பெறுகின்றது.

இவை புணர்த்தல் நிமித்தமும் ஆயினால் ஏற்படும் குற்றம் என்ன? என்று வினவுவார்க்கு,

ஒருவன் ஒருத்தியை எதிர்ப்பட்டபோது புணர்ச்சி விருப்பு தோன்றலும் தோன்றாமையும் உண்டு. ஐயம், தெளிவு, துணிவு மற்றும் குறிப்பறிதல் போன்ற மன நிகழ்வுகள் தலைமகளிடத்துக் காமக்குறிப்பு இல்லாதவழிக் காமக்குறிப்பு உணராது கூறுதலின் புணர்தல் நிமித்தம் அன்று ஆயிற்று என்பர் இளம்பூரணர்.

(அகத். 17-19) இத்துணையும் கூறப்பட்டது உரிப்பொருள் பற்றியது.

இதனைத் தொடர்ந்து திணைமயக்கம் கூறுகின்றார். முதல், கரு, உரி என்னும் மூவகைப் பொருளும் திணை என்ற பெயரால் வழங்கப் படுகின்றது. நிலமும் காலமும் முதற்பொருள் இவற்றில் கருக்கொண்டு வருவன கருப்பொருள். இவை குறித்து நிகழ்வன உரிப்பொருள்.

***திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே***
***நிலனொருங்கு மயங்குதல் இன்றென மொழிப***
***புலன்நன் குணர்ந்த புலமை யோரே***

என்ற சூத்திரம் திணைமயக்கம் பற்றியதாகும். தொல்காப்பியர் திணைமயக்குறுதல் என்று சுட்டுகிறார். இந்நூற்பாவின்படி முதல், கரு, உரி - முப்பொருள்களுள் முதலும் கருவும் மட்டுமே மயங்குவதற்கு உரியன. இவற்றுள்ளும் முதற்பொருளில் நிலம் மயங்காது. காலம் மட்டுமே மயங்கும் என்பது தெளிவாகிறது.

ஒருதிணைக்குரிய முதற்பொருளும், கருப்பொருளும் மற்றொரு திணைக்குரிய முதற்பொருளுடனும், கருப்பொருளுடனும் சேர நிற்பது திணைமயக்கம் ஆகும். இதனை உரிப்பொருள் அல்லன் மயங்கவும் பெறுமே (அகத்.15) என்ற சூத்திரம் தெளிவுறுத்துகிறது. நச்சினார்க்கினியர் மூன்றும் மயங்குதற்குரியன என்பர்

மயங்கவும் என்பதிலுள்ள உம்மை எதிர்மறை பொருளது. எனவே மயங்காமையே பெரும்பான்மை என்பது இளம்பூரணர் விளக்கம்.

காலம் மயங்குவதற்கு எடுத்துக்காட்டு:

***தொல் ஊழி தடுமாறி….எனத் தொடங்கும் கலித்தொகை-நெய்தல் -12ம் பாடலில்இ***
***“மெல்லியான் பருவம்போல் மயங்கிருள் தலைவா***
***எல்லைக்கு வரம்பாய இடும்மைகூர் மருள்மாலை***
***பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்***
***தூவறத் துறந்தனன் துறைவன்”***

என்பதில் முல்லைக்குரிய மாலைக்காலம் மயங்கியது.

“***ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்***
***ஊசிபோகிய சூழ்செய் மாலையன்***
***பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்***
***குயமாண்டகம் செஞ்சாந்து நீவ” (அகநா.48)***

**(செச்சை-வெட்சி மலர்)**

என்னும் பாடலில் மருத நிலத்தின் கருப்பொருளாகிய செங்கழுநீரும் குறிஞ்சி நிலத்திற்குரிய வெட்சிபூவும் அணிந்தோன் என கருப்பொருள் மயங்கி வந்துள்ளது.

யாதானும் ஒரு நிலத்திற்குரிய பூவும் புள்ளும் அந்நிலம் மற்றும் பொழுதோடும் வந்திலவாயினும் அந்த நிலத்தின் பயத்தவாகும்(உரியதாகும்) என்றும் உரை கூறுகின்றார் இளம்பூரணர்.

## திணைப்பெயர் அல்லது மக்கட் அமைவு

அகப்பாடல்களில் பாத்திரங்களின் இயற்பெயர் சுட்டிக்கூறுதல் மரபன்று என்பதனை அகத்திணை இயலின் இறுதியில் இடம்பெறுகின்றதை,

"***மக்கள் நுதலி அகன் ஐந்திணையும்***
***சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்" (அகத்.57)***

என்ற சூத்திரம் உணர்த்துகிறது. அதனை அடுத்து வருகின்ற

"***புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது***
***அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே" (அகத்.58)***

என்ற சூத்திரம் புறப்பாடல்களில் இயற்பெயர் சுட்டப்பெறலாம் என்று எடுத்துரைக்கின்றது. எனவே அகப்பாடல்களில் நாடன், ஊரன், சேர்ப்பன் என்பனபோன்ற பொதுப்பெயர்களே இடம்பெறுதல் வேண்டும்.

இப்பொதுப்பெயர்களே திணைநிலைப்பெயர்கள் என்று சுட்டப்படுகின்றன. இதனை,

"***பெயரும் வினையுமென்று ஆயிரு வகைய***
***திணைதொறும் மரீஇய திணைநிலைப்பெயரே" (அகத்.22)***

என்ற நூற்பா வழி அறியலாம்.

துணைநிலைப்பெயர் குலப்பெயர், தொழிற்பெயர் என இரண்டு வகைப்படும். திணைநிலைப்பெயர் உடையார் பிற நிலத்து இலர் என்று கொள்ளப்படும். எனவே எல்லா நிலத்திற்கும் உரியவராகிய மேன்மக்கள் இங்குக் கருதப்படமாட்டார்கள். நிலம் பற்றி வாழும் கீழ்மக்களே இங்குக் குறிப்பிடப்படும் திணைநிலை மக்களாவர். இப்பெயர் ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் எனவும் அமையும்.

"***ஆயர் வேட்டவர் ஆடூஉத் திணைப்பெயர்***
***ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே" (அகத்.23)***

என்னும் நூற்பா முல்லை நிலத்திற்குரிய மக்கள் பெயர்களை உணர்த்துகிறது. இவற்றுள்ளும் கிழவர்(அந்நில உரிமையுடையோர்: கிழமை-உரிமை) இருவகைப்படுவர்.

1. நிலத்தை ஆட்சி பெற்றோர் - குறும்பொறை நாடன்

2. ˙நிலத்து உள்ளோர்-பொதுவன், ஆயன் நிலத்து உள்ளோர் என்பவர் குலம் பற்றி வந்தவர் இவ்வாறு குறிஞ்சி முதலாகிய ஏனைய திணைக்கண் வரும் மக்கட்பெயர் ஆராயப்பெறும் என்பதனை

***"ஏனோர் மருங்கின் எண்ணுங்காலை***
***ஆனா வகைய திணைநிலைப் பெயரே"*** ***(அகத்,24)***

எனவரும் சூத்திரம் உணர்த்தும்.

## இளம்பூரணர் உரைப்படி அமையும் பெயர்கள்

| **நிலம்** | **மக்கள்பெயர்** | **தலைமக்கள் பெயர்** |
|---|---|---|
| குறிஞ்சி | குறவன், குறத்தியர் | மலைநாடன், வெற்பன் |
| பாலை | எயினர், எயிற்றியர் | மீளி, விடலை |
| மருதம் | உழவர், உழத்தியர் | ஊரன், மகிழ்நன் |
| நெய்தல் | நுளையர், நுளைச்சியர் | சேர்ப்பன், துறைவன் |
| முல்லை | ஆயர், ஆய்ச்சியர் | குறும்பொறைநாடன் |

**எடுத்துக்காட்டு:**

முல்லை வைந்துனை தோன்ற இல்லமொடு என்ற அகநானூறு-4ம் பாடலில், கானம்(காடு) கார்காலம் என்ற முதற்பொருளும், முல்லை, கொன்றை, இரலை(மான்) ஆகிய கருப்பொருள்களும் இருத்தல் என்ற உரிப்பொருளும் குறும்பொறை நாடன் என்ற திணைநிலைப்பெயரும் இடம்பெற்றுள்ளதால் இது முல்லைத் திணைப் பாடலாயிற்று. இதேபோன்று அகநானூறு 53, 44, 40 ஆகிய பாடல்கள் பாலை, மருதம், நெய்தல் திணையில் அமைந்துள்ளமை காண்க.

பாலைத் திணைக்கு உரிய பிரிவு பற்றிய பல கருத்துக்களை அகத்திணையியல் கூறுகின்றது. அவற்றை ஒரு சேர தொகுத்து காண்போம்.

"***இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்***
***உரிய தாகும் என்மனார் புலவர்"*** ***(அகத்13)***

என்ற சூத்திரத்தில் இருவகைப்பட்ட பிரிவுகள் உண்டு என்கிறார். அவ்வகைகளை எடுத்துரைப்பதில் உரையாசிரியர்கள் கருத்து வேறுபடுகின்றனர்.

1. தலைமகளை விட்டுவிட்டுத் தலைமகன் பிரிதல்
2. தலைமகளை உடன் அழைத்துக் கொண்டு தமரைப்(சுற்றத்தாரை)பிரிதல் என்று இளம்பூரணர் கூற நச்சினார்க்கினியரோ அவற்றை

1. காலிற் பிரிவு(நிலவழிப் பிரிவு) 2. கலத்திற் பிரிவு (கடல் வழிப் பிரிவு) என்று வகைப்படுத்துகின்றார். அடுத்து

***"ஓதல் பகையே தூது இவை பிரிவே"*** ***(அகத் 27)***

என்ற சூத்திரம் பிரிவின் வகைகளைச் சுட்டுகிறது.

**ஓதற்பிரிவு:**

கல்வி கற்பதற்காகத் தலைவன் பிரிதல். நமது நாட்டகத்து வழங்காமல் பிறநாட்டகத்து வழங்கும் நூல்களைக் கற்க வேண்டிப் பிரிதல்.

**பகைப்பிரிவு:**

பகை அரசரோடு போர் கருதிப் பிரிதல்

**தூதுப்பிரிவு:**

இருபெருவேந்தரைச் சந்து செய்வித்தல் பொருட்டுப் (சமாதானம் செய்தல்) பிரிதல்.

"***ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன***" ***(அகத் 28)***

என்று சுட்டுவதால் ஓதற்பிரிவும் தூதுப்பிரிவும் உயர்ந்தோர் மதிக்கப்பட்ட அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியதாகும். இவர் ஒழுக்கம், குணம், செல்வம் இவற்றால் ஏனையோரின் உயர்புடையர் என்பவர் இளம்பூரணர்.

அரசர் தூதாகியவாறு வாசுதேவன் செய்தி உணர்த்தும்.

"***வயலைக் கொடியின் வாடிய மருங்கல்***
***உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்***
***எல்லி வந்து நில்லாது புக்குச்***
***சொல்லிய சொல்லோ சிலவே***" ***(புறம்: 305)***

என்னும் பாடலில் பார்ப்பார் தூதராகியவாறு இடம்பெற்றுள்ளது.

"***தானே சேறலும் தன்னொடு சிவணிய***
***ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே***" ***(அகத்: 29)***

எனச் சுட்டுவதால் பகைப்பிரிவு தானே சேறல், தன்னொடு பொருந்திய ஏனையோர் சேறல் என இருவகைப்படும் என்பது பெறப்படுகிறது. இவற்றுள் அரசன் சொல்லுதலைப் பசைதணிவினைப் பிரிவு என்றும் அவனோடு ஏனோரும் செல்லுதலை வேந்தற்குற்றுழிப் பிரிவு என்றும் இளம்பூரணர் வகுப்பர்.

இம்மூவகைப் பிரிவு தவிர, தேவர் பொருட்டு விழா மற்றும் பூசை நடத்துவதற்கான பிரிவு, நால்வகை நிலத்திலும் மக்கள் முறைமையிற்(ஒழுக்கம்) தவறியவழி தப்பாது அறம் நிறுத்தல் வேண்டிப்பிரிவு, மற்றும் சிறந்த பொருள் தேடுதற்கான பிரிவும் உண்டு என்பதனை அகத்திணையியல் 30வது சூத்திரம் உணர்த்துகிறது.

**தேவர் காரணமாகப் பிரிவு:**

"***அரம்போழ் அவ்வளை தோள்நிலை நெகிழ என்ற பாடலில் (அகம்:125)***

***கைதொழு மரபிற் கடவுள் சான்ற***

***செய்வினை மருங்கிற் சென்றோர்"***

என்னும் வரிகளைக் காண்க.

சேரன் செங்குட்டுவன் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்வதற்குப் பிரியும் பிரிவும் இதுபோன்றதே.

பரத்தையர் பிரிவும் உண்டு என்றாலும், அது நிலம் பெயர்ந்து உறையாமையாலும், இவை போல் சிறக்காமையாலும், அறம் மற்றும் பொருள் காரணம் ஆகாமையாலும் அதுபற்றிக் கற்பியலுள் பேசப்படும் என்பது இளம்பூரணர் விளக்கம்.

மேலோராகிய தேவர் காரணமாகப் பிரியும் பிரிவு அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வர்க்கும் உரியது. மன்னர் பக்கமாகிய காவல் பிரிவு மன்னர் பின்னோராகிய வணிகர்க்கும், வேளாளர்க்கும் உரியது. பின்னோர் எனப்பட்டவராகிய இவ்விருவரில் உயர்ந்தவரான வணிகர்க்கு ஓதற்பிரிவு உண்டு என்பன போன்ற கருத்துக்களை,

"***மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே***

***மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப***

***உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தினான்" (அகத்: 31-33)***

என்ற சூத்திரங்கள் உணர்த்துகின்றன.

"***வேந்து வினையாகிய தூது வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரியது. மேலும்,***

***பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே" (அகத்: 35)***

என்பதால் வணிகரும் வேளாளரும் பொருள் காரணமாகப் பிரிவர் என்பது பெறப்பட்டது.

பொருள் காரணமாக அந்தணர் பிரிவர் என்றாலும் ஒழுக்கம் அடிப்படையில் பிரிவர் என்பது,

"***உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தானே" (அகத்: 36)***

என்றவழி உணரப்பட்டது. அந்தணர் இயற்கை ஒழுக்கமாகிய ஆசாரமும், செயற்கை ஒழுக்கமாகிய கல்வியும் பொருளெனக் கொண்டு பிரிவர் என்பர் இளம்பூரணர்.

காலிற்பிரிவு, கலத்திற்பிரிவு என்ற இருவகைப் பிரிவுகளும் கலத்திற் பிரிவின் போது தலைமகன் தலைமகளை உடன் அழைத்துச் செல்லுதல் இல்லை என்பதை,

"***முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை" (அகத்:37)***

என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. இதனை அகநானூறு 255 பாடல் வழி உணரலாம்.

இக்கருத்துக்களைத் தொடர்ந்து பிரிவின் வழி நடைபெறும் கூற்றுவகைகளை எடுத்து மொழிகின்றார்.

பிரிவில் நற்றாய், தோழி, கண்டோர், தலைவி, தலைவன் மற்றும் எஞ்சியோர் (ஏனையோர்) கூற்று நிகழ்த்துதற்கு உரியர் ஆவர்.

**நற்றாய் கூற்று:**

*"தன்னும் அவனும் அவளும் சுட்டி*
*மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்*
*நன்மை தீமை அச்சம் சார்தல் என்று*
*அன்ன பிறவும் அவற்றொடு தொகை*
*முன்னிய கால மூன்றொடு விளக்கித்*
*தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்*
*போகிய திறத்து நற்றாய் புலம்பலும்*
*ஆகிய கிளவியும் அவ்வழி உரிய" (அகத்: 39)*

என்று உடன்போக்கில் தலைவனுடன் சென்றுவிட்ட தலைவியை எண்ணி நற்றாய் கூற்று நிகழ்த்துவான் என்று தொல்காப்பியர் தொகுத்துரைக்கின்றார்.

அதாவது தலைமகள் உடன்போகிய போது நற்றாய் தன்னையும் தலைமகனையும், தலைமகளையும் எண்ணி அல்லது மனத்தில் வைத்து பல்லி ஒலி, பிறர் தமக்குள் கூறிக்கொள்ளும் நற்சொல், (விரிச்சி) உலகில் வாழும் இயக்கர் முதலியோர் தெய்வம் ஏறி ஆவேசித்துச் சொல்லும் சொல் இவற்றோடு பொருந்தி, தனக்கும் அவர்க்கும் ஏற்படக்கூடிய நன்மை, தீமை, அச்சம் நேர்தல் போன்ற நிகழ்வுகளை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்துடனும் எண்ணிப்பார்த்து, தோழி மற்றும் கண்டோரிடம் கூறிப் புலம்புதலாகிய கூற்றுகள் நற்றாய்க்கு உரியதாகும்.

எ.டு :

*"தோழியர் சூழத் துறையமுன்றில் ஆடுங்கால்*
*வீழ்பவள் போலத் தளருங்கால் - தாழாது*
*கல்லதர் அத்தத்தைக் காதலன் பின்போதலர்*
*வல்லவோ மாதர் நடை" (ஐந்திணை ஐம்பது :37)*

என்னும் இப்பாடல் கொடிய பாதை வழியே தலைவனுடன் சென்றுவிட்ட மகளை எண்ணிப்புலம்புவதை உரைக்கிறது.

மறுவில் தூவிச் சிறகருங் காக்கை யை அழைத்து பசிய ஊன் நிறைந்த பைந்நிணச் சோற்றினைப் பொன்னால் செய்யப்பட்ட கலத்தில் உனக்குத் தருகிறேன். நீ,

***"வெஞ்சின விறல்வேல் காளையோடு***

***அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே"***

என்று காக்கையிடம் கூறுவதாக ஐங் 36-ம் பாடல் உள்ளது.

***"நற்றாய் போலவே செவிலி புலம்புதலும் உண்டு என்பதை***

***என்னும் உள்ளினள் கொல்லோ தன்னை***

***நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளையோடு***

***அழுங்கல் மூதூர் அலர்எழச்***

***செழும்பல் குன்றம் இறந்த என் மகனே" (ஐங் :372)***

என்ற பாடல் வழி அறிகிறோம்.

மற்றும் அகநானூறு 35-ம் பாடல் செவிலி தெய்வத்தைப் பரவி வேண்டியதை உணர்த்துகின்றது.

உடன்போக்கில் சென்ற தலைவியைத் தேடி, பாதுகாவல் பொருந்திய ஊரின்கண் உள்ள சேரியிடத்தும், ஊரினின்றும் நீங்கிய சுரத்திடத்தும் செல்லும் உரிமை செவிலித்தாயர்க்கு உண்டு என்பதை,

"***ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்***

***தாமே செல்லும் தாயரும் உளரே" (அகத் :40)***

என்ற நூற்பா எடுத்துரைக்கிறது.

சேரியிடத்து வினவியதற்குச் செய்யுள்:

"***இதுஎன் பாவைக்கு இனியநன் பாவை***

***இதுவென் பைங்கிளி எடுத்த பைங்கிளி***

***இதுவென் பூவைக்கினிய சொற் பூவையென்று***

***அலம்வரு நோக்கி னலம்வரு சுடர்நுதல்***

***காண்தொறும் காண்தொறும் கலங்கி***

***நீங்கின ளோவென் பூங்கணோளே" (ஐங் : 375)***

***"சுரத்திடை செல்வோள் கண்டோரைப் பார்த்து,***

***காலே பரிதப் பினவே கண்ணே***

***நோக்கி நோக்கி வாள்இழந் தனவே***

***அகல்இரு விசும்பின் மீனினும்***

***பலலே மன்றஇவ் வுலகத்துப் பிறரே" (குறுந் : 44)***

என்று புலம்புவதைக் காணலாம்.

இவ்வாறு சேரியும் சுரமும் இன்றித் தமது மனைக்கு அருகில் பிரிந்தாராயினும் அதுவும் பிரிவே ஆகும் என்று,

"*அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே*" *(அகத் : 41)*

என்ற நூற்பா கூறுகின்றது.

**தோழிக்கு கூற்று நிகழும் இடங்கள்:**

"*தலைவரும் விழும் நிலை எடுத்து உரைப்பினும்*
*போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்*
*நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்*
*வாய்மையும் பொய்மையும் கண்டோர்ச் சுட்டித்*
*தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்*
*நோய்மிகப் பெருகித்தன் நெஞ்சு கலுழ்ந்தோளை*
*அழிந்தது களையென மொழிந்தது கூறி*
*வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோட*
*என்றிவை எல்லாம் இயல்புற நாடின்*
*ஓன்றித் தோன்றும்தோழி மேன*" *(அகத் : 42)*

என்ற நூற்பா தோழின் கூற்று நிகழுமிடங்களைத் தொகுத்துரைக்கின்றது.

**தலைவரும் விழும நிலை எடுத்து உரைத்தல்:**

தலைவியை விட்டுவிட்டுத் தலைவன் பிரிதலால் தலைவிக்கு நேரிட இருக்கும் துன்பநிலையை எடுத்துக்கூறுதல்,

கலி, பாலை 4-ம் பாடலில்,

"*கல்லெனக் கவின்பெற்ற விழவுஆற்றுப் படுத்தபின்*
*புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டு அமைவாளோ*
*ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்*
*பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண்டு அமைவாளோ*
*ஓரிரா வைகலுள் தாமரைப் பொய்தையுள*
*நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ*"

என்று தோழி தலைவியிடத்து வினவுகின்றாள்.

போக்கற் கண்ணும் தலைவியையும் உடன் அழைத்துச் செல்க என்று கூறுதல்

"*நெடுந்தகாய் எம்மையும்*
*அன்புறச் சூதூதே ஆற்றிடை நும்மொடு*
*துன்பந் துணையாக நாடின் அதுவல்லது*
*இன்பமும் உண்டோ எமக்கு*"

என வரும்,

விடுவித்தற் கண்ணும்: தலைமகள் உடன் அழைத்துச் செல்வதற்கு இசைந்தமையைத் தலைமகளுக்குக் கூறி அவளை விடுத்தலின் போதும்.

அகம் 65-ம் பாடலில்,

*“நாறைங் கூந்தல் கொம்மை விரிமுலை*
*நுரையிதழ் உண்கண் மகளிர்க்கு*
*அரிய வாலென அழுங்கிய செலவே”*

என்று தோழி கூறுவதனைக் காணலாம்.

நீக்கலின் வந்த தம்முறு விழுமம்: தலைவி சுற்றத்தாரை நீங்குதலால் தமக்கு உற்ற துன்பத்தைக் கூறுதல்

*“வைகுபுலர் விடியல் மெய்காந்து தன்கால்*
*ஆரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்*
*வரிப்புனை பந்தோடு வைஇய செல்வோள்*
*இவைகாண் தோறும் நோவர் மாதோ*
*அளியரோ அளியர்என் ஆயத்தோர் என*
*நும்மோடு வரவுதான் அயரவும்*
*தன்வைத்து அன்றியும் கலுழ்ந்தன கண்ணே” (நற் : 12)*

இது,

*“நாளும் நாளும் ஆள்வினை அழுங்க*
*இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லையால் புகழென*
*ஒண்பொருட்கு அகல்வர்நம் காதலர்*
*கண்பிணி துடையினித் தோழி நீயே”*

என் தலைமகளுக்குக் கூறுவனவும் அமையும் என்பர் இளம்பூரணர்.

**வாய்மையும் பொய்மையும் கண்டோர் சுட்டித் தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொள்ளுதல்:**

வாய்மையும் பொய்மையும் காணப்பட்ட தலைமகனைச் சுட்டி தாயின் நிலையும் நோக்கி மீட்டுக் கொள்ளுதல்.

*“ஆறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து*
*பொருள்வயின் பிரிதல் வேண்டும் என்னும்*
*அருளில் சொல்லும் நீசொல் வினையே*
*நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி*
*நின்னிற் பிரியலேன் அஞ்சல் ஓம்பு என்னும்*
*நன்னர் மொழியும் நீ மொழிந் தனையே”*

என்று தலைவனது வாய்மை, மெய்ம்மைகளை எடுத்துக்கூறி, நீ பிரிந்தால் இமைப்பவரை வாழாள் மடவோள் எனத் தலைவியின் துன்பநிலையை எடுத்துக் கூறுகின்றாள் பாலைக் கலி 20-ம் பாடலில், நோய்மிகப் பெருகித்…. வந்ததன் திறத்தொடு என்பது:

தலைவனின் பிரிவைத் தலைவி பொறுத்துக் கொள்ள இயலாமல் மிகவும் வருந்தும் போது, வருந்தாதிருப்பாயாக என்று தலைவன் ஆற்றுவித்த சொற்களை நினைப்பூட்டி அவளைத் தேற்றுவிக்கும் போதும் என இவ்வாறான இடங்களில் தோழியின் கூற்று நிகழும் என்கின்றார்.

**எ.டு.**

***"அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்***
***கடியவே கனங்குழா அய் காடு என்கிறார் அக்காட்டுள்***
***துடிஅடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்***
***பிடியூட்டிப் பின் உண்ணும் களிறு எனவும் உரைத்தனரே" (கலி. பாலை : 11)***

தோழிமார்களுள்ளும் இன்றியமையாதவளாகிய செவிலி மகளான தோழி தலைவியின் நலத்தில் ஈடுபாடு உடையவர். இவள் மேற்கூறிய நிலைகளில் மட்டுமன்றி, பிரியும் காலத்துத் தலைமகளுக்கு உணர்த்துகின்றேன் என்று தலைமகனிடத்துக் கூறும் போதும், தலைமகளிடத்து அவர் உன்னைப்பிரியார் என்று கூறும் போதும் கூற்று நிகழும் என்பர் இளம்பூரணர்.

**கண்டோர் கூற்று நிகழும் இடங்கள்:**

***பொழுது ஆறும் உட்குவரத் தோன்றி***
***வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்***
***ஊரது சார்பும் செல்லும் தேயமும்***
***ஆர்வ நெஞ்சமோடு செப்பிய வழியினும்***
***புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு***
***ஆழிந்துஎதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்***
***தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்***
***சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்***
***கண்டோர் மொழிதல் கண்டது என்ப" (அகத்:43)***

என்று கண்டோர் கூற்று நிகழுமிடங்களைத் தொகுத்துக் கூறுகின்றார் தொல்காப்பியர்.

களவுக் காலத்தில் பெற்றோர் தன் களவினை அறிந்து, வேறு ஒருவருக்கு மணம் செய்து கொடுக்க முற்படும் தலைவி தலைவனுடன் உடன்போக்கை மேற்கொள்கின்றாள். அங்ஙனம் செல்லும் போது இடைச்சுரத்தில் சந்திப்பவர்களே கண்டோர் ஆவர்.

அவ்வாறு காண்பவர் தலைவன், தலைவியை நோக்கி, நீங்கள் செல்லும் இம்மாலைப்பொழுதும், செல்ல இருக்கின்ற வழியும் அச்சமும் துன்பமும் தரத்தக்கன. எனவே

இப்பொழுது இவ்வழியில் செல்ல வேண்டாம் என்று கூறி, சென்றால் குற்றம் இது என எடுத்துரைப்பர்.

எடுத்துக்காட்டாக,

***"எம்ஊர் அல்லது ஊர்நணித்து இல்லை***
***வெம்முரண் செல்வன் கதிரும் ஊழ்த்தனன்***
***சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப***
***இளையள் மெல்லியள் மடந்தை***
***அரிய, சேய பெருங்கல் ஆறே"***

என்ற சிற்றாடகம் கூறும் பாடலைக் காணலாம்.

புணர்ந்து செல்லும் தலைவனும் தலைவியும் கண்டோர் தம் ஊரில் தங்கிச் செல்ல விரும்பாத நிலையில், விரும்பிய நெஞ்சத்தோடு நும் ஊர்க்காயினும் விரைந்து செல்க எனக்கூறி எதிர்மொழி கூறி விடுவிக்கும்போது கூற்று நிகழும். இதனை "அழுந்துபட வீழ்ந்த" எனத் துவங்கும் நற்றிணை 2-ம் பாடல் வழி அறியலாம்.

தலைமக்களைத் தேடிப் பின்வருகின்ற செவிலித்தாயின் நிலைமையைக் கண்டு,

***"பெயர்ந்து போகுது பெருமுதாட்டி***
***சிலம்புகெழு சீறடி சிவப்ப***
***இலங்குவேல் காளையோடு இறந்தனள் சுரனே"***

என்று அவளைத் தடுத்தும் நிறுத்தும் போதும்,

***"சிறுவரை இறப்பில் காண்குவை செறிதொடிப்***
***பொன்னோர் மேனி மடந்தையொடு***
***வென்வேல் விடலை முன்னிய சுரனே" (ஐங் :338)***

என்று அவளை விடுத்தற்கண்ணும் கூற்று நிகழும்.

இத்துடன் நெடுந்தொலைவு சென்ற இடைச்சுரத்தோர் திரும்பி வரும்போது தாம்கண்ட தலைவன் தலைவியரைப் பற்றி எடுத்துக்கூறுவர் என்பதனை,

***"வில்லோன் காலன கழலே தொடியோள்***
***மெல்லிய மேலவுஞ் சிலம்பே நல்லோர்"***

அப்படிப்பட்ட நல்லோர் ஆரியர் கயிற்றின்மீது ஏறி ஆடுகின்ற போது ஒலிக்கின்ற பறையொலியைப் போல வாகையின் வெண்நெற்றுகள் ஒலிக்கின்ற மூங்கில் நிறைந்த காட்டின் வழியில் செல்லுதலைக் கண்டோம் என்று கூறுவர். (குறுந் : 7)

இவையே கண்டோர் கூற்று நிகழும் இடங்களாகும்.

**தலைமகன் கூற்று நிகழும் இடங்கள்:**

பிரிவிடத்துத் தலைமகள் கூற்று பெரிதும் நிகழும். இவ்விடங்களை ''ஒன்றாத் தமரினும்'' எனத் துவங்கும் அகத்திணையியல் 44ம் நூற்பா தொகுத்துரைக்கிறது. அவற்றை இங்கு விளக்கமாகக் காண்போம்.

தங்கள் திருமணத்திற்கு உடன்படாத பெற்றோர் இடத்தும், திருமணம் நீட்டிக்கின்ற (கால தாமதம்) ஆகின்ற காலத்தும் பாலை நிலத்தின் வழியாகத் தலைமகளை உடன்கொண்டு போகத் துணியும் போதும், தலைவியை விட்டுவிட்டுப் போகும் போதும் தலைவன் கூற்று நிகழ்த்துவான். இதனை,

"***ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்பும்***
***சினைநீங்கு தளிரின் வண்ணம் வாடவும்***
***தான்வால் துணிந்த இவளினும் இவளுடன்***
***வேய்பயில் அழுவம் உவக்கும்***
***பேதைநெஞ்சம் பெருந்தகவு உடைத்தே''***

என்வரும் பாடலால் அறியலாம்.

"***அவ்வழி அழைத்துச் செல்லும்போதும்,***
***நிழல் காண்தோறும் நெடிய வைகி***
***மணல் காண்தோறும் வண்டல் தைஇ***
***வருந்தாது ஏகுமதி'' (நற் :9)***

எனத் தலைவன் அழைத்துச் செல்கிறான்.

உடன்கொண்டு செல் என்று தோழி, கூற அவளிடத்துக் காட்டது கொடுமைகளை எடுத்துக்கூறி விட்டுவிட்டு செல்லும் போதும் கூற்று நிகழும். தோழியிடம் மட்டுமன்றி, தலைவியிடத்தும் அக்கொடுமைகளை எடுத்துரைப்பதை பாலைக்கலி 12-ம் பாடல் வழி உணரலாம்.

உடன்போக்கின் போது தலைவியின் தமர் எய்தி, மீட்டுக் கொண்டு செல்லுதல் மரபு. எனவே அதுகுறித்துக் கலங்கி, வருந்திக் கற்புடன் பொருந்திய அலர் தோன்ற தலைவியை உடன் அழைத்துச் செல்லும்போதும், தலைவியை நோக்கி,

***"அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவன்***
***நுகர்வரின் மறைகுவென் மாஅயோளே'' (நற் :362)***

என்று கூறும் போது கூற்று நிகழ்த்துகின்றான்.

பெருமையும் உரனும் ஆடூஉ மேன என்று பாராட்டப்பெறும் தலைமகன், வினையே ஆடவர்க்கு உயிர் எனக் கடமை உணர்ந்து செயல்படுதல் வேண்டும். எனவே இல்லறத்தைச் சிறப்புற நடத்த இன்றியமையாது வேண்டப்படும் பொருள் தேட முற்படுவான். அதுபோது

தலைவன் கூற்று நிகழ்த்துவான் என்று கூறவந்த தொல்காப்பியர் அத்தகைய பொருள்தேடுவார் எத்தன்மையராதல் வேண்டும் என்பதனை,

***"நாளது சின்மையும் இளமையது அருமையும்***
***தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்***
***இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்***
***அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்***
***ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்"***

என்ற தொடர்களால் விளக்குகின்றார்.

அதாவது பொருள் தேடுவார் இம்மனித வாழ்க்கை நிலையற்றது. மற்றும் இளமை நிலையற்றது என எண்ணுதல் கூடாது. முயன்று உழைப்பதால் வருத்தம் உண்டு என நினைத்தல் கூடாது. பொருள்மேல் விருப்பமின்மை, வறுமையினால் ஏற்படும் இழிவினைப் பொருத்தல், பொருள் உடைமைக்கு உரிய மன அமைதியைப் (திருப்தி, போதும் என்ற மனம்) பொருத்துதல் சிறந்தாரிடத்துச் சிறந்த அன்பினைக் கொள்ளுதல், பிரிதலருமையை எண்ணுதல் போன்ற பண்புகளை உடையர் ஆதல் கூடாது என்கின்றார். இவையெல்லாம் பொருள் தேடச் செல்லுதலைத் தவிர்க்கும் மனப்பண்புகள் ஆகும்.

கல்வி கற்றல், படைக்கலம் பயிறல், சிற்பம் கற்றல், பொருள் காரணமாக மற்றும் அறத்திறம் காரணமாகப் பிரியும் போதும் கூற்று நிகழும்.

***"அறத்தினூஉங் காக்க மில்லை அதனை***
***மறத்தலி னூங்கில்லை கேடு"***

என்று வள்ளுவர் கூறுவது நோக்கத்தக்கது.

மேலும் பிரிந்ததனால் வரும் புகழையும், பிரியாமையினால் வரும் பழியையும் துன்பத்தையும் எடுத்துக்கூறி, யான் மீண்டு வருமளவும் ஆற்றியிருத்தல் வேண்டும் என கூறும்போது கூற்று நிகழும்.

மாறுபட்ட இருபெருவேந்தரிடை அவரைச் சந்து செய்விக்கத் தூதுவராகிச் செல்லும் போதும், வேந்தருக்கு உற்றுழிப்(உதவி) புரியும் போதும், தன் வலிமை, துணைவர் வலிமை மற்றும் பகைவர் வலிமை எடுத்துக்கூறி, பகைவர் மண்டிலம் கொண்ட அருமையை விளக்கி உரைக்கும் போதும் கூற்று நிகழும்.

இவையேயன்றிப் பாசறைக்கண் தனிமை உரைக்கும் போதும் கூற்று நிகழும்.

இறுதியாக போர்வினை முடிந்து மீண்டு வரும் பொழுது,

***"வந்துவினை முடித்தனள் வேந்தனும் பகைவரும்***
***தந்திறை கொடுத்துத் தமர் ஆயினரே***
***முரண்செறிந் திருந்த தானை இரண்டும்***
***ஒன்றென அறைந்தன பணையே நின்தேர்***

*முன்னியங்கு ஊர்தி பின்னலை யீயாது"* *(அகம் :44)*

என்று தேர்ப்பாகனிடம் கூற்று நிகழ்த்துகின்றான் தலைவன்.

இத்துடன் வாரியுள் யானை காணவும், நாடு காணவும், புலனாடவும், கடவுளரை வழிபடவும், பரத்தையின் அகற்சி போதும் கூற்று நிகழும் என்பர் இளம்பூரணர். பரத்தையின் அகற்சி என்பது பரத்தையிடம் பிரிந்தவன் தலைமகளை அடைந்து இரத்தல் மற்றும் தெளிவித்தல் என இருவகைப்படும் என்பர்.

**எஞ்சியோர் கூற்று: தலைமகள் கூற்று:**

எஞ்சியோர் என்பது இதுவரை கூறாது ஒழிந்த தலைமகள், பாங்கன், பார்ப்பார், பாணர், கூத்தர் மற்றும் உழையோரை (உடன் இருப்போர்) உணர்த்தும் என்பர். இதனை,

"*எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே"* *(அகத் : 45*)

என்றவழி சுட்டுகின்றார்.

இளம்பூரணர் உரைவழி, தலைமகன் பிரிதலுற்ற குறிப்பு கண்ட இடத்தும், பிரிவு உணர்ந்த இடத்தும், பிரிவு உணர்த்திய தோழி இடத்தும், உடன்போவேன் என்று கூறும் இடத்தும் இடைச்சுரத்து ஆயத்தார் கூறும் இடத்தும், தமர்வந்த இடத்தும், பிரிவாற்றாமையின் போதும் ஆற்றியிருப்பேன் என்று கூறும் இடத்தும், தெய்வத்தை பரவி வணங்கும்போதும், பருவம் கண்ட இடத்தும், வண்புறை கூறும் போதும் தலைமகள் கூற்று நிகழும் என உணரலாம்.

பிரிவு உணர்ந்த தலைமகள் தலைமகளிடம்,

***"..........வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்***
***மகனல்லை மன்ற இனி"*** என்பதை உணர்க.

***"சொல்லாமை உண்டேல் எனக்குரை***
***வல்வரவு வாழ்வார்க்கு உரை"***

என்ற குறட்பாவும் இக்கருத்தின் பாற்பட்டதே.

***"உடன்போக்கிற்கு ஒரும்பட்ட வழீ,***
***"நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனோடு***
***செலவு அயர்ந்திசினால் யானே***
***அலர்சுமந் தொழிகஇவ் வழுங்கல் ஊரே"*** *(நற்: 149)*

என்று தலைவி கூற்று நிகழ்த்துகின்றாள்.

**பிரிவாற்றாமையின் போது கூற்று:**

***"அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்***
***பிரிவோ ரிடத்து உண்மை யான்"*** *(குறள் 1153*)

**பருவம் கண்ட இடத்து:**

***"என்னோடு புலந்தனர் கொல்லோ காதலர்***
***மின்னொடு முழங்குதூ வானம்***
***நின்னொடு வருதும் எனத்தெளிந் தோரே"***

இவ்வாறு வரும் மேற்கோள் பாடல்கள் தலைவி கூற்று நிகழ்த்துதலைத் தெளிவுபடுத்தும்.

**பாடல் : 4 உள்ளுறை:**

உள்ளுறை உவமையின் ஒரு வகையாகும். ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்பிட்டுக் காட்டவும், புலன் அல்லாதவற்றைப்(விளங்காதவற்றை) புலப்படுத்திக் காட்டவும் கேட்போர்க்கு இன்பம் பயக்கவும், செய்யுட்கு அலங்காரமாகி வரவும் உவமை பயன்படும் என்று இளம்பூரணர் உவம இயலில் விளக்குகின்றார். அவ்வுவமை,

1. உள்ளுறை உவமம்
2. ஏனை உவமம் என இருவகைப்படும்

அவற்றுள் உள்ளுறை அகப்பாடல்களுக்கே உரியதாதலால் இவ்வியலுள் கூறுகின்றார். மேலும் திணை உணரப் பயன்படும் என்பதை,

***"உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்***
***தள்ளாது ஆகும் திணையுணர் வகையே"*** ***(அகத்:49)***

என்கிறார்.

**உள்ளுறை உவமம் தோன்றும் இடம்:**

கருப்பொருள்கள் தெய்வம் ஒழிந்த ஏனைய பொருளை இடமாகக் கொண்டு தோன்றும் என்பதை,

***"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்***
***கொள்ளும் என்ப குறிஅறிந்தோரே"*** ***(அகம் : 50)***

என்று தெளிவு செய்கின்றார்.

**உள்ளுறையின் பொருள் உணருமாறு:**

அகப்பொருள் ஒழுகலாற்றில் சொல்லால் வெளிப்படுத்திக் கூறமுடியாத எண்ணங்கள் உண்டு. இத்தகைய எண்ணங்களை நாகரிகமாக மறைத்துக் கூறுவதற்குப் பயன்படும் முறையே உள்ளுறை உவமம் ஆகும். குறிப்பாகத் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைச் சுட்டிக்காட்ட விரும்பும் தோழி இவ்வுள்ளுறையைக் கையாளுவதை அகப்பாடல்கள் உணர்த்துகின்றன. இவ்வாறு கூறும் முறையைப் பின்வரும் நூற்பா உணர்த்துகின்றது.

***"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன***
***உள்ளுறத்து உரைப்பதே உள்ளுறை உவமம்"*** ***(அகத் :51)***

எ-டு:

***"வெறிகொள் இனக்சுரும்பு மேய்ந்தோர் காவிக்***

***குறைபடுதேன் வேட்டுங் குறுகும் - நிறைமதுச் சேர்ந்து***

***உண்டாடுத் தன்முகத்தே செவ்வி உடையதோர்***

***வண்தா மரை பிரிந்த வண்டு"***

என்னும் இப்பாடலில் தாமரையில் தேனுன்ட வண்டு மீண்டு காவி மலரை(குவளை) நாடி வரும் செயல் தலைவனின் பரத்தமையைச் சுட்டிக் காட்ட வந்துள்ளது.

## ஏனை உவமம்:

ஏனை உவமம் வண்ணம், வடிவு, தொழில், பயன் என்று நான்கு வகைப்படும், இவை உள்ளுறை போலாது உவமையினால் பெறப்படும் பொருள் வெளிப்படையாக இடம்பெறும். இவ்வகை உவமை அகம், புறம் என்ற் இருவகைச் செய்யுட்களுக்கும் உரியது ஆகும்.

எ-டு:

***"................................அலரே***

***குரவ நீள்வினை உறையும்***

***பருவ மாக்குவயில் கௌவையின் பெரிதே" (ஐங் : 366)***

***(கௌவை – ஒலி, ஆரவாரம்).***

வேனிற்காலத்து நிகழும் குயில் குரல் உவமையாதலால் ஊடல் பொருள் பாடலாயினும் பாலைத்திணை ஆயிற்று என்பர்.

இவற்றுள் உள்ளுறை உவமம் நுண்ணறிவுடையோர்க்கன்றி ஏனையோர்க்குப் புலனாகாது என்பது அதன் சிறப்பாகும்.

## கைக்கிளை:

அகத்திணை ஏழினுள் கைக்கிளையும் ஒன்று. அது ஒருதலைக்காமம் அல்லது சிறுமையான காமம் என்பது அகத்திணை பற்றிய விளக்கத்துள் சுட்டப்பட்டது.

### கைக்கிளை இலக்கணம்:

காம உணர்வு அமையாத இளமைப்பருவம் உடையவளிடம் மனக்கட்டுப்பாடு இல்லாத மனநெகிழ்ச்சியால் துன்பம் அடைந்து, புகழ்தல் மற்றும் பழித்தல் ஆகிய இரு வழிகளில் தன்னையும் அவளையும் பொருத்திப் பார்த்து, அவளிடமிருந்து காதல் குறிப்புச் சொல் பெறாதவனாகி தான் மட்டுமே சொல்லி இன்புறுதல் கைக்கிளை ஆகும் என்பதனை,

"***காமம் சாலா இளமையோள்வயின்***

***ஏமம் சாலா இடும்பை எய்தி***

***நன்மையும தீமையும் என்று இரு திறத்தால்***

***தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்***

***சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறுதல்***

***புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே" (அகத் : 53)***

என்ற நூற்பாவில் சுட்டுகிறார்.

கலித்தொகை குறிஞ்சிப்பாடல் 20 இதற்குத் தகுந்த எ-டு ஆகும்.

காமம் சாலா இளமையோள் ஒருவளைக் காண்கின்றான் ஓர் ஆடவன் (1-6) கண்டு பின்வருமாறு புகழ்கிறான்.

***"வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்***

***உறுப்பெல்லாங் கொண்டியற்றி யாள்கொல் வெறுப்பினால்***

***வேண்டுருவம் கொண்டதோர் கூற்றம்கொல்…………….***

***இவளைச் சொல்லாக் காண்பென் தகைத்து"***

என்று கூறி, சொல்லாடச் (பேச) செல்கிறான்.

***"மாதாகொள் மான்நோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்***

***பேதுறூஉம் என்பதை அறிதியோ அறியாயோ?"***

என்று கேட்கும் அவள் பதில் ஒன்றும் கூறவில்லை. அதற்கும் அவன் அவளைப் பார்த்து,

***"பேதுற்றாய் போலப் பிறர் எவ்வம் நீயறியாய்***

***……… ……….. ………… ……… …….***

***நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப்***

***போதர விட்ட நுமரும் தவறிலர்***

***………. …….. ………… …….. ………..***

***இறையே தவறுடை யான்"***

என்று கூறிப் புலம்புவதாக அமைந்துள்ளது.

முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப (அகத் : 55)

என்ற நூற்பாவால் ஏறாமடற்றிறம், இளமைத் தீராத்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத்திறம் மிக்க காமத்தின் மாறாகத்திறம் நான்கும் கைக்கிளைக்காம் என்பர் இளம்பூரணர்.

***"ஏறாமடற்றிறம் - வெளிப்பட இரத்தல்***

***இளமைத் தீராத்திறம் - நலம் பாராட்டல்***

***தேறுதல் …….. மிகாத்திறம் - பணரா இரங்கல்***

***மிக்க ……….மாறாகாத்திறம் - நயபுறுதல்"***

முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே என்று களவியல் 14ம் நூற்பா சுட்டுகிறது.

எனவே எண்வகை மணத்துள் அகரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்றும் கைக்கிளைக்குரியது.

**பெருந்திணை:**

அகத்திணை ஏழினுள் இறுதியில் வைத்து எண்ணப்படுவது பெருந்திணை ஆகும். பெருந்திணை பற்றிய சொல்விளக்கம் அகத்திணைகள் விளக்கம் பற்றிய இடத்து உரைக்கப்பட்டுள்ளது. பெருந்திணை என்னும் பெயர்க்காரணம் பற்றிக் கூறவந்த இளம்பூரணர்,

1. நடுவண் ஐந்திணையாகிய ஒத்த .காமத்தின் மிக்கும் குறைந்து வருதல்.
2. எண்வகை மணங்களுள் பிரமம், பிரசாபத்தியும், ஆரிடம் தெய்வம் என்பன பெருந்திணையின் பாற்படுதல்.
3. இந்நான்கும் மணமும் மேல்மக்களிடம் நிகழ்தல்
4. இவையே உலக வழக்கில் பெரும்பான்மை என காரணம் காட்டுகின்றார்.

**பெருந்திணைக்குறிப்பு:**

"***ஏறிய மடல்திறம் இளமைதீர்திறம்***
***தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்***
***மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்***
***செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே" (அகத்˙: 53)***

என்பது நூற்பா.

மடலேறுவன் என்று கூறுவதோடு அமையாது மடல்ஏறுதல், இளமை நீங்கிய பருவத்தும் மெய்யுறு புணர்ச்சியில் விருப்பம் கொள்ளுதல், மிக்க காமத்தால் அறவழிந்து இயங்குதல், விரும்பாதாரை வலிந்து புணரும் வன்கண்மை என்ற இந்நான்கும் பொருந்தா ஒழுக்கமாகிய பெருந்திணை ஆகும்.

மாவென மடலும் ஊர்ப என்று குறுந்தொகை 17 ஆம் பாடல் காமம் காழ்கொண்ட இடத்துத் தலைவன் மடலேறு தலைச் சுட்டுகிறது.

***"ஆண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை***
***வேண்டுவல் என்று விலக்கினை"***
***"உக்கத்து மேலும் நடுஉயர்ந்து வாள்வாய***
***கொக்கு உரித்தன்ன கொடுமாடாய்"***

என்னும் மருதக்கலி 29ம் பாடல் வரிகள் தலைமகன், மற்றும் தலைமகள் இருவரின் இளமைத்தீர்திறம் உணர்த்துகிறது.

மிக்க காமத்து மிடல் என்பது ஆண்பாற்கிளவி, பெண்பாற்கிளவி என இருவகைப்படும் என்பர் இளம்பூரணர்.

கைக்கிளை, பெருந்திணைக்குரிய தலைமக்கள்:

"***அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்***

*கடிவரை இல புறத்து என்மனார் புலவர்'' (அகத் : 25)*

*''ஏவல் மரபின் ஏனோரும் உரியர்*

*ஆகிய நிலைமை அவரும் அன்னார்''அகத் : 26)*

என்னும் இருநூற்பாக்கள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. அடியோர், வினைவலர், ஏவல்மரப்பினர் போன்றவர் கைக்கிளை மற்றும் பெருந்திணைக்குரிய தலைமக்கள் ஆவர்.

அடியோர் என்பவர் தாமே பொருள்ஈட்டி வாழ்க்கை நடத்துதற்குரிய வினைத்திறம் இன்றிப் பிறப்பால் தாழ்ந்து தம்முணர்வு இன்றித் தொண்டு செய்து வாழ்பவர்.

வினைவலர் என்பார் தம்முணர்வு மிகுதியால் தாமே ஒரு தொழிலைச் செய்து முடிக்க வல்லவர்.

ஏவல் மரபினர் என்பார் தாமாக ஒன்றைச் செய்வதறியாமல் பிறர், இத்தொழிலை இன்னவாறு செய்க என ஏவினால் அவர் ஏவிய வண்ணம் செய்யும் இயல்பினர்.

மேலும் அகத்திணயையாவது அறம், பொருள், மற்றும் இன்பத்தினின்று வழுவாமை. அவையெல்லாம குற்றவேல் புரிவார்க்கு இயலாது. மேலும் இவர்கள் நாணக் குறைபாடு உடையவர். குறிப்பறியாது வேட்கை வழியே செல்பவர், மற்றும் இன்பம் இனிது நடத்துவார் பிறர் ஏவல் செய்யார் என்று இளம்பூரணர் விளக்குகின்றார்.

(எ-டு. மருதக்கலி 29, குறிஞ்சிக் கலி 26)

**அகத்திணை இயல் கூறும் அகப்பொருள் மரபுகள்:**

மரபு என்பது முன்னோர் வழக்கைப் பின்பற்றி வருவது, அந்நிலையில் சில அகப்பொருள் மரபுகளைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

"*முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை'' (அகத் : 37)*

*''எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்*

*பொற்புடை நெறிமை இன்மையான்'' (அகத் : 38)*

என்பதால் கடல்கடந்து தலைவனோடு செல்லுதல் மற்றும் மடலேறுதல் பெண்டிர்க்கு விலக்கப்பட்டன என்பது தெரிகிறது

**பாலைக்குரிய மரபு:**

"*நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்*

*நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே*

*மரபுநிலை திரியா மாட்சிய ஆகி*

*விரவும் பொருளும் விரவும் என்ப''*

ஆகியன பாலைக்குரிய மரபு உணர்த்தும் பகுதிகள்.

*''குன்றூர் மதியம் நோக்கி நின்றுநினைந்து*

*உள்ளினேன் அல்லனோ''*

என்ற நற்62ம் பாடலில் பிரிந்து சென்ற தலைவன், முன்பு நிகழ்ந்ததை எண்ணிப் பார்க்கின்றான்.

இவ்வாறு நிகழ்ந்தனைக் கூறிப் போகாது ஒழிதலும் பாலைத் திணையாம். (நற் : 3)

பாலைத்திணைக்கு உரிய பாசறைப் புலம்பல் மற்றும் தேர்ப்பாகற்கு கூறுதல் ஆகிய இடத்து முல்லைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் விரவி வரப்பெறும்.

ஐங்: 478, 322 போன்ற பாடல்களை காண்க.

### அகத்திணைப் பாடல் மரபு:

உலகத்தார் ஒழுக்கத்தோடு ஒத்து வருகின்ற உலகியல் வழக்கு சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறும் நாடக வழக்கு ஆகிய இவை பற்றிய பாடல்கள் கலி மற்றும் பரிபாடலில் பாடப்பெறும் என்பதனை,

"***நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்***
***பாடல் சான்ற புலனெறி வழக்கம்***
***கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்***
***உரியதாகும் என்மனார் புலவர்"*** ***(அகத் : 56)***

என்ற நூட்பா மூலம் உணரலாம்.

### அகப்பாடலில் பெயர் சுட்டும் மரபு:

அகன்ஐந்திணைப் பாடலில் இயற்பெயர்(தலைமக்களின்) சுட்டுதல் மரபன்று. நாடன், வீரம், புகழ், கொடை பற்றிப் பேசுதலால் அங்கு இயற்பெயர் சுட்டப்பெறும் என்பதனை,

"***மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்***
***சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்***
***புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது***
***அகத்திணை மருங்கின் அளவுதல் இல்லை"*** ***(அகத் : 57,58)***

என்ற நூற்பாக்கள் தெளிவுறுத்தும்.

## அகத்திணை இயல் பயிற்சி வினாக்கள்

**குறுவினாக்கள்:** **5 மதிப்பெண்கள்**

1. நடுவண் ஐந்திணைகள் யாவை?
2. ஐந்திணைக்கான நிலப்பாகுபாடுகள் குறித்து எழுதுக?
3. கருப்பொருள் குறிப்பு வரைக?
4. உரிப்பொருள் என்றால் என்ன என்பதை விளக்குக?
5. திணைநிலைப் பெயர் என்றால் என்ன?
6. பகைவயிற் பிரிவு பற்றித் தொல்காப்பியர் கூறுவனவற்றை எழுதுக.
7. மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே விளக்குக?
8. முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை விளக்குக?
9. மடலேறுதல் - குறிப்பு வரைக.
10. பொருள் தேடுவோர் தன்மைகள் யாவை?

**கட்டுரை வினாக்கள் :** **15 மதிப்பெண்கள்**

1. அகத்திணையியல் செய்திகளைத் தொகுத்தரைக்க.
2. அகத்திணைகள் ஏழு குறித்து ஒரு கட்டுரை வரைக.
3. முதற் பொருள் குறித்து விளக்கி எழுதுக்.
4. ஐவகை நிலங்களுக்கான கருப்பொருட்களை அட்டவணை இட்டுக் காட்டுக.
5. திணை மயக்கம் - விளக்குக.
6. நற்றாய் கூற்று நிகழ்த்துமிடங்களைத் தொகுத்துரைக்க.
7. செவிலி கூற்று நிகழ்த்துமிடங்களையும் அவளுக்குரிய மரபுகள் குறித்தும் எழுதுக.
8. தோழி கூற்றால் அறியலாகும் செய்திகள் யாவை?
9. தலைவன் எவ்வெவ்விடங்களில் கூற்று நிகழ்த்துதற்கு உரியன?
10. துணைநிலைப்பெயர்கள் மற்றும் கைக்கிளை, பெரும் திணைக்குரிய தலைமக்கள் குறித்து எழுதுக.
11. உள்ளுறை உவமம் - விளக்கு ஒரு கட்டுரை வரைக

---

**கூறு : 2**

## புறத்திணை இயல்

புறம் என்பது போர், வீரம், கொடைப்பண்பு, புகழ், ஆற்றல் போன்ற புறத்தார்க்கு வெளிப்படையாகப் புலனாகின்ற பண்புகளைப் பாடுபொருளாகக் கொண்டது. வீரம் நிறைந்த ஒருவனே சான்றோன் எனப் பாராட்டப்பட்டான். தலைவனாகவும் போற்றப்பட்டான். இது சங்க கால மதிப்பீடு. ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புகுவது அன்று: அது உலகத்து இயற்கை என்ற கருத்து நிலைப்பெற்றிருந்தது. ஒவ்வோர் ஆடவனும் போரில் இறப்பதையே பெரும் புகழாய்க் கருதினான். போரின் காயம் புகழின் காயமாக வரவேற்கப்பட்டது. போரில் ஏற்பட்ட வடுக்கள் விழுப்புண்கள் எனப்பட்டன. விழுப்புண் படாத நாட்களெல்லாம் வீண்நாட்களென ஒதுக்கப்பட்டன. போரில் உயிர்துறக்கும் வீரர்கள் எளிதில் துறக்கமடைவதாக எண்ணப்பட்டது.

மார்பிற் சென்ற அம்பு முதுகைத் துளைத்துப் புறப்புண் போலச் செய்தமைக்காக வருந்தி நாணி வடக்கிருந்த வரலாற்றைப் புறநானூறு புகழ்கிறது. போர் புகழப்பட்டாலும் அது அறங்கலந்த மறநெறியாகவே செயல்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்தது. வீரர்கள் நடுகல் செய்து வழிபடப்பட்டனர். இத்தகைய நடுகல் வழிபாடே காலப்போக்கில் ஊாத்தெய்வ வழிபாடுகள் மற்றும் சிறுதெய்வ வழபாடுகளாக அமைந்துவிட்டன. ஆடவர் மட்டுமன்றிப் பெண்டிரும் சங்ககாலத்தில் மறத்தில் சிறந்து விளங்கினர் என்பதை மறக்குடி மகளிர்தம் செயல்களை எடுத்துரைக்கின்ற மூதின் முல்லை என்ற துறை வாயிலாக அறிகின்றோம்.

அகத்திணையில் சங்க கால மக்களின் அகவாழ்வின் ஒழுகலாற்றினை உணர்த்திய தொல்காப்பியர் அடுத்து அமைந்துள்ள புறத்திணையியலில் வீரம் பற்றிய ஒழுகலாற்றினை மற்றும் சங்ககாலப் போர் நெறிமுறைகளைத் தெளிவுபட உணர்த்துகின்றார். புற ஒழுக்கம் உணர்த்தும் இயலாதலால் புறத்திணையியல் என்ற பெயர் பெற்றது.

### புறத்திணை உணர்த்துகின்ற முறை:

அகத்திணைகள் ஏழினை விளக்கி, அவற்றின் புறத்து நிகழ்வதாகிய ஏழு திணைகளை இவ்வியலில் விளக்குகின்றார் தொல்காப்பியர்.

மலைநிலமாகிய குறிஞ்சித்திணைக்கு நிரை கோடலும், நிரை மீட்டலுமாக நிகழ்வு வேறுபாடு பற்றி வெட்சி, கரந்தை என இரு திணை நிகழ்வுகள் வகுத்தார்.

காடுறை நிலமாகிய முல்லை மண்ணாசை குறித்து பகைஎடுத்துச் சென்ற அரசன்மேல் உள்நாட்டரசன் போர் குறித்து வர, அவ்விருபெருவேந்தரும் ஒரு வினையாகிய போர் புரிதலால் அது வஞ்சி என வகுக்கப்பட்டது.

புனலுமாகிய மருதம் எயில் அழித்தல், எயில் காத்தல் என இருவேறுபட்ட நிகழ்வு அடிப்படையில் உழிஞை, நொச்சி என இரு திணைகளாக அமைந்துள்ளன.

மணலுமாகிய நெய்தலில் இருபெறு வேந்தரும் ஒரு சேர போரிடுதலால் ஒரு தொழிலே கருதி அது தும்பை என ஒரு திணையாயிற்று.

நடுநிலைத் திணையாகிய பாலை என்பது வேந்தராயினும், ஏனையோராயினும் தமது மிகுதியாகிய வெற்றியைக் குறித்தலால் அது வாகை என்னும் ஒரு திணையாயிற்று.

பெருந்திணை நிலையாமையாகிய காஞ்சியைத் தனக்குப் புறமாகக் கொண்டது. அதுபோல கைக்கிளை செந்நிறமாகிய பாடாண் திணையைப் புறமாகக் கொண்டு அமைந்துள்ளது எனலாம். எனவே,

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | வெட்சி |
| முல்லை | - | வஞ்சி |
| மருதம் | - | உழிஞை |
| நெய்தல் | - | தும்பை |
| பாலை | - | வாகை |
| பெருந்திணை | - | காஞ்சி |
| கைக்கிளை | - | பாடாண் |

என 7 அகத்திணைகளுக்கு ஏற்ப 7 புறத்திணைகள் வகுக்கப்பட்டுள்ளன. வெட்சியின் பகுதியாகக் கரந்தையும், உழிஞையின் பகுதியாக நொச்சியும் அமைக்கப்பட்டுள்ளதே அல்லாமல் அவை முறையே தனித்திணைகளாகத் தொல்காப்பியரால் கொள்ளப்படவில்லை.

இனி புறத்திணைகளுக்கான தொல்காப்பியர் தரும் விளக்கம் பற்றி விரிவாகக் காணலாம்.

### வெட்சி:

அகத்திணை ஒழுகலாறுகள் தத்தம் நிலத்திற்குச் சிறப்புரிமையுடைய குறிஞ்சி முதலிய பூக்களால் பெயர் பெறுவது போன்றே, புறத்திணை ஒழுகலாறுகளும் அவற்றை மேற்கொள்வோர் அடையாளமாகச் சூடிச்செல்லுகின்ற வெட்சி முதலிய பூக்களால் பெயர் பெற்றுள்ளன.

வெட்சி என்பது புறத்திணைகளுள் முதல் திணை. பகைவர்தம் ஆநிரைகளைக் கவர்தல் என்பதே இத்திணையின் செயல்பாடு. இச்செயல் பண்டைத்தமிழர்தம் போர்முறை அறப்போர்முறை என்பதனைத் தெளிவு செய்துள்ளது. பகைவர் நாட்டின் மீது போர் செய்யக் கருதும் வேந்தன், அந்நாட்டில் வாழும் அறவோராகிய அந்தணர், பெண்கள், பிணியாளர், பசுக்கூட்டங்கள் போன்ற தீங்கு செய்யத் தகாதவர்களைப் போரால் ஏற்படும் துன்பத்தினின்று பாதுகாக்க வேண்டிய கட்டுப்பாட்டினை மேற்கொள்வார். அப்போது போர் குறித்த முன்னறிவிப்பினை நிகழ்த்துவர். அதாவது, **''யாம் போர் கருதி நுமது நாட்டிற் புகுகின்றோம். நீங்கள் உங்களுக்குப் பாதுகாவலான இடங்களை நாடிச் சென்று விடுங்கள்''** என்று அறிவிப்பர்.

இவ்வறிவிப்பினை உணர்ந்து வெளிச்சென்று விடும் பகுத்துணர்வு இல்லாத பசுக்கூட்டங்களை(ஆநிரைகள்)ஒருவரும் அறியாவண்ணம் நள்ளிரவில் தன்படை அனுப்பிக் களவில் கவர்ந்து வரச் செய்வது பண்டைத் தமிழர் போர் மரபாகும்.
அம்மரபுப்படி வேந்தனால் அனுப்பப்பட்ட வீரர்கள் பகைவர் நாட்டினுள் புகுந்து அங்குள்ள ஆநிரைகளைகக் கவர்ந்து வந்து பாதுகாக்கும் செயல் வெட்சி என்னும் புறத்திணையாகும்.

இந்த வெட்சித் திணை குறிஞ்சி என்னும் அகத்திணைக்கும் புறமாகும் என்பதனை,

"***வெட்சி தானே குறிஞ்சியது புறனே***" ***(புறத் : 1)***

என்ற நூற்பா உணர்த்துகின்றது.
வெட்சி குறிஞ்சிக்கு புறமாக அமைவது எங்ஙனம் என்பதனை இளம்பூரணர் இவ்வாறு விளக்குகின்றார்.

1. நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைநிலத்தின்கண் நிகழ்தலானும். 2. ஆநிரையைக் களவில் கொள்ளுதல் குறிஞ்சிக்குரிய களவொழுக்கத்தோடு ஒருபுடை ஒத்தலானும், சூடும்பூ குறிஞுசிக்குரிய பூவாக இருந்தாலும் அதற்கு இது புறனாம் என்பர். நச்சினார்கினியர் விளக்கும்போது, களவொழுக்கமும் கல்குல்காலமும் காவல் கடுகினும் (விரைந்துவரினும்) தாம் செய்யக் கருதிய பொருளை, செயலை இரவின்கண் முடித்து மீளலும் போல்வன வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயிற்று என்று உரைப்பர்.

## வெட்சியின் இலக்கணம்:

"***வேந்து விடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்***
***ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்.***" ***(புறத் : 2)***

என்ற நூற்பா வெட்சிக்குரிய இலக்கணம் உரைக்கிறது. வேந்தனது ஆணைவழி வீரர்கள் சென்று பகைவரது ஆநிரைகளைக் கவர்ந்து வருவர். எனவே வேந்தனது ஆணையின்றியும் வீரர்கள் செல்வர் என்பதும் பெறப்படுகின்றது.

## வெட்சித்துறைகள்:

துறை என்பது நிகழ்வு என்று பொருள்படும். எனவே வெட்சிப்போரின் நிகழ்வுகளாக 14 நிகழ்ச்சிகளைச் சுட்டி அவற்றை துறைகள் என வகுக்கின்றார்.

ஆநிரை கவர்தல் கருதிப் படைகள் புறப்படும்போது எழுப்பப்படும் ஆரவார ஒலி, புறப்பட்ட வீரர் ஊரின் புறத்தே நற்சொல் (விரிச்சி) கேட்டல், பகைவர் நாட்டின் ஒற்றர் அறியாவண்ணம் செல்லுதல், அந்நாட்டின் நிலைமைகளை அங்குள்ள தம் ஒற்றர் வாயிலாக அறிதல், பகைவர் ஊரின் புறத்தே சென்று தங்குதல், தம்மை வளைத்துக் கொண்ட பகைவீரர்களைக் கொல்லுதல், ஆநிரைகளை கைப்பற்றிக் கொள்ளுதல், ஆநிரையை மீட்பதற்காக வந்து வீரர்களின் போர்ச்செயலை விலக்கி மீளுதல், கைப்பற்றிய ஆநிரைகளை வருந்தாமல்

கொண்டு வருதல், எதிர்பார்த்து நிற்கும் தம்மவர் மனம் மகிழத் தோன்றுதல், பசுக்களைத் தம் ஊர்ப் பொதுமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்துதல், அந்நிரைகளைப் போரில் ஈடுபட்ட வீரர்க்குப் பகுத்து அளித்தல், வினைமுடிந்த மகிழ்ச்சியால் கள்ளுண்டு மகிழ்தல், இரவலர்க்குப் பரிசாக அப்பசுக்களைக் கொடுத்தல் என 14 துறைகளைக் கொண்டது வெட்சித் திணை ஆகும்.

இப்பதினான்கிற்கும் நிரைகோடல், நிரைமீட்டல் என்னும் இருநிலைகளையும் உளவாக்கி இருபத்தெட்டுத் துறைகளாகக் கணக்கிடுவார் நச்சினார்க்கினியர். எடுத்துக்காட்டாகச் சில் மேற்கோள்பாடல்களைக் காணலாம். ஆநிரை கவரப் புறப்படும்போது துடியும், காரியும் முழங்க விரைந்து செல்வர் என்பதனை,

***“நெடிபடு கானத்து நீளவேல் மறவர்***
***அடிபத்து ஆர்அதர் செல்வான் - துடிபடுத்து***
***வெட்சி மடலைய விசைவார் மணிநிரைக்***
***கட்சியுள் காரி எழும்”***

என்ற புறப்பொருள் வெண்பாமாலைப் பாடல் உணர்த்துகிறது.

***“எழுவணி சீறார் இருள்மாலை முன்றில்***
***குழுவினம் கைகூப்பி நிற்பத் - தொழுவில்***
***குடக்கள்ளுக் கொண்டவா என்றாள் குனிவில்***
***தடக்கையாய் வென்றி தரும்”***

என்னுமிடத்து குடக்கள் கொண்டுவா என்பதனை நற்சொல்லாக ஏற்றது பெறப்பட்டது.

***“கூற்றினத்து அன்னார் கொடுவில் இடனேந்திப்***
***பாற்றினம் பின்படர முன்படர்ந்து – ஏற்றினம்***
***நின்ற நிலைகருதி ஏகினார் நீள்கழைய***
***குன்றம் கொடுவில் அவர்”***

என்னும் பாடல் ஒற்றர் அறியாமல் சென்ற நிலை காட்டியது.

ஊர் அழித்தலை,

***“கொலைவில்லார் வீழத் தொடுகழல் ஆர்ப்பக்***
***கொலைவில்லார் கொண்டார் குறும்பு”***

என்ற பாடல்வழி அறியலாம்.

***“சூழ்ந்த நிரைபெயரசு சுற்றித் தலைக்கொண்டார் வீழ்ந்தனர் வீழ்ந்தார்”***

எனும் புறப்பொருள் வெண்பாமாலை அடிகள் இருவர்க்கும் இடையில் நிகழ்ந்த போர் நிகழ்வை உணர்த்துகின்றன.

***“மாறுபட்ட வென்றி மறவர் தம்சீ றூரில்***
***கூறிட்டார் கொண்ட நிரை”  (புறப்.வெட்சி.14)***

எனும் அடிகள் கூறிடுதலைக் காட்டுகின்றன.

இவ்வாறு ஏனையவற்றிற்கும் காண்க.

இவையேயன்றி வீரன் பிறந்த குடிநிலைக் கூறலும் வெற்றி தரும் கொற்றவை நிலை புகழ்தலும் வெட்சியின் துறைகளாகும் என்பதனை,

*"மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த*

*கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே" (புறத்: 4)*

என்று தொல்காப்பியம் சுட்டுகிறது.

இவற்றுள் குடிநிலைக் கூறல் என்பது ஆடவர், பெண்டிர் இருவருக்கும் பொதுவானது. ஆடவர் பற்றி வருமாயின் இல்லாண் முல்லை என்றும் பெண்டிர் பற்றி வருமாயின் மூதின் முல்லை என்றும் பெயர்பெறும்.

புறம் 279-ம் பாடல் குடிநிலை புகழ்ந்துரைக்கும் பாடல்களாகும்.

*"ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்தலைக்*

*கூளி வலிபடைக் கொற்றவை மீளி*

*அரணமுருங்க ஆகோள் கருதின் அடையார்*

*முரண்முரங்கத் தான்முந் துறும்" (புறம்.வெட்சி.20)*

என்ற பாடல் கொற்றவையைப் புகழ்வதாக உள்ளது.

வெட்சியார் ஆநிரைகளைக் கவர முற்படும்போது பகைவர் அவர்களைத் தடுக்க முற்படுவர். மீட்க முயல்வர். இத்தகைய எதிர்வினையினைத் தொல்காப்பியர் வெட்சியின் செயலாகவே கருதுகின்றார். இதனைக் கரந்தை என்ற தனித் திணையாகக் கொள்ளவில்லை. எனவே கரந்தையார் நிகழ்வுகளாயினும் ஆநிரை மீட்டல் காரணமாக அத்திணைக்கண்(நிலம்) நிகழ்வதால் இதுவும் வெட்சித் திணையாகவே கொள்ளப்பட்டுக் குறிஞ்சிக்குப் புறன் ஆனது.

*"வெளிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டு*

*அயர்ந்த "காந்தள்" முதலாக "வாழ்த்தலர்" ஈறாக உள்ள இருபத்தொரு(21)*

துறைகள் கரந்தையார் செயல்களை உணர்த்துவதாக உள்ளன. இனி அவை வருமாறு

1. "வெளி அறி சிறப்பின் ……. காந்தள்" என்பது வெறியாடுகின்ற வேலன் உயிர்ப்பலி கொடுக்குமாறு கூறி, காந்தள் மலர்மாலையினைச் சூடி, தம் அரசனுக்கு வெற்றி உண்டாகும்படி வேண்டி தெய்வத்திடம் வழிபடுவது.

   இவ்வெறியாட்டு காமவேட்கையின் ஆற்றாளாகிய பெண்பாற் வெறியாட்டு, வெற்றி வேண்டி வீரர் ஆடும் ஆண்பாற் வெறியாட்டு என இருவகைப்படும்.

*"அயன்மனைப் பெண்டிரோடு அன்னைசொல் அஞ்சி*

*வியன்மனையுள் ஆடும் வெறி"*

என்பது தலைமகள் தானே முருகன் ஏறப்பெற்று ஆடியது.

2,3,4 துறைகள்: உறு பகை வேந்து இடை தெரில்

வேண்டிய ஏந்துபகழ்ப் போந்தை வேம்பே ஆரென

வரும் மாபெருந் தனையார் மலைந்த பூ” என்பது போரிடும் அரசர்தம்முள் வேறுபாடு தெரிதற்காகப் பெரும்படையை உடைய மூவேந்தர் தம் அடையாளப் பூக்களாக அணிந்த பனம்பூ, வேப்பம்பூ மற்றும் அத்திப்பூ ஆகியவற்றைப் புகழ்ந்து பாடுதல்.

***…… …….. ……………. ……………………***

***….. ………. …………. ………………படைதிகழும்***

***தே அதிரப் பொங்கும் திருந்துவேல் வானவன்***

***போர் எதிரில் போந்தையாம் பூ”***

இது சேரனது பனம்பூ மாலையைப் புகழ்ந்தது.

***“காத்தல்சால் செங்கோல் கடுமான் நெடுவழுதி***

***எந்தல்சால் வேம்பின் இணர்”***

இது பாண்டியனது வேப்பம்பூ மாலையைப் புகழ்ந்தது.

***“கலங்கல் ஒலிபுனல் காவிரி நாடன்***

***அலங்கல் அமர்அழுவத் தார்”***

இது சோழனது அத்திப்பூ மாலையைப் புகழ்ந்தது.

5. “வாடா வள்ளி” என்பது வாடுதல் இல்லாத வள்ளிக்கூத்து. தம் நாட்டின் வெற்றியினை உள்ளத்தில் நினைத்து மகளிர் முருகனைப் பரவி ஆடும் கூத்து வள்ளிக்கூத்து.

***“மண்டு அமர் அட்டமறவர் குழாத்திடைக்***

***கண்ட முருகனும் கண்களித்தான்-பண்டே***

***குறமகள் வள்ளிதன் கோலம்கொண்டு ஆடப்***

***பிறமகள் தோற்றாள் பெரிது”***

என்ற பாடல் வழி உணர்க.

6. “வயவர் ஏத்திய ஓடாக் கழல்நிலை” என்பது போரில் புறமுதுகிட்டு ஓடாமைக்கு ஏதுவாக வீரர்கள் அணியும் வீரக்கழலின் சிறப்பினைப் புகழ்தல்

***“வாள் அமரின் முன்விலக்கி ……………………..***

***……………….கிண்கிணிக்கால் காளை***

***கலங் கழல் வாயில் கடுத்தீற்றி அற்றால்***

***பொலங்கழல் கான்மேல் புனைவு”*** என வரும்.

7. ***"ஓடா உடல்வேந்து அடுக்கிய உன்னநிலை"*** என்பது வீரர்களின் வெற்றியை உள்ளத்தே எண்ணி உன்ன மரத்தின் நிலையை நிமித்தமாகக் கொள்வது.
உன்னம் என்பது ஒருவகை மரம். சிற்றிலையும் பொற்பூவும் கொண்டது. நாட்டிற்குக் கேடு வருமானால் இம்மரம் வாடி நிற்கும் ஆக்கம் வருமானால் தழைத்து நிற்கும்.

***"ஈடுஎலாம் தாங்கி இகல்அவிந்தார் நீயும்நின்***
***கோடுஎலாம் முன்னம் குழை"***

எனும் பாடலடிகள் இந்நிகழ்வை உணர்த்துகின்றன.

8. "மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ்ப் பூவை நிலை" என்பது காட்டில் பூவைமரம் தளிர்க்க, அக்காயாம் பூவின் மலர்ச்சியைக் கண்டோர் மலர் வண்ணனாகிய மாயோனைப்(திருமால்) போன்று மன்னனது புகழ்சிறக்க வாழ்த்தி வேண்டுதல். இது "பூவை நிலை" எனச் சுட்டப்பெறும்.

9. "ஆர் அமர் ஓட்டல்" என்பது அரியப்போரின் கண் பகைவரை புறம் காட்டி ஓடச் செய்தல் ஆகும்.

***"அருமுளை நெஞ்சுரத்து ஆன்பூசல் கோடிச்***
***சருமலைந்தார் சீற்றம் சிறந்து"***

என்னும் பாடலடிகள் இதனை உணர்த்தும்.

10. "ஆ பெயர்த்து தருதல்" என்பது பகைவர் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை மீட்டுத் தருதல் ஆகும்.

***"தாரார் கரந்தை தலைமலைத்து தாங்கொண்டார்***
***நேரார் கைக்கொண்ட நிரை"***

என்பதனால் அறிக.

11. சீர்சால் வேந்தன் சிறப்பு எடுத்து உரைத்தல்" என்பது சிறப்பு மிகுந்த வேந்தனின் புகழை எடுத்துக் கூறுதல் ஆகும்.
புறம் 259ம் பாடலில்

***"செல்லல் செல்லல் சிறக்க நின் உள்ளம்***
***முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்***
***தாவுபு தெறிக்கு மான்மேற்***
***புடையிலங்கு ஒள்வாள் புனைகழ லோயே"***

என வரும் அடிகளைக் காண்க.

12. தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தல்" என்பது கொடுஞ்சொற்களையுடைய வஞ்சினம் கூறுதல் ஆகும்.

***"ஆளமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி***

***வாளோடு வைகுவேம் யாமாக நாளும்***

***கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோய் ஈயப்***

***பிழிமது உண்பார் பிறர்.''***

என்ற பாடலடிகளால் உணரலாம்.

**13,14 பிள்ளை நிலை:**

இத்துறை வருதார்தாங்கல், வாள்வாய்த்துக் கவிழ்தல் என்று இருவகைப்படும். வருதார் தாங்கல் என்பது தன்னை எதிர்த்து வருகின்ற தூசுப்படையைத்(முன்னனிப்படை)தனித்து நின்று எதிர்த்தல் வாழ்வாய்த்துக் கவிழ்தல் என்பது பகைவரது வாளால் இறத்தல்.

***''பொருதுஅழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்***

***ஒருதனியே நின்றான் உளன்''***

என்பார் வாள்வாய்த்துக் கவிழ்தல் ஆகும்.

15. வாள்மலைந்து எழுந்தோனை நாட்டுமக்கள் பறை முழுங்க, அவனுக்கு துறக்கமாகிய அரசு அளித்துப் பாராட்டுதல்.

***''கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு***

***வான்கெழு நாடு வர''***

என்பதனால் அறியலாம்.

16. காட்சி என்பது போர்க்களத்தில் உயிர்துறந்த வீரருக்கு நடுகல் அமைப்பதற்கான காணுதல்.

***''வீளைக் கடுங்கணையால் வேறாகி விண்படர்ந்த***

***காளைக்குக் கண்டமைத்ததார் கல்''***

என்ற வரிகள் உணர்த்தும்.

17. "கால்கோள்" என்பது கல்லைத் தேர்ந்தெடுத்துக் கொணர்தல்

***''அழுன்மறம் காற்றி அவிந்தாற்கொண் றேத்திக்***

***கழன்மறவர் கைக்கொண்டார் கல்''***

என்பதானால் அறியலாம்.

18. "நீர்ப்படை" என்பது அக்கல்லை நீராட்டித் தூய்மை செய்தல்

***''நயத்தக்க மண்ணி நறுவரை கொண்டாட்டிக்***

***கயத்தகத்து உய்த்திட்டார் கல்''***

19. "நடுதல்" என்பது தூய்மை செய்த அக்கல்லை ஓரிடத்து நடுதல்.

***''ஆண்டக நின்ற அமர் வெய்யோற்கு இ:்தென்று***

***காண்டக நாட்டினார் கல்''***

எனவரும் வரிகளால் உணரலாம்.

20. சீர்தகு மரபின்பெரும்படை என்பது நாட்டிய கல்லிற்குக் கோயில், மற்றும் கோட்டம் எடுத்து சிறப்பு செய்தல்.

***"வாட்புகா ஊட்டி வடிமணி நின்றியம்பக்***
***கோட்புலி அன்ன குரிசில் - ஆட்கடிந்து***
***விற்கொண்ட வென்றி வியன்மறவர் எல்லாரும்***
***இற்கொண்டு புக்கார் இயைந்து"***

என்பதனால் அறியலாம்.

21. "வாழ்ந்து" என்பது அக்கல்லை வாழ்த்துதல்.

***"கைவண் குரிசில் கைதொழுது செல்பாண***
***தெய்வமாய் நின்றான் திசைக்கு"***

எனக் கூறுவதனால் அறியலாம்.

இந்த இருபத்தொரு துறைகளுள் ஆர் அமர் ஒட்டல் முதல் ஏழு துறைகள் கரந்தைத் துறைகள் என்பது இளம்பூரணர் கருத்து. இந்நிகழ்வுகளின் போது வீரர்கள் கரந்தைப் பூ சூடுதல் மரபு. பிற துறைகள் 14ம் மறத்துறை ஏழிற்கும் பொதுவானவை.

காட்சி முதல் வாழ்த்து ஈறாக உள்ள ஆறு துறைகள் நடுகல் வணக்கத்திற்கு உரியன.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியைத் தெய்வமாக்கியதைக் கூறுகின்ற ஆறுகாதைகளின் தலைப்புகளும் இம்முறையில் அமைந்துள்ளன குறிப்பிடத்தக்கது.

## வஞ்சித்திணை:

புறத்திணை வரிசையில் இரண்டாவதாக இடம்பெற்றுள்ளது வஞ்சித்திணை. இது முல்லையாகிய அகத்திணைக்குப் புறமாகும். மண்ணாசையின் காரணமாகப் போர் புரிவதே வஞ்சியாகும். பகைவர் அஞ்சும்படியாகப் படையெடுத்துச் சென்று மேற்கொள்ளுதல் வஞ்சியாகும். என்பதனை,

***"வஞ்சிதானே முல்லையது புறனே***
***எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்***
***அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்றே" (புறம் : 6)***

என்ற நூற்பாவில் தெளியலாம்.

முல்லைக்கு வஞ்சி புறன் ஆவது எவ்வாறு? என்ற வினாவிற்கு இளம்பூரணர் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

காடுறை உலகாகிய முல்லைக் காடும் கார் காலமும் ஆகிய முதற்பொருளும், அந்நிலத்திற்கேற்ற கருப்பொருளும், வேந்தன் பாசறைக்கண் தலைவியைப் பிரிந்திருத்தலும் ஆகிய உரிப்பொருளும் ஒத்திருத்தலால் வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று என்பர்.

இவ்வஞ்சித் திணைக்கு உரிய துறைகள் 13 ஆகும். அவற்றைப் பின்வருமாறு காணலாம்.

1. இயங்கு படை அரவம் - வஞ்சி வேந்தன் போருக்குப் புறப்படும்பொழுது எழும் ஆரவார ஒலி. இது படை இயங்கு அரவம் என்றும் பெயர் பெறும்.

புறநானூறு 36ம் பாடலில் சோழன் நலங்கிள்ளியின் படைகள்,

***"போரெனில் புகழும் புனைகழல் மறவர்***
***காடிடைக் கிடந்த நாடுநனி சேய***
***செல்வேம் அல்லேம் என்னார்"***

என்று ஆரவாரத்துடன் புறப்பட்டுச் செல்வர் என்று புகழப்பட்டது.

2. எரிபரந்து எடுத்தல் ஆரவாரத்தோடு சென்ற படை பகைவர்நாட்டைத் தீயிட்டுக் கொளுத்துதல். புறநானூறு 16ஆம் பாடலில் பெருங்கிள்ளியின் படைகள்.

***"எல்லுப்பட இட்ட சுடுதீ விளக்கம்***
***செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்றும்***
***ஏமநன் னாடு ஒள்ளரி ஊட்டின"***

என்று செய்தி பாடப்பெற்றுள்ளது.

3. வயங்கல் எய்தி பெருமை பகைவரை அழித்துப் புகழ் பெறும் நிலை

***---------------------சிறைஅரும் சீற்றத்து***
***நளியிரும் பரப்பின் மாக்கடல் முந்நீர்***
***நீர் துணைந் தன்ன செலவின்***
***நிலந்திரைப் பன்ன தானையோய் நினக்கே"***

என்று பதிற்றுப்பத்தில் சேரனின் புகழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

4. கொடுத்தல் எய்திய கொடைமை –வீரர்களுக்கும், பரிசிலர்க்கும் கொடை செய்தல்.

***"பாணர் தாமரை மலையவும் புலவர்***
***பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்***
***இன்னாவாகப் பிறர்மண் கொண்டு***
***இனியசெய்தி நின் ஆர்வலர் முகத்தே" (புறம் : 12)***

என்று மன்னனின் கொடைச்செயல் புகழப்படுகிறது.

5. அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றம் பகைவரை மேற்சென்று அழித்து வெற்றி பெறும் மன்னனின் வீரச்செயல்.

புறநானூறு 93இல் அதியமானின் இத்தகைய வீரம் புகழப்படுவதை காண்க.

6. மாராயம் பெற்ற நெடுமொழி அம்பு தைக்கினும், யானை தாக்கினும் அடிபிறக்கிடா் ஆண்மையினைத் தன்னுள் வளர்த்து நெஞ்சுரம் பெற்று அந்த உவகையினால் பேசும் நெடுமொழிகள் அல்லது வீரமொழிகள். இதனைப் புறநானூறு 287ஆம் பாடல் எடுத்தோதுகிறது.

7. பொருள் இன்று உய்த்த பேர் ஆண் பக்கம் எதிர்த்து வருகின்ற பகைவரை ஒரு பொருளாக மதியாமல் படை செலுத்தும் பேராண்மை. இக்காட்சி பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடும் பாடல் 9ல் படம்பிடிக்கப் படுகிறது.

*"எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்என*
*அறத்தாறு நுவலும் பூட்கை மரம்"*

8. வருவிசைப் புனலைக் கற்சிலை போல ஒருவன் தாங்கிய பெருமை விரைந்து வரும் நீர்பெருக்கைத் தடுத்து நிறுத்தும் கற்றூண் போல, எதிர்த்து வரும் பகைவரைத் தான் ஒருவனாக எதிர்த்து நின்று போரிடும் நிலை.
புறம் 330:1-4 அடிகளில் வீரனின் இத்தகைய செயல் பாராட்டப் பெறுவதைக் காணலாம்.

9. பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை வீரர்களுக்கு விருந்து படைக்கும் நிலை. பாரதப்போரில் பாண்டவர் படைக்குப் பெருஞ்சோறு அளித்த சேரன் "பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்" என்று புகழப்படுவதைப் பதிற்றுப்பத்து – 30ம் பாடலில் காணலாம்.

10. வென்றோர் விளக்கம் - வென்றவர் பெருமை பேசப்படல்

11. தோற்றோர் தேய்வு - தோற்றவர் தம் குறைவு பேசப்படல்
பதிற்றுப்பத்து 80ஆம் செய்யுள் இத்துறை விளக்கமாக அமைகிறது.

*"பலி கொண்டு பெயரும் பாசம் போலத்*
*திறைகொண்டு பெயர்தி வாழ்துநின் ஊழி*
*உரவரும் மடவரும் அறிவுதெரிந்து எண்ணி*
*அறிந்தனை அருளாய் ஆயின்*
*யாரிவண் நெடுந்தகை வாழு மோரே"* *(பதிற்றுப்-71)*

12. குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளை தோற்ற மன்னன் அளிக்கும் நிறைப்பொருளினைக் கொற்றவள்ளை எனக் குறிப்பிடுகிறார் இளம்பூரணர். ஆனால் வெண்பாமாலை ஆசிரியர் பகைநாட்டின் அழிவிற்காக இரங்குவதும் மன்னவன் புகழ்பாடுவதுமே கொற்றவள்ளை என்கிறார்.

13. அழிபடை தட்டோர் தழிஞ்சி – பகைவர் ஏவிய படைக்கருவியைத் தம் உடலில் ஏற்றதால் இறந்துபட்ட வீரர்களை மன்னன் நேரில் சென்று பேணித் தழுவுதல். இதனைப் புறநானூறு 284ஆம் பாடலால் அறியலாம்.

ஆக மேற்குறிப்பிட்ட 13 துறைகள் கொண்டது வஞ்சி.

**உழிஞைத் திணை:**

உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறமாக அமைந்தது உழிஞை என்பது மதிற்போர். பகை மன்னனின் அடிப்படைப் பாதுகாவலான மதிலைக் கைப்பற்றுதலாகும்.

மதில் எனினும் அரண் எனினும் ஒக்கும்.

அரண் முழுவதையும் முற்றுதலும் உள்ளிருக்கும் வேந்தன் அதனைக் கோடலும் இத்திணையின் செயல்பாடுகள் ஆகும். "முழுமுதல் அரணம்" என்றமையால் தலை, இடை, கடை என்ற மூவகை அரண்களில் தலை அரண் கைப்பற்றுதல் என்று கூறுகிறார் உரையாசிரியர்.

அரண் கோடலை "நொச்சி" என்ற தனித் திணையாகக் கொள்ளவில்லை.

உழிஞைக்குள்ளாக நொச்சி அடக்கப்பட்டிருப்பது வெளிப்படை.

***"உழிஞை தானே மருதத்துப் புறனே***
***முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்***
***ஆனைநெறி மரபிற்று ஆகும் என்ப" (புறத்:8)***

என்பது தொல்காப்பியம்.

***"அதுவே தானும் இருநால் வகைத்தே" (புறத்:9)***

என்பதால் உழிஞை எட்டுவகைகளைக் கொண்டது என்பது அறிய வருகிறது. இவற்றுள் முதல் நான்கும் மதிலின் வெளியிலிருந்து முற்றுகையிடுவார் செயல்கள். பின்னைய நான்கும் உட்புறத்திலிருந்து மதிலைக் காக்க முற்படுவர் செயல்கள் என்பர் நச்சினார்க்கினியர்.

1. கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம் - தன்னை இறை(தலைவன்) எனக் கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும் ஆகிய பகைவரது நாட்டை வெல்லக் கருதுகின்ற எண்ணம்.

 ***"புலவர் எல்லாம் நின்னோக் கினரே***
 ***நீயே, மருந்தில் கணிச்சி வருந்தவட் டித்துக்***
 ***கூற்று வெகுண்டு அன்ன முன்பொடு***
 ***மாற்று இருவேந்தர் மண்நோக் கினையே" (புறம் : 36)***

எனவரும் பாடல் சான்று காட்டப்பட்டுள்ளது.

2. உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு நினைத்ததை முடிக்கலாகும் வேந்தனது சிறப்பு. எண்ணியது எண்ணியவாறு முடிக்கும் வேந்தனது வலிமைச் சிறப்பினை,

 ***"அடுநை ஆயினும் விடுநை ஆயினும்***
 ***நீ அளந்து அறிதி ………." (புறம் : 36)***

3. தொல் எயிற்று இவர்தல் - மதில்மேல் ஏறிப் போர்புரிதல்.

*“புல்லால் புகழொடு போக்கு ஒழியப் பொங்கினனாய்ப்*
*பல்லார் மருளப் படைபரப்பி-ஒல்லார்*
*நிறுத்திறுத்த வாள்தானை நேரார் மதிலின்*
*புறத்து இறுத்தான் பூங்குழலி னான்” (புறப்பொருள் : 10)*

என்ற வெண்பாவினால் உணரலாம்.

4. தோலது பெருக்கம் - தோல்படை(கேடயம்) ஏந்திய படையினர் சிறப்பு. இதனை வெண்பாமாலை தோல் உழிஞை என விளம்புகிறது. (தோல்படை – கிடுகுப்படை)

5. அகத்தோன் செலவு – அரண் அகத்து உள்ள வேந்தனது செல்வ மேம்பாட்டினைப் புகழ்தல், மூவேந்தர் பறம்பு மலையை முற்றுகையிட, கபிலர் அவர்களிடத்து பாரியின் பரம்புமலை வளத்தைப் பின்வருமாறு எடுத்துரைத்தலைக் காணலாம்.

*“உழவர் உழாதன் நான்குபயன் உடைத்தே*
*ஒன்றே சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே*
*இரண்டே தீஞ்சுளை பலவின் பழம் ஊழ்க்கும்மே*
*மூன்றே கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே*
*நான்கே அணிநிற ஓரி பாய்தலின் மீது அழிந்து*
*திணிநெடுங் குன்றம் தேன் சொரியும்மே” (புறம் : 109)* என வருவதைக் காண்க.

1. முரணிய புறத்தோன் அணங்கிய பக்கம்-அரணை முற்றுகையிடும் அரசனும் வீரரும் அடையும் துன்பம்,

*“களையாக் கழல்கால் கருங்கண் ஆடவர்*
*உருகெழு வெகுளியர் செறுத்தன ஆர்ப்ப*
*மிளையோ யின்று நாளை நாமே*
*உருமிசை கொண்ட மயிர்க்கண்*
*திருமுரசு இரங்க ஊர்க்கொள் குவமே” (தகடூர்யாத்திரை)*

எனக்கூறுவதில் போர் செய்த துன்பம் தரும் நிலை சுட்டப்படுகிறது.

2. திறல்பட ஒருதான் மண்டிய குறமை-வலிமையோடு ஒருவன் தன்னந்தனியாகப் புறத்தே வந்து போர் செய்யும் குற்றுழிஞை.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் கிண்கிணிகூட களையாத பருவத்து

*“உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை*
*விழுந்தன்றும் இழிந்தன்றும் இலனே, அவரை*
*அழுந்தப் பற்றி அகல்விசும்ப ஆர்ப்பெழக்*
*கவிழ்ந்து நிலஞ் சேர அட்டதை”*

புறம்: 77 ஆம் பாடலில் வியந்து பாராட்டுகின்றது.

3. உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில் சினம்கொண்டு தன்னைத் தாக்க வருகின்ற புறத்தோரை ஒரு பொருட்டாக எண்ணாமல் அவர்களை இகழ்ந்திருத்ததற்கேற்ற அரிய மதிலின் வன்மை.

***"வியப்போர் செய்தாலும் வென்றி அரிதரோ***
***மாயப்போர் மன்னன் மதில்" (புறம்:உழிஞை:11)***

என்று கூறப்பட்ட எட்டுவகைகளையுடையது உழிஞைத்திணை.

அடுத்து வருகின்ற நூற்பாவில் உழிஞைப் போரின் நிகழ்ச்சிகளாகிய பனிரெண்டு துறைகள் இடம் பெற்றுள்ளன.

உழிஞைப் போருக்குச் செல்லும் மன்னன் நல்ல நாளும் பொழுதும் பார்த்துப் போர் மரபுப்படி வெண்கொற்றக் குடையினைப் போர்த்திசை நோக்கி அனுப்பி வைக்கிறான். இதேபோன்று போர்வாளையும் அனுப்புகிறான்.

போரிடத்தை அடைந்த வீரர்கள், மதிலின் மேல் நன்கு பொருந்துமாறு சார்த்தி வைத்த ஏணி மீது ஏறி மதில் மேல் நின்று போர் செய்கின்றனர்.

புறத்தோரும் அகத்தோரும் மதிற்போரினைக் கைவிட்டு அப்புறமதிலைக் கைக்கொண்ட வினைமுதிர்ச்சி நிலையில் உழிஞைப் போரை முடிக்கின்ற மன்னர் நிலை.

மதிலின் உள்ளிருந்த போரிட்ட மன்னனின் நொச்சி நிலை(மதிலைப் பாதுகாக்கும் முயற்சி) உழிஞையான் வீழ்ந்த புதுமை நிலை.

கிடங்கின் உளதாகிய நீரரணாகிய கிடங்கில் இருதிறத்தாருக்கும் பாசி பரவிக் கிடந்தது போன்ற போர் புரிகின்ற நிலை.

உள்ளிருந்தோர் மீண்டும் மதிலைத் தமதாக்க எண்ணி, மதிலின் மேல் நின்று போரிடுகின்ற நிலை.

இம்மதிற்போரில் வென்ற மன்னன் இறந்த மன்னனின் மணிமுடியைக் கைப்பற்றி நீராடித் தூய்மைபடுத்துகின்ற மண்ணுமங்கல விழாநிலை.

அதேபோன்று நடைபெறுகின்ற வாள்மண்ணுமங்கல் விழா நிலை.

மதிலரண் கொண்ட மற்ற மன்னர்களும் தொகையாகப் பகைமை நீங்குதல் என்ற பனிரெண்டு நிகழ்வுகளும் உழிஞையின் துறைகளாகக் கொள்ளப்படுகிறது.

## தும்பைத் திணை:

வலிமை அடிப்படையில் நடைபெறுவது தும்பைப்போர். எப்போர்க்கும் தும்பையின் உணர்வு இன்றியமையாதது. தும்பைக்கு எதிர்வினை சுட்டாமல் பாடியிருப்பது சிந்தனைக்கு உரியது. உடல்வலிமை அடிப்படையில் இருபெரு வேந்தரும் ஒரே நேரத்தில் போரிடுவர் என்பதே அதற்கான காரணம் ஆகும்.

"*தும்பை தானே நெய்தலது புறனே*

*மைந்து பொருளாக வந்த வேந்தனைச்*

*சென்று தலை அழிக்கும் சிறப்பிற்று என்ப" (புறத்: 12)*

என்று தொல்காப்பியம் உணர்த்துகிறது.

தும்பைத்திணையின் சிறப்பியல்பினை,

*"கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்*

*சென்ற உயிரின் நின்ற யாக்கை*

*இருநிலம் தீண்டா அருநிலை வகையொடு*

*இருபாற்பட்ட ஒருசிறப் பின்றே" (புறத்: 13)*

என்கிறார்.

அதாவது பகைவர் செலுத்திய அம்பும் வேலும் வீரனது உடலில் நெருங்கிச் சென்று தைக்கும். அந்நிலையில் உடலினின்று உயிர் நீங்கும். உயிர் நீங்கிய உடம்பு நிலத்தில் சாயாது நேர் நிற்கும். வீரனது உடலாயினும் தலையாயினும் நிலத்திற்படாது எழுந்து ஆடும். இது எது போன்றது எனின் இரு துண்டங்களாக வெட்டப்பட்ட நீர்வாழ் அட்டை இணைந்து ஒன்றாகி ஆடுவது போல என்று விளக்குகிறார் இளம்பூரணர். இத்தகைய சிறப்பு வாய்ந்தது தும்பைத்திணையாகும்.

### தும்பை நெய்தலுக்குப் புறமாவது:

இருபெரு வேந்தரும் ஒருகளத்துப் போரிட தகுந்த இடம் காடு, மலை. கழனி (வயல்) ஆகாமையாலும் களரும் மணலும் நிறைந்த வெளி நிலத்துப் பொருதல் வேண்டுதலாலும், அந்நிலம் கடல்சார்ந்த வழியல்லது வேறு இன்மையாலும், நெய்தலுக்கு வரையறுக்கப்பட்ட எற்பாடு என்னும் சிறுபொழுது போர்தொழிற்கு முடிவாதலானும் நெய்தற்குத் தும்பை புறனாயிற்று என்பர் இளம்பூரணர்.

இத்தும்பை தார்நிலை, இருவரும் தபுநிலை, பாழிகொள்ளும் ஏமநிலை, எதர்ந்தோர் பாடு, வாளோர் ஆடும் அமலை, தொகைநிலை, நல்லிசை நிலை, நூழில் என்ற துறைகளைக் கொண்டது.

வேந்தனைப் படையாளர் பலர் நெருங்கிய போது, அந்நெருக்கடி நிலையை நீக்க விரும்பிய வீரன் ஒருவன் தனது இடம் விட்டு நீங்கி வேந்தர்க்குத் துணையாகிப் பகைவரை வெற்றி கொள்ளும் திறம் தார் நிலை ஆகும்.

தன்படையை அழிவுநிலைக்கு ஆளாக்கிய மாற்றார் படையை எதிர்த்து நிற்கும் திறம் கூழைதாங்கிய பெருமை பகையறுத்துப் பாழிகொள்ளும் ஏமம் எனப்பட்டது.

பகை வேந்தனோடு அவன் ஊர்ந்து வந்த களிற்றினையும் வீழ்த்திய நிலையே *"எதிர்ந்தோர் பாடு"* ஆகும்.

வெற்றி பெற்ற வேந்தனை அவனது படையாளர், சூழ்ந்து நின்று ஆரவாரம் செய்வது ***"வாளோர் அமலை".***

வாட்போருக்கு பின்னர் போர்க்குரிய அனைவரும் தொகையாக மாளுதல் தொகைநிலை எனும் துறையாகும்.

நூழில் என்னும் துறை பலரைக் கொன்று குவித்தல் எனப்படும்.

தும்பை வீரர்கள் தம் மன்னன் தேர்முன் ஆடுவது முன்தேர்க்குரவை எனவும், தேர்ப்பின் ஆடுவது பின் தேர்க்குரவை எனவும் சொல்லப்படுகிறது. முன்தேர்ககுரவையில் மறவரும், பின் தேர்க்குரவையில் மறவரும், விறலியரும் இணைந்து ஆடுவர் என்பர். தேரின் முன்னும் பின்னும் பேயாடுதல் பேய்க்குரவை எனப்படும்.

புறம் 180,275 மற்றும் பதிற்றுப்பத்து 6 ஆகிய பாடல்கள் முறையே தார்நிலை: கூழை தாங்கிய பெருமை மற்றும் வாளோர் ஆடும் அமலை ஆகிய துறைகளை விளக்கும் பாடல்களாகும்.

## வாகைத்திணை

வாகை என்பது வெற்றியைக் குறிக்கும் பொதுச்சொல். இது தனிமனித வெற்றி மற்றும் குழுவினர் தம் வெற்றியை உணர்த்துகிறது. போரில் விளைகின்ற வெற்றிகளும் மனிதவாழ்வில் அகநிலையில் விளங்குகின்ற வெற்றிகளும் வாகை என்றே சிறப்பிக்கப்பெறும்.

குற்றமற்ற கொள்கையினால் தத்தமக்குரிய அறிவு, ஆண்மை, பெருமை முதலிய பண்புகளில் ஏனையோரினும் வேறுபட்டு மேம்படுதல் வாகைத்திணையின் ஒழுக்கமாகும். இதனை,

***"வாகை தானே பாலையது புறனே***
***தூவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்***
***பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"      (புறம்:15)***

என்ற தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம்.

பாலைக்கு புறத்திணையாவது வாகை என்று கூறி அதற்கான காரணங்களைப் பின்வருமாறு உரைக்கின்றார் இளம்பூரணர்.

1. பாலையாவது தமக்கென ஒரு குறிப்பிட்ட நிலம் இன்றி எல்லா நிலத்திலும் காலம் பற்றிப் பிறப்பது போல வாகையும் எல்லா நிலத்திலும் எல்லாக் குலத்திலும் காலம் பற்றி நிகழ்வது.
2. ஒத்தார் இருவர் புணர்ச்சியினின்றும் புகழ்ச்சி காரணமாகப் பிரிவது போலத் தன்னோடு ஒத்தாரினின்றும் நீங்கிப் புகழப்படுவதால் அதற்கு இது புறனாயிற்று என்பர்.

வாகைத் திணையினை விளக்கவந்த தொல்காப்பியர் முதலில் அதன் வகைகளை விளக்கி பின்னர் துறைகளை எடுத்துரைக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வாகையின் வகைகள் பாகுபாடுகள்:**

1. **அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்:**

பக்கம் என்பது ஒழுக்கம் அல்லது செயல் எனப் பொருள்படும்.

ஓதல், ஓதுவித்தல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழிலுடையோராகிய பார்ப்பனக்குரிய ஒழுக்க மேம்பாடு வாகை ஆகும்.

2. **ஐவகை மரபின் அரசர் பக்கம்:**

ஓதல், வேட்டல், ஈதல், படைவழங்குதல், குடியோம்புதல் என்னும் அரசர்தம் ஐவகைத் தொழில், ஒழுக்க மேம்பாடு

3. **இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்:**

ஏனோர் என்பவர் வணிகர், வேளாளர், வணிகர்க்கு ஓதல், வேட்டல். ஈதல், உழவு, வாணிகம், நிரையோம்பல் உரியது. வேளாளர்க்கு உழவு, உழவு ஒழிந்தவை. விருந்தோம்பல், பகடு காத்தல், வழிபாடு, வேதம் அல்லாத கல்வி உரியது.

4. **மறுவில் செய்தி மூவகைக் காலமும் அறியும் அறிவின் தேயம்:**

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைக் கால நிகழ்வுகளைப் பகலிலும் இரவிலும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு உள்ள வில், மின், கோள், தூமம் பிறவும் பார்த்துப் பயன்கூறும் அறிவன் அல்லது கணியன் பக்கம்.

5. **தாபதப் பக்கம்:**

எட்டுவகைத் தொழிலுடைய முனிவர்கள்.

அவையாவன : நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோல் உடுத்தல், சடை வளர்த்தல், எரி ஓம்புதல், ஊர் அடையாமை, காட்டில் உள்ள உணவு உண்ணல், கடவுள் வழிபாடு, என்ற எண்வகைப்பட்ட ஒழுக்கங்கள்.

1. **பொருநர் வீரர் பக்கம்:**

போர்த்துறைகளை அறிந்த வீரர்தம் செயல்பாடுகள் ஆகிய ஒழுக்க மேம்பாடுகளைப் புகழ்ந்து கூறுதல் வாகையின் வகைகள் ஆகும். ஒருசில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

**ஓதல் என்பது கல்வி:**

***"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்***
***தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்***
***எம்மை உலகத்தும் யாங்காணோம் கல்விபோல்***
***மம்மர் அறுக்கும் மருந்து" (நாலடி-கல்வி-2)***

இது கல்வியின் மேன்மை கூறியது

**வேட்பித்தலாவது வேள்வி செய்வித்தல்:**

*...... ...... ............ ......... ...................*

*ஆன்ற வேள்வி அடங்கிய கொள்கை*

*நான்மறை முதல்வர் சுற்றம் ஆக*

*மன்னர் ஏவல் செய்ய மன்னிய*

*வேள்வி முற்றிய வாள்வாய் வேந்தே" (புறம்:26)*

**அரசர்க்குரிய குடியோம்புதல்:**

*"சோறுபடுக்குந் தீயொடு*

*செஞ்ஞாயிற்றுத் தெறவல்லது*

*பிறிதுதெறல் அறியார்நின் நிழல்வாழ்வாரே*

*திருவில் அல்லது கொலைவில் அறியார்*

*நாஞ்சில் அல்லது படையும் அறியார்" (புறம்:20)*

அரசன்குடியோம்பல் திறம் பாராட்டப்பட்டது.

**வேளாண் மாந்தர்க்குரியவை:**

*"சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்*

*உழந்தும் உழவே தலை.*

*இரவார் இரப்பார்க்கொன் றிவர் கரவாது*

*கைசெய்தூண் மாலை யவர்*

*வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்*

*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*

*மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே" (புறம்: 183)*

இத்தகைய பிற சான்றுகளைக் கற்றறிக.

**வாகைத் துறைகள் பற்றி இனிக் காண்போம்:**

தொல்காப்பிய புறத்திணையியல் 17-ம் நூற்பா வாகைத் துறைகளை வகுத்துரைப்பதாகும். 18 துறைகள் கொண்ட இத்தொகுப்பு இருபிரிவுகளாக அமைந்துள்ளது. 1-9 வரையிலானவை போருக்கும் வீரர்களுக்கும் உரிய துறைகளாகும். 10-18 வரையிலானவை சமுதாய அனைத்துப் பிரிவு மக்களுக்கும் உரியவைகளாகும். எனவே வீரம் மற்றும் சமுதாய அறம் என்ற இரு நிலைகளில் வாகைத் திணையின் துறை நிகழ்வுகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன எனலாம்.

1. கூதிர் மற்றும் வேனில் பாசறை : கூதிர், வேனில் ஆகிய இருகாலத்திலும் போரின் மீது கொண்ட காதலினால் பாசறைகளில் தங்கிப் போர்புரிந்தமையை இத்துறைகள் உணர்த்துகின்றது.

2. ஏரோர் களவழி மற்றும் தேரோர் தோற்றுவித்த வெற்றி: இது களம்பாடுதல் மற்றும் களவேள்விப் பாடுதலாகும். இளம்பூரணர் இதனை ஏரோர் களவழி, போரோர் களவழி, களவேள்வி என மூவகைப்படுத்துகின்றார்.

புறம் 369-ஆம் பாடலில்.

யானை மேகமாகவும், வாள் மின்னலாகவும், முரசு முழக்கமாகவும், குதிரை வேகம் வீசும் காற்றாகவும், குருதி சிந்திச் சேறாகக் கிடக்கும் போர்க்களமாகிய வயலிடத்துத் தேரினை ஏராகப்பூட்டி, வேல் முதலிய கணைகளை விதைத்துப் போருழவு செய்வதாக உருவகித்துப் பாடியிருப்பதனைக் காணலாம். இது ஏரோர் களவழி ஆகும்.

தேர்முன் ஆடும் முன்தேர்க்குரவை:371-ஆம் புறப்பாடலில் தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியனைக் காணப் பாசறைக்கு வருகின்ற பாடினி,

***"உருகெழு, பேய்மகள் அயரக்***
***குருதித் துகள் ஆடிய களம்"***

கண்டதாகப் பாடுகின்றாள்.

4. அதேபோன்று தேர்ப்பின் ஆடும் குரவையும் இத்திணையின் துறை நிகழ்வுகளுள் ஒன்று ஆகும்.

5. பெரும்பகை தாங்கும் வேல்: வேல் போரினை நடத்திய வேந்தனும், அவனது வெற்றிக்கு ஆதாரமாகிய வேலும் புகழப்படுகின்றது. வஞ்சப்புகழ்ச்சியாய ஔவையார் பாடிய ***"இவ்வேல், பீலி அணிந்து….."*** எனத் துவங்கும் புறம் 15ம் பாடல் இதற்குச் சான்று ஆகும்.

6. அரும்பகை தாங்கும் ஆற்றல்: ஆள்வினை வாய்ந்த மறவனின் ஆற்றல் புகழப்படுதல் ஆகும்.

***"களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து***
***எம்முளும் உளனொரு பொருநன் வைகல்***
***எண்தேர் செய்யும் தச்சன்***
***திங்கள் வலித்த காலன் னோனே" (புறம்:87)***

என்ற பாடல் பகைவர்க்கு எச்சரிக்கை விடுப்பதாக உள்ளது.

புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கம்: பகைவருடன் பொருந்தாத வலிய ஆண்மைத் தன்மையைப் புகழ்தல்.

***"அரசு வரின் தாங்கும் வல்லா ளனே" என்றபுறம் 327*** : 8 காண்க

1. "அவிப்பலி" என்பது தான் முன்பு சொன்ன வஞ்சின மொழியைக் காப்பதற்காக மரபுப்படி உயிரை வழங்குதலாகிய அவிப்பலியின் சிறப்பாகும்.

2. ஒல்லார் இடவயின் புல்லியபாங்கு: பகைவர் இடத்தைக் கைப்பற்றி அவ்விடம் சேரலாகிய நிகழ்வு.

இதுவரை கூறப்பட்டது தனிமனித வீர மதிப்பீடுகளாகும். இனி, சமுதாய அறம் மதிப்பீடுகள் பற்றிக் காணலாம்.

1. துகள்தரு சிறப்பின் சான்றோர் பக்கம்: எருதுகளைப் பாதுகாக்கும் வேளாளரைச் சிறப்பித்தல் மற்றும்

2. குற்றம் தீர்ந்த வணிகரைச் சிறப்பித்தல,

***“புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனில்***
***உலகுடன் பெறினும் கொள்ளலரி”***

என புறம் 18 பாராட்டும் சான்றோரே மேற்குறிப்பிட்டவர்.

3. கடிமனை நீத்த பால் என்பதும் வாகைத்துறை. இது பிறர்மனை நயவாமையாகிய அறத்தில் சிறந்தாரைப் புகழ்வது ஆகும்.

***“பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோருக்கு***
***அறன்அன்றோ ஆன்ற ஒழுக்கு”*** என்ற குறளைக் காண்க.

4. குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்ற எட்டுவகை ஒழுக்கங்களில் சிறந்த சான்றோர் நிலையினைப் புகழ்தலும் வாகைத் துறை ஆகும்.

5. மேலும் அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவு நிலைமை, வெ.ஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை போன்ற இல்லத்திற்கு உரியதாக நான்கு வருணத்தார்க்கும் வரையறுக்கப்பட்ட ஒழுக்கங்களில் சிறந்து நிற்கும் இல்லற மாண்புகள் புகழப்படுதல் ஆகும். 129,134,118,172,181,256,164,158 ஆகிய குறட்பாக்களை எடுத்துக்காட்டாக கொள்க.

6. இவற்றுடன் கொடுத்தற்கு அரியன கொடுக்கும் கொடைத்திறன்.

7. தம்மிடத்துத் தவறு செய்தவர்களை “அகழ்வாரைத் தாங்கும் நிலம்” போலப் பொறுக்கும் ஆற்றலும் மற்றும் மெய்ப்பொருள் அத்துடன் பொருள் எனப்படும் படை, நாடு, அரண், அமைச்சு, நட்பு இவற்றைப் போற்றிய திறனும் வாகையின் துறைகளாக மதிப்பிடப்படுகின்றன.

***“படைகுடி கூழ் அச்சு நட்பரண் ஆறும்***
***உடையான் அரசருள் ஏறு”***

8. இவை அனைத்திற்கும் மேலாக அருளுடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணாமை, துறவு விரும்புதல் போன்ற ஒழுக்கங்களைப் பொருத்தி வாழ்தலும் வாகை ஆகும். எடுத்துக்காட்டாக குறள் 241,321,291,287,928,341,360 ஆகிய பாக்களை இணைத்துக் காண்க.

9. காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றினை நீக்கி வாழ்கின்ற சிறப்பும் வாகைத் துறையாகும் என சமுதாயம் அறங்களை வகுத்தோதியுள்ளார் தொல்காப்பியர்.

### 8: காஞ்சித் திணை:

காஞ்சி என்னும் துறை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறன் ஆகும். இத்திணை உலகத்தில் நியைாமை என்னும் கொள்கைப் பல்வேறுபட்ட நெறிகளாலும் எடுத்து

உணர்த்துவதாக அமைகிறது என்பதனை,

***"காஞ்சி தானே பெருந்திணை புறனே***
***பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்,***
***நில்லா உலகம் புல்லரிய நெறித்தே"*** *(புறத்:17)*

என்ற நூற்பாவால் உணர்த்துகிறது.

நிலையாமை மூன்று வகைப்படும். அவை செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை என்பனவாகும். இதனை நாலடியார் போன்ற அறநூல்கள் நன்கு உணர்த்தும்.

### காஞ்சி பெருந்திணைக்குப் புறமாவது எவ்வாறு?

ஏறிய மடல்திறம் முதலிய துன்பப்படும் காமப் பகுதியாகிய பெருந்திணை அகன் ஐந்திணைக்கும் புறன் ஆவது போலப் போர்திணைகள் ஐந்திற்கும் பொதுவான நிலையாமை பற்றிப் பேசுவதால் பெருந்திணைக்கு காஞ்சி புறமாயிற்று என்பர் இளம்பூரணர். மேலும் பெருந்திணை அகப்புறம் போல இக்காஞ்சி புறப்புறம் ஆயிற்று என்பர்.

### காஞ்சி திணையின் நோக்கம்:

தனக்கு ஓப்பில்லாத சிறப்பு என்னும் செம்பொருளதாகிய வீடுபோற்றினைப் பெறுதல் காரணமாக இளமை, யாக்கை, செல்வம் என்பனவற்றால் நிலைபேற்றில்லாத இவ்வுலகியலைப் பற்றிக் கொண்டு அதனால் ஏற்படும் பலவகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்றலாகிய ஒழுகலாறினை உணர்த்துதல் ஆகும்.

உலகியல் நேரும் பலவகைத் துன்பங்களையும் எதிர்த்து நிற்றல் காஞ்சி ஆகும் என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டே ***"எதிரூன்றல் காஞ்சி"*** என்னும் கொள்கை பிற்காலத்தில் உருவானது.

"இத்திணை, மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை" முதலாக்
"காடுவாழ்த்து" இறுதியாக 20 துறைகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் முதல் 10 துறைகள் பாங்கரும் சிறப்பினைப் பெறுதல் வேண்டும் என்னும் விருப்பத்தைப் புலப்படுத்துவன. இறுதி 10 துறைகள் நில்லாத உலகியலைப் பல்லாற்றானும் பற்றியொழுகும் துன்பியலைப் புலப்படுத்துவன. முதற்பத்து ஆண்பாற்றுறை பல்லாற்றானும் பற்றியொழுகும் துன்பியலைப் புலப்படுத்துவன. முதற்பத்து ஆண்பாற்றுறை மற்றும் விழுப்பவகை எனவும், பிற்பத்து பெண்பாற்றுறை மற்றும் விழுப்பவகை என இருதிறமாக எண்ணப்பெறும்.

இனி இத்துறைக்களுக்கான விளக்கங்களைக் காண்போம்.

1. பெருங்காஞ்சி: எவராலும் தடுத்து நிறுத்த இயலாத கூற்றுவன் எமன் வருவான் எனல்.

*"அன்று கொல் இன்றுகொல் என்றுகொல் என்னாது*

*பின்றையே நின்றது கூற்றம்*" என எடுத்துரைத்தல்

2. இளமை கழிந்து வயதிலும் அறிவிலும் முதிர்ந்தோர் அவை அல்லாதார்க்கு அறிவுரை கூறலாகிய முதுகாஞ்சி

*"நல்லது செய்தல் ஆற்றீராயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்*
*எல்லாரும் உவப்பது அன்றியும்*
*நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே" (புறம்:169)*

என்று கணியன் பூங்குன்றனார் கூறுவதைக் காணலாம்.

வீரன் ஒருவன் தன் வீரமிகுதியால் தன் உடற்புண்ணைக் கிழித்துக் கொண்டு இறப்பது மறக்காஞ்சி. இது விழுப்புண் சிறப்பு உணர்த்தியது.

1. போர்களத்திலா் தன்னைப் பாதுகாக்கின்ற சுற்றத்தினர் இல்லாமையால் புண்பட்ட வீரனைப் பேய்கள் காக்கின்ற பேய்க்காஞ்சி.

2. இப்படிப்பட்ட நற்குணங்களை உடையவன் இறந்துவிட்டானே என்று உலகத்தார் புலம்புகின்ற மன்னைக்காஞ்சி. (மன்னுதல்-இரங்குதல்)

அதியமான் இறந்த போது ஔவையார்,

*சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே*
*------------ ---------- ------------- ------------*
*என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே*
*---------- -------------- ----------- ----------------*
*ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ*
*--------------- ----------------- ----------------------*
*இனிப் பாடுநரு மில்லைப் பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை" (புறம் : 235)*

என்று புலம்புதலைக் காணலாம்.

3. இன்னவாறு செய்தலைத் தவறினேன் ஆயின் இன்னேன் ஆகக்கடவன் எனக்கூறிய சிறப்பினை உடைய வஞ்சிக் காஞ்சி

*"சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை*
*------------ --------------- --------------- -------------------*
*ஒருங்கு அகப்படே னாயின்-------------------------*
*------------- --------------- --------------------- ---------------*
*மாங்குடி மருதன் தலைவ னாக*
*உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்*
*புலவர் பாடாது வரைக என்நிலவரை" (புறம் : 72)*

என வஞ்சினம் கூறியது. இத்துறை விளக்கமாக அமைகிறது.

4. புண்பட்டு இறந்த தன் கணவனைப் பேய் தொடாதவாறு மனைவி அவனைக் காத்த தொடாக்காஞ்சி புறம்-281-ல்

***"காக்கம் வம்மோ காதலந் தோழி***
***வேந்தறு விழுமந் தாங்கிய***
***பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகைப் புண்ணே"***

என்று மனைவி தோழியை அழைப்பதைக் காணலாம்.

8. ஆஞ்சிக் காஞ்சி என்பது தன் கணவனின் உயிரைப் போக்கிய வேலினாலே மனைவி தனது உயிரைப் போக்கிக் கொள்ளுதல் ஆகும்.

9. மகட்பாற் காஞ்சி ஆவது பகையரசன் அதாவது மகட்கொடை மறுக்கப்பட்டதால் பகைவனாகிப் போரிட வந்த அரசனுக்கு முதுகுடித் தலைவர்கள் தம் மகளை மணம் செய்து கொடுக்க அஞ்சுதல் ஆகும்.

1. தனது கணவன் இறந்தபின் அவன் தலையோடும் உடலோடும் தன்னைச் சேர்ந்த உயிர்விட்ட மனைவி நிலை ஆகிய இப்பத்தும் தாம் உலகில் உயர்வாகக் கருதிய அனைத்தும் துணையாகாமல் நிலையற்றுப் பயன்படாமையும் அவற்றால் ஏற்பட்ட துன்பங்களையும் கூறுவனவாகும்.

அடுத்து வரும் பத்துத் துறைகள்:

***"------------------- ---------------- --------------------***
***வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்***
***களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை***
***ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்***
***------------- ------------------ ----------------- ----------***
***வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே"*** ***(புறம்: 277)***

என இறந்தவனைச் சுற்றி நின்று உறவினர் அழுது புலம்புகின்ற நிலை,

1. சிறைப்பட்டவர் தாம் அடைந்த பொறுத்ததற்கரிய துன்பநிலையினை எடுத்துக் கூறும் நிலை கணைக்கால் இரும்பொறை சிறையிலர் நீர்கேட்டுப் பெறாத நிலையில் வருந்திப் பாடிய பாடல் இத்துறைக்குத் தக்க சான்றாகும்.

2. கொடுமை மிக்க பாலைநில வழியில் கணவனை இழந்த மனைவி தனியளாக நின்று வருந்துகின்ற முதுபாலை நிலை.

புறம்: 255ல் வரும்

***"ஐயோ எனின்யான் புலியஞ்: சுவலே***
***அனைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்***
***என்போல் பெருவிதிர்ப்பு உறுக நின்னை***
***இன்னா செய்த அறனில் கூற்றே"***

என்ற வரிகள் இக்காட்சியை படம்பிடிக்கின்றன.

3. இறந்தோரை எண்ணி இறவாதார் வருந்திப் புலம்பிய கையறுநிலை
4. காதலியை இழந்து தனிமையில் வாடும் ஆடவன் கூறும் தபுதார நிலை
5. கணவனை இழந்த மனைவியின் கைம்மை நிலை கூறும் தாபத நிலை
6. கணவன் இறக்க அவனோடு உடன்கட்டை ஏறத் துணிந்தவளின் கூற்றாகிய மாலைநிலை
7. அரும்பெரும் மகனை இழந்த தாய் மகனைச் சேரும் தலைப்பெயல்நிலை
8. மற்றும் உலகில் நிலையாமைப் பண்பை விளக்குமாறு பலர் இறந்தாலும் தான் மட்டும் அழியாமல் நிற்கின்ற சுடுகாட்டை வாழ்த்துதலாகிய காடு வாழ்த்து என்பனவே இப்பத்துத் துறைகளாகும்.

***"---------------- ---------------- -------------- ---------------------***

***எல்லார் புறனும் தான்கண்டு உலகத்து***

***மன்பதைக் கெல்லாம் தானாய்த்***

***தன்புறம் காண்போர்க் காண்பறி யாதே" (புறம்:356)***

எனும் பாடல் சுடுகாட்டின் ஆற்றலைப் பாடுவதைக் காணலாம்.

## பாடாண்திணை

புறத்திணையுள் ஏழாவதாக அமைவது பாடாண்திணை ஆகும். புலவர் பாடும் புகழினை உடையதலைவனது அறிவு, தரு, ஆற்றல், ஈகை முதலிய பெருமிதப் பண்புகளை ஆளுதற்தன்மையாகிய ஒழுகலாற்றைக் குறிப்பதே பாடாண் எனும் சொல் வழக்கு ஆகும்.

பாடாண்திணை கைக்கிளைக்கும் புறனாக அமைகிறது. அது எட்டு வகைப்படும் என்பதை,

***"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே***

***நாடுங் காலை நாலிரண் டுடைத்தே" (புறம்:20)***

என்ற நூற்பாவழி அறியலாம்.

### பாடாண் கைக்கிளைக்குப் புறனாவது:

கைக்கிளையாவது ஒரு நிலத்திற்கு உரியதன்று – ஒரு தலைக் காமமாகி வருவது. அதுபோலப் பாடாணும் ஒருபாற்கு உரித்தன்றி, ஒருவனை ஒருவன் யாதானும் ஒரு பயன் கருதிய வழி மொழிந்து நிற்பது. கைக் கிளையாகிய காமப் பகுதியில் மெய்ப்பெயர் கூறப்பெறும் கைக்கிளை போலச் செந்நிறத்தால் கூறப்பெறுவது என்பர் இளம்பூரணர்.(நோந்திறமாவது மிகுதியான பேரிரக்கம்: செந்நிறமாவது அ∴து அல்லாதன)

### பாடாண் திணையின் வகைகள்:

பாடாண் எட்டு வகைப்படும். அவையாவன

1. கடவுள் வாழ்த்து வகை 5. ஆற்றுப்படைவகை

2. வாழ்த்தியல் வகை 6. பரிசில் துறை வகை
3. மங்கல வகை 7. கைக்கிளை வகை
4. செவியறிவுறுத்தல் 8. வசைவகை என்பன

பாடாண்திணை எண்வகைப் பொருண்மைகளைக் கொண்டது என்பர் தொல்காப்பியர். அவையாவன அமரகத்து அஞ்சாது போர்புரியும் மறவர்களின் தொழிலாய் அமையும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என்பனவற்றைப் பொருளாகக் கொண்டு பாடப்பெறும் அறுவகைப் பகுதிகளும் குற்றமற்ற அகத்திணை ஒழுகலாற்றைப் பொருளாகப் பாடப்பெறும் காமப்பகுதியும், செந்துறை வண்ணப் பகுதியுமாக எட்டு ஆகும். இவற்றுள் செந்துறை வண்ணப்பகுதி,

1. படர்க்கைக்கண் புகழ்தல் 2. முன்னிலைக்கண் புகழ்தல் 3. முன்னோர் கூறிய நற்பொருளை அறிவுறுத்தல்

என மூவகையில் அமையும் இச்செய்திகளை

***"அமரர்கண் முடியும் அறுவகை யானும்***
***புரைநீர் காமம் புல்லிய வகையானும்***
***ஒன்றன் பகுதரி ஒன்றும் என்ப" (புறத்:21)***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

***"காமப்பகுதி கடவுளும் வரையார்***
***ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்" (புறத்:23)***

என்று தொல்காப்பியம் சுட்டுவதால் மக்கள் பேரில் பாடுதற்குரிய காமப் பகுதியினைக் கடவுள் பேரில் பாடினும் அதனை ஏற்றுக் கொள்வர் என்பது புலனாகியது. இது மூவகையில் அமையலாம் என்பர்.

1. கடவுளரைத் தெய்வம் பெண்டிர் விரும்பியமை
2. கடவுளரை மானிடப் பெண்டிர் விரும்பியமை
3. கடவுளர் மானிடப் பெண்டிரை விரும்பியமை

இனி, குழவிப் பருவத்தும் காமப்பகுதி கூறப்பெறும் என்பதனை,

***"குழவி மருங்கினும் கிழவதாகும்" (புறத்: 24)***

என்ற நூற்பா உணர்த்துகிறது. இதுவே பிள்ளைத்தமிழ் எனும் சிற்றிலக்கிய வகைக்கு வித்திட்டது எனலாம். மேலும்,

***"ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிப***
***வழக்கொடு சிவணிய வகைமை யான்" (புறத்:25)***

என்பதால் ஊரின்கண் காமப்பகுதி நிகழ்தலும் உண்டு என்பதை அறியலாம். இதனைப் பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக உலா வரும் தலைமகனைக் கண்டு காதல்கொள்ளும் மரபாகக் கொள்வர். இதில் தலைமக்களுடைய ஊரும் உயர்குடிப் பிறப்பும் இயற்பெயரும் குறித்துப் பாராட்டப் பெறுதலும் உண்டு என்பது அறியவருகிறது.

பாடாண் திணையில் கடவுள் வாழ்த்தோடு இணைந்து வருபவை இவை என்றும் குறிப்பிடப்படுகிறது.

அவை: கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்று ஆகும். அதாவது பாடப்படுகின்ற ஆண் மகனைப் புகழ்ந்து பாடும் போது அப்புகழ்ச்சி கடவுள் வாழ்த்தோடு இணைந்து வரப்பெறும் என்பது தொல்காப்பியர் கருத்து.

மன்னனைக் கொடிநிலையில் வாழ்த்துதல்:

***"பூங்கண் நெடுமுடிப் பூவைப்பூ மேனியான்***
***பாம்புஉண் பறவைக் கொடிபோல ஓங்குக***
***------------ ----------------- --------------- --------***
***கொல்யானை மன்னன் கொடி"***

**கந்தழியில் வாழ்த்துதல்:**

(கந்தழி-திருமால் சோ என்னும் அரணத்தை(மதிலை) அழித்த வெற்றியைச் சிறப்பிப்பது)

***"அன்றுஎறி தானும் இவனால் அரண்வலித்து***
***இன்றுஇவன் மாறாய் எதிர்வார்யார் கன்றும்***
***அடையார் மணிப்பூண் அடையாதார் மார்பின்***
***சுடராழி நின்றெறியச் சேர"***

என்பன போன்று வரும் பாடல்களைக் கண்டு உணரலாம்.

ஆனால் கொடிநிலை என்பது ஞாயிறு: கந்தழி என்பது தத்துவம் கடந்த பொருள்; வள்ளி என்பது திங்கள் எனப் பொருள் கொண்டு இயற்கைப் பொருள் வாழ்த்து என்ற நோக்கில் காண்பர் நச்சினார்க்கினியர்.

கொற்றவள்ளை என்பதும் பாடாண்பொருண்மைக்குரியது என்பர் தொல்காப்பியர் (புறம்: 28) கொற்றவள்ளை என்பதனைத் துறையாகக் கொண்டாலட அது வஞ்சித்துணையாகும். புகழ்தல் கருத்தாயின் அது பாடாண்திணையாகும் என்பர் இளம்பூரணர். இதற்கு நன்மாறனைப் புகழ்ந்தது பாடுகின்ற புறம் 57ம் பாடல் உரல் பாடலாகிய வள்ளைப் பாடலாக அமைந்துள்ளது.

இத்துணையும் கூறப்பட்டது பாடாண் திணையின் பொருண்மைகளாகும்.

**பாடாண் திணையின் துறைகள்:**

1. **கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்:**

இது கொடுப்போர் ஏத்தல், கொடாதார்ப் பழித்தல், கொடுப்போர் ஏத்திக் கொடாதார்ப் பழித்தல் என மூவகைப்படும் என்பர் இளம்பூரணர்.

ஈவோரைப் புகழ்தல், ஈயாதோரைப் பழித்தல், மற்றும் ஈவோரைப் புகழ்ந்து ஈயாதோரைப் பழித்தலும் பாடாணின் துறையாகும்.

**ஈவோரைப் புகழ்தல்:**

***"பாரிபாரி என்றுபல ஏத்தி***
***ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்***
***பாரி ஒருவனும் அல்லன்***
***மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே" (புறம்:157)***

என்று கபிலர் பாரியைப் புகழ்வதைக் காணலாம்.

**ஈயாதார் பழித்தல்:**

இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் வழங்கக் காலம் தாழ்த்தியபோது ஆவூர் மூலங்கிழார் அவனைப் பழிப்பதைப் புறம் 196-ல் காணலாம்.

**ஈவோரைப் புகழ்ந்து ஈயாதாரைப் பழித்தல்:**

புறம் 127-ல் வள்ளல் ஆய் புகழப்படுவதையும் கொடாத செல்வர் பழிக்கப்படுவதையும் உணரலாம்.

1. **இயல்மொழி வாழ்த்து:**

இது இயல்மொழி, வாழ்த்து, இயல்மொழி வாழ்த்து என மூவகைப்படும் என்பர்.

இயல்மொழி:

***"------------- --------------- ---------------- -------------------***
***இனியை பெரும எமக்கே***
***--------------- -------------- ------------------ ------------------***
***இன்னார்ப் பெருமநின் ஒன்னாதோர்க்கே" (புறம்:94)***

**இயல்மொழி வாழ்த்து:**

***"பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறி யலையே***
***----------------- -------------- ---------------- --------------***
***நட்டோர்க்கு அல்லது கண்அஞ் சலையே***
***வணங்குசிலை பொருநின் மணங்கமழ் அகலம்***
***மகளிர்க்கு அல்லது மலர்புஅறி யலையே"*** என்று வாழ்த்துவது.

வாழ்த்து என்பது:

***"செல்வக் கோவே சேரலர் மருக***
***------------- -------------- --------------***
***ஆயிர வெள்ள ஊழி***
***வாழி யாத வாழி பலவே"*** என நீடுழி வாழுமாறு வாழ்த்துவதாகும்.

2. சேய்வரல் வருத்தலம் வீட வாயில்காவலர்க்கு உரைத்த

கடைநிலை: சேய்மைக் கண்ணின்று வருகின்ற வருத்தம் தீர வாயில் காவலர்க்கு உரைப்பதாகும்.

புறம்:206ல்,

***பரிசிலர்க்கு அடையா வாயிலோயே''*** என அதியமான் நெடுமான் அஞ்சியின் வாயிற்காவலனை அழைத்து, உங்கள் தலைவன்

***"தன்னறியலன் கொல் என்னறி யலன்கொல்***

***எத்திசைச் செலினும் அத்திசை சோறே''*** என்று கூறுவதை உணரலாம்.

3. அரசன் இனிது துயின்றலைக் கூறுதலாகிய கண்படைநிலை
4. அந்தணர்க்கு அரசன் தானமாகக் கொடுக்கக் கருதிய ஆவினது தன்மை கூறும் கவிலை கண்ணிய வேள்விநிலை
5. விளக்கு எரியும் திசை நோக்கி வேலின் வெற்றியைக் கூறும் விளக்குநிலை.
6. பின்னால் நன்மை பயக்கும் எனக்குருதிப் பாதுகாவலான உண்மை நிறைந்த அறிவுரைச் சொற்களை வேம்பும் கடுக்காயும் போல எடுத்துக் கூறுதலாகிய வாயுறை வாழ்த்து.

   ***"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே''*** எனத்துவங்கும் புறம்:184ம் பாடலில் பாண்டியனுக்கு வரி வாங்கும் முறை பற்றிப் புலவர் கூறுவது வாயுறை வாழ்த்து ஆகும்.
7. செவியறிவுறூஉ: உயர்ந்தோரிடத்துப் பணிந்து வாழ வேண்டும் என்று அறிவுரை கூறுதல் என்பது,

***"செவியுறைதானே***

***பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பன்***

***அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே''***

என்ற தொல்காப்பிய செய்யுளியல் நூற்பாவழி அறியலாம்.

8. புறநிலை வாழ்த்து:

***"வழிபடு தெய்வம் நின்புறம் காப்பப்***

***பழிதீர் செல்வமோடு சிறந்து***

***பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே''*** ***(செய்யுளியல்160)***

என்ற நூற்பா கூறுவதற்கேற்ப,

***"சீர்சால் செல்வமோடு பொலிமதி சிறந்தே''***

என்பன போன்று மன்னனை வாழ்த்துதல் ஆகும்.

1. கைக்கிளை வகை: இது ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப்படும்.

***"துடிஅடித் தோற்செவித் தூங்குகை நால்வாய்ப்***

***பிடியோன் நின்னை இரப்பல் கடிகமழ்தார்ச்***

***சேலேக வண்ணனொடு சேரி புகுதலும் எம்***

***சாலேகம் சார நாம்''*** ***(முத்தொள்: 50)***

என்பன போன்று வரும்.

இப்பதினோடு முன்னர்க் கூறிய கொடிநிலை, கந்தழி, வள்ளி, கொற்றவள்ளை என்பனவும் பாடாண் துறைகளாகும் என்பது தொல்காப்பிய நூற்பாக்கள் வழி அறியவரும் செய்தி.

இவையேயன்றித் துயிலெடைநிலை, கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்ற நால்வகைப் பரிசிலர்களை ஆற்றுப்படுத்தும் ஆற்றுப்படை, பெருமங்கலம், குடைநிழல் மரபு கூறுதல், வாள் மங்கலம், மண்ணு நீராடு மங்கலம், பரிசில் கடைஇய கடைகூட்டுநிலை, பரிசில்விடை, நிமித்தம் பார்த்தல் ஆகியனவும் பாடாண் திணைக்கான துறைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

துயிலெடை நிலையாவது நற்புகழ் உண்டாகும் பொருட்டுச் சூதர் என்பார் இசை பாடித் துயில் எழுப்புதல் ஆகும்.

ஆற்றுப்படையாவது கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகிய நால்வகையினரும் பரிசில் பெற்று மீண்டு வரும் வழியில் வறுமையால் வாடும் தம் இனத்தாரிடம் தாம் பெற்ற பெரு வளத்தைக் காட்டி, அத்தகைய வளத்தை அவரும் பெறும் வண்ணம் வழிகாட்டி அனுப்புவது ஆகும். இவை முறையே கூத்தராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை,சிறும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை என இலக்கிய வகையாகத்தோன்றி வளர்ந்தமை காண்க.

***மன்னனின் பிறந்தநாள் விழா பெருமங்கலம் எனப்பட்டது. சான்றாக***

***“அந்தணர் ஆவோடு பொன்பெற்றார் நாவலர்***
***மந்தாம்போல் மாண்ட களிறுஊர்ந்தார் எந்தை***
***இலங்கு இலைவேல் கிள்ளி இரேவதிநாள் என்னோ***
***சிலம்பிதன் கூடிழந்த வாறு”***

எனவரும் முத்தொள்ளாயிரம் 83வது பாடலைக் காண்க.

பகைவரைக் கொன்ற வாளைப் புகழ்வது வாள்மங்கலம்

பகைவரிடமிருந்து பெற்ற பொருள்களைத் தூய்மை செய்வது மண்ணு நீராடு மங்கலம்.

பரிசிலன் பரிசில் வேண்டுவதும், மன்னன் அவன் வேண்டும் பொருட்களை அளித்தலும் பரிசில் கடைஇய கடைகூட்டு நிலையாகும்.

பரிசில் பெற்ற புலவன் மன்னனை வாழ்த்திப் போகவிடை கேட்பதும், அரசன் வழிவிட்டனுப்ப போதலும் பரிசில் விடை எனும் துறையாயிற்று.

நாள் மற்றும் புள் நிமித்தம் கண்டு வருங்காலம் பற்றிய உவகையும் அச்சமும் கொள்ளல் நிமித்தம் என்னும் துறையாயிற்று. இதனை, புறம் 229:13-17,20:18-21 ஆகிய அடிகளில் காணலாம்.

இவ்வாறு பல்வேறுப்பட்ட பொருண்மைகளைத் துறைகளாகக் கொண்டு அமைந்துள்ளது பாடாண்திணை.

## புறத்திணை இயல் - மாதிரி வினாக்கள்

**குறுவினாக்கள்** **மதிப்பெண்கள் 5**

1. ஏழுவகையான புறத்திணைகள் குறித்து எழுதுக.
2. வெட்சி குறிஞ்சிக்குப் புறனாவது எவ்வாறு?
3. வெட்சிப் போர் அடையாளப் போர் -நிறுவுக.
4. வெட்சி அறப்போர் முறை ஆவது எங்ஙனம்?
5. கொடிநிலை, குடிநிலை விளக்குக.
6. மண்நசைப் போர் எது? அது எதற்கு புறம்?
7. உழிஞையின் துறைகள் யாவை?
8. மைந்து பொருளாக (வலிமை ஆற்றல்) நடைபெறும் போர்முறை எது? அதன் சிறப்பு யாது?
09. அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் எவை?
10. ஐவகைப்பட்ட அரசர்ப் பக்கம் எவை?
11. ஏனோர் பக்கம் - விளக்குக.
12. அறிவர் பக்கம், தாபதப் பக்கம் பொருநர் பக்கம் இவை வாகை ஆமாறு எங்ஙனம்?
13. பாடாண் திணையின் பொருண்மைகள் குறித்து எழுதுக.
14. கடவுள் வாழ்த்தோடு பொருந்தி வருபவை எவை?
15. பாடாண் திணை விளக்குக

**பெருவினாக்கள்: கட்டுரை வினாக்கள்:**

1. சங்ககால போர்முறைகளைப் புறத்திணையியல் வழி ஆய்க.
2. வெட்சியின் துறைகளைத் தொகுத்துரைக்க.
3. வஞ்சிப் போர் நிகழ்வுகள் யாவை?
4. முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும் எவ்வாறு?
5. தும்பை போர் நிகழ்வுகளை விளக்குக.
6. "போர் வெற்றியை மட்டும் குறிப்பது வகையாகாது" – நிறுவுக.
7. நிலையாமை உணர்த்தும் காஞ்சித்திணை குறித்து ஒரு கட்டுரை வரைக.

## கூறு : 3

## களவியல்

தொல்காப்பிய பொருளதிகாரத்தின் மூன்றாவது இயல் களவியலாகும். களவு, கற்பு என்னும் இருவகைக் கைக்கோள்களில் களவொழுக்கம் உணர்த்தியமையால் களவியல் என்னும் பெயர் பெற்றது. அகத்திணையில். அகமாகிய இன்பத்தின் பொது இலக்கணம் உணர்த்தி அடுத்து புற ஒழுக்கமாகிய போர் மற்றும் கொடை போன்றவற்றின் இலக்கணங்களைப் புறத்திணையியலில் கூறியவர். அக ஒழுக்கமாகிய இன்பத்தின் சிறப்பிலக்கணத்தை கூறும் முகமாக "களவியலை" அடுத்து அமைத்துள்ளார்.

இவ்வியலில் இளம்பூரணர் உரைப்படி 51 நூற்பாக்களும், நச்சினார்க்கினியர் உரைப்படி 50 நூற்பாக்களும் ் அமைகின்றன.

### களவு விளக்கம்:

அன்பின் ஐந்திணை ஒழுக்கமே களவு, கற்பு என இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. களவு என்பது பிறருக்குரிய பொருளை அவரறியாமல் எடுத்துக் கொள்வதாகும். இது பஞ்சமாபாதங்களுள் ஒன்றாகும். ஆனால் களவியல் உணர்த்தும் களவு அத்தகையது அன்று. இது அறத்தின் பாற்பட்ட களவு. தலைவன், தலைவியர் உள்ளம் அறிய குறிப்பாகத் தலைவியின் சுற்றத்தார் அறியாமல் அன்பினால் ***"செம்புலப் பெயல்நீர்போல"*** உள்ளம் கலந்து மறைந்து ஒழுகும் ஒழுக்கமே களவியல் கூறும் களவொழுக்கம் ஆகும். எனவே இது அறவழிப்பட்ட அன்பின் ஒழுக்கம் ஆகும். இதனையே இளம்பூரணர்,

'களவு என்னும் சொல் கண்டுழியெல்லாம் அறப்பாற்பாடதென்றால் அமையாது. களவாவது, பிறர்க்குரிய பொருள் மறையிற் கோடல் இன்னதன்றி ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது கன்னியர்தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலை வழாமல் நிற்றலாம்'. இ∴து அறம் எனப்படும் என்று உரை எழுதுகிறார்.

பிறரால் அறியப்படாத பொருள் உடையதாதலின் வேதம் 'மறை' என்னும் பெயரால் சுட்டப்படுகிறது. இம்முறை போலப் பிறரால் அறியப்படாத புணர்ச்சி ஆதலால் களவாகிய ஒழுக்கம் மறை எனும் பெயர் பெற்றது என்னும் பொருளில் 'அருமறை', 'மறைந்த ஒழுக்கம்' மறை என்னும் பெயர்களால் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

## வடநூல் கூறும் மணங்களும் தமிழர்தம் மணங்களும்

களவொழுக்கம் வடநூலார் கூறும் எண்வகை மணங்களுள் 'காந்தருவம்' என்ற மணத்தோடு ஒத்தது என்பர் தொல்காப்பியர். தொல்காப்பியர் காலத்தில்தான் வடநாட்டார் அல்லது ஆரியர் நாகரிகம் தமிழகத்தில் மெல்ல நுழைந்து பரவத் தலைப்பட்டது. எனவே அவர்தம் மணமுறைகளையும் தமிழர்தம் மணமுறையையும் ஒப்பிட்டுக் காண வேண்டியதொரு சூழல் ஏற்பட்டது. இவ்வெண்வகை மணங்களை மறையோர் தேஎத்து மன்றல் எட்டு என்பார் தொல்காப்பியர். இவை தமிழர்க்குரியன அல்ல.

மன்றல் எட்டாவன:

1. பிரமம் 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம் 4. தெய்வம் 5. காந்தருவம்
6. அசுரம் 7. இராக்கதம் 8. பைசாசம் என்பன

இவை முறையே,

1. அறநிலை 2. ஒப்பு 3. பொருள்கோள் 4. தெய்வம் 5. யாழோர் கூட்டம்
6. அரும்பொருள் வினைநிலை 7. இராக்கதம் 8. பேய்நிலை என்னும் தமிழ்ச்சொற்களால் குறிப்பிடப்படுகின்றன.

1. **பிரமம்:** அறநிலை: கன்னியை அணிகலன் அணிந்து நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசாரியாய் வாழந்த ஆடவனுக்கு தீ முன்னிலையில் மணம் செய்து கொடுப்பது.

2. **பிரசாபத்தியம்:** ஒப்பு: உரிய கோத்திரத்தார் பெண் கேட்டுச் சென்றால் மறுக்காமல் மகளை அலங்கரித்துத் தீ முன்னிலையில் தானமாகக் கொடுப்பது.

3. **ஆரிடம்:** பொருள்கோள்: தகுதியுடையவன் ஒருவனுக்குப் பொன்னால் பசுவும் எருதும் செய்து அவற்றிற்கிடையே பெண்ணை நிறுத்தி, இவைபோலப் பொலிவுடன் வாழ்க என நீர் வார்த்துக் கொடுப்பது.

4. **தெய்வம்:** வேள்வி செய்யும் ஆசிரியன் ஒருவனுக்கு அவ்வேள்வித் தீ முன்னர் கன்னியை அலங்கரித்துத் தட்சணையாயகக் கொடுப்பது.

5. **காந்தருவம்:** யாழோர் கூட்டம்: காந்தருவ குமாரரும்ப கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுக் கூடினாற் போன்று ஒத்த இயல்புடைய ஒருவனும் ஒருத்தியும் கூடுவது.

6. **அசுரம்:** அரும்பொருள் வினைநிலை: கொல்லும் இயல்புடைய எருது அடக்கியவன், வில்லை வளைத்தவன், உயரத்தில் அமைந்த சுழலுகின்ற பன்றியை வீழ்த்தியவன் போன்றோருக்குப் பெண்ணைக் கொடுப்பது, காளையை அடக்கிப் பெண்ணை மணந்து கொள்ளும் முறையினை முல்லைக் கலியில் காணலாம் இராமன் வில்வளைத்து சீதையை மணந்தான்.

7. **இராக்கதம்:** தான் விரும்பிய பெண்ணை, அவள் விருப்பத்திற்கும் தமர் விருப்பத்திற்கும் மாறாக வலிந்து கவர்ந்து கொள்வது.

8. **பைசாசம்:** தன்னை விட மூத்தவள், துயின்றவள், கள்ளுண்டு களித்தவள் ஆகிய பெண்ணை மணப்பது.

இவ்வெண்வகை மணங்களுள் அசுரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்றும் கைக்கிளையின் பாற்படும். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்ற நான்கும் பெருந்திணையின் பாற்படும். காந்தருவம் ஒன்றே தமிழ் நூற்பா கூறும் களவுடன் ஒத்தது ஆகும்.

காந்தருவமும் களவும்:

களவொழுக்கம் என்பது ஐந்திணைக்குரிய ஒழுக்கம் ஆகும். காந்தருவமானது கந்தருவ குமாரரும் கன்னியும் தம்முள் எதிர்பட்டுக் கண்டு வேட்கை புணர்வர். அது போலவே களவிலும் தலைவனும் தலைவியும் எதிர்பட்டுப் புணர்வர் இந்நிலையில் இரண்டும் ஒற்றுமையுடையன என்றாலும் இவ்விரண்டிற்குமிடையே வேறுபாடும் உண்டு.

கந்தருவ ஒழுக்கத்தில் மெய்யுறு புணர்ச்சி முதலிலேயே இடம்பெறுகிறது. அதன் பயிற்சியினால் உள்ளப் புணர்ச்சி நிலைபெற்றுச் சாகும் வரையில் கூடி வாழ்வர். தம் எதிர்ப்பட்டவரைக் கூடிப் பிரிதலும் உண்டு. ஆனால் என்றும் பிரியா நிலையில் நின்ற கடவாமல் அன்பினால் கூடும் உள்ளப் புணர்ச்சியே களவொழுக்கம் ஆகும். செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே என்ற சான்றோரால் புகழப்படுவது இக்களவொழுக்கம். இத்தகைய களவொழுக்கத்தின் சிறப்பினை ஆரிய அரசன் பிரகத்தனுக்கு அறிவிக்கும்படி கபிலரால் பாடப்பட்டதே குறிஞ்சிப்பாட்டு என்ற பெயரில் அமைந்துள்ள 269 வரிகள் அடங்கிய சங்கப் பாடல் ஆகும்.

***"கந்தருவருக்குக் கற்பு இன்றி"*** அமையவும் பெறும் ஈண்டு கற்பின்றிக் களவே அமையாது என நச்சினார்க்கினியர் வேறுபாடு உணர்த்துகின்றார்.

## களவொழுக்க வகைகள்:

களவொழுக்கம் நான்கு வகைப்படும். அவை 1. காமப்புணர்ச்சி 2. இடந்தலைப்பாடு 3. பாங்கற் கூட்டம் 4. தோழியற் கூட்டம் என்பன.

## காமப்புணர்ச்சி:

இது இயற்கைப் புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி, தெய்வப் புணர்ச்சி என்னும் பெயர்களால் சுட்டப்பெறும். ஒத்தார் இருவர் இயல்பாகத் தாமே கூடும் கூட்டம் தாயின் ஏவற்படி தினைப்புனம் காக்கச் செல்வர் தலைவியும் தோழியரும். எஞ்சிய நேரங்களில் அருவியாடி, தழை மற்றும் மலர் கொய்து பொழுது போக்குவர். அப்போது வேட்டையாடி வரும் தலைவன் ஒருவன் அங்கு வந்து தன்னால் வேட்டையாடப்பட்டுத் தப்பிய யானையைக் கண்டதுண்டோ என அவர்களை வினவி வருவான். அப்பெண்கள் நாணமடைவர். மறுமொழி கூறாது நிற்பர். இந்நிலையில் இருவர் கண்களும் உறவு கொண்டன. பின்னர் அவ்வுறவு காதலாக மலரும். இவ்வாறு கண்ணினால் ஏற்பட்ட "காமம் கண்தர வந்த காம ஒள்ளெரி" என்று குப்பைக் கோழியரால் (குறுந்:305) குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு அன்புடையார் இருவர் முற்பிறப்பின் நல்வினையால் ஒருவரை ஒருவர் கண்டு அன்பினால் உள்ளம் ஒத்தலாகிய நெஞ்சக் கலப்பே காமப்புணர்ச்சி என்பது தொல்காப்பியக் கருத்து இதனை,

***"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்***
***ஒன்றி உயர்ந்த பால தாணையின்***
***ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப***
***மிக்கோ னாயினும் கடிவரை யின்றே"*** ***(களவியல்:2)***

என்ற நூற்பா மூலம் உணரலாம்.

இயற்கைப் புணர்ச்சி நான்கு நிலைகளை உடையது.

அவை : காட்சி, ஐயம், தெளிவு, துணிவு என்பன ஆகும்.

**1. காட்சி:**

ஒருவனும் ஒருத்தியுமாக இல்லறத்தில் கூடி வாழ்வாரை மறுபிறப்பிலும் சேர்த்து வைப்பதும் பிரித்து விலக்குவதும் ஊழ் ஆகும். சேர்த்து வைப்பது நல்லூழ் எனவும், பிரித்து வைப்பது தீயூழ் எனவும் சுட்டப்படும். நல்லூழினைத் தொல்காப்பியம் உயர்ந்தபால் எனச் சுட்டும். இத்தகைய நிலையில் உயர்ந்த ஊழால் ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காண்பதே காட்சி ஆகும். இருவரில் யார் முந்திக் கண்டவர் என்ற கேள்விக்கே இடம் இல்லாமல் இருவரும் ஒரே நேரத்தில் காண்பர். இதனை பயிலியது கெழீஇய நட்பு என்று பாராட்டுகிறது குறுந்தொகை.

தலைமக்களை "ஒத்த கிழவனும் கிழத்தியும்" என்று பாராட்டுகிறார் தொல்காப்பியர். இவ்வொப்புமை பத்து நிலைகளில் காணப்பெறும் என்பதை மெய்ப்பாட்டியல் 25ம் நூற்பா உணர்த்துகிறது.

***"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு***
***உருவு நிறுத்த காம வாயில்***
***நிறையே அருளே உணர்வொடு***
***முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"***

என்பதே அந்நூற்பா.

1. பிறப்பு: அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர், குறவர் என்பன போல வரும் குலம்.
2. குடிமை: குலத்திற்குரிய சிறப்பான ஒழுக்கம்.
3. ஆண்மை: தலைவன், தலைவியரது நற்பண்புகள்
4. ஆண்டு: ஒத்த பருவம். அது தலைவனுக்கு 16 ஆண்டும் தலைமகளுக்கு 12 ஆண்டும் ஆகும். கோவலனை ***"ஈரெட்டு ஆண்டு அகவையான்"*** என்றும் கண்ணகியை ***"ஈராறு ஆண்டு அகவையாள்"*** என்றும் இளங்கோ அடிகள் குறிப்பிடுதல் காண்க.

5. உருவு: வனப்பு
6. நிறுத்த காம வாயில்: காமப் புணர்ச்சிக்கு காரணமான அன்பு
7. நிறை: அடக்கம்
8. அருள்: கருணை
9. உணர்வு: அறிவு
10. திரு: செல்வம்

இப்பத்து குணங்களாலும் ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்படுவர். இக்குணங்களால் தலைவன் உயர்ந்தவனாயினும் குற்றமில்லை. தலைவி உயர்ந்தவளாக அமைந்தால் அது அன்பின் ஐந்திணை ஆகாது.

**2. ஐயம்:**

தலைமக்களின் வடிவச் சிறப்பு, காணப்பட்ட இடச்சிறப்பு இவை காரணமாகத் தலைவனுக்கு ஐயம் தோன்றும். தலைவி நில உலகப் பெண்ணா அல்லது தெய்வமா என்ற கேள்வி ஐயத்தின் அடிப்படையில் எழும். ஆனால் தலைவி ஐயம் கொள்ள மாட்டாள். ஐயம் எழுமிடத்து இவன் தெய்வமோ என்று எண்ணும்போது அவளது உள்ளத்தில் அச்ச உணர்வு தோன்றுமே அல்லாமல் காமவுணர்வு தோன்றாது. எனவே ஐயம் தலைமகனுக்கே உரியது.

***"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை***
***மாதர் கொல் மாலும்என் நெஞ்சு"* (குறள் )**

என்று தலைவன் ஐயுறுகிறான்.

***"சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப***
***இழிந்துழி இழிவே சுட்டலான்"* களவியல்:3**

என்பது தொல்காப்பியம் நூற்பா.

**3. துணிவு:**

தலைவி தெய்வமகள் அல்லள். மானுட மக்களுள் ஒருத்தியே எனத் துணிவாள். இதுவே அகப்பொருளில் துணிவு எனப்படும். இத்துணிவிற்கு அடிப்படையாக அமையும். (கருவிகள் எட்டும் பிறவும் என்பர் தொல்காப்பியர்)

***"வண்டே இழையே வள்ளி பூவே***
***கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று***
***அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ***
***நின்றவை களையும் கருவி என்ப"* (களவியல் : 4)**

வண்டு: தலைவியின் கூந்தலில் அணிந்த பூவைச் சுற்றுகின்ற வண்டு. இது பழகிய மற்றும் மணம் தேன் நிறைந்த பூவின் மேல் அல்லது சுற்றாது. எனவே வண்டு சுற்றுதல் கொண்டு மானிடப் பெண் என்று துணிதல்.

இழை: தலைவி அணிந்துள்ள அணிகலன் இவ்வுலகில் ஒருவரால் செய்யப்பட்டது என்பது காட்டும்.

வள்ளி: பெண்கள் முலையிலும் தோளிலும் எழுதிய கொடி. அது மண்ணுலகப் பெண்களுக்குரியது.

பூ: தலையிலணிந்த பூவின் வாடுதல் தன்மை

கண்: மருண்ட பார்வை

அலமரல்: தடுமாறுதல் அல்லது சுழலுதல்

இமைப்பு: கண் இமைத்தல் தெய்வம் ஆயின் கண் இமைத்தல் இல்லை.

அச்சம்: ஆடவரைக் கண்டு அஞ்சுதல்.

"அன்னவை பிறவும்" என்றதனால் கால் நிலம் தோய்தல், வியர்த்தல், நிழல் தோன்றுதல் முதலியவற்றாலும் அவள் மானிடப் பெண் எனத் துணிவான். இது தெளிவு ஆகும்.

குறிப்பறிதல்:

காட்சி, ஐயம், துணிவு என்ற மூன்றும் கைக்கிளைக் குறிப்பு. இந்நிலையில் இருவரிடத்தும் ஒத்த அன்பு நிகழ்ச்சி உண்டு என்று கூற இயலாது. குறிப்பறிதலால் இருவரும் ஒத்த அன்பினர் என்பது வெளிப்படும்.

மானிடப் பெண்ணே என்று துணிந்த தலைவன் அவளது உள்ளக் கருத்தை உணராமல் அவளை நெருங்கினால் அச்செயல் பொருந்தா ஒழுக்கம் ஆகும். அது பெருந்திணையின் பாற்படும். ஆதலில் தலைவி தன்னை விரும்புகின்றாளா இல்லையா என்ற உள்ளக் கருத்தைத் தலைவன் உணர்ந்து கொள்ளுதலே குறிப்பறிதல் எனப்படும்.

குறிப்பறிதலில் கண்களே பேசுவன வாயினால் உரையாடுதல் முறையன்று. மேலும் தலைவியின் பண்புகளான அச்சம், மடம், நாணம் போன்றவை உரையாடுதலைத் தடுக்கும். ஆகவே தலைவன் தலைவியர்தம் கண்களே அவர்தம் உள்ள வேட்கையை எடுத்துரைக்கும்.

***"கண்ணிற் சிறந்த உறுப்பில்லை"*** என்கிறது தஞ்சை வாணன்கோவை.

வள்ளுவமும்,

***'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்***
***என்ன பயனும் இல'***

என்று கண்களின் ஆற்றலை உணர்த்துகிறது. இக்குறிப்பறிதலைத் தொல்காப்பியர் இரண்டு நூற்பாக்களில் விளக்குகிறார்.

***"நாட்டம் இரண்டு அறிவுடம் படுத்தற்குக்***
***கூட்டி உரைக்கும் குறிப்புரையாகும்" (களவியல் : 5)***
***"குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்***
***ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்" (களவியல் : 6)***

'நாட்டம்' என்பது கண்களைக் குறிக்கும் சொல். கண்களால் குறிப்பினை உணர்ந்து கொண்ட பின்னரே அன்பின் ஐந்திணையாகிய களவொழுக்கம் நிகழும்.

## 2. இடந்தலைப்பாடு:

குறிப்பினால் தலைமகளது வேட்கை(விருப்பம்) உணர்ந்த தலைமகன் பிற்றைநாளும் (மறுநாள்) அவ்விடம் சென்று தலைவியை எதிர்ப்படுதல் இடந்தலைப்பாடு ஆகும்.

## 3. பாங்கற் கூட்டம்:

பாங்கனால் தலைவனுக்குத் தலைவியோடு ஏற்படும் புணர்ச்சி. இருவரது காதல் வளர்ச்சிக்குத் துணை நிற்பவன் பாங்கன். சங்கப் பாடல்களில் பாங்கற் கூட்டம் பற்றிய 27 அகப்பாடல்கள் இடம் பெறுவதைக் காணலாம்.

## பாங்கியர்க் கூட்டம்:

புணர்ச்சிக்குத் தலைவிபக்கம் துணைநிற்கும் தோழியர் பற்றியது. இது தோழியர் கூட்டம் மற்றும் இளையிற் கூட்டம் என்றும் கூறப்பெறும். அகப்பாடல்களில் தோழியர் கூட்டம் பற்றிய பாடல்களே மிகுதி.

## அன்பின் ஐந்திணைத் தலைவன் இலக்கணம்:

அகப்பொருள் தலைவன் உயர்பண்புகள் உடையவனாக அறிவு நிறைந்தவனாக பிறர் நலம் பேணும் பெரும்பண்பினனாக விளங்குபவன். இதனை,

***'பெருமையும் உரனும் ஆடூஉ மேனே' (களவியல்: 7)***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

இவற்றுள் பெருமையாவது கல்வி, தறுகண், கொடை மற்றும் வலிமையால் ஏற்படுவது. இது பழி பாவங்களுக்கு அஞ்சுதல் என்றும் பொருள் கொள்ளப்பெறும். உரன் என்பது நல்லது. தீயது இவற்றைப் பகுத்தறியும் ஆற்றல்.

**தலைமகள் இலக்கணம்:**

***"அச்சமும் நாணமும் மடனும் முந்துறுத்த***
***நிச்சமும் பெண்பாற்று உரிய என்ப' (களவியல் : 8)***

## களவு ஒழுக்கக் கால மெய்ப்பாடுகள்:

குறிப்பறிதலின் பின்னர் இடம்பெறும் மெய்ப்பாடுகளே களவு ஒழுக்கக் கால மெய்ப்பாடுகள் ஆகும். இவை உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னர் மெய்யுறுபுணர்ச்சிக்கு முன்னர் நடைபெறும் மெய்ப்பாடுகள். இவற்றை அவத்தைகள் என்பர் இளம்பூரணர். அவையாவன:

***'வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்***
***ஆக்கஞ் செப்பல் நாணுவரை உரைத்தல்***
***நோக்குவ எல்லாம் அவையே போறல்***
***சிறப்புடை மரபினவை களவென என்றுஅச்***
***சிறப்புடை மரபினவை களவென மொழிப' (களவியல் : 9)***

அவத்தை என்பது உணர்வுநிலை ஆகும். இவ்அவத்தைகள் பத்து ஆகும். காட்சி, ஐயம், தெளிவு, துணிவு என்னும் இயற்கைப் புணர்ச்சியை முதல் அவத்தையாகக் கொண்டு வேட்கை முதலாகச் சாக்காடு இறுதியாகக் கூறப்பட்ட உணர்வுநிலைகளை 2-10 அவத்தைகளாக கொளல் வேண்டும்.

1. காட்சி, ஐயம், தெளிவு
2. வேட்கை – ஒருவரை ஒருவர் பெறல் வேண்டுமென்ற விருப்பம்
3. ஒருதலை உள்ளுதல் - இடைவிடாது எண்ணுதல்
4. மெலிதல் - உணவு போன்றவை உண்ண இயலாமையால் ஏற்படும் உடல் மெலிவு
5. ஆக்கம் செப்பல் - ஏற்பட்ட துன்பங்களைக் கூறல்
6. நாணுவரை இறத்தல்: நாணம் நீங்குதல்

1. நோக்குவ எல்லாம் அவையே போறல் - காணப்பட்ட பொருள்களில் எல்லாம் தலைவியின் அழகைக் காணல்
2. மறத்தல்: பைத்தியமாதல்
3. மயக்கம்: மோகித்தல்
4. சாக்காடு: சாதல் (மடலேறுவேன், வரைபாய்ந்து இறுப்பேன் என்பன போன்றன)

**இயற்கைப் புணர்ச்சி திறம்:**

வேட்கை மீதூரப் புணர்ச்சி விரும்பிய தலைவன், தலைவியிடத்துள்ள அச்சம், நாணம் இவற்றை நீக்க முற்படுகிறான்.

அப்***போது நிகழ்வனவற்றை,***

***“முன்னிலை ஆக்கல் சொல்வழிப்படுத்தல்” (களவியல் : 10)***

என்று துவங்கும் நூற்பாவில் தொகுத்துரைக்கின்றார்.

1. முன்னிலை ஆக்கல்: தலைமகன் போன்று தலைமகளும் விருப்பம் மேலிட, புணர்ச்சி விரும்பினள் ஆயினும் அச்சம், நாணம் காரணமாக அக்குறிப்பே இல்லாதவளைப் போல நிற்பாள். அப்போது அவளை, முன்னிலைப்படுத்தி,

***“ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்***
***வள்ளிதழ் நெய்தல் தொடலையும் புனையாய்***
***விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய்***
***யாரையோ நின் தொழுதனம் வினவுவதும்” (நற் : 155)***

என்று புகழ்ந்து அவளது கவனத்தை ஈர்த்தல்.

2. சொல்வழிப்படுத்துதல்: தான் சொல்லுகின்ற சொல்லின் வழி அவளை நிற்குமாறு செய்வது – நற் 39ம் பாடல் எடுத்துக்காட்டாகும். அதாவது தலைவியின் கண்ணையும் தோளையும் புகழ்ந்து அவள் விரும்பி நிற்குமாறு செய்தல்.

3. நன்னயம் உரைத்தல்: தலைமகளின் அழகைப் பாராட்டல்

***"ஊர்திரை வேலி உழக்கித் திரிவார்பின்***

***சேரல்மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்" (சிலம்பு கானல்வரி : 23)***

4. நகைநனி உறா அந்நிலை அறிதல்: தலைவிக்கு உள்ளத்தில் உண்டாகும் மகிழ்ச்சி காரணமாக முகத்தில் தோன்றும் புன்முறுவல் அறிதல்.

5. மெலிவு விளக்குறுத்தல் : அகத்தில் ஏற்படும் துன்பத்தால் புறத்து நிகழும் தளர்வினைக் குறிப்பால் வெளிப்படுத்தல்.

6. தன்னிலை உரைத்தல்:

**"காமம் கைம்மிகின் தாங்குளதல் எளிதோ" (நற் : 36)**

7. தெளிவு அகப்படுத்தல்: மேற்கூறிய நிலைகளால் தலைமகளின் பண்பினைத் தலைவன் அறிந்து அத்தெளிவினைத் தன்னகப்படுத்தி தேர்தல்.

***"யாயும் ஞாயும் யாராகியரோ" என்ற குறுந்தொகைப் பாடலில் "அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே"*** என்று தலைவன் கூறுதல் காண்க.

இயற்கைப் புணர்ச்சியின் பின்னர் தலைவன் கூற்று நிகழ்த்துகிறான்.

### கூற்று வகைகள்:

### களவில் தலைவன் கூற்று நிகழும் இடங்கள்:

1. மெய்தொட்டுப்பயிறல்: பெருமையும் உரனும் பெற்ற தலைமகன் தலைவியின் வேட்கையைத் தெளிந்த பின்னர் காதல் மிகுதியால் 'தலைவியின் உடம்பைத் தீண்டி நெருங்குதல், உள்ளப்புணர்ச்சிக்குப் பின்னரே மெய்யுறு புணர்ச்சி என்ற தமிழர்தம் களவொழுக்க இயல்பை இது தெளிவுபடுத்துகிறது.

***"தீண்டலும் இயைவது கொல்லோ***

***-------------- ------------ -----------------***

***நாறிருங் கூந்தல் கொடிச்சி தோளே" (குறுந் : 272)***

என்ற பாடலடிகளைக் காண்க.

2. பொய்பாராட்டல்: மெய்தொட்டுப் பயின்ற தலைமகன், தலைவியின் கூந்தல் கலையாதிருந்தும் அதனைத் திருந்துவேன் என்று அருகில் சென்று பொய்யாக ஒரு காரணம் படைத்துக்கொண்டு அவளைப் பாராட்டிப் பேசுவான்.

3. இடம்பெற்றுதழாஅல்: பொய்பாராட்டல் காரணமாகத் தலைவியிடம் சென்ற தலைவன் அணிமையில் சென்று அவளைத் தழுவமுயலுதல் ***"கொல்யாவை வெண்மருப்புங்கொலவல் புலியதளும்"*** எனத் துவங்கும் திணைமாலை நூற்றைம்பது 22-ம் பாடலில்,

***"யான் போகாமை யீரம்பினா லெய்தாயின்று"*** என்று தலைவன் கூற, மாற்றம் கூறாமல் நிற்கும் தலைவியைத் தலைவன் புறம் வந்து வண்டு ஓச்சி தழுவ முயலுதல் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இடையூறு கிளத்தல்: தலைவன் தனது மெய்யைத் தொட, அறிவு நலன் இழந்து, செய்வதறியாது பூங்கொம்பு அல்லது கொடி ஒன்றினைச் சாந்து தலைவி நிற்க தலைவன் அவளை நோக்கி, இன்பத்திற்கு இடையூரான நின் உள்ளத்துள் நிகழ்ந்தது என்ன என்று வினவுதல்.

5. நீடு நினைந்து இரங்கல்: தலைவியைக் கூட முடியாமல் தலைவிக்கும் தலைவன் அதனை எண்ணி வருந்துதல். இதனைத் தஞ்சை வாணன் கோவை 13ஆம் பாடல் வழி உணரலாம்.

6. கூடுதல் உறுதல் : கட்சிக்குப் பின்னர் புணர்ச்சி நிகழுதல்

***"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை***
***போழப் படாஅ முயக்கு" (குறள் : 1108)***

7. சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல்: இயற்கைப் புணர்ச்சிக்குக் களனாக மெய்தொட்டுப் பயிறல் முதலாகக் கூடுதல் உறுதல் ஈறாகப் பெற்ற இன்பத்தில் திளைத்தல்.

***"வேட்ட பொழுதின் அவையவை போலுமே***
***தோட்டார் கதுப்பினாள் தோள்" (குறள் : 1105)***

இதனை,

***"கண்டு கேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்***
***ஓண்தொடி கண்ணே உள" (குறள் : 1101)***

என்ற வள்ளுவர் வாக்காலும் அறியலாம்.

தீராத் தோற்றம்: இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தாலும் உள்ளத்தில் ஏற்படும் தெளிவின்மை. அதாவது இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னரும் தலைவி ஆற்றாமை உடையளாகவே காணப்பட, தலைவன் அவளைத் தெளிவிப்பதற்காகச் சூளுரை கூறுதல்.

***"-----------எம்மூர் வியன்துறை***
***நோடை முன்கை பற்றிச்***
***சூரர மகளிரோ டுற்ற சூளே" (குறுந்: 53)***

அகம் 85-ம் பாடலையும் சான்றாகக் கொள்ளலாம்.

**பாங்கற் கூட்டத்தில் தலைவன் கூற்று:**

இன்பத்தினைப் பெற்றவழி உள்ளத்தில் மகிழும்போதும் கூடின தலைவி தன்னைவிட்டுப் பிரிந்தபோதும், தலைவியாலே நமக்கு இல்லறம் இனிது நடக்கும் என்று மனத்தில் எண்ணும்போதும் இடந்தலைப்பாட்டிற்குப் பின்பு காதல் மிகுதியால் சோர்வுடன் காணப்பட,

அக்குற்றத்தைப் பாங்கன் எடுத்து உரைப்பான். ஆனால் தலைவனோ விதியின் வலிமையை எடுத்துச் சொல்லி மறந்து ஆற்றாமையினால் வருந்த, அவ்வருத்தத்தை பாங்கன் நீக்க முயலும் போதும் தலைவன் கூற்று நிகழும்.

***"இடிக்குங் கேளிர் நும்குறை யாக***
***நிறுக்க லாற்றினோ நன்றுமற்றில்ல***
***ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்***
***கையி லூமன் கண்ணில் காக்கும்***
***வெண்ணெய் உணங்கல் போலப்***
***பரந்தன் றறிநோய் நோன்றுகொளற் கரிதே" (குறுந் : 58)***

என்ற பாடலின் தலைவன் தனது ஆற்றாமையைப் பாங்கனிடத்து எடுத்துரைப்பதைக் காணலாம்.

நின்னால் காணப்பட்டாள் எவ்விடத்தாள். எத்தன்மையள் எனப் பாங்கன் வினவுதலும், அதற்குத் தலைவன் இடமும் அவள் உருவமும் கூறுதலும், பாங்கன் அவ்விடம் தோழியற் கூட்டத்தில் தலைவன் கூற்று.

பாங்கனால் தலைவியைப் பெற்று மணந்துக் கொண்டு வாழ எண்ணாமல் மீண்டும் களவுப் புணர்ச்சியே விரும்பும் தலைவன் தோழியை இரந்து நிற்கிறான். அப்போது தோழியிடம் கூற்று நிகழ்த்துகிறான் தலைவன் இதனை "பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல்" என்பர் தொல்காப்பியர்.

தோழியை வாயிலாகக் கொண்டு சூறை இரக்கும் தலைவன், தோழியிடம்

***"பெருங்கல் வேலிச் சிறுகுடி யாது என" (நற்:213)***

என ஊர் வினவும்போதும், நும்பேர் யாது? என வினவும்போதும், தன்னால் தொலைக்கப்பட்ட (அம்பு எய்தப்பட்ட) விலங்கு இவ்வழி வந்தது கண்டீரோ என வினவும்போதும் தலைவன் கூற்று நிகழ்த்துவனான்.

அவையேயன்றி வழி வினாவுதல், யான் இங்கு தங்கினும், எம்மோடு புணரினும் உங்களுக்குப் பழி உண்டோ என்று வினவுதல் வழியும் கூற்று நிகழும்.

தொடர்ந்து தலமகன் தோழியிடம் பலமுறை இரக்கின்றான். பகற்குறி மற்றும் இரவுக்குறிக்கு உதவுமாறு வேண்டுகிறான். "பின் வருவேன்" என்று சொல்வது போலக் கூறுவான்.

***"தலைவியின் ஆகத்தைப் பொருந்தாவிடில் நான்***
***என்ன சொல்ல? முத்தும் சந்தனமும் செழும்பனி***
***நீர்விட்டு அரைத்து வேட்கை நோயினால்***
***வருந்தும் என்மேனியில் பூசினாலும் வெப்பம்***
***ஆறாது. இன்று என் காரியமெல்லாம் உன்னால்***
***மட்டுப்பட்டது" (தஞ்சைவாணன் கோவை -93)***

என்று தலைவன் தன் ஆற்றாமையை எடுத்துரைப்பான்.

மேலும் தோழி தலைவனை நோக்கி, தலைவி மிகவும் இளமையானவள். இத்தகைய காதல் எல்லாம் அறியாதவள் என்று கூறும் போது தலைவன் கூற்று நிகழும்.

இவ்வாறான களவொழுக்கம் கேட்டினையே தரும். எனவே உலகத்தார் திருமணம் செய்து கொள்வது போலத் தலைவியைத் திருமணம் செய்து கொள் என்று தோழி கூறும் நிலையிலும் தலைவன் கூற்று நிகழ்த்துவான்.

தாய் வருவாள், தமையன்மார் வருவர், காவலர் வருவார் என்று இடையூறுகளுக்காகத் தாங்கள் அஞ்சினமையைத் தோழி உணர்த்த, தலைவன் மனம் வருந்தி மடலேறுவேன் என்று கூறுவதுமுண்டு.

***"மாவென மடலும் ஊர்ப பூவெனக்***
***குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப***
***மறுகின் ஆர்க்கவும் படுப***
***பிறிதும் ஆகுப காமங்காழ் கொளினே"*** ***(குறுந் : 7)***

என்று தலைவன் கூற, "அறிவும் அருளும் உடையோர் நாணந்தரத்தக்க இத்தகைய செயல்களைச் செய்யார் என்று தோழி கூற, அப்போது தலைவன் தோழியை நோக்கி

***"நாணொடும் நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்***
***காமுற்றார் ஏறும் மடல்"*** ***(குறள் : 1133)***

என்பது போல கூற்று உரைப்பான்.

இவ்வாறாக இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைபாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்ற நால்வகை நிலைகளிலும் தலைவன் கூற்று நிகழ்வதைக் களவியல் 11-ம் நூற்பா எடுத்துரைக்கிறது.

தலைவன் மடலேறுவன் என்று கூறும்போது அதனைத் தடுத்து நிறுத்த முயலுதல் தோழியர் கூட்டத்து இயல்பு ஆகும் என்பதனை,

"***பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்***
***அன்புற்று நகினும் அவள்பெற்று மலியினும்***
***ஆற்றிடை உறுதலும் அவ்வினைக்கு இயல்வே"*** ***(களவியல் :12)***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

பண்பிற் பெயர்த்தல்: தலைமகளின் இளமைப்பண்பு கூறித் தலைவனைச் செல்லுமாறு சொல்லுதல். இதனை

***"குன்றக் குறவன் காதல் மடமகள்***
***வண்டுபட கூந்தல் தண்டழைக் கொடிச்சி***
***வளையள் முளைவாள் எயிற்றள்***
***இளைய ளாயினும் ஆரணங்கினளே"*** ***(ஐங் : 25)***

என்ற செய்யுள் புலப்படுத்துகிறது.

பரிவுற்று மெலிதல்: தலைவனது காதல் உண்மையை அறிந்து தோழி இரங்கிய காலம்

***"தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு***
***மாலை உழக்கும் துயர்"*** ***(குறள் : 1135)***

என்று தலைவன் கூறுவது காண்க.

அன்புற்று நகுதல்: தலைவன் குறையை மறுக்க வேண்டும் என்று எண்ணிய தோழி அன்பு தோன்றும் உள்ளத்துடன் சிரிக்க, தலைவன் கூற்று நிகழ்த்துவதை நற்றிணை 75-ஆம் பாடலில் காணலாம்.

அவள் பெற்று மலிதல்: தோழியின் உடம்பாட்டினைப் பெற்ற தலைவன் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிலையில் கூற்று நிகழ்த்துவான், தோழியின் உதவியால் இரவுக்குறி மற்றும் பகற்குறியில் தலைவியைக் காணப்பெற்ற களிப்பில் தலைவன் கூற்று இடம்பெறும்.

தான் செல்லும் வழியிடை இடையூறு தோன்றிய இடத்தும் தலைவன் கூற்று நிகழும் என்பதே மேலை நூற்பாவின் பொருளாகும்.

**பாங்கர் துணையாகும் இடம் பாங்கர் கூட்டம்:**

***"பாங்கர் துணையாகக் கூடும் கூட்டம் 12 வகைப்படும் என்பதை***
***பாங்கர் நிமித்தம் பன்னிரெண்டென்ப"*** ***(களவியல் : 13)***

என்ற நூற்பா வழி அறிகிறோம்.

கருத்து வேறுபாடு மிக்க நூற்பா இது.

**இளம்பூரணர் விளக்கம்:**

பாங்கரால் கூடும் கூட்டம் என 3-ம் வேற்றுமைப் பொருளில் கொள்ளப்படுகிறது. இவர் கருத்துப்படி 1. பிரமம் 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம் 4. தெய்வம் 5. கந்தர்வம் 6. உடன்போக்கு 7. கற்பியல் இற்கிழத்தி 8. கற்பில் காமக் கிழத்தி 9. கற்பில் காதற்பரத்தை 10. அசுரம் 11. இராக்கதம் 12. பைசாசம் என்பன.

நச்சினார்க்கினியர் கருத்துப்படி,

1. பிரமம் 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம் 4. தெய்வம் 5. முல்லை 6. குறிஞ்சி 7. பாலை 8. மருதம் 9. நெய்தல் 10. அசுரம் 11. இராக்கதம் 12. பைசாசம் என்னும் 12 இடங்களிலும் பாங்கன் துணையாகத் தலைவன் தலைவியர் கூட்டம் நிகழும் என்பர்.

**வெள்ளை வாரணர்:**

1. காட்சி 2. ஐயம் 3. துணிவு 4. வேட்கை 5. ஒருதலை உள்ளுதல் 6. மெலிதல் 7. ஆக்கம் செப்பல் 8. நாணுவரை இறத்தல் 9. நோக்குவ எல்லாம் அவையே

தோழியிற் கூடிய தலைமகன் மணக்கும் வரையில் சொல்லும் பொருளை

***"இருவகைக் குறி பிழைப்பாகிய இடத்தும்"*** ***(களவியல் : 14)***

என்று துவங்கும் நூற்பா தொகுத்துரைக்கிறது.

அவ்விடங்களில் யாவை எனக் காண்போம்.

இருவகைக் குறி பிழைப்பாகிய இடம்: பகற்குறி, இரவுக்குறி என்னும் இருவகைக் குறி தவறிய இடத்துத் தலைவன் கூற்று நிகழும்.

தலைவன் தலைவி இருவரும் பிறரறியாமல் பகலிலும், இரவிலும் உரையாடுவதெற்கெனக் குறிக்கப்பட்ட இடமே குறி என்பது. இது இரவுக்குறி, பகற்குறி என இருவகைப்படும்.

பகற்குறி என்பது பகற்பொழுதில் தலைவி குறிப்பிட்ட இடத்தில் தலைமகன் வந்து கண்டு உரையாடுதல்.

இரவுக்குறி ஆவது மனையினுள் புகாமல், அம்மனையிலுள்ளோர் கூறும் சொற்களைக் கேட்கும் அணிமையில் அமைவது. இது இல்வரை இகவாதது.

பகற்குறி ஊரின் மதில்புறமாய்த் தலைமகள் அறிந்து சேர்தற்குத் தகுதியுடைய இடம் ஆகும்.

அல்லக்குறி என்ற ஒன்றும் குறிப்பிடப்படுகிறது. அஃதாவது இரவுக்குறியில் தலைவியைக் காண வருகின்ற தலைவன் நீர்நிலையில் கல் எறிதல் அல்லது பறவைகள் போல ஒலி எழுப்புதல் போன்ற செயல்களால் தன் வரவை அறிவிப்பான். இத்தகைய செயல்களைத் தலைவன் நிகழ்த்தாத போதும். தேங்காய் வீழ்தல், பனம்பழம் வீழ்தல் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளால் ஒலி எழுப்புவதும் உண்டு. இவ்வொலிகள் தலைவனால் எழுப்பப்பட்டவை எனத் தவறாக எண்ணித் தலைவி குறியிடம் வருவாள். தலைவன் இல்லாத வறுங்களம் கண்டு வருந்திச் சென்றுவிடுவாள். பின்பு தலைவன் வந்து உண்மையான ஒலிகளை எழுப்ப, அது முன்னையது போன்றது என எண்ணிக் குறியிடம் செல்லாமல் இருந்து விடுவாள் தலைவி. வீட்டிலுள்ளோர் ஐயப்படுவர் என எண்ணியும் தலைவி வெளியில் வர தயக்கம் கொள்வாள். இவ்வாறு நிகழ்வதே அல்லகுறி எனப்படும்.

அல்லக்குறியால் வருந்திய தலைவன் தான் வந்து சென்றததற்கு அடையாளமாகத் தன் மாலையை மரக்கிளையில் மாட்டி விட்டுச் செல்வதும் உண்டு. இத்தகைய சூழல்களால் வருந்திய தலைவன் தோழியைக் கண்ட இடத்து,

***"மழைவர வறியா மஞ்ஞையாலும்***
***அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி***
***தானெம் அருளாள் ஆயினும்***
***யான் தன்னுள்ளுபு மறந்தறியோமே" (ஐங் : 598)***

என்று வருந்துவதைக் காணலாம்.

காணா வகையின் பொழுது நனி இகத்தல்: தலைவியைக் காணாமல் பொழுது நீட்டிக்கும் போது தலைவன் தனது வருத்தத்தைத் தோழியிடத்துக் கூறுவான்.

தலைவியின் அழகை நேரே அனுபவிக்க இயலாத தலைவன், அவளை மனத்தால் எண்ணிப் பார்க்க வேண்டிய நிலை ஆகிவிட்டதே என வருந்துகின்றான். குறுந்தொகை 286-ஆம் பாடலில்,

***"உள்ளிக் காண்பென் போல்"*** எனக் கூறுவதைக் காணலாம்.

இவ்வாறு பொழுது மிகக் கழிய, தலைவியைக் காண வேண்டும் என்ற ஆசையாம் குறியிடம் சென்று அங்கு அவளைக் காணாமையால் வருந்தி, வேட்கை காரணமாக மயங்கிக் கையற்ற நிலையிலும் கூற்று நிகழுதல் உண்டு.

தலைவியின் வீட்டினுள் நுழைவதற்குப் பொருந்தாத காலத்தில் நுழைந்து தலைவியை எதிர்ப்பட்ட பொழுது அங்குள்ளவர்களால் விருந்தினனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சூழலில் கூற்று நிகழும் இந்நிலையில் தலைவியும் தோழியும் தலைவனை விருந்து உபசரிப்பவர்களாக எதிர்கொள்ளும் போதும் கூற்று நிகழும் என்பதனை,

***"புகாஅக் காலைப் புக்கு எதிர்ப்பட்டுழிப்***
***பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்***
***வேளாண் எதிரும் கண்ணும்" (களவியல்)***

என்ற நூற்பா வரிகள் உணர்த்துகின்றன.

பொருள் தேடும் முயற்சியை எதிர்நோக்கி நெடுந்தூரம் செல்லும் பிரிவன்றி அண்மையில் பிரியும் பிரிவில் தலைவன் தலைவியிடம் பேசுவதை:

***"இன்றே சென்று வருவது நாளைக்***
***------------ ----------------- ---------------------***
***சின்னிரை வால்வளைக் குறுமகள்***
***பன்மாண் ஆகாம் மணந்துஉவக் கும்மே" (குறுந் : 189)***

என்ற பாடல் உணர்த்துகிறது.

நாணு நெஞ்சு அலைப்ப விடுத்தற் கண்ணும் கூற்று நிகழும். அதாவது நாணம் தலைவியின் நெஞ்சினை வருத்த அதனை நீக்க முயலும்போது கூற்று நிகழும்.

தலைவியைத் திருமணம் செய்து கொள்ளும்படித் தோழி வேண்டிய பின்னரும் தலைவன் களவொழுக்கம் வேண்டிக் கூறுவான். அல்லது தோழியின் சொற்களைக் கேட்டுத் திருமணம் செய்ய உடன்பட்ட போதும் தலைவன் கூற்று நிகழும்.

ஆங்கு அதன் புறத்து குற்றம்பட வந்த அலரை மறுத்துக் கூறும்போதும் தலைவன் கூற்று நிகழும் என்பர் தொல்காப்பியர். (களவியல் : 17)

**தலைமகளின் கூற்றும் இயல்பும்:**

நாணமும் மடனும் பெண்மைக்குரிய சிறப்பியல்புகள் இவை தலைவியிடம் நிலைத்து நிற்பவை ஆதலால் தலைவி தன் வேட்கையை வெளிப்படுத்த இயலாதவள் ஆகின்றாள். எனவே குறிப்பினாலோ இடத்தினாலோ அல்லாமல் வேட்கை புலப்படாது என்பதை

***"காமத் திணையிற் கண்நின்று வருஉம்***
***நாணும் மடனும் பெண்மையை ஆகலின்***
***குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை***
***நெறிப்பட வாரா அவள்வயின் ஆன" (களவியல் : 18)***
***"உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்***
***கண்டார்மகிழ் செய்தல் இன்று" (குறள் : 1090)***

என்று எண்ணுவதைக் குறள்வழி உணரலாம்.

வேட்கை உள்ளபோதும் நாணமும் மடமும் தலைவியை விட்டு நீங்காதோ என்றால், வேட்கை உரைக்காத கண்கள் உலகில் இல்லை. எனவே வேட்கை காரணமாக அச்சம் மட்டுமே தலைவியை விட்டு நீங்கும் நாணும் மடனும் நீங்கா. நூணும் மடனும் இல்லாத தலைவியை உயர்ந்தோர் மதியார் ஆதலால் நாணமும் மடனும் பாதுகாவலாக தலைவி குறிப்பினால் வேட்கையை உணர்த்துவாள்.

***"காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்***
***ஏமுற இரண்ட உளவென மொழிப" (களவியல் : 19)***

தலைவியிடம் ஒரு கூற்றுச் சொல் நிகழுமிடம்:

உடன்படும் வேட்கை உடையவள் தலைவி என்றாலும் அத்தன்மையைத் தலைவனுக்குப் பதிலாகக் கூறாள். பதில் கூறுதல் அருமை. எனவே உடன்பாடல்லாத கூற்று மொழியே தலைவிமாட்டு நிகழும்.

***"சொல்லெதிர் மொழிதல் அருமைத்து ஆகலின்***
***அல்ல கூற்று அவள்வயி னான" (களவியல் : 20)***

களவில் தலைவி கூற்று நிகழும் இடங்கள்:

களவில் இடம்பெறுகின்ற தலைவி கூற்றுகள் அமைத்தும் தலைவியின் வேட்கையைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தயையே ஆகும். வேட்கையினை வெளியிட்டு உரைக்கும் நிலையில் தோன்றுவன அல்ல. எனவே களவொழுக்கத்தின் போது தலைவியின் உள்ள நிகழ்ச்சிகளும் நூற்பாவின் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

***"மறைந்தவற் காண்டல் தற்காட்டுறுதல்" (களவியல் : 21)***

எனத் துவங்கும் நூற்பாவில் கருத்துக்கள் தொகுத்துரைக்கப்படுகின்றன.

தன்னைத் தலைவன் காணாமல் தான் அவனைக் காணுதல், தலைவன் தன்னைக் காணுமாறு நிற்றல், மிகுதியான வேட்கையால் தலைவன் கூறிய சொற்களைக் கேட்டு எதிர்மொழி கூறாது நிற்றல் ஆகிய இம்மூன்று இடங்களிலும் தலைவியின் கூற்று நிகழாது.

இவ்வாறு கூற்று நிகழாமையின்போது நடைபெறுவன: தலைவியின் வேட்கைக் குறிப்புக் கண்டு, தலைவன் தலைவியை நெருங்கி வரும்போது அதற்கு உடன்படாது மறுத்து நிற்றல். இது கூற்றினும் குறிப்பினும் நிகழும். மறுத்த நிலையை விடுத்துப் பின் ஏற்றுக்கொள்ளுவான். பின்னர் புணர்ச்சிக்கு உடன்பாடு காட்டும் நிலையில் தலைவனைப் பார்த்து புன்சிரிப்பு காட்டுவாள். இவை அனைத்தும் புணர்ச்சிக்கு முன் நிகழ்பவை ஆகும்.

இனி, தலைவி தன் தோழியிடம் கூற்று நிகழ்த்துமாறு காண்போம்.

தலைவன் கையகப்பட்ட பின்பு என்ன செய்துவிட்டோம் எனக் கலக்கமும் வேளையில் தோழியிடம் கூறுவாள்"

***"மையல் யானையின் மருட்டலும் மருட்டினான்***
***அதனால்,***
***அல்லல் களைந்தனள் தோழி" (கலித்:54)***

நாணம் மிகுதிப்பட்ட இடத்தும் தலைவன் பிரிவான் என அஞ்சி அதற்கு இரக்கமுறுகின்ற போதும் கூற்று நிகழும்.

***"அம்ம வாழி தோழி காதலர்***
***பாவை யன்ன என் ஆய்கவின் தொலைய***
***நல்மா மேனி பசப்பச்***
***செல்வோம் என்பதம் மலைகெழு நாட்டே" (ஐங்:221)***

தலைவன் தலைவியைக் காண வருவதற்கு இயலாதப்படி காவல் செய்த வேளையிலும் அவனும் வருதலைத் தவிர்த்த போதும் கூற்று நிகழ்த்துவான்.

தலைவன் வந்த போது அலராகும் என் அஞ்சி இகழ்ந்த போதும், தன்னிலையை மறையாமல் சொல்லி இரங்கும் போதும், தலைவன் தன்னைத் தெளிவிக்க, அதனை ஏற்றுக் கொள்ளாது நொந்து கொண்ட இடத்தும், தலைவன் பிரிதலின்போது கலக்கம் அடையும் வேளையிலும், தலைவனைப் பெற்று மகிழும் போதும் தோழியிடத்துத் தலைவி கூற்று நிகழ்த்துவான்.

தலைவன் தன்னைக் காண வருவதற்கு இடையூறாகக் காவலர் ஊரைச் சுற்றி வர, தலைவனது வருகை அரிதாகும் என்று தோழி கூறு அதற்குப் பதில் கூறுமிடத்துத் தலைவி பேசுவதைக் காணலாம். இவையே தலைவி தோழியிடத்துக் கூற்று நிகழ்த்துகின்ற இடங்களாகும்.

இவையே அன்றித் தலைவி மனையகப்பட்டு வெளியில் செல்ல முடியாத நிலையில் இற்செறிக்கப் படுகின்றாள். அப்போது தலைவனைக் காண முடியாதே என்று மனம் கலங்கி,

“அருமறைப்பொருள்” ஆகிய வேட்கையைத் தோழியிடம் கூறுவாள். இவையெல்லாம் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்பு நிகழ்வன ஆகும்.

## குறியிடம் பிழைத்த இடத்து தலைவி கூற்று:

களவொழுக்க நிலையிலுள்ள தலைவி தன்னைப் பிறர் வரைவு செய்ய வேண்டி வந்தால் அதனை மாற்றுவதற்கு முயன்று கூற்று நிகழ்த்துவாள்.

***“அன்னை வாழிவேண்டு அன்னை புன்னை***
***பொன்நிறம் விரியும் பூக்கெழு துறைவனை***
***என்னை என்றும் யாமே, இவ்வூர்***
***பிறிதொன் றாகக் கூறும்***
***ஆங்கும் ஆக்குமோ? வாழிய பாலே”*** ***(ஐங் : 110)***

என்ற பாடலில் காணலாம். மேலும் தலைவனோடு தனக்குள்ள புணர்ச்சியினால் கண் சிவப்ப, நுதல் வியர்ப்பு முதலான வேறுபாடுகள் தன் மெய்யின்கண் நிகழ, அதனை ஏனையோர் அறியாதபடி தலைவி மறைக்க முற்படுவாள்.

பாலது ஆணையால்(ஊழ) தனக்கும் தலைவனுக்கும் ஏற்பட்ட காதல் நிலையில் தலைவன் தன்னை மணந்து கொள்வதற்கு முன்வருதனைத் தெளிந்த தலைவி அருமை சான்ற எண்வகையினால் பெருமையுடைய இயல்பினளாகி நிற்கும்போது தலைவி கூற்று நிகழ்த்துவாள்.

அவ்வெட்டு வகையாவன மெய்ப்பாட்டியலில் கூறப்படும்

***“முட்டுவயிற் கழறல், முனிவு மெய்நிறுத்தல்***
***அச்சத்தின் அகறல், அவன் புணர்வு மறுத்தல்***
***தூது முனிவின்மை, துஞ்சிச் சேர்தல்***
***காதல் கைம்மிகல், கட்டுரை இன்மை”***

என்பனவாகும்.

**முட்டுவயிற் கழறல்:**

நிலவு வெளிப்பாடு, காவலர் விரைதல், தாய் துஞ்சாமை போன்ற நிகழ்வுகளால் தலைவன் குறியிடம் வருதல் தரைபட, இனி களவு ஒழுக்கம் இயலாது என எண்ணி, மணந்துகொள்ளும் வரையில் புணர்ச்சி விரும்பாமல் கலக்கமின்றித் தெளிவுடையளாதல்.

முனிவு மெய்ந்நிறுத்தல்:

களவொழுக்கத்தினால் ஏற்பட்ட துன்பத்தைப் பிறர்க்கு வெளிப்படுத்தாமல் தனது உடம்பின்கண் மறைத்தும் நிறுத்தல்.

**அச்சத்தின் அகறல்:**

குறியிடம் சென்றால் பிறர் அறிவரே என்ற அச்சத்தால் செல்லாமை

அவன் புணர்வு மறுத்தல்:

அச்சம் காரணமாக புணர்ச்சி மறுத்தல்

**தூது முனிவின்மை:**

ஆயினும் தலைவனிடமிருந்து வருகின்ற தூதுச் செய்திகளை வெறுக்காமல் கேட்டல்.

துஞ்சிசேர்தல்:

மகிழ்வுடன் உறங்குதல்

**காதல் கைம்மிகல்:**

காதல் எண்ணம் மிகுதல்

கட்டுரை இன்மை

கூற்று இன்மை

தலைவன் பொய்மையாக “மடலேறுவேன்” என்று தன்னை அச்சுறுத்திய போது குறியிடம் செல்லாள். அவளது கண்ணீரைத் தோழி துடைத்து ஆற்றுவாள். தலைவியின் வேறுபாட்டிற்கான காரணம் அறிய செவிலி வெறியாடல் நிகழ்த்துவாள். தலைவன் செய்த குறி அல்லக்குறி எனத் தெளிந்த தலைவி குறியிடம் செல்லாளாய் தோழியை நோக்கி,

***“அணிகடல் தண்சேர்ப்பன் தேர்ப்பரி மாபூண்ட***
***மணியரவம் என்றெழுந்து போந்தேன் கனிவிரும்பும்***
***புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தேன் ஒளியிழாய்***
***உள்ளுருகு நெஞ்சினேன் யான்”***

என தனது வருத்தத்தைக் கூறுவாள்.

தலைவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் நாள் நெருங்கி வரும்போதும், களவினைப் பிறர் அறிந்து கொண்ட போதும், தலைவியை இற்செறித்த போதும் போன்ற இடங்களிளெல்லாம் தலைவி குறியிடம் செல்லாது தோழியிடம் கூற்றுரைப்பாள்.

தலைவன் எதிர்ப்படுதல் இல்லாத காலத்தில், தலைவி குறியிடம் வந்து, தலைவன் இல்லாத வறுங்களம் நோக்கி, இதற்குக் காரணம் தன் பிழையே என்று எண்ணி,

***“வந்தேன் கொடியனும் அல்லன், தந்த***
***நீதவறு உடைய யும்அல்லை, நின்வயின்***
***ஆனா அரும்படர் செய்த***
***யானே தோழி தவறுடை யானே” (அகம் : 72)***

என்று தோழியிடம் வருந்திக் கூறுவாள்.

இனிவரும் ஐந்து இடங்கள் தன்னிடத்து உரிமையும் தலைவனிடத்துப் பரத்தமையும் தோன்ற கூறும் கூற்றுகளாகும்.

தலைவன் கொடியன் என்று கூறிய போது, அவன் குற்றம் இல்லாதவன் எனத் தலைவி இயற்பட மொழிவாள்.

*"------------- -------------- --------------- ------------*

*கொடியன் ஆயினும் ஆக*

*அவனே தோழி என்னுயிர்க் காவலனே"* *(ஐங் : 6)*

*"விளைவாய் சிறுகிளி விழைதினை கடிய*

*ஆரிருள் நடுநாள் வருதி*

*சாரல் நாட வாரலோ எனவே"* *(குறுந் : 114)*

என்பன போன்று தலைவன் வரும் காலம் குற்றமுடையது என்று கூறுகிறாள்.

தலைவனிடத்து காமம் மிக்கு விளங்கும் போதும், தலைவன் தலையளி மிகும்போதும், தலைவன் தன்னைத் திருமணம் செய்து கொண்டல்லால் தன்னைவிட்டு நீங்கான் என்ற பாதுகாவல் பொருந்திய மகிழ்ச்சி வந்தபோதும் தன்வயின் உரிமையும் அவன் வயின் பரத்தமையும் தோன்றத் தலைவி கூறுவாள்.

**தலைவி தானே கூறும் காலம்:**

இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்குகின்ற தலைவன் இன்ன நாளில் மணந்து கொள்வேன் என்று கூறித் தோழியர் கூட்டத்திற்கு முயலாமல் பிரிந்தபோது, பிறருக்கு ஐயம் தோன்றாமல், அவன் வரும் வரையில் மறைத்து வாழ விரும்புவாள். எனினும் ஆற்ற இயலாது வருந்துவான். இந்நிலையில் தலைவன் செவிலி முதலியவர்களைச் சந்தித்தபோதும். இவ்வொழுக்கத்தினை நின் தோழிக்கு உரையெனத் தலைவன் கூறிய இடத்தும் தோழி களவைப் பற்றி வினவாதபோதும் தானே எடுத்துக் கூறுவாள்.

*"வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்*

*வரையா நாளிடை வந்தோன் முட்டினும்*

*உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்*

*தானே கூறும் காலமும் உளவே"* *(களவியல் :22)*

எல்லாவற்றையும் விடச் சிறந்தது உயிர். அந்த உயிரைவிட நாணம் மகளிர்க்குச் சிறந்தது. நாணைவிடக் கற்புச் சிறந்தது என்று முன்னோர் கூறிய கூற்றினைக் கருத்திற்கொண்டு தலைவன் இருப்பிடத்திற்குச் செல்லுதலும், அங்குச் சென்று குற்றமற்ற சொற்களைச் சொல்லுதலும் பொருளிலக்கணம் ஆகும் என்று களவியல் நூற்பா 23 கூறுகிறது.

## தோழியின் கூற்றும் இயல்பும்

அகவாழ்வில் தோழியின் துணை இன்றிக் களவு ஒழுக்கம் நிகழாது. நீளாது. தலைவியின் நலனில் அக்கறை உடையவள் தோழி. இவள் செவிலியின் மகள் ஆவாள். தலைவியின் செயல்கள் அனைத்தும் நன்கு அறிந்தவள். உலகியல் மற்றும் உளவியல் அறிவு மிக்கவள் தலைவியின் தோழிமார் பலருள்ளும் தலைவியால் பெரிதும் நம்பப்படுபவள். விரும்பப்படுபவள். இத்தகைய தோழியின் கூற்று நிகழும் இடங்களை,

**“நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்”**

எனத் துவங்கும் களவியல்: 24-ம் நூற்பாவில் தொகுத்து உரைக்கின்றார் தொல்காப்பியர். இந்நூற்பாவில் உயிர்தோழியின் செயல்களாக 32 எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் காண்போம்.

நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்பு என்னும் ஏழினால், தலைவன் தலைவியரிடையே புணர்ச்சி நிகழ்ந்துள்ளமையைத் தோழி அறிந்துகொள்வாள். அறிந்தபின்பு மெய்யாகவும், பொய்யாகவும், வழிநிலையிலிருந்து மாறாமலும் குற்றேவல் செய்யும் முறையில் தவறாமலும் பல்வேறு கவர்பொருள்படக் கூறித் தலைவியின் ஒழுக்கச் செயல்பாடுகளை ஆராய்வாள்.

**நாற்றம்:** தலைவன் கூட்டத்தால் தலைவி உடம்பில் வீசும் மலர் மற்றும் மன்மதச் சாந்தின் மணம்

**தோற்றம்:** அழகு அல்லது பொலிவு

**ஒழுக்கம்:** சிறுபிள்ளைத்தன இயல்புகள், செயல்கள் மாறி பெண் தன்மைக்கு ஏற்ப ஒழுகுதல்

**உண்டி**: முன்பு உண்ணும் உணவின் அளவு குறைதல்

செய்வினை மறைத்தல்: தலைவன் பற்றிய நினைவும் செயலும் பிறர்க்குப் புலனாகாதவாறு மறைத்தல்.

**செலவு**: முன்பு போல வேண்டியவாறு நடவாமல் அழகாக நடத்தல்

**பயில்பு**: ஓரிடத்திலேயே பயிலுதல்

இந்த ஏழு வகையாலும் தலைவன் தலைவி புணர்ச்சி உண்மையை அறிந்த பின்னர் கூற்று நிகழ்ந்துள்ளன.

தனது குறையைச் சொல்ல வேண்டித் தன்னை எதிர்ப்படும் தலைவனிடத்தில் களவொழுக்கத்தினை அறிந்தும் அறியாதவள் போல மறைத்து, தலைவனது பெருமையினைக் கூறி அவன் குறிப்பினை மாற்றுவாள்.

***“இவளே -------------- ----------------- ---------------- -------------***

***---------- ---------------- -------------------------- ------------------------***

***மீன்எறி பரதவர் மகளே: நீயே***

***--------------- ---------------- ----------------------- --------------------------***

***கடுந்தேர் செல்வர் காதல் மகளே” (நற் : 45)***

என்பன போல வரும்.

தலைவனிடம் உலகத்தார் மகள் கொள்ளும் முறைப்படி நீயும் மணந்து கொள்வாயாக என்று கூறுவாள். ‘‘இதனை உலகு உரைத்து ஒழித்தல்’’ என்பர் தொல்காப்பியர். இதற்கு தலைவன் கையுறை (பரிசு) யாகக் கொண்டு வரும் பொருளை மறுத்தல் என்றும் கூறுவர்.

சில இடங்களில் தலைவியின் அருமை கூறித் தலைவனை அகற்றுவாள். இவ்வாறு கூறியும் தலைவன் அங்கிருந்து அகலாமல் நின்றால், உன்னால் காதலிக்கப்பட்ட என் தலைவியிடம் சென்று அறிவித்துப் பின்னர் என்னிடத்து வா எனக் கூறுவாள்.

தலைவனே! நீ நேராகச் சென்று காதலை அறிவுறுத்தினாலும் அவள் அறியக் கூடிய பருவத்தினள் அல்லள் என்று தலைவியின் பேதைமைத் தன்மையை எடுத்துக் கூறி விலக்குவாள்.

***“யானை உழலும் அணிகிளர் நீர்வரைக்***

***கானக வாழ்க்கைக் கறவர் மகளிரேம்***

***ஏனலுள் ஐய வரவு மற்று என்னைகொல்***

***காணினும் காய்வர் எமர்” (திணைமொழி : 6)***

என்று தமர் வரவு அஞ்சித் தலைவனைப் புனம்விட்டுப் போகும்படி வேண்டுவாள். உன்னால் காதலிக்கப்பட்டவள் யாவன்? என வினவிய போது ‘இத்தன்மையன்’ என்று தலைவி கூற அவளும் ‘இத்தன்மையள்’ என இருவர் நிலையையும் ஒப்பிட்டுக் கூறுவாள் தோழி.

யானை வந்ததா? மான் வந்ததா? என மாயம் செப்பி (ஒரு காரணம் காட்டி) வந்த தலைவனைத் தலைவி பொறுத்த காரணம் பற்றி எண்ணும்போது தோழி கூற்று நிகழும்.

தலைவன் குறிப்பு, தலைவி குறிப்பு, இருவரும் உள்ளபோது அவன் வரவு உணர்தல் என்ற மூவகையாலும் புணர்ந்தபின் தலைவனிடத்துத் தோழி பணிந்து நிற்கும் போது

‘‘இவளேநின சொற்கொண்ட என்சொல் போது

பசுநனை ஞாழல் பல்கிளை ஒருசிறைப்

புதுநலன் இழந்த புலம்புமார் உடையள்

உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்’’ (குறுந்:81)

தோழி உரையாற்றுகின்றாள்.

தலைவனிடத்து மனம் இரங்கிய தோழி தலைவியிடம் சென்று தலைவனது குறையை எடுத்துரைப்பாள்.

நாணம் மிகுதியினால் தலைவி தன் வேட்கையை தோழியிடம் ஒளித்து உடன்படாது நிற்பாள். அப்போது தோழி அவர்தம் புணர்ச்சியைத் தான் அறிந்தமையைக் கூற்றினாலும் குறிப்பினாலும் உணர்த்தி தலைவியை வேண்டி நிற்பாள்.

தோழி இவ்வாறு குறை நயந்தமையைத் தலைவி ஏற்றுக்கொண்ட போது அதனைத் தலைவனிடம் சென்று உரைப்பாள்.

***"அன்னையும் அறிந்தனள் அலரும் ஆயின்று"*** என்பது போல களவு ஒழுக்கம் புறத்தார்க்குப் புலனாக அவர் அலர் தூற்றி நகைப்பர் என்று கூறுவாள்.

புணர்ச்சி விரும்பிய தலைவனுக்கு அதற்குரிய இடம் உணர்த்துவாள் தோழி, இரவு வருவானைப் பகல் வருக எனவும் பகல் வருவானை இரவு வருக எனவும் குறிபெயர்த்துக் கூறி வரைவு வலியுறுத்துவாள்.

தலைவன் புணர்ச்சி விரும்பாது பிரிய எண்ணிய போதும் தோழியின் கூற்று நிகழும்.

வேளாண்மைக்கு(உபசரிப்பு) உரிய இல்லற வாழ்வு நடத்தல் வேண்டும் என்று தோழி தலைவனிடத்து வேண்டி நிற்பாள்.

அல்லகுறி பட்டபோதும் தோழியின் கூற்று நிகழும்

களவில் ஒருவழித் தணத்தலின் போதும், வரைவிடை வைத்துப் பொருள்காரணமாகப் பிரியும்போதும், புனத்திடைப் புணர்ச்சீயின்றி நீங்கும்போதும் தலைவியைப் ''பாதுகாத்துக்கொள்'' என்று ஓம்படைக் கூற்று நிகழ்த்துவாள்.

***"மாமலை நாட மடமொழிதன் கேண்மை***
***நீ மறவல் நெஞ்சத்துக் கொண்டு"*** ***(ஐந் ஐம்பது : 18)***

என்பது போல வரும்.

தலைவி கடுமொழி கூறித் தலைவனை இயற்பழித்த போது, தோழி தலைவியை அடைந்து தலைவன் அன்பும் அருளும் உடையவன்: உன்னைப் பாதுகாப்பான் என்று கூறி வற்புறுத்துவாள்.

***"கோட்டுமா வழங்கும் காட்டக நெறியே" (ஐங்:282)***

என்பன போன்று தலைவன் வருகின்ற வழியின் தீமை அறிந்து அடைந்த மனக்கலக்கத்தாலும் கூற்று நிகழும்.

தலைவியின் இற்செறிப்பு கடுமை மிகுதியாகின்ற போது தோழி அதனை எடுத்து உரைப்பாள்.

***"வேரல் வேலி வேர்கேட் பலவின்***
***சாரல் நாட ----- -------------- ---------***
***சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கிவள்***
***உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"*** என்ற குறுந்தொகை 18ஆம் பாடல் கருத்து போலத் தலைவிக்குத் தலைவன் மீது காதல் மிகுதிபட, அதனைத் தலைவனிடம் எடுத்துக் கூறுவாள் தோழி.

தோழி தலைவனிடம் அவனது நாடு, ஊர், இல்லம், குடிப்பிறப்பு, பண்புச்சிறப்பு போன்றவற்றின் சிறப்புமிகுதிகளை எடுத்துக் கூறிப் புகழ்ந்து, அதனால் நீ தலைவியை வரைந்து கொள்ள வேண்டும் என வேண்டி நிற்பாள்.

தலைவியின் களவொழுக்கம் பற்றித் தாய்க்கு ஐயம் ஏற்பட, தோழி அது பொய் எனக் கூறி மறுத்து வேறோர் காரணம் காட்டிக் குறிப்பாக உணர்த்துவாள்.

***“:வேங்கை நறுமலர் வெற்பிடை யாம்கொத்து***
***மாந்தளிர் மேனி வியர்ப் மற்றாங்கு எனைத்தும்***
***பாய்ந்தருளி ஆடினோம் ஆகப்பணி மொழிக்குச்***
***சேர்ந்தனவாம் சேயரிக்கண் தாம்” (ஐந்திணை ஐம்பது:15)***

அனையாடியதால் கண்கள் சிவந்தன என்கிறாள்.

இவையேயன்றி, காவல் மிகுதி, காதல் மிகுதி, நொதுமலர் வரைவு, தலைவியின் செயல் மற்றும் உடல் வேறுபாடு கண்டு செவிலி வெறியாடும் இடத்தும், பிறர்வரைவு வந்த இடத்தும், தலைவன் வரைவு மறுத்த இடத்தும், தோழி அறத்தொடு நிற்கும் போது, தலைவனுக்கும், தலைவிக்கும், தனக்கும், குலத்திற்கும் பழி ஏற்படாத சொற்களைத் தாயிடத்தில் நயமாக எடுத்துக் கூறுவாள் தோழி.

இவற்றுள் அறத்தொடு நிற்றல் என்பது, எளித்தல், ஏத்தல், வேட்கை உரைத்தல், கூறுதல், உசாவுதல், ஏதீடு தலைப்பாடு, உண்மை செப்பும் கிளவி என ஏழுவகைப்படும் என்று பொருளியல் 12ம் நூற்பா கூறுகிறது.

தமர் வரைவு உடன்பட்டதைத் தோழி தலைவனிடத்துக் கூறும் போதும், வரைவு உடம்பட்டு பின்னர் காலம் நீட்டிக்க தலைவனிடம் கடுஞ்சொற் கூறி, வரைவு கடாவும் போதும், தலைவன் உடன்பட்ட தன்மையால் தலைவியை வற்புறுத்தும் போதும் தோழி கூற்று நிகழும் என 32 இடங்களைத் தொல்காப்பியர் தொகுத்துரைக்கிறார்.

## செவிலி இலக்கணம்

செவிலி என்பவள் தலைவிக்கு அன்னை போன்றவள். செவிலியின் தாய். நற்றாய்க்கு நல்ல தோழியாக விளங்குபவள். செவிலிக்கு பதின்மூன்று இடங்களில் கூற்று நிகழும் என்பதை

***“களவு அலராயினும் காமம் மேற்படினும்” (களவியல் : 25)***

என்ற நூற்பாவில் தொகுத்துரைக்கின்றார்.

தலைவன் தலைவியோடு கூடியொழுகும் ஒழுக்கம் அலராகிப் பழி ஏற்பட்ட இடத்து செவிலி தோழியை அது குறித்து வினவுவாள்.

***“எதின்மாக்கள் நுவறலும் வினவுவாள்***
***அழிவ தெவன்கொல் இப்பேதை ஊர்க்கே” (குறுந் : 89)***

என வரும் பாடலடிகளைக் காண்க.

தலைவியிடத்து பிறக்கும் வேட்கை மிகுதிப்பட்ட இடத்தும் தோழியை வினவுவாள். தலைவியின் உடல்வேறுபாடு கண்டு,

***“மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை***

***அணியில் தகழ்வதொன் றுண்டு” (குறள் : 1273)***

என்று வினவுதல்.

பொதும்மைப் பருவத்தளாகிய தலைவியின் உடல் உறுப்புகள் புணர்ச்சி காரணமாக அளவில் பெரியதாகிய இடத்தும் அது குறித்துத் தோழியிடம் வினவுவாள்.

தலைவனோடு தலைவியை உடன்கண்ட இடத்தும், கட்டு மற்றும் கழங்கு வைத்து வினவியவழி அவர் கூறிய சொற்கேட்டும் தோழியிடம் விளக்கம் கேட்டாள்.

நற்றாய்யும் செவிலியும் தலைவியின் நிலைகுறித்து வெறியாடலை எண்ணிய போது தோழியிடம் கூற்று நிகழ்த்துவாள்.

தலைவன் மீது கொண்ட காதல் மிகுதியால் தலைவி கனவில் அரற்றுகின்ற போது செவிலி கூற்று நிகழும்.

மேற்கூறிய நிகழ்வுகளின் போது காரணம் அறிய செவிலி தோழியை வினவுவாள். இவை நிகழாதபோது வினவாள்.

இன்னின்ன தன்மையினால் தலைவியிடம் வேறுபாடு ஏற்பட்டது என்று தோழி உரைத்தபோது அச்செய்தியை நற்றாய்க்கும் தந்தைக்கும் எவ்வாறு கூறுவது என எண்ணி ஆற்றாதவளாகச் செவிலி தெய்வத்தை வேண்டுவாள்.

தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டாள் என்பதனைத் தோழி வாயிலாக அறிந்த செவிலி அவர்களை இல்லறத்தில் நிறுத்தற் கண்ணும் கூற்று நிகழும்.

***“நாலூர்க் கோசர் நன்மொழி போல***

***வாயா கின்றே தோழி ஆய்கழல்***

***சேயிலை வெள்வேல் விடலையோடு***

***தோடுவளை முன்கை மடந்தையோடு நட்பே” (குறுந் : 5)***

இவையே அன்றித் தலைவன் வரைந்து கொள்ளாமல் பிரிந்து சென்ற வேளையில், அலர் ஆகுதலும் அன்றி, வேறுபாடும் இன்றி மனையிலே தனியளாக இருக்க, அவளது உள்ளக்கருத்து அறிதல் வேண்டி கூற்று நிகழும்.

உடன்போக்கிற்குத் தன்மகள் ஒருப்பட்ட போதும், தலைவன் குடிப்பெருமையும் தலைவியின் குடிப்பெருமையும் பொருந்துமா? என்று ஆராய்கின்ற போதும் செவிலியின் கூற்று இடம்பெறும்.

## நற்றாய் இலக்கணம்

***"தாய்க்கும் வரையார் உணர்வு உடம்படினே" (களவியல் : 26)***

என்ற நூற்பாவால் செவிலித்தாயின் உணர்வோடு உடம்பட்ட உள்ளம் நற்றாய்க்கு ஏற்பட்டால் செவிலிக்குக் கூறிய கூற்று நிகழுமிடங்கள் எல்லாம் நற்றாய்க்கும் பொருந்தும் என்றார்.

தலைவியின் வேறுபாடு அறிந்த நற்றாயும் செவிலியும் தமது மகள் தலைவனைப் பற்றி ஒன்றுமே அறியாதவள். எதற்கும் மயங்காத தலைவி இத்தலைவன் பொருட்டு மயங்கினாளே காரணம் என்னவோ என்று உயர்ந்தோரிடம் வினவுவர். அவர்களும் ஐயம் ஏற்பட்டும் வண்ணம் பதில் உரைக்க, நற்றாயும் செவிலியும் உண்மை உணர்வர் என்பதனை,

***"கிழவோன் அறியா அறிவினள் இவளென***
***மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்***
***ஐயக் கிளவியின் அறிதலும் உரித்தே" (களவியல் : 27)***

என்று கூறியுள்ளார்.

***"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்***
***தாயெனப் படுபவள் செவிலி ஆகும்"***

என்ற நூற்பா செவிலியின் சிறப்பினை உணர்த்துகிறது.

## தலைவிக்குரிய இலக்கணம்

தலைவி தனது வேட்கையைத் தலைவன் முன்னிலையில் சொல்லுவது கிடையாது. அங்ஙனம் சொல்லா இடத்தும் புதிய மண்பானையில் ஊற்றப்பட்ட நீர்போல, புறங்கசித்து வேட்கை உணர்வானது வெளிப்படும் என்று,

***"தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்***
***எண்ணுங் காலைக் கிழத்திகு இல்லைப்***
***பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்***
***பெய்ந்நீர் போலும் உணர்விற்கு என்ப" (களவியல் : 28)***

உணர்த்தியுள்ளார். எனவே தலைவியிடம் வேட்கை குறிப்பினால் வெளிப்படுமே அன்றி வெளிப்படையாக எடுத்துக் கூறப்பெறாது என்பது பெறப்படும்.

இயற்கைப் புணர்ச்சியாகிய கூட்டம், கூட்டிவைப்பார் யாருமன்றி நாமே கூடினோம் என்ற தனிமை உணர்வு தோன்றிய போது, இருவரும் தத்தமது உள்ளக் கருத்தைப் புலப்படுத்தும் தூதுவராக அமைவர் என்று களவியல் 29ம் நூற்பா உணர்த்துகிறது.

இயற்கைப் புணர்ச்சியின் பின்பு தலைவன் கூறிய எல்லையைக் கடத்தல் தலைவிக்கு அறம் ஆகாது. எனவே குறியிடம் கூறுதல்(களம் சுட்டும் கிளவி) தலைவிக்கே உரியது என்பர்.

***"தோழியின் முடியும் இடனுமார் உண்டே" (களவியல் : 31)***

என்பதால் தோழி கூறுவது மரபாகும்.

பாங்கற் கூட்டம் நிகழும் இடம்:

பாங்கன் துணையின்றித் தலைவனுக்குக் களவில் புணர்ச்சி நிகழாது. பாங்கி அல்லது தோழியின் துணையின்றித் தலைவிக்கும் நிகழாது.

தலைவன், தலைவி, தோழி அல்லது பாங்கன் ஆகிய மூவர்தம் மதியினையும் (அறிவு) ஒன்றுபடுத்தியே தலைவன் தலைவி புணர்வு நிகழ்தலால் இதனை ***"மதி உடம்படுதல்"*** என்பர் தொல்காப்பியர்.

எனவே குறையுற உணர்தல், முன்னுற உணர்தல் மற்றும் இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என்னும் மூவகையால் புணர்ச்சியை உணர்ந்த பின் அல்லாமல், இரந்து நிற்கும் தலைவனது விருப்பத்தை மட்டும் ஏற்றுப் புணர்ச்சிக்குத் தலைவி உடன்பட்டாள். தலைவியை 'இப்படிச்சொல்' 'இப்படி வா' என்று தோழியர் கூட்டத்தினின்று தனியே பிரித்து நிறுத்தி, அதன் பின்னரே தலைவியைத் தலைவனோடு கூட அனுமதிப்பாள் தோழி.

குறியிடம்:

***"குறி எனப்படுவது இரவினும் பகலினும்***
***அறியக் கிளந்த ஆற்றுது என்ப"*** ***(களவியல் : 10)***

என்பதால் தலைவன் தலைவி பகற்பொழுதிலும், இரவுப்பொழுதிலும் சந்திக்கும் இடமே குறி எனப்படும் என்பது தெரிகிறது. இது பகற்குறி, இரவுக்குறி என இருவகைப்படும்.

இல்லத்தின் எல்லைக்குள்ளும் மனையின் அகத்துள்ளோர் பேசுவது கேட்கும் அளவு உள்ள தொலைவில் இரவுக்குறி இடம் அமைதல் எனப்படும்.

பகற்குறிக்கான இடம் எயிலின் புறமாக, தலைவி அறிந்த இடமாதல் வேண்டும். தலைவன் செய்த குறி தவறிவரின் அது அல்லக்குறி எனப்படும்.

## தலைவன் இயல்பு:

ஓரையும் (முகூர்த்தம்) நாளும் துறந்து ஒழுகும் ஒழுக்கம் தலைவனுக்கு இல்லை, வழியினது அருமை, மன்னன் அழிவு, அஞ்சுதல், இடையூறு ஏற்படுமே என்று கலங்குதல் போன்றவை தலைவனுக்கு இல்லை(களவியல்:46) இவை தலைவிக்கும் தோழிக்கும் உண்டு.

தந்தை, தன்னை போன்றோர் களவொழுக்கத்தைக் குறிப்பினால் உணர்வர். செவிலி நற்றாய்க்கு உணர்த்த(அறத்தொடு நிற்க) நற்றாய் உணர்வாள்.

களவை வெளிப்படுத்துவதன் அலரும் அம்பலும் ஆகும். அதற்குக் காரணம் தலைவனே ஆவான்.

இந்நிலையில் வரைவு(திருமணம்) களவு வெளிப்பட நடத்தல், வெளிப்படாது நடத்தல் என இரண்டு வகைப்படும்.

***'அறத்தோடு நிற்றல்'*** எனும் துறை

களவொழுக்கம் நிலையில் காப்பு மிகுதி, காதல் மிகுதி, நொதுமலர் வரைவு மற்றும் தமர் வரைவு மறுத்தல் போன்ற காரணங்களால் தலைவி உடல் மெலிந்து காணப்படுவாள். அதற்குரிய

காரணம் அறிய வேண்டி செவிலி கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்பாள். வேலனை அழைத்து வெறியாடலை நிகழ்த்துவாள். சில வேளைகளில் தலைவன் சுற்றத்தார் அல்லாத பிறர் தலைவியைப் பெண் கேட்டு வருவர். இத்தகைய சூழல்களில் தலைவியைப் பாதுகாக்க விரும்புவாள் தோழி. எனவே முன்னிலை வகையினாலோ அன்றி அறத்தோடு நின்றோ தலைவனுக்கும் தலைவிக்கும் தனக்கும் தங்கள் குலத்திற்கும் பழி ஏற்படாதவாறு தலைவியின் களவொழுக்கச் செய்தியைச் செவிலித் தாயிடம் நயமாக எடுத்துரைப்பாள். இதுவே ***“அறத்தோடு நிற்றல்”*** ஆகும்.

அறத்தோடு நிகழ்வு நிலை ஏழு வகைப்படும்.

1. **எளித்தல்:** தலைவன் நம்மிடத்து எளியவனாக நடந்து கொள்கிறான் என்று கூறுதல்.

***“தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியும்***
***சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்***
***வருந்திய வருத்தம் தீர யாம் சிறிது***
***இருந்தனமாக எய்த வந்து”***

எம்மிடம் வந்து உணவு வேண்டினன் நாங்களோ,

***“இவை நுமக் குரிய அல்ல இழிந்த***
***கொழுமீன் வல்சி”***

என்று கூறினோம் என்று கூறி அவன் தங்களை அன்புடன் பார்த்து நின்ற நிலையைத் ˙தோழி எடுத்துரைப்பதை அகம்:110 ஆம் பாடலில் காணலாம்.

***“ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்***
***ஊசிபோசிய சூழ்செய் மாலையன்***
***பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்” (அகம்:18)***

என்று உயர்த்திக் கூறுதல்.

வேட்கை உணர்த்தல்:

தலைவனிடத்துத் தலைவிக்குள்ள வேட்கையும் தலைவியிடத்துத் தலைவன் கொண்ட வேட்கையையும் கூறுதல்.

***“நின் மகன் உண்கண் பன்மா ணோக்கிச் சென்றோன்”***

என்பது தலைவன் வேட்கையுரைப்பதாகும்.

***“அன்னாய் வாழிவேண் டன்னை என்தோழி***
***நனிநா ணுடையாள் எனினும் அஞ்சும்***
***ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்***
***மலர்ந்த மார்பிற் பாயல்***
***தவநனி வெய்ய நோகோ யானே”***

இது தலைவி வேட்கை கூறியது.

**கூறுதல்:** தலைவியைத் தலைவற்கு மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்பது படக்கூறுதல்.

**உசாவுதல்:** வெறியாட்டு கழங்கும் நடைபெறும் போது வேலன் அல்லது பிறரிடத்து தோழி உரையாடுதல்.

***"முருகயர்ந்து வந்து முதுவாய் வேல***
***---------- ------------------ ----------------------***
***விண்டோர் மாமலைச் சிலம்பன்***
***தண்டா ரகலமும் உண்ணுமோ பலியே"***

என்று வேலனிடம் தோழி உசாவுகின்றாள்.

ஏதீடு தலைப்பாடு: யாதானுமோர் காரணத்தை முன்னிட்டுத் தலைவி தலைவனோடு உடன்பட்டாள் எனல்.

***"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவென்"***

தலைவன் தாங்கள் நீர்விளையாடலின் போது வந்து உதவினான் எனல். உண்மை செப்பும்.

**கிளவி:** உள்ளதை உள்ளபடியே கூறுவது.

***"--------------- ----------------- ----------வியன்மார்பு***
***முயங்காது கழிந்த நாள்இவள்***
***மயங்கிதழ் மழைக்கண் கலுழும் கண்ணாய்"***

என்பன போன்று கூறுவது.

### குறுவினாக்கள்:

1. களவு என்பதற்கு இளம்பூரணர் தரும் விளக்கம் யாது?
2. 'மறையோர் தேயத்து மன்றல் எட்டு' – எவை?
3. ஒத்த கிழவனும் கிழத்தியும்-விளக்குக?
4. களவொழுக்கத்தில் ஐயம் யாருக்குரியது? ஏன்?
5. ஐயம் நீக்கும் கருவிகள் யாவை?
6. தலைமகன், தலைமகள் இலக்கணம் அல்லது அப்பண்புகளைச் சுட்டுக?
7. மெய்யுறு புணர்ச்சிக்கு முன்னர் நிகழும் மெய்ப்பாடுகள் எவை?
8. "பாங்கர் நிமித்தம் பன்னிரெண்டென்ப" – விளக்குக?
9. "முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே"- விளக்குக?
10. "பின்னர் நான்கும் பெருந்திணைப் பெறுமே" – விளக்குக?
11. களவொழுக்கத்தின் போது தலைவி கூற்று நிகழ்த்தாமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.
12. "தானே கூறும் காலமும் உளவே" – யார் கூற்று? ஏன்?

13. தோழி அறத்தொடு நிற்கும் முறைகள் எழுதுக.
14. 'மதியுடம்படுதல்' – குறிப்பு வரைக.
15. குறியிட வகைகள் யாவை? விளக்கி எழுதுக.
16. அம்பல், அலர் விளக்குக.

**மூன்று பக்க வினாக்கள்:**

1. இயற்கைப் புணர்ச்சியின் இயல்புகளை விளக்குக
2. களவில் தலைவன் கூற்று நிகழுமிடங்களைத் தொகுத்து எழுதுக.
3. களவொழுக்கத்தில் தோழி செயல்படுமாறு எங்ஙனம்?
4. களவின்போது செவிலி செயல்படும் சூழல்கள் எவை?
5. களவொழுக்கத்தில் தலைவியின் நிலை குறித்து கட்டுரை வரைக.
6. களவியல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

---

## கூறு : 4

## கற்பியல்

கற்பின் இலக்கணம் கூறியமையால் 'கற்பியல்' எனப் பெயர் பெற்றது என்பர் இளம்பூரணர்.

கற்பென்று சொல்லப்படுவது கரணத்தோடு பொருந்தி மனைவியாகக் கொள்ளுவதற்குரிய மரபினையுடைய (தகுதி) தலைவியின் சுற்றத்தார் தலைவியைக் கொடுக்கக் கொள்வதாகும் எனபர் தொல்காப்பியர். கரணம் என்பது வதுவைச் சடங்கு(திருமணச் சடங்கு)

***"கற்பெனப்படுவது கரணமொடு புணரக்***
***கொளற்குரி மரபின் கிழவன், கிழத்தியைக்***
***கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"*** ***(கற்பியல் : 1)***

என்பது தொல்காப்பிய நூற்பா.

வதுவைச் சடங்கு இல்லாமல் திருமணம் நிகழ்தல் இல்லை.

கொளற்குரி மரபின் கிழவன் என்றதனால் ஒத்த குலம் அல்லது உயர்ந்த குலம் சாந்தனவாகத் தலைவி அமைதல் வேண்டும்.

***"கொளற்குரி மரபின் கிளத்தி"*** என்றதனால் ஒத்த குலம் அல்லது இழிந்த குலம் சாந்தவளாகத் தலைவன் அமைதல் வேண்டும்.

கொடைக்கரிய மரபினர் ஆவார் தந்தையும் தன் ஐயமும்(அண்ணன்மார்) மாதுலன் போன்றோர். இவர் இல்லாதவழிச்

சான்றோரும் தெய்வமும் அம்மரபினர் ஆவர். இக்கொடை மூவகைப்படும்.

அவையாவன,

1. களவு வெளிப்பட்ட பின்னர் திருமணம் செய்து கொடுப்பது
2. களவு வெளிப்படா நிலையில் திருமணம் செய்து கொடுப்பது
3. மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப்புணர்ச்சியினால் உரிமை பூண்ட வழிகொடுப்பது ஆகும்.

இவ்வாறு கொடுப்பக் கொள்வது திருமணம் என்றாலும் உடன்போக்கு நிகழ்வில் கொடுப்போர் இல்லாமலும் திருமணம் நிகழும் என்பதை,

***"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே***
***புணர்ந்துடன் போகிய காலையான" (கற்பியல் : 2)***

என்ற நூற்பாவில் உணர்த்துகின்றார். இவ்வாறு நிகழ்ந்தாலும் அதில் ஒழுக்கக் குறைபாடு இல்லை என்பது இளம்பூரணர் கருத்தாகும்.

***"பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு***
***தொல்மூ தாலத்துப் பொதியிற் தோன்றிய***
***வாயா கின்றே தோழி ஆர்கழல்***
***சேயிலை வெள்வேல் விடலையொடு***
***தொகுவளை முன்கை மடந்தை நடப்பே" (குறுந்: 15)***

என்ற பாடலில் தலைவி தலைவனோடு கொண்ட நட்பு "நாலூர்க் கோசர் வாய்மொழி" போல உண்மையாகி விட்டதே என செவிலி நற்றாய்க்கு உடன்போக்கு நிகழ்வின் உ்ண்மையை எடுத்துக் கூறுவதைக் காணலாம்.

இக்காரணமாகிய நிகழ்வு மேற்குலத்தாராகிய அந்தணர், அரசர், வணிகர் எனும் வருணத்தார்க்கே அன்றி கீழோராகிய வேளாண்மாந்தர்க்கும் உரியதாயிற்று.

***"மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்***
***கீழோர்க் காகிய காலமும் உண்டே" (கற்பியல் : 4)***

என்ற நூற்பாவில் உணர்த்துகின்றார்.

அடுத்து வருகின்ற நூற்பாவில் கரணம் தோன்றியதற்கான காரணத்தை எடுத்துரைக்கின்றார். தொல்காப்பியர் அதாவது,

***"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்***
***ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (கற்பியல் : 4)***

என்பதே அந்நூற்பா.

பொய் என்பது செய்ததனை மறைத்தல். வழுவானது செய்ததன்கண் முடிய நில்லாது தப்பி ஒழுகுதல், இத்தகைய குற்றங்கள் நிகழாது தவிர்க்கவே ஐயர் முன்னர் திருமணச் சடங்கு

வழி களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் தலைவியர் கணவன் மனைவியராகி இல்லறம் நடத்தும் உரிமை பெற்றனர் எனலாம்.

இத்துணையும் கூறப்பெறுவது கற்பு பற்றிய இலக்கணமாகும்.

இனி, கற்பில் கூற்று நிகழ்த்துவார் பற்றியும் அவற்றின் இயல்புகள் பற்றியும் கூறுகின்றார்.

தலைமகன் கூற்று:

தலைமகன் கூற்று நிகழ்த்தும் இடங்களாக 33 கூறப்படுகிறது. நெஞ்சுதனை அவிழ்ந்த புணர்ச்சி முதலாக ஏனைய வாயிலோர் எதிரொடு கூடுதல் ஈறாக கூற்றுநிலைகள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளது. (கற்பியல் : 5)

ஐயர் நிகழ்த்திய வதுவைச் சடங்கு முடிந்து இல்லற வாழ்வில் ஈடுபட்ட தலைமகன் தலைமகளிடம் கூற்று நிகழ்த்துகின்றான்.

'நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சி' என்பது தலைவனிடத்து உள்ள பெருமை உரன் மற்றும் தலைவியிடத்து உள்ள அச்சம், நாணம், மடன் காரணமாக இயற்கைப் புணர்ச்சி முதல் திருமணம் நடைந்தேறும் வரையில் கட்டுப்பட்டு நின்ற இருவரது நெஞ்சமும் கட்டுவிடப்பட்டுக் கூடிக் கலந்தபோது தலைமகன் கூற்று நிகழும்.

***"எஞ்சா மகிழ்ச்சி இறந்தவரு பருவம்"*** என்பது குறைதல் இல்லாத மகிழ்ச்சி தலைமகனிடத்து மிகுந்து வருதல் ஆகும்.

தானும் பிறரும் அஞ்சும்படியாகத் தலைவியிடத்து உள்ள கற்பனைத் தனக்கு உரிமையாகப் பெற்ற போதும், நன்னெறியாகிய அறம் பொருள் இன்பங்களினின்றும் வழுவாது தன் குலத்திற்கேற்ற மனைவாழ்க்கை மனைவி நடத்தும் போதும் தலைமகன் கூற்று நிகழும்.

தலைவியை மணந்து உரிமை பெற்ற காலத்து அவளை பெருமையில் நிறுத்தி முன்பு களவுக் காலத்தில் நிகழ்ந்த குற்றங்களை எடுத்துக் கூறுவான் தலைவன் என்பதை

***"நுந்தை நன்னாட்டு வெந்திறல் முருகென***
***நின்னோய்க்கு இயற்றிய வெறுநின் தோழி***
***என்வயின் நோக்கலின் போதும்"***

என்பன போன்ற பாடலடிகளால் அறியலாம்.

அச்சம் தோன்றும் காலத்தில் நமக்குத் துணையாக அமைந்தது என தோழி ஏமுறு கடவுளைப் போற்றும் போது தலைமகன் கூற்று நிகழும்.

தலைவி களவு காலத்தில் ஏற்பட்ட துன்பம் தீர, ஆர்வமுடன் தலைமகனை நெருங்கித் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லும் போது தலைமகன் மகிழ்ந்தது.

***"யாயும் ஞாயும் யாராகியரோ***
***எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்***
***செம்புலப் பெயல்நீர் போல***
***அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே (குறுந் : 40)***

என்பது போல கூற்று நிகழ்த்துவான்.

ஏதாவது உணவினை உண்ணும் போது நீ கை தொட்டால் அது எனக்கு வானோர் அமிழ்தம் போல் உள்ளது. இதற்குக் காரணம் என்ன என்று உணவு உண்கின்ற போதும், தலைவி பூ தொடுக்கும் போதும் தலைவன் கூற்று நிகழும்.

அந்தணர், சான்றோர் மற்றும் குற்றமற்ற பெற்றோர், சுற்றத்தாரிடத்து நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்க முறைகளைக் குறிப்பாகத் தலைமகன் சுட்டிக் காட்டுகின்ற போது கூற்று நிகழும்.

களவுக் காலத்து நாணம் காரணமாகத் தலைமகனைப் பார்க்கவும், நெருங்கவும் அஞ்சிய தலைவி அந்நிலையை எண்ணிப் புலம்பிய இடத்து, தலைமகன் கூற்று நிகழ்த்துவான்.

களவொழுக்கம் காலத்து நிகழ்ந்த ஒழுக்கக் குறை குற்றத்ததை இப்போது வானத்து எழுந்து அழிந்து விடுவதைப் போல எண்ணித் தலைமகளை நெருங்கும் போது கூற்று நிகழும்

இயற்கைப் புணர்ச்சிக் காலத்தில் தலைவியிடம் மனம் வருந்தாதே, அஞ்சாதே என்று கூறிய தலைமகன் இவ்விரண்டினும் மீறித் தவறு செய்து புறப்பெண்டிரிடம் பிரிந்து சென்று மீண்டும் வந்து ஊடல் தீர்க்கின்ற வேளையில் பாணனை நோக்கி,

*'நகுகும் வாராய் பாணி ------------------*

*------------- --------------- ----------------------*

*-------------- --------------- ------------------------*

*முயங்கால் விருப்பொரு குறுகினோம் ஆகப்*

*------------ --------------------- ---------------------*

*------------- -------------------வேறு உணர்ந்து*

*வெரூஉ மான்பிணையின் ஓரீஇ*

*யாரையோ என்று இகழ்ந்து நின் றதுவே' (நற் : 250)*

என்று கூறுகிறான்.

பொறுத்தல் வேண்டும் எனவும், சிறுமை செய்தல் குற்றம் எனக் கூறும்போதும், ஊடல் தீர்க்கும் வாயிலாகிய தோழி, தலைமகனிடம் நீ செய்த குற்றம் என்ன? தலைவியின் வெகுளிக்குக் காரணம் என்ன? என்று வினவும் போது தலைவன் கூற்று நிகழும்.

*"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்*

*எம்மை மறைத்தீரோ என்று"*

*"கோட்டுப் பூச்சூடினும் காயும் ஒருத்தியைக்*

*காட்டிய சூடினீர் என்று"*

என்ற குறட்பாக்களைச் சான்றாகக் கொள்ளலாம்.

புதல்வனைப் பெற்று சில நாட்கள் கழிந்த பின்னர் நெய்யணி அணிந்து நீராடிய தலைவியைக் குறித்த முனிவர் இடத்து அமரரைக் குறித்து செய்கின்ற சிறப்புகளைக் கூறுமிடத்து தலைமகன் கூற்று நிகழும்.

தலைமகன் பரத்தையிடம் பிரிந்தபோது தலைவி ஊடல் கொள்கிறாள். ஊடல் வருத்தம் மிகுதியால் தலையணையை அணைத்துக் கொண்டு படுக்கையில் கிடக்கிறாள். அப்போது தலைமகன் தலைவியின் மென்மையான பாதங்களைப் பிடித்து இரத்தலின் போது கூற்று நிகழும் என்பதை,

***"பயங்கெழு துணையனைப் புல்லிப் புல்லாது***
***உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி***
***அல்கல் முன்னிய நிறையழி பொழுதின்***
***மெல்லென சீறடி புல்லிய இரவினும்"***

என்ற தொல்காப்பிய வரிகள் உணர்த்துகின்றன.

ஊடல் கொண்டவளை அடைவதற்கு ஏதுவாகப் பிறபிற பெண்டிரைக் காட்டித் தலைமகன் ஊடலை உணர்த்தும் போதும், பிரிவு காரணமாக வருந்திய மனையாளையும் காமக் கிழத்தியையும் அவ்வருத்தத்தினின்று நீக்கிய பொழுதினும், நீண்ட நாள் பிரியும் பிரிவை எண்ணி அஞ்சிய துன்பத்தின் போதும், முன்னொருகால் சென்று, மீண்டும் அவ்வழியே போக நினைத்த போதும் பொருளை விடக் காமம் வலிமையானது என்று எண்ணும்போதும், பிரிந்த காலத்து மனைவியின் உயிர் போய்விடுமோ என்று அஞ்சுகின்ற போதிலும், தலைவன் தலைவியிடத்து "உன்னை ஒரு போதும் பிரியேன்" என்று முன்பு சொன்ன வாக்கினின்று தவறிப் பிரிய நேரிட்ட போதும் தலைவன் கூற்று நிகழும்.

தலைவி தானும் உடன்வருவேன் என்று கூறிய போது,

***"எவ்வளை எம்மொடு நீவரின் யாழநின்***
***மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை***
***அல்லிசேர் ஆயிதழ் அரக்குத் தோய்ந் தலைபோலக்***
***கல்லுறின் அவ்வடி குறுக்கு அல்லவோ" (கலித் : 13)***

என்று தலைவியை ஆறுதல்படுத்தும்போதும் கூற்று நிகழ்த்துவான்.

தலைவியை உடன் அழைத்துச் செல்க என்று தோழி கூறிய இடத்து அது எவ்விதத்திலும் முறையன்று என்று தலைமகன் கூறுவான்.

வேற்றுநாட்டுக்குப் பிரிந்து செல்ல வேண்டியபொழுது போவோமா அல்லது தவிர்வோமாக என்று எண்ணும்போதும் தலைமகன் கூற்று நிகழும்.

பிரிந்து சென்ற தலைமகன் தான் சென்ற நிகழ்ச்சிக் கண் மிக்க சிறப்பு அடைந்த இடத்தும், தான் அடைந்த இன்பத்தினைத் தேர்ப்பாகனிடத்துக் கூறும் போதும், காமக்கித்தியும் மனைவியும் தலைவனிடம் நீவிர் சென்ற அருஞ்சுரத்தில் மிக்க துன்பம் அடைந்தீரோ? என

வினவும் போதும், பெண்டிரல்லாத வாயில்களாவார், எதிர்கொண்ட போதும் தலைமகனின் கூற்று நிகழும் என்று தொகுத்து உரைக்கப்பட்டுள்ளது.

**தலைவி கூற்று நிகழும் இடங்கள்:**

தலைவனது மனநிலையைத் தலைவி நன்கு அறிவாள் ஆதலின்,

***"நின் சொல்லர் நீடுதோன் றினியர்***
***என்றும் என்தோள் பிரிபறி யலரே"   (நற்:1)***

என உயர்த்தி கூறுவாள்.

தலைவனது பண்புகளைத் தோழி கூறியபோது அதற்குத் தலைவியும் உடன்பட்டு அப்பண்புகளை உயர்த்திக் கூறுவாள்.

அதாவது,

***"---------- ------------- ----------- ----------குன்றநாடன்***
***குடியன் குடையன் கூடுநாற் பிரியலன்***
***கெடுநா மொழியலன் அன்பினர் எனநீ***
***வல்லகூறி வாய்வதிற் புணர்ந்தோய்***
***வதுவை நாளினும் இனியனால் எமக்கே   (அகம்:352)***

என்பன போலக் கூறுவாள்.

தனக்கு மனைவி என்ற உரிமையை வழங்கிய தலைவனது அன்பினை

***"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆரள வின்றே சாரற்***
***கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு***
***பெருந்தே விழைக்கும் நாடானொடு நட்பே"   (குறுந் : 3)***

என்று பெருமையுடன் கூறும் போது கூற்று நிகழும்.

தலைவனைப் பிரிந்ததால் வருந்தும் தலைவி காமத்து மிகுதி காரணமாக

***"என்னைக் கொண்டு தன்கண் ஒற்றியும்***
***தன்கைக் கொண்டு என்நுதல் நீவியும்***
***அன்னை போல இனிய கூறியும்***
***கள்வர் போலக் கொடியன் மாதோ***
***------------ ----------- ------------- ------------***
***கோடுயர் பிறங்கல் மலைகிழவோனோ"   (நற் : 28)***

என்று புலம்புவாள்.

தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கே ஏற்பட்ட வழியும் கூற்று நிகழும்.

புதல்வனைப் பெற்று நெய்தேய்த்து நீராடிய தலைவியை அடைய விரும்பும் தலைவனிடத்துத் தன்மனம் புண்படும்படி பிரிந்து சென்ற தன்மையை எடுத்துக் கூறி வருந்தும்போது தலைவி கூற்று நிகழ்த்துவாள்.

***"கரும்புநடு பாத்திக் கதிர்த்த ஆம்பல்***
***கரும்புபசி களையும் பெரும்புனல் ஊர***
***புதல்வனை யீன்றவெம் மேனி***
***முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே" (ஐங் : 65)***

தலைவனிடத்து மிகுந்த அன்பு கொண்டவள் தலைவி. அதன் காரணமாக புதிய பரத்தையின் அழகு காரணமாக அவளை விரும்பிய உள்ளத்தோடு பிரிந்த தலைவனைத் தனது தனிமைத்துயரம் மிகும்படியாகக் காட்டி, தலைவனிடத்துச் சென்ற மனதைச் செல்லவிடாமல் மீட்டு, தலைவன் விரும்பிய பரத்தையை எதிர்பெய்து கொண்டு புணர்ச்சி மறுத்தபோதும் கூற்று நிகழும்.

பரத்ததையரிடம் தங்கி வந்த தலைவனை வணங்கி, நினது பொய்யுரைகளை அவர்களிடமே கூறுக என்று வேண்டிக் கொள்வாள் தலைவி. பரத்தையரிடத்துப் போகாத வேளையிலும் அவனிடத்து ஊடல் கொண்டு,

***"ஆங்கே அவர்வயின் சென்றீ அணிசிதைப்பின்***
***ஈங்கெம் புதல்வனைத் தந்து" (கலித் : 79)***

என்று பரத்தையிடத்திற்கே போ எனக் கூறுவாள் தலைவி.

காமக்கிழத்தி தலைவியின் பிள்ளையை எடுத்துத் தழுவிக்கொண்டு மகிழ்ச்சியோடு தெருவில் விளையாடும் போதும் தலைவி கூற்று நிகழும்.

தலைவியும் காமக்கிழத்தியைப் போலத் தன் மகளோடு விளையாடிய வேளையில் தலைவன் அங்குத் தோன்றித் தனது வரவைத் தலைவி அறியாதபடி அவள் பின்னே நின்று அவளது ஊடலை நீக்க வேண்டிய இடத்து,

***"கள்வர்படர் தந்ததுபோலத் தாம்எம்மை***
***எள்ளுமார் வந்தாரோ ஈங்கு" (கலித் : 81)***

என்பது போலக் கூறுவாள் தலைவி.

***"தந்தையார் ஒப்பார் மக்கள்"*** என்பதனால், தெருவில் விளையாடிய தன் மகனைக் காமக்கிழத்தி நெருங்கித் தழுவ தலைவி புதல்வனை நோக்கி,

***"வீதழ் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு***
***ஈதன்மாட்டு ஒத்தி, பெருமமாற்று ஒவ்வாதி***
***மாதர்மென் நோக்கின் மகளிரை நுந்தைபோல்***
***நோய்கூர் நோக்காய் விடல்" (கலித் : 86)*** என்பாள்.

கொடியரது கொடுமைகள் வருத்தம் செய்கிறது. என்று புணர்ச்சியை விரும்பாது நின்ற தலைவி, பின்பு தலைவனே வாயிலாக வந்தபோது புகழை விரும்பினோர் சொல்லும் பொருட்டுத் தன் தலைவனோடு கொண்டிருந்த வேறுபாட்டுணர்வின் நீங்கி, புணர்ச்சியை விரும்பிய தருணத்தின் கண்ணும் கூற்று நிகழ்த்துவாள்.

தனது கொடுமை ஒழுக்கத்தினைத் தலைவி பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று தன்னடியில் வீழ்ந்து வணங்கும் தலைவனைத் தூக்கி விட்டு, "நீர் செய்கின்ற இச்செயலை எம் தங்கையர்களாகிய பரத்தையர் கண்டால் மிகவும் நன்றாக இருக்கும்" என்று கூறுமிடத்தும் கூற்று நிகழும்.

பரத்தையால் அணியப்பெற்ற நல்ல அணிகலன்களை உடைய தன் புதல்வனைக் கண்டு,

***"சிறுபட்டி ஏதிலார் கை எம்மை எள்ளுபு நீ தொட்ட***
***மோதிரம் யாவோ? ------ ------------ ---------------- ---------***
***------------ ----------- ---------------------- -------------------------***
***தந்தாரயார் எல்லா இது"*** ***(கலித் : 84)***

என்று வினவுகின்ற வழி கூற்று நிகழும்.

தலைவி, தன்னிடத்து உள்ள அன்பு மிகுதியையும், தலைவனிடத்து உள்ள தகுதியற்ற ஒழுக்கக் குறைவையும் முன்னர் அவன் கூறிய சூளுறையுடன் எண்ணிப்பார்த்து கூற்று நிகழ்த்துவாள்.

***"தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்***
***தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி***
***நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்று இனி***
***யார்மேல் விளியுமோ கூறு"*** ***(கலித் : 88)***

என்று தலைவி கூறுவதாக அமைந்துள்ளது.

காமக் கிழத்தியின் நலத்தினைப் பாராட்டித் தன்னை இழித்துக் கூறிக்கொள்ளுமிடத்தில் கூற்று நிகழும்.

தலைவனிடத்து நிகழும் கொடுமை ஒழுக்கங்களில் சிலவற்றையே தோழியிடத்து எடுத்துக் கூறுவாள் தலைவி. அவையாவன குற்றமற்ற சிறப்பினை உடைய கற்பினின்று திரியாமல் தலைவனை வெகுளுதல், உவர்ந்து பாராட்டுதல், அன்பின்றி நீக்கி நிறுத்தல், விரும்பிப் பேணிக்கொள்ளுதல், போன்ற நிலைகளில் கூற்று நிகழும் காய்தல் போன்ற வெகுளுதல் பற்றி:

***"நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்***
***இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்கு***
***அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி***
***புலியது எவனோ அன்பிலங் கடையே"*** ***(குறுந் : 93)***

**உவந்து பாராட்டல் பற்றி:**

***"காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்***

***காணேன் தவறு அல்லவை" (குறுந் : 1286)***

இவையேயன்றி ஊடல் தீர்க்கும் வாயில்களாக பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், பாடினி, விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர் ஆகியோரிடத்தும் தலைவி கூற்று நிகழ்த்துவாள்.

இத்துடன்,

***"புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து***

***இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி***

***அன்புறு தக்க கிளத்தல் தானே"***

***கிழவோன் செய்வினைக்கு அச்சமாகும். (கற்பியல் : 7)***

என்ற நூற்பாவும் தலைவி கூற்றை எடுத்துரைப்பதாகும்.

களவுக்காலத்தில் தலைவனுடன் சேர்ந்து உடன்போக்கில் சென்ற தலைமகள் கற்புக் காலத்தில் வீட்டில் இருந்து, வினைமேற் சென்ற தலைவன் இடைச்சுரத்தில் காணக்கூடிய கருப்பொருள்களையும் அவற்றின் அன்புச் செயல்நிகழ்வுகளையும் எடுத்துக் கூறுதல், தலைவன் தான் மேற்கொண்ட வினையை முடிக்காமல் திரும்பி வந்து விடுவானோ என்ற அச்சத்தின் காரணமாகக் கூறுவதாகும். (ஆண் யானை பெண் யானைக்கு நீருட்டுதல், ஆண்மான் பெண்மானுக்கு நீர் ஊட்டுதல், ஆண் புறா பெண்புறாவிற்குத் தன் சிறகால் நிழல் கொடுத்தல் போன்ற நிகழ்வுகள்)

தோழி உள்ளிட்ட வாயில்களைத் தலைமகளிடத்துத் தூதாக அனுப்புதலும், மேற்குறிப்பிட்ட அச்சம் காரணமாகவே அமையும் என்பதை,

***"தோழி உறுத்த வாயில் புகுப்பினும்***

***ஆவயின் நிகழும் என்மானார் புலவர்"(கற்பியல்: 8)***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

பெறுவதற்குரிய திருமணம் முடிந்த தலைவனைப் பெற்ற பின்பு:

தலைவனைத் தோழி சிறப்பித்துக் கூறுவாள், களவுக் காலத்து இரவுக்குறி, பகற்குறி மற்றும் அல்லல்குறி போன்றவற்றால் ஏற்பட்ட வருத்தம் இப்போது நீங்கினமையை எடுத்துக் கூறுவாள்.

***"வாழி ஆதன் வாழி அவினி***

***வேந்து பகை தணிக யாண்டு பல நந்துக***

***என வேட்டோனே யானை, யாமே***

***மலர்ந்து பொய்கை முகைந்த தாமரைத்***

***தண்துறை ஊரன் வரைக***

***எந்தையும் கொடுக்க என்வேட்டோமே" (ஐங்:6)***

என தலைவன் நலம் கருதித் தெய்வக்கடன் நிகழ்த்தும் போது தோழி கூற்று நிகழும்.

அறம், பொருள் மற்றும் இசை, கூத்து முதலியவற்றால் தலைவன் இல்லத்தினை மறந்து ஒழுகும் ***காலத்து,***

***"---------- ---------------- இவள்***
***நல்லணி நயந்துநீ துறத்தலின்***
***பல்லோர் அறியப் பசுந்தன்று நுதலே"*** ***(ஐங் : 55)***

என்று கூறுவாள்.

தலைவனின் பரத்தமை ஒழுக்கம் காரணமாக வருந்திய தலைவியிடத்து, அவன் அத்தகையவன் அல்லன் என்று கூறித் தலைவியை ஆற்றுவிப்பாள் தோழி.

பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டு வந்த தலைவனை அடைந்து தலைவியை தலையளி செய்யும் கடமையை உணர்த்தி ஊடல் தீர்த்து வைக்க முயலுவாள் தோழி. பரத்தையிடத்துச் செல்லுதல் கூடாது எனப் பணிந்து தலைவனிடம் வேண்டுவாள் தோழி.

***"தண்துறை ஊர! தகுவதோ ஒண்தொடியை***
***பாராய் மனைதுறந்து அச்சேரி செல்வதனை***
***ஊராண்மை யாக்கிக் கொளல்"*** ***(ஐந்திணை எழுபது : 52)***

எனக்கூறி வேண்டுவாள் தலைவியைப் பிரிந்து பரத்தமையார் சேரி சென்று இன்பம் துய்த்தலைக் குற்றம் என்று சுட்டிக் காட்டுவாள் தலைவன் தன் புதல்வனை நினையாது பிரிந்து சென்று வாழும் நிலையிலும், நீ தலைவியிடமிருந்து கவர்ந்து கொண்ட நலத்தினைத் தந்துவிட்டுப் போ என்று கூறுகின்ற நிலையிலும் தோழி கூற்று நிகழும்.

தலைமகன் தனக்குரிய பெருமை, உரன் போன்ற உயரிய பண்புகளைப் பாதுகாத்து வாழாத நிலையினை எண்ணித் தலைவி நாணம் கொண்ட இடத்து,

***"தண்ணந் துறைவன் கொடுமை***
***நம்முள் நாணிக் கரப்பாடும்மே"*** (குறுந்தொகை) என்று கூறுவர்.

தலைவன் கூறிய சூளுரை பொய்த்தது கண்டு சோர்வுற்று வருந்திய இடத்து,

***"எம்அணங் கினவே மகிழ்ந முன்றில்***
***------------- ---------- ------------ -----------***
***நேரிறை முன்கை பற்றிச்***
***சூரர மகளிரொடு உற்ற சூளே"***

என்று கூறுவாள்.

பெரியோரது ஒழுக்கம் பெரிது என்று கூறிய நீ இப்போது பொய்த்துவிட்டாய் என்று சுட்டிக் காட்டும் போதும், ஊடலில் மூழ்கிய தலைவியிடம் சென்று அவ்வூடலை நீக்க முற்படும் போதும், அப்போதும் ஊடல் நீங்காத வழி தலைவன் பக்கம் நின்று,

***"உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது***
***மிக்காற்றல் நீள விடல்" (குறள் : 1302)***

என்பது போல வெகுண்டு கூறும்போதும் கூற்று நிகழும்.

தாம் அரியராக விளங்கும் களவுகாலத்தில் தலைவிக்கு இருந்த பெருமையையும், எளியராக விளங்கும் கற்புக் காலத்தில் தலைவிக்கு இருக்கும் பெருமையின்மையையும் எண்ணித் தலைவி வருந்த தோழி தலைவனிடம்,

***"வேம்பின் பைங்காய்என் தோழி தரினே***
***தேம்பூங் கட்டி என்றனிர் இனியே***
***பாரி பரம்பிற் பனிச்சுவைத் தெண்ணீர்***
***தைஇத் திங்கள் தண்ணிய தரினும்***
***வெய்ய உவர்க்கு மென்றனிர்***
***ஐய அற்றால் அன்பின் பாலே"***

என்று எடுத்துக் கூறுவாள்.

மற்றும் பாணர், கூத்தர், விரலியோர் போன்றோர் வாயில்வேண்டி வர தோழி அதனை மறுத்துக் கூறும்போதும், பல நாட்கள் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வரும்போது,

***"இன்னாது இசைக்கும் அம்பலொடு***
***வாரல் வாழியர் ஐயஎம் தெருவே" (குறுந் : 139)***

என்று கண்ணோட்டமின்றி நீங்கிய போதும், தலைவன் சேய்மைக்கண் பிரியும் போது முற்கூறிய மரபினின்று மாறுபட்டு ஒழுகின்றாய் என்று கூறும்போதும், பிரிந்த தலைவன் வருவான் என்று கூறும்போதும், பருவங்கண்டு கூறும்போதும், நிமித்தம் கண்டு கூறும்போதும், வந்து விட்டான் என்று கூறும்போதும் தோழி கூற்று நிகழும்.

--------------------------------

**காமக்கிழத்தியர் கூற்று**

காமக் கிழத்தியர் என்பார் பின்முறை ஆக்கிய கிழத்தியர் ஆவார். அவர் ஒத்த கிழத்தியர், இழிந்த கிழத்தியர், வரையப்பட்டார் என மூவகைப்படுவர்.

ஒத்த கிழத்தியர்: முன்புள்ள மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னும்
தன் குலத்துள்ளான் ஒருத்தியை வரைதல்

**இழிந்தாராவார்** : அந்தணர்க்கு அரச குலத்திலும், வணிக குலத்திலும்
வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும் அரசர்க்கு ஏனை
இரண்டு குலத்தினும் கொடுக்கப்பட்டாரும் வணிகர்க்கு
வேளாண் குலத்தில் கொடுக்கப்பட்டாரும் ஆவர்.

**வரையப்பட்டார்** : செல்வராயினும் கணிகைக் குலத்துள்ளார்க்கு இற்கிழமை
கொடுத்து வரைந்து கோடல்.

காமக் கிழத்தியர் என்பார் பரத்தையர் என்றும் சுட்டப்படுவர். பரத்தையாவார் யாரெனில் அவர் ஆடலும் பாடலும் வல்லாராகி, அழகும் இளமையும் காட்டி, இன்பமும் பொருளும் விரும்பி ஒருவர் மட்டும் தங்காதார் என்பர்.

காமக்கிழத்தியர் தம் கூத்தினைக் கற்பியல் பத்தாம் நூற்பா தொகுத்துரைக்கிறது. தலைவன் தன்னைத் தழுவி இன்பம் துய்க்கும் நிலை தடைபட்ட இடத்தும், தலைவனின் மனையகத்தோர் செய்த செயலை இகழ்ந்து கூறும் போதும், பல்வேறு சிறுவர்களோடு இணைந்து தலைவனின் புதல்வன் விளையாடுதலைக் கண்டு மகிழ்ந்து கூறும்போதும் கூற்று நிகழும்.

களவொழுக்கத்தின் வழி மணந்துகொண்ட தலைவியோடு தலைவன் மகிழ்ந்திருப்பது கண்டு பெறாது துன்பப்படும்போது காமக்கிழத்தி கூற்று நிகழும்.

தன்னிடத்துத் தலைவன் கொண்ட காதல் சோர்வு காரணமாகவும், ஒப்புரவு என்னும் பெருமைக்குரிய கொள்கை உடைமையாலும், தாய் போல் நின்று தலைவனுக்கு அறிவுரை கூறி மனைவியின் சினம் தணிவித்துத் தலைவனோடு சேர்த்து வைக்க முயலும்போதும் கூற்று நிகழும்.

தலைவன் அனுப்பிய பலவகை ஊடல் தீர்க்கும் வாயில்களை மறுத்தபோதும் இன்னகைப் புதல்வனை தழுவிக்கொண்டு, அணிகலன் பல அணிந்து தலைவனே வந்நதுபோது கூற்று நிகழ்த்துவான்.

தான் மனைவியை ஒத்தவள் ஆதலின் தன் போல்வர் பலர் தலைவனுக்கு இருத்தல் மிகை என்று கூறுவாள்.

ஆறு, குளம், சோலை முதலியவற்றில் தலைவனோடு சேர்ந்து விளையாடலாம் என எண்ணும்போதும் ஆகிய இவ்விடங்களில் எல்லாம் காமக்கிழத்தியர் கூற்று நிகழும்.

## கற்பில் வாயில்கள்

வாயில்களாவார் அகத்திணைத் தலைமக்களால் போற்றப்படுவர். தலைமகனின் பரத்தமை ஒழுக்கம் காரணமாகத் தலைவி ஊடல் கொள்வாள்.

அது அயன்மனைப் பிரிவாகலாம். அயற்சேரிப் பிரிவாகலாம். பிறநகர்ப் போக்கு ஆகலாம். இத்தகைய நிலையில் ஊடல் தீர்க்க முற்படுவரே வாயில்கள் எனப்படுவர். நம்பியகப்பொருள் இவர்களை ஊடலைத் தணிக்கும் வாயில்கள் என்று குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் இவர்களை,

***"கற்பும் காமமும், நற்பால் ஒழுக்கமும்***
***மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்***
***விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்***
***பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்***
***முகம்புதல் முறைமையின் கிழவோற் குரைத்தல்***
***அகம்புதல் மரவின் வாயில்கட்குரிய"*** ***(கற்பியல் : 11)***

என்று சுட்டுகிறார்.

கற்பு முதலாகச் சொல்லப்பட்ட தலைவியின் பல்வேறுபட்ட நற்பண்புகளைத் தலைவனுக்கு முறையாக மற்றும் குறிப்பாக எடுத்துக் கூறுதல் இவர்தம் மரபாகும்.

விருந்து முதலிய வாயில்கள் போலினத் தலைவனது சுற்றத்தாரைப் போல அவனது வீட்டில் சென்று பழகும் இயல்புடையர் ஆதலால் **"அகம்புல் மரபின் வாயில்கள்"** என்று சுட்டப்பட்டனர்.

------------------------------------

**செவிலிக் கூற்று**

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்திலும் தன் குலத்துள்ளார். பின்வருமாறு நல்லவை கூறுதலும் அல்லவை கடிதலும் செவிலிக்குரியது.

முன்புள்ளார் இவ்வாறு செய்து நன்மை பெற்றார். இவ்வாறு செய்து துன்பம் பெற்றார். இவ்வாறு செய்தால் இவ்வாறு பெறுவர் என்பது போலக் கூறுதல், அவை அறம், பொருள். இன்பம் பற்றி நிகழும்.

***"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற***
***சொற்காத்துச் சோர்விலாள் பெண்"   (குறள் :56)***
***"அடிசிற் கிளியாளை அன்புடை யாளைப்***
***படிசொற் பழநாணு வாளை-அடிவருடிப்***
***பின்துஞ்சி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்***
***என்துஞ்சம் கண்கள் எனக்கு"***

இவை நல்லவை கூறல்.

அல்லவை கடிதலாவது,

***"எறியென்று எதிர்நிற்பாள் கூற்றும் சிறுகாலை***
***அட்டில் புகாதாள் அரும்பிணி – அட்டதனை***
***உண்டி உதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்***
***கொண்டானைக் கொல்லும் படை"   (நாலடி : 363)***

இதனை,

***"கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள***
***நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்***
***செவிலிக்குரிய ஆகும் என்ப"   (கற்பியல் : 12)***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

**அறிவர் கூற்று**

அறிவோர் என்போர் தலைமக்களை இடித்துரைத்து நல்வழியில் நிறுத்தும் உரிமை பெற்றுள்ளனர். முக்காலத்து இயல்புகளையும் நன்குணர்ந்து மக்களை நன்றின்பால் உய்க்கும் நல்லறிவும் ஒழுக்கமும் வாய்ந்த சான்றோர் ஆவார்.

***"சொல்லிய கிளவி அறிவார்க்கும் உரிய" (கற்பியல் :13)***

என்றமையால் முன்சொல்லப்பட்ட செவிலிக்குரிய பண்புகள் அறிவார்க்கும் உரியனவாகும்.

***"இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும்***
***கிழவனும் கிழத்தியும் அவர்உரை நிற்றலின்" (கற்பியல் : 14)***

என அறிவர்க்குரிய மரபு உணர்த்தப்பட்டுள்ளது.

**தலைமகன் புலக்குமிடம்**

புலவி அண்மைக் காலத்தது ஊடல் அதனினும் மிக்கது என்பர் இளம்பூரணர்.

கற்புக்காலத்தில் தலைவியின் ஊடல் எல்லை கடப்பினும், களவுக் காலத்தில் குறியிடம் பிழைப்பினும் அது காரணமாகத் தலைவன் புலத்தலும், ஊடலும் கொள்வான் என,

***"உணப்புவரை இறப்பினும் செய்குறி உரிய" (கற்பியல் : 15)***

என்ற நூற்பாவில் உணர்த்துகின்றார்.

***"எவ்வி இழந்த வறுமை யாழ்ப்பாணர்***
***பூவில் வறுத்தலைப் போலப் புல்லென்று***
***இனைமதி வாழிய நெஞ்சே மனைமரத்து***
***எல்லுறு மௌவல் நாறும்***
***பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே" (குறுந் : 19)***

இது ஊடற்கண் தலைவன் கூறியது.

புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்து சொல்லத்தக்க பணிமொழிகளைக் கூறி அப்பணிகளைத் தணிவித்தல் தோழிக்குரிய மரபாகும் என்பதனை,

***"புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்துச்***
***சொல்லத்தகு கிளவி தோழிக்குரிய" (கற்பியல் : 16)*** என்றார்.

தலைவனது பரத்தமை ஒழுக்கத்தை மாற்றல் வேண்டியும், தலைவன் கூறும் கூற்றை உண்மை எனக் கொள்ளும் மடமைக்குணம் தலைவிக்கு உள்ளதாலும் தோழி தலைவனை நோக்கி, **"நீ அன்பிலை, கொடியை"** என்று கூறுவதற்கு உரிமை உடையவள் தோழி ஆவாள்.

***"மகிழச்செய் தேமொழி***
***அவிழ்பனி உறைப்பவும் நல்காது விடுவாய்***
***இமிழ்திரைக் கொண்க கொடியை காண்நீ" (கலித் : 125)***

என்பாள்.

**தலைவிக்குரிய மரபு:**

***"அவன் குறிப்பறிதல் வேண்டியும் கிளவி***
***அகமலி ஊடல் அகற்சிக் கண்ணும்***
***வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே" (கற்பியல் : 18)***
***"யாரிவன் என் கூந்தல் கொள்வான்" (கலித் : 89)***
***"யாரையோ எம்மிர் புகுதருவாய்" (கலித் : 98)***

என்பன போன்று தலைவனைப் பிறன்போலக் கூறுகின்ற இடங்களும் உண்டு.

**தலைமகனுக்குரிய மரபு:**

தலைவனுக்கும் காமம் மிகுந்துவிட்ட இடத்து தலைவியிடம் பணிந்து மொழிகளைக் கூறுதல் தலைவனுக்கு உரியவாகும். தலைவன் வழிபட்டு ஒழுகும் தன்மை தலைமகளுக்கே உரியதாகும்.

***"காமம் கடப்பினுள் பணிந்த கிளவி***
***காணுங் காலைக் கிழவோர்க் குரித்தே***
***வழிபடு கிழமை அவட்கு இயலான்" (கற்பியல் : 19)***

**தலைமகளுக்குரிய இலக்கணம்:**

அருள்தோன்றுவதற்குக் காரணமான அன்பு நிறைந்த சொற்களை வேறோர் பொருள்பட மறைத்துக் கூறுதல் தலைவிக்கு உரியது என்பதனை,

***"அருள் முந்துறுத்த அன்புபொதி கிளவி***
***பொருள்பட மொழிதல் கிழவோட்கு உரித்தே" (கற்பியல் : 20)***

என்ற நூற்பாவில் விளக்குகிறார்.

**ஏனைய மரபுகள்:**

களவிலும் கற்பிலும் அலர் எழும். அலரின் காமத்து மிகுதி தோன்றும். தலைவன் பரத்தையரிடம் பிரிந்து சென்று ஆடல் பாடல் நிகழ்த்தி, ஆறுகுளம் ஆடி வருதலும் காமத்தீ மிகுதியை உணர்த்தும் என்றார்.

**வாயில்கட்குரிய மரபு:**

தலைவி, தலைவனிடம் வெறுப்புக் கொண்டபோதும் தலைவனுடைய கொடுமைகளைத் தலைவிக்குக் கூறுதல் வாயில்களுக்கு கிடையாது. ஆனால் புலந்துள்ள தலைவிக்கு அக்கொடுமைச் சொற்கள் மருந்தாக அமையுமானால் அவ்வாறு கூறுவர். மேலும் முன்னிலைப் புறமொழியாகக் கூறும் சொல் எல்லா வாயில்கட்கும் உரிய, என்பதை,

***"மனைவி முன்னர்க் கையறுகிளவி***
***மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே***
***மனைவி தலைத்தாள் கிழவோன் கொடுமை***
***தம்முள் ஆதல் வாயில்கட்கு இல்லை***
***முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்***
***பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்" (கற்பியல் : 24-26)***

என்ற நூற்பாக்கள் உணர்த்தும்.

### கூத்தர்க்குரிய கூற்று கிளவி

தொல்லவை உரைத்தல்: முன்புள்ளார் இவ்வாறு செய்வர் என எடுத்துக் கூறுதல்.

**நுகர்ச்சி ஏத்தல்:** நுகர்ச்சி இவ்வாறு இனியது எனப் புகழ்தல்

பல்லாற்றானும் ஊடலில் தகைத்தல்:

ஊடலால் ஏற்படும் துன்பங்களையும், குற்றங்களையும் கூறுதல்

**உறுதி காட்டல்:** ஊடல் தணிதலால் ஏற்படும் பயன்களைக் கூறுதல்

**அறிவு மெய்நிறுத்தல்:** இது தக்கதன்று என அறிவுரை கூறுதல்

ஏதுவின் உரைத்தல்: இவ்வாறு செய்தால் இவ்வாறு குற்றம் பிறக்கும் எனக் காரணம் காட்டல்

**துணியக் காட்டல்:** தலைவி துணியுமாறு காரணம் காட்டுதல்.

**அணிநிலை உரைத்தல்:** சிறந்த அழகினைப் புலர, வாட விடுதலால் பயன் என்ன எனக்கூறல்.

ஆகிய எட்டு இடங்களிலும் கூத்தர்க்கு கூற்று நிகழும் (கற்பியல் : 27)

### பாணர்க்குரிய கிளவி:

தலைவன் பிரிந்து சென்ற இடத்துச் சென்று கூறுதல் மற்றும் தலைவியரது நிலையை எடுத்துக் கூறல் பாணர்க்குரியதாகும். (கற்பியல் : 28)

### இளையோர்க்குரிய கிளவி:

இளையோர்க்கு உரிய கூற்றுகள் ஏழு ஆகும். இளையர் என்பர் எப்போதும் தலைவனுடன் இருப்பவர்.

செல்லும் காலம் தண்ணியது, வெய்யாத என்றும் செல்லும் இடம் அண்மையது, சேய்மையது என்று கூறல்.

செயலால் ஏற்படும் விளைவு கூறல், தலைமக்கள் ஏவியவற்றை முடித்துக் காட்டல். தலைவன் ஏவலைக் கேட்டல், தலைவன் வினவாத போதும் தலைவிக்கு வேண்டியவற்றைத் தலைவனிடம் கூறுதல், செல்லும் வழியில் கண்டவற்றைக் கூறுதல், ஊறு செய்வோரை விலக்கிக் கூறுதல், எடுத்துக் கூறுதல் போன்றன இளையோர்க்குரியன ஆகும்.

இத்தகைய இளையோர்க்கு அருகில் இருந்து குற்றேவல் செய்தல், மெய்க்காவல் செய்தல், உயர்ந்தோர்க்குப் பணிசெய்தலும் உரியன ஆகும். (கற்பியல் : 29,30)

**பார்ப்பார்க்குரிய கிளவி:**

தனியாக நீ பிரிந்து செல்வையாயின் இவளது காமம் மிகும் என உரைத்தல்

தெளியுமாறு காரணம் காட்டிக் கூறுதல்,

தலைவன் குறிப்பினைத் தலைவிக்கு விளங்கக் கூறுதல்.

ஆவினிடம் (பசு) நிகழும் நிகழ்ச்சிகளை நிமித்தமாகக் கொண்டு நன்மை, தீமை எடுத்து மொழிதல்.

தலைமகள் போய்விட்டாள் என்று கூறுதல்,

செல்லாது இங்குத் தங்குதல் வேண்டுமெனக் கூறுதல் ஆகிய இவையே பார்ப்பார்க்குரிய கிளவியாகும்.

## கற்பியல் உணர்த்தும் மரபுகள்:

### தலைமகனுக்குரிய மரபுகள்:

தான் இரண்டாம் முறையாக மணந்துகொண்ட காமக்கிழத்தியைத் தொன்முறை மனைவியாகிய முதல் மனைவி எதிர்பாராத வகையில் எதிர்பட்ட இடத்தும், அணிகலன்கள் அணியப்பெற்ற தன் புதல்வனை வாயிலாகக் கொண்டு புகுந்த இடத்தும் தலைவன் கடந்த கால நிகழ்வை எண்ணி மனம் கலங்குவான்.

தலைவன் ஏதுவாகத் தலைவி வருத்தமுறும் போதெல்லாம் அவளை ஆற்றியிருக்கும் காரணம் காட்டி வற்புறுத்தியல்லது அவளைச் சேறல் இல்லை.

தலைவன் பொருள் காரணமாகப் பிரியும் காலத்து, சிறிய தாமதித்து இருத்தல் போதலைத் தவிர்ப்பதற்கு அன்று. தலைவியை ஆற்றுவித்துப் பின்பு பிரிந்து செல்வதற்கே ஆகும்.

தலைவன் போர்வினையில் முனைந்து நிற்கும் வேளையில் தலைவியின் நினைவு எழாது. எனவே தலைவியை நினைவுகூர்ந்ததாகக் கூற மாட்டான். வினைமுடிந்து வெற்றிபெற்ற காலத்து மட்டுமே தலைவியை எண்ணுவான்.

தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து பரத்தையிடத்துத்தங்கினாலும் தலைவிக்குப் பூப்பு நிகழ்ந்து மூன்று நாட்கள் கழிந்த பின்பு பனிரெண்டு நாட்களும் தலைவியை நீங்காது உறைவான். தலைவனது பிரிவு பற்றிய மரபுகள்:

***"வேண்டிய கல்வி ஆண்டு மூன்று இறவாது"*** ***(கற்பு : 44)***

என்றதனால் விரும்பப்பட்ட கல்விக்காக பிரியும் காலம் மூன்று ஆண்டினை மிகுதல் கூடாது என்றாவாம்.

***"வேந்துறு தொழிலே ஆண்டினது அகமே" (கற்பியல் : 48)***

என்றதானால் பகைதணிவு, தூது, காவல் காரணமாகப் பிரிதற்குரிய காலம் ஓராண்டிற்கு உட்பட்டதாம் எனத் தெளிகிறது.

ஒழிந்த பொருள்வயின் பிரியும் காலமும் ஓராண்டிற்கு உட்பட்டதேயாகும் என்பதை,

***"ஏனைப் பிரிவும் அவ்வயின நிலையும்"*** ***(கற்பியல் : 48)***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

**தலைவிக்குரிய மரபு:**

தலைவன் பரத்தையிடமிருந்து வந்து ஊடல் தீர்ப்பதற்காகத் தலைவியிடம் இரந்தும், காரணத்தைத் தெளிவு செய்தும் நிற்பான். இவ்விரண்டிடத்தும் அல்லது ஏனைய இடங்களிலும் தலைவன் முன்பு தலைவி தன்னைப் புகழ்ந்து கூறும் உரிமை இல்லை. இதனை

***"தற்புகழ் கிளவி கிழவன்முன் கிளத்தல்***
***எத்திறத் தானும் கிழத்திற்கு இல்லை***
***முற்பட வகுத்த இரண்டலங் கடையே"        (கற்பியல் : 39)***

என்று உணர்த்தினார்.

ஆயின் தலைவன் வினைகாரணமாகப் பிரிந்து செல்லும்போது தன்னைப் புகழ்ந்து கூறும் கூற்று உண்டு என்பதை,

***"கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி***
***எத்திறத் தானும் கிழத்திற்கு இல்லை***
***முற்பட வகுத்த இரண்டலங் கடையே"        (கற்பியல் : 39)***

என்று உணர்த்தினார்.

ஆயின் தலைவன் வினைகாரணமாகப் பிரிந்து செல்லும்போது தன்னைப் புகழ்ந்து கூறும் கூற்று உண்டு என்பதை,

***"கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி***
***கிழவோன் வினைவயின் உரிய என்ப"        (கற்பியல் : 40)***

என்ற நூற்பாவில் உணர்த்துகிறார்.

***"இல்என இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு***
***இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லையாம் புகழ்"***

என்பன போன்று வருவன.

**பாங்கர்க்குரிய மரபு:**

தலைவன் கூறுவதற்கு உடன்படாது மறுத்துக் கூறும் உரிமை பாங்கற்கு உண்டு. ஆனால் அது அருகியே தோன்றும் என்பதை கற்பியல் 41,42 ஆகிய நூற்பாக்கள் எடுத்துக் கூறுகின்றன.

**தலைமகட்குரிய மரபு:**

***"காமம் சான்ற கடைக்கோட் காலை***
***ஏமம் சான்ற மக்களொடு துவன்றி***
***அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்***
***சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"        (கற்பியல் : 40)***

என்ற நூற்பா தலைவன், தலைவி ஆகிய இருவரும் இன்பம் நுகர்ந்து முடிந்த முதுமைக் காலத்தில், மீண்டும் அச்சிற்றின்பத்தையே விரும்பாது, பாதுகாவல் அமைந்த மக்கள் மற்றும்

அறம் செய்கின்ற சுற்றத்தினருடன் கூடி, பேரின்பத்தை அளிக்க வல்ல வீடுபேற்றிற்கான துறவறத்தை விரும்புதலே இப்பிறப்பின் பயனாகும் என்று எடுத்துரைக்கின்றது.

மேற்கூறிய நிலையில் அமையும் கற்பு வாழ்வின் கண் தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையோர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் என்று சொல்லப்பட்ட பன்னிருவருள் வாயில்களாவார். (கற்பியல் : 52)

முடிவாக, வினை காரணமாக பிரிந்து சென்று மீண்டு வரும் தலைவன் இடைச்சுரத்தில் தங்குவதில்லை. உள்ளம் நிறைந்த ஒன்றை விரைந்து முடிப்பது போல, புரவிகள் பூட்டிய தேரினை விரைந்து செலுத்தி வருவான் என்று கற்பியல் 53-ம் நூற்பா கூறுகிறது.

**வினாக்கள்:**

1. கற்பு என்றால் என்ன என்பதை விளக்குக.
2. கரணம் பொருள் விளக்குக.
1. காமக்கிழத்தியர் என்பார் யார்?
2. வாயில்கள் கூற்று நிகழ்த்தும் இயல்பு யாது?
3. ‘சொல்லிய கிளவி அறிவார்க்கும் உரிய’ – விளக்குக.
4. தலைமகன் புலக்குஇடம் யாது?
5. ‘வழிபடு கிழமை’ – குறிப்பு வரைக.
6. கூத்தர்குரிய திறம் யாது?
7. இளையோர் கூற்று பற்றி விளக்குக.
8. தலைமகனுக்குரிய மரபுகள் யாவை?
9. தலைவிக்குரிய மரபுகள் யாவை?

**கட்டுரை வினாக்கள்:**

1. கற்பியல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
2. கற்பில் தலைவன் கூற்று நிகழும் இடங்கள் யாவை?
3. கற்பியல் வாழ்வில் தலைவியின் செயல்பாடுகள் யாவை?
4. கற்பியல் வாழ்வில் தோழி பங்கு குறித்து எழுதுக.
5. கற்பியல் வாயில்கள் குறித்து கட்டுரை வரைக.
6. கற்பியல் கூறும் மரபுகளைத் தொகுத்துரைக்க.

## கூறு : 05

## பொருளியல்

**பொருளியல் வைப்பு முறை:**

பொருளதிகாரத்தில் ஐந்தாவது இயலாக அமைந்துள்ளது பொருளியல் ஆகும். அகம், புறம், களவு, கற்பு என்ற இயல்களுக்குப் பின்னரும் மெய்ப்பாடு, உவமம், செய்யுளியல், மரபியல், என்ற இயல்களுக்கு முன்னரும் இவ்வியல் இடம் பெறுகிறது.

பொருளியல் என்பது பொருளின் இயல்பை உணர்த்துவது என்றாலும் மேற்சொல்லப்பட்ட இயல்களில் இனி சொல்லப்போகும் இயல்களிலும் வரும் பொருளினது இயல்பை உணர்த்துகின்றது என்றே பொருள் கொள்ள வேண்டும். இது கூறியது கூறல் என்றும் குற்றத்தின் பாற்படுமே என்ற ஐயம் எழலாம். கூர்ந்து நோக்கினால் அவ்வியல்களில் கூறாத விடப்பட்ட எஞ்சி நின்ற பொருளின் தன்மைகளையே இவ்வியலில் தொல்காப்பியர் கூறுகின்றார் எனலாம். எனவே ஒருசில உரையாசிரியர்கள் இதனை “ஒழிபியல்” என்று குறிப்பிடுகின்றார்.

பொருளியல் தரும் செய்திகளை இனிக் காண்போம்.

தொடர்மொழிகளில் பொருள் இயைபு:

செய்யுளில் இசை திரிந்தாலும் பொருள் இயைபு திரியாது. எனவே சொற்களுக்கு உறுப்பாகிய அசை திரியாது என்னும் கருத்தினை,

***“இசை திரிந்து இசைப்பினும் இயையுமன் பொருளே***
***அசை திரிந்த இசையா என்மனார் புலவர்” (பொருளியல் : 1)***

என்ற நூற்பா கூறுகிறது.

***“கார்விரிக் கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்***
***தாரன் மலையன் ததைந்த கண்ணியன்***
***மார்பின் அ.்.தே மையில் நுண்ஞாண்***
***நுதலது இமையா நாட்டம் இகலட்டுக்***
***கையது கணிச்சியொடு மழுவே மூவாய்***
***வேலும் உண்டுஅத் தோலா தோற்கா***
***ஊர்ந்து ஏறே சேர்ந்தோர் உமையே” (அகம் : கடவுள் வாழ்த்து)***

என்ற பாடலில் கொன்றை மலரால் அமைந்த தாரினனாய், மாலையனாய், கண்ணியனாய், நுண்ஞாண் மார்பினனாய், இமையா நாட்டத்து நுதலினனாய், கணிச்சி, மழு, வேல் ஏந்திய கையினனாய் ஏறு ஊர்பனராய், உமையைச் சேர்ந்தவனாய் உள்ள இறைவனைத்

தொழுகின்றோம் என்று பொருள் கொள்ளுமிடத்து அசைகள் முன்பின் மாறுபடாமல் தொடர்கள் இயைந்து பொருள் தருதலைக் காணலாம்.

**காமம் சார்பாக நிகழும் கூற்று வகைகள்:**

துன்பமும் இன்பமும் ஆகிய இருவகை நிலங்களை உடைய காமம் தோன்றியபோது நகை முதலாகிய எட்டுவகை மெய்ப்பாடுகள் இணைய தனது நெஞ்சத்தை நோக்கிய உறுப்புடையது போலவும், உணர்வுடையது போலவும், மறுத்துரைப்பது போலவும், கூற்று நிகழ்த்துவர். இந்நிலையில் சொல்வதே இயல்பினையுடைய புள், மரம், மா, கடல், காணல் முதலியவற்றை செய்வதாகப் பாவித்து கூற்று நிகழ்த்தி, அவையும் தம் உள்ளம் அடங்கியிருப்பது போல அடங்கியிருப்பதாகக் கூறுவதும் உண்டு.

எ-டு: ***"பாய்திரை பாடுஓவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்***
***தூவறத் துறந்தனன் துறைவன் -----------------***
***--------------------------------------- எம்போலக்***
***காதல் செய்து அகன்றாரை உடைமையோநீ"*** *(கலி : 129)*

என்று அலைகளிடம் தலைவி கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளமையைக் காணலாம்.

அதுவேயன்றி, அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி உவமைப்பொருளும், உவமிக்கப்படும் பெயரும் பண்பு, தொழில், பயன் என்ற மூவகைப்பட்ட பொருட்களும் உரியதாக உவமை கூறிக் கூற்று நிகழ்த்துதலும் உண்டு.

***"கனவும் உரித்தால். அவ்விடத் தான்"*** *(பொருளியல் : 3)*

என்றமையால் காமம் இடையீடுபட்ட இடத்து கனவு காண்டலும் உண்டு என்றார்.

***"கேட்டிசின் வாழி தோழி அல்கல்***
***பொய்வலாளன் மெய்யுறல் மரீஇய***
***வாய்த்தகு பொய்க்கனா மருட்ட ஏற்றெழுத்து***
***அமளி தைவந்த தனனே"*** *(குறுந் : 3)*

என்ற பாடலைச் சான்றாகக் கொள்ளலாம்.

தன் மகள் உடன்போக்கில் சென்றுவிட்டாள் என்று பேசப்பட்ட காலத்தில் நற்றாய் கனவு காணல் உண்டு.

**நால்வர்க்கும் உரிய கூற்று:**

நட்பு கொண்டு பழகும் இயல்புடைய உயர்திணை மக்கள் அல்லாத அ.்.றிணைப் பொருள்கள் இடத்தும் அன்பின் தன்மை பொருந்திய பால்கெழு கிளவி அல்லது ஒரு கூற்றுச் சொற்கள் தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய நால்வரிடத்தும் தோன்றும்.

***"தருமணல் கிடந்த பாலைஎன்***
***அருமகனே என முயங்கினள் அழுமே"*** *(அகம் :165)*

நற்றாய் மணற்பாவையை தன் மகளாகக் கொண்டு அழுதல் காட்டப்பட்டது.

**நால்வர்தம் இயல்பு:**

உயிரும் நாணும் மடப்பமும் என்று சொல்லப்பட்ட பண்புகள் குற்றம் தீர்ந்த சிறப்பினை உடைய மேற்கூறிய நால்வர்க்கும் உரியவை ஆகும்.

தலைவிக்குரிய கூற்றின் பொருண்மை:

தலைவனது பிரிவால் நிறம் வேறுபட்டுப் புலம்பி வருத்தமடைகின்ற தலைவி தலைவனது பிரிவைத் தனது உறுப்புகள் முன்பே உணர்ந்தவை போலக் கூற்று நிகழ்த்துவாள் என்பதை,

***"வண்ணம் திரிந்து புலம்புங்காலை***
***உணர்ந்தது போல உறுப்பனைக் கிழவி***
***புணர்ந்த வகையால் புணர்க்கவும் பெறுமே" (பொருளியல் : 7)***

என்று உணர்த்தினார் (எ.டு)

***"தணந்தமை சால அறிவிப்ப போலும்***
***மணந்தநாள் வீங்கிய தோள்" (குறள் : 1033)***

இவ்வாறு உடம்பும் உயிரும் வாடிய காலத்தும் இவை என்ன காரணத்தால் வாடின என்று தனக்குத் தானே கூறிக்கொள்வாளே அல்லாமல் தலைவன் உள்ள இடத்துச் சென்று அடைதல் தலைவிக்கு இல்லை. ஆயின் தனித்திருந்து தனது நெஞ்சத்தோடு கூற்று நிகழ்த்தும் காலத்து.

***"எழுஇனி வாழிய நெஞ்சே சென்மோ வாழிய தோழி"***

என்று தலைவனைச் சேர்வதாகக் கூறுவதும் உண்டு.

தலைவன் தலைவியிடம் தனது பரத்தமை ஒழுக்கத்தை மறைத்த போதும், அவ்வாறு கூறிய தலைவனை அடைய வேண்டும் என வேட்கை தோன்றிய போதும் என இவ்விரண்டு இடங்கள் அல்லாத இடத்து தலைவி மடனொடு நிற்பது கடனாகும். (பொருளியல் : 10)

## அறத்தொடு நிற்றல்:

தலைவன் தலைவி என்னும் இருவரும் இயற்கைப் புணர்ச்சியாகிய முதல் காட்சியில் ஒருவரை ஒருவர் சந்தித்த முறை தூய அன்பொடு பொருந்திய அறத்தின் பாற்பட்ட நற்செயலே என்பதை அறிவுறுத்தல் களவு வெளிப்படுத்துதலின் கருத்தாகக் கொள்வர். ஆதலால் அங்ஙனம் வெளிப்படுத்தும் முறையே **'அறத்தொடு நிற்றல்'** என்னும் பெயர் பெற்றது.

களவு ஒழுக்கம் கற்பு ஒழுக்கமாக மாறுவதற்கு வழி வகுப்பு அறத்தொடு நிற்றல் ஆகும். 'அறம்' என்பதற்கு 'தகுதி' என்பது பொருள். தலைமகள் தான் தலைவன்மீது கொண்ட தூய அன்பினைத் தன் உயிர்த் தோழிக்கு அறிவித்தலும் தோழி அதனைச் செவிலித்தாய்க்கு அறிவித்தலுமே அறம் அல்லது தகுதி ஆகும். இந்நிலையில் தலைவி தோழியிடம், தோழி செவிலித்தாயிடம், செவிலி நற்றாயிடம், நற்றாய் தந்தை மற்றும் தன் ஐயர் முதலியோரிடம் எடுத்துக் கூறுதலே அறத்தொடு நிற்கும் முறைமை ஆகும்.

இந்நிலையில் தலைவி தன் களவொழுக்க மனநிலையைத் தன் பெற்றோர்க்கு அறிவித்தல் வேண்டும் என்னும் கருத்து கொண்ட காலத்தன்றித் தோழி தானே சென்று அறிவித்தல் முறை அன்று என்பதனை,

***"அறத்தொடு நிற்கும் காலத் தன்றி***
***அறத்தியல் மரபிலள் தோழி என்ப"* *(பொருளியல் : 11)***

என்று உணர்த்துகிறார் தொல்காப்பியர், இதனை,

***"உயர்மலை நாடற்கு உரைத்தல் ஒன்றோ***
***துயர்மருங் கறியா அன்னைக் கிந்நோய்***
***தணியுமா றிதுவென உரைத்தல் ஒன்றோ***
***செய்யா யாதலிற் கொடியை தோழி***
***மணிகெழு நெடுவரை அணிபெற தோழி***
***மணிகெழு நெடுவரை அணிபெற நிவந்த***
***செயலை அந்தளிர் அன்னஎன்***
***மதனின் மாமெய்ப் பசலையும் கண்டே"*** ***(நற்:224***) என்ற பாடல் வழி அறியலாம்.

தோழி அறத்தொடு நிற்றல் ஏழு வகைகளில் அமையலாம் என்பது தொல்காப்பியர் கருத்து. அவையாவன: எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத்தல், கூறுதல், உசாதல், ஏதீடு தலைப்பாடு, உண்மை செப்பும் கிளவி என்பனவாகும். (இவை பற்றிய விளக்கம் களவியல் உரையின் இறுதியில் இடம்பெற்றுள்ளது)

இவ்வாறு தோழி அறத்தொடு நிற்கும் காலத்து, தலைவியின் பெருமைக்கும், செவிலியின் அறிவிற்கும், தனது காவலுக்கும் தலைவனது பெருந்தன்மைக்கும் பழி நேராதவாறு களவொழுக்கம் நிகழ்ந்த முறையினை முரண்பாடில்லாத மொழிகளால் எடுத்துரைத்தல் மரபு என்பார் இறையனார் களவியல் உரையாசிரியர்.

**செவிலிக்குரிய மரபு:**

தலைவிக்கு காமம் மிகுந்தவழி அல்லது சொல் கூற்று நிகழாது. எனவே தலைவியின் உடல் வேறுபாடு கொண்டு செவிலி அதனைக் குறிப்பினால் உணர்ந்து கொள்வாள்.

***"உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்***
***அப்பொருள் வேட்கைக் கிழவியின் உணர்ப"* *(பொருளியல் : 13)***

என்றார். இது நற்றாய்க்கும் பொருந்துவதாகும்.

***"அன்னாய் வாழி வேண்டு அன்னை நின்மகள்***
***பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு***
***நனிபசந் தனள்என வினவதி --------------------"* *(அகம் : 48)***

என்பது போல அறிவாள். எனவே தோழி அறத்தொடு நிற்பதற்கு முன்னரே செவிலி அறிவாள்.

**பெண்டிர்க்கு உரிய இயல்பு:**

அடக்கம், அமைதி, நேர்மை, வற்புறுத்திக் கூறல், தீதொரீஇ நன்பால் உய்க்கும் அறிவு உள்ளக் கருத்து அறிதல் அருமை என்பன பெண்டிர்க்குரிய இயல்புகளாம் என்பதனை,

***"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்***

***அறிவும் அருமையும்பெண்பாலான" (பொருளியல் : 14)***

என்ற நூற்பாவழி அறியலாம்.

------------------------------------

## பொருளியல் காட்டும் சொல், பொருள், மரபு வழுவமைதி

***"உண்டற் குரிய அல்லாப் பொருளை***

***உண்டன போலக் கூறலும் மரபே" (பொருளியல் : 18)***

உண்ணுகின்ற தொழிலைச் செய்ய இயலாத உணர்வற்ற பொருள்களை அத்தொழிலைச் செய்வதற்காகக் கூறுவது அகத்திணை மரபாகும்.

***"பசலையால் உணப்பட்டுப் பண்டைநீ ரொழிந் தக்கால்***

***நீலமுண்ட துகில் எனவும்" (கலித் : 15)***

இயற்பெயர் அல்லாத முறைமைப் பற்றி வரும் பெயரிடத்து பயன்படுகின்ற 'எல்லா' எனும் கெழு தகைப் பொதுச்சொல் ஆண், பெண் இருபாற்கும் உரியதாகி விடும்.

"எல்லா இ.்.தொத்த னென்பெறான் கேட்கைக்காண் (கலி :' 61)

இது பெண்பால் வழி வந்தது.

***"எல்லா தமக்கினி தென்று வலிதிற் பிறர்கின்னா***

***செய்வது நன்றாமோ மற்று"***

இது ஆண்பால் வழி வந்த தலைமகன் கூற்று. இதுவும் காமப் பொருளாக வந்த சொல் வழுவாகும்.

இதுபோன்று 'அன்னை' 'என்னை' என்ற சொற்களும் பொருள் மாறி வழங்கப்பெறும்.

***"ஒரீஇ ஒழுகும் என்னைக்குப்***

***பரியலன் மன்யான் பண்பொரு காலே" (குறுந் : 203)***

தலைமகள் தலைமகனை 'என்னை' என்றாள்.

***"அன்னாய் இவனோர் இளமாணக்கன்" (குறுந்:33)***

இது தலைவியை தோழியைக் குறிக்கிறது.

**பொருள் வழுவமைதி:**

உயர்ந்தோர் கூற்று வழக்கு வழிப்படுதலால் அதுவே சான்றோர் செய்யுட்கும் வழக்கு ஆகும். உலக வழக்கும் நாடக வழக்கும் சேர்ந்ததே புலனெறி வழக்கு அல்லது செய்யுள் வழக்கு. எனவே வழக்கிற்கு மாறுபட்டு வருவன செய்யுளில் இடம்பெறாது.

அறத்திற்கு மாறான செயல்கள் பொருளாகிய பயனைக் குறித்து வந்தால் அதனை உலகியல் வழக்கு என்று சொன்னாலும் அது சான்றோர்களால் பழிக்கப்பட்ட குற்றமே ஆகும்.

பொருள் என்பது அகப்பொருளும் புறப்பொருளும்.

அறத்திற்கு அழிவு வரும். அகப்பொருள் என்பது பிறர்மனைக் கூட்டம் ஆகும்.

***“எனைத்துணைய ராயினம் என்னாம் திணைத்துணையும்***

***தேரான் பிறனில் புகல்” (குறள் : 144)***

புறப்பொருள்பட அறக்கழிவுடையன என்பது பகைவர் நாட்டுள் நிரை கோடலும் அழித்தலும் போல்வன. நண்பர் தேயத்தும் இவை செயல் பொருள் பயப்பினும் வழக்கென வழங்கப்படாது.

***“பழிமலைந் தெய்திய ஆக்கத்தின்சான்றோர்***

***கழிநல் குரவே தலை” (குறள் : 657)***

மிக்க பொருளாகிய அகபொருளின்கண் அறம் முதலாயின் வழு அல்ல ஆயினும் நாணம் அழிய வரும் பொருள்களைப் புணர்க்கக் கூடாது.

***“பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்***

***அறன்நாணத் தக்க துடைத்து” (குறள் : 1018)***

என்பன போன்று வருவன.

எனவே அறம், பொருள், இன்பங்களை எடுத்து உரைக்கும்போது, மக்களது உயர்ந்த பண்பாகிய நாணம் நீங்காத முறையில் அகம் மற்றும் புறப்பொருட்கள் கூறப் பெறுதல் வேண்டும்.

மனையாள் இடத்தும் காமகிழத்தி இடத்தும் நிகழும் புணர்ச்சியும், பிரிவும், ஊடலும் பரத்தையர் இடத்தும் நிகழும்.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தான் மனம் பொருந்தி வரும் விருப்பத்தை உடையது. எனவே மனம் பொருந்தியவழி பரத்தையிடத்தும் இன்பம் உண்டாம். பொருந்தாதவழி மனைவியரிடத்தும் இன்பம் இன்றாம்.

வருத்தம் மிகுதியைக் குறித்தபோது மனைவாழ்க்கையுள் இரக்கம் உரியதாகும். தலைவனது பரத்தையிற் பிரிவு காரணமாகத் தலைவி படும் வருத்தத்தைத் தலைவனுக்கு எடுத்துக் கூறும்போது, தோழி, அறிவர் போன்ற வாயில்களின் உள்ளத்தில் இரக்க உணர்வு தோன்றும் என்பதாம்.

***“செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்***

***வல்வரவு வாழ்வார்க் குரை” (குறள் : 1151)***

என்பது போல் கூறுவது.

பொருள் வழுவமைதி பற்றிய இக்கருத்துக்களை

***“உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்***

***வழக்க வழிப்படுதல் செய்யுட்குக் கடனே”***

*“அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே*
*வழக்கென வழங்கலும் பழித்த தென்ப”*
*“மிக்க பொருளினும் பொருள்வகை புணர்க்க*
*நாணுத் தலைப்பிரியா நல்வழிப் படுத்தே”*
*“ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்*
*வருவகை தாமே வழக்கென மொழிப”*
*“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது*
*தான் அமர்ந்து வரூஉம் மேவற்று ஆகும்”*
*“வருத்த மிகுதி சுட்டுங் காலை*
*உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்”*

என்ற பொருளியல் நூற்பாக்களால் அறியலாம்.

**தலைமகளுக்கு உரியதோர் வழு:**

யாதனும் ஒரு பருவத்தைக் குறித்துத் தலைவன் பிரிந்து செல்ல, அப்பருவம் தோன்றுவதற்கு முன்பே அறியாமை, வருத்தம், மயக்கம் அக்காலத்திற்குரிய பொருள் மிகத் தோன்றுதல் ஆகிய நான்கு காரணங்களால் அக்காலம் கழிந்து விட்டது போலத் தலைவி செயலற்று வருந்துவாள்.

*“பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல*
*திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ*
*வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானம்*
*கருவித்து ஆலிக்கும் போழ்து”* *(கார். நாற்பது : 1)*

என்று பருவம் தோன்றிய போதே ‘‘வாரார்கொல்’’ என வருந்துதல்.

**தோழி கூற்றால் வரும் பயன்: வரைவு கடாதல்**

தலைமகன் தலைவியைக் காண வருகின்ற பொழுது, வரும் வழி, ஊரின் கண் உள்ள காவல் மிகுதி இவற்றைச் சுட்டிக்காட்டி, அவற்றால் வரக்கூடிய துன்பம் மற்றும் இடையூறுகளுக்கு அஞ்சுதலும், அவற்றிற்குக் காரணம் தோழியாகிய தானே எனக் கூறலும், தலைவனை நோக்கி, இரவுக்குறி விலக்கி பகற்குறியில் வா எனலும், பகற்குறி விலக்கி இரவுக்குறியில் வா எனலும், இருபொழுதினும் வராதே எனலும், நன்மை மற்றும் தீமை பயக்கும் நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறலும் இவை போன்ற பிறவற்றைச் சுட்டிக் காட்டலுமாகிய தோழியின் கூற்றுகள் புணர்ச்சி விருப்பம் இன்மையால் கூறப்பட்டவை அல்ல. களவு ஒழுக்கத்தை விட்டுத் தலைவியை விரைவில் மணந்து கொள் என்று உணர்த்துவதற்கே ஆகும். இது வரைவு கடாதல் என்று சுட்டப்படுகின்றது.

*“------------------------------- நாட*
*கோட்டுமா வழங்கும் காட்டக நெறியே”* *(ஐங் : 282)*

இது வழியின் கொடுமை காட்டியது.

***"நீ தவறு உடையையும் அல்லை நின்வயின்***
***ஆனா அரும்படர் செய்த***
***யானே, தோழி தவறு உடையனே"  (அகம் : 72)***

இது தோழி தானே காரணம் எனல்,

தலைவிக்கு வரும் இடையூறினை எடுத்துக்காட்டி,

"***அன்னையும் அறிந்தனர் அலரும் ஆயின்று" (ஐங்: 236)***

என்று,

***"கழிபெருங் காதலர் ஆயினும் சான்றோர்***
***பழியொடு வரூஉம் இன்பம் வெ.்.கார்"  (அகம் : 112)***

என்று நன்மை, தீமை எடுத்து உரைத்தல் காணலாம்.

இவையேயன்றி

***"மாமலை நாட வரைந்தனைக் கொண்மே"  (ஐங் : 289)***

என வெளிப்படையாகக் கூறலும் உண்டு என்பதை,

***"வேட்கை மறுத்துக் கிளந்தாங்கு உரைத்தல்***
***மரீஇய மருங்கின் உரித்தென மொழிப"  (பொருளியல் : 16)***

என்ற நூற்பாவில் கூறியுள்ளார்.

**தலைமகனுக்குரிய இயல்பு:**

களவு ஒழுக்கத்தின் போது தலைமகளைச் சுற்றத்தார் காக்கின்ற காவல் மிகுதியாகின்ற வேளையில் அன்பு, அறம் மற்றும் இன்பத்தை நினைத்து வருந்தாதவனாய், நாணத்தைக் கைவிட்டுத் தமர் கொடுக்குமாறு, தலைவன் முயலவேண்டும். அந்நிலையில் பொருள் காரணமாக நீ பிரிதல் வேண்டும் என்று தோழி உரைப்பாள். அதாவது தலைவனாகிய உன்னிடம் பொருள் இல்லாமையே எமர்(எமது சுற்றத்தார்) வரைவு நேர்மைக்கு காரணம் என்பதைக் குறிப்பால் உணர்த்துவதாகும்.  (பொருளியல் : 19)

அப்போது உடன்போக்குக் கருதிய தலைமகளிடம் தலைவன் தான் போகின்ற வழி கல்லும் காடுமாகிய சுரம் (காட்டுப்பகுதி) என்று கூறுவாள்.

**தலைமகனுக்கு உரியது:**

கற்புக் காலத்து தேர், யானை, குதிரை மற்றும் பிறவற்றில் தலைவன் ஏறி வருவதற்கு உரியர்.

தனியே வருதலும் இளையரோடு சேர்ந்து வருதலும் உண்டு.

**தலைமகளுக்கு உரியது:**

கற்புக் காலத்தில் தலைமகள் உயர்வும் தலைமகன் பணிவும் புலவிக் காலத்தில் உரியது. மேலும் வேட்கை மிகுதியால் புகழ்ந்துரைக்கும் இயல்பு இருவருக்கும் உரியது.

பரத்தையர் தாம் உற்ற துன்பத்தைத் தலைவிக்குக் கூறிய வழியும், அவர்கள் கூறியதை மெய்யென உணர்ந்த வழியும் அவற்றைத் தலைவனிடத்து எடுத்துக்கூறி அறிவுரை வழங்குதல் மகிழ்ச்சியும் புலத்தலும் அல்லாத இடத்து ஆகும்.

அதாவது தலைவன் தன்னை எதிர்ப்பட்டவுடன் கூறாள். கூறினால் தலைவனைக் கூடுவதில் தனக்கு விருப்பம் இல்லை என்பது புலப்படும். எனவே கல்வி மற்றும் புலவியின் இறுதியிலே கூறுவாள்.

*"நின்அணங்கு உற்றவர் நீ செய்யும் கொடுமைகள்*
*என்னுழை வந்து நொந்து உரையாமற் பெறுகற்பின்" (கலி : 77)*

எனப் புலவியில் கூறுதல் காண்க.

**இருவர்க்குமுரிய மரபு:**

*"உயர்மொழிக் கிளவி உறழும் கிளவி*
*ஐயக்கிளவி ஆடுஉ விற் குரித்தே" (பொருளியல் : 42)*

என்பதால் உயர்த்திக் கூறும் சொல் இருவர்க்குமுரியது. ஆனால் ஐயக்கிளவி தலைமகனுக்கு மட்டுமே உரியது.

*"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" (குறள் : 1081)*

என்று தலைவன் ஐயுறுகிறான்.

**தோழிக்குரிய மரபு:**

தலைமகளுக்கு ஏற்பட்ட துன்பம் போக்குதல் தோழிகடன் ஆதலால் அறிவு தோழிக்குரியது ஆகும்.

தலைவன் தலைவியை உயர்த்திக் கூறும் கூற்றும் தோழிக்குரியதாகும்.

*"தாமரைக் கண்ணியை தண்நறுஞ்சாந்தினை*
*நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்*
*மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்*
*அணங்கென அஞ்வர் சிறுகுடி யாரே" (கலி : 52)*

என்று உயர்த்திக் கூறுதல்.

**வாயிட்குரிய மரபு:**

வாயில்கள் தாம் கூறவிரும்புவனவற்றை வெளிப்படையாக கூறவேண்டுமேயன்றிக் குறிப்பினால் கூறார்.

**வழுவமைதி:**

*"தாயத்தின் அடையா ஈயச் செல்லா*
*வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா*
*எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்*
*அல்லா வாயினும் புல்லுவ உளவே" (பொருளியல் : 25)*

தாய முறையால் பெறும் பொருள்(தந்தை பொருள் மகனுக்கு) ஒருவன் கொடுப்ப ஒருவன் கொள்ளும் பொருள், உழவு முதலியவற்றால் வரும் பொருள் பகைவரை வென்றமையால் பெறும் பொருள் என்ற நான்கு முறைகளால் பெறும் பொருள் உரிமை முறை அல்லனவாயினும் பொருள் ஒழுக்கத்தில் பொருந்துவன ஆகும்.

இவை நான்கும் பொருள் உரிமை கொள்ளும் முறைகள் ஆகும்.

களவுக் காலத்துத் தோழிக்குரியதோர் திறன்:

இரந்து நிற்கும் முறையில் தன் மனநிலையை எடுத்துக் கூறும் தலைவனைத் தோழி. தங்களை விட்டு நீக்கி நிறுத்துதல் அன்றி, அவர்கள் உறவினரைத் தான் முன்னமையே அறிவேன் என்று உண்மை கூறலும், அவன் அதனை மறுத்த இடத்தும் அவனைப் பொய்யன என்று கூறலும், நன்மை தரும் சொற்களை விளையாட்டாகக் கூறலும், வேறு பலவகையாலும் புனைந்து உரைத்தலும் உண்டு என்று பொருளியல் 41-ஆம் நூற்பா உணர்த்துகிறது.

***"மடலேறுவன் என்று துணிந்த தலைவனிடம் தோழி***
***வெள்ளாங் குரகின் பிள்ளையும் பலவே***
***அவையினும் பலவே சிறுகருங் காக்கை***
***அவையினும் அவையினம் பலவே குவிமடல்***
***ஓங்குஇரும் பெண்ணை மீமிசை தொடுத்த***
***தூங்கு அணங்கு குரீஇக் கூட்டுவாழ் சினையே"***

என்று, தலைவனைப் பழித்து அருள் உடையார் மடலேறார் என நயந்து கூறி விலக்கியமையால் இது மரபு வழு ஆயிற்று.

----------------------------

**இறைச்சி**

அகப்பொருள் ஒழுகலாற்றில் தலைவன், தலைவி, தோழி போன்றோர் உரையாடுவதற்கான சொல்லமைதிகளையும் அமைத்தற்குரிய பொருள் வகையினையும் பொருளியலில் தொல்காப்பியர் கூறுகின்றார். அவை இறைச்சி, உள்ளுறை, உள்ளுறை உவமம் என மூன்று நிலைகளில் அமைகின்றன. முதற்கண் இறைச்சி பற்றி நோக்குவோம்.

இறைச்சி பொருள் பற்றிய செய்திகளை மூன்று நூற்பாக்களில் தருகின்றார்.

''இறைச்சி தானே உரிப்புறத்ததுவே''

என்பதால் இறைச்சி உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள் என்பது பெறப்படுகிறது. அதாவது கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவது என்பது இளம்பூரணர் கருத்து.

***"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினுள் ஆரள வின்றே சாரல்***
***கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு***
***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந் : 3)***

என்ற பாடலில் நாட்டிற்கும் அடையாகி வந்த குறிஞ்சிப் பூவும் தேனும் இறைச்சிப் பொருளாகும்.

‘‘இறைச்சியில் பிறக்கும் பொருள் மாருனவே

திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே’’

என்பதால் இறைச்சியில் பிறக்கும் பிறிதுமோர் பொருளும் உண்டு என்பது குறிப்பிடப்படுகிறது.

எனவே பிறிதுமோர் பொருள் கொள்ளக் கிடப்பன. கிடவாதன என இறைச்சி பொருள் இருவகைப்படும்.

***‘‘ஒன்றேன் அல்லென ஒன்றுவென் குன்றத்து***

***பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை***

***குறவர் மகளிர் கூந்தல் நாடனொடு***

***ஒன்றேன் தோழி ஒன்றினாளே’’ (குறுந் : 208)***

இது உடன்போதல் குறிப்பினளாய தலைவி தோழியிடம் கூறியது.

இப்பாடலில்,

பொரு களிறு –தமர் வரைவிற்கு உடன்படுவாரும் உடன்படாதவரும்

மிதித்த வேங்கை – தலைவன்

நின்று கொய்ய மலரும் வேங்கையின் நிலை – முன்பு அரியனாகிய தலைவன் இப்போது எளியனாகிய நிலை

எனப் பிறிதுமோர் பொருள் உணர்த்தியது.

தலைவி தலைவனது பிரிவால் ஆற்றாது வருந்திய காலத்து, இறைச்சி பொருள்களுள் தலைவன் அன்பு செய்தற்குத் தகுதியுள்ளவற்றைக் கருதிக் கூறுதல் தலைவனின் அன்பை வற்புறுத்திக் கூறுதல் பொருட்டாம் என்பதனை,

***‘‘அன்புறு நகுவன இறைச்சியிற் சுட்டலும்***

***வன்புறையாரும் வருந்திய பொழுதே’’*** என விளக்கியுள்ளார்.

***‘‘அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்***

***கடியனே கணங்குழாய் காடென்றார்: அக்காட்டுள்***

***தடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்***

***பிடியூட்டிப் பின்உண்ணும் களிறெனவும் உரைத்தனரே’’ (கலித் : 11)***

என்று கூறி தலைவன் இக்காட்சியினைக் கண்டு விரைவில் திரும்ப வருவான் எனத் தோழி உரைப்பதாகும்.

தலைவன் பொருள் காரணமாகப் பிரியும் இடத்து ஆறு(வழி) இன்னாமையால் உளதாகிய அச்சமும், தலைவியைப் பாராட்டுதலும் தனது பிரிவைக் குறிப்பால் உணர்த்துவதாகும்.

கற்பின் வழிப்பட்ட தலைமகள் பரத்தயைப் புகழ்ந்து பாராட்டினாள். ஆயினும் அவளது மனத்தினுள்ளே ஊடல் குறிப்பு நிலைபெற்றிருக்கும்.

மேலும் வேறொருத்தியின் குணம் இத்தன்மையது என்று தலைவி தலைவனிடத்துக் கூறி அதன் வழியாகத் தலைவனது உள்ளக்குறிப்பினை அறிதலும் தலைவிக்குரிய இயல்பாகும் என்று குறிப்பிடுகிறார்.

-------------------------------

**உள்ளுறை**

உவமை இரண்டு வகைப்படும். 1. உள்ளுறை உவமம். 2. ஏனை உவமம்

உள்ளுறை என்பது பிறிது ஒரு பொருள் புலப்படுமாறு நிற்பது. இது கருப்பொருள் பற்றி வரும். ஐந்து வகைப்படும். அவையாவன.

1. உடனுறை 2. உவமம் 3. சுட்டு 4. நகை 5. சிறப்பு என்பன

**1. உடனுறை :**

***"விளையா டாயமொடு வெண்மணல் அழுத்தி***
***மறந்தனம் துறந்த காழ்முறை யகைய***
***நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப***
***நும்மினும் சிறந்த நுவ்வையாகும் மென்று***
***அன்னை கூறினள் புன்னையது சிறப்பே***
***அம்ம நாணுதும்"***

இப்பாடலில் தம்முடன் உறைவதாகிய புன்னையைக் கூறினாள். தான் வளர்த்த புன்னை என்றும் அன்னை பலகாலும் இங்கு வருவாள் என்பதும் குறிப்பினால் உணர்த்தப்பட்டது.

1. உவமம்: உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது.

***"வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்தோர் காவிக்***
***குறைபடுதேன் வேட்டும் குறுகும் நிறைமதுசேர்ந்***
***துண்டாகும் தன்முகத்தே செவ்வி உடையதோர்***
***வண்டா மரைப் பிரிந்த வண்டு"***

எனும் பாடலில் வண்டின் செயலை உவமையாகக் கூறுவது தலைவனின் பரத்தமையைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

2. சுட்டு: ஒரு பொருளைச் சுட்ட அது பிறிதோர் பொருள்படுதல்.

***"தொடி நோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி***
***அ.்.தாண்டவள் செய்து"***

இதில் தலைவி தன் தொடி நோக்கிப் பின் தோளை நோக்கி அதன்பின் தன் பாதங்களை நோக்கினாள் என்று சுட்டுவது. தலைவர் பிரிந்தால் என் தொடி தோள் மெலிதலால் அங்கு நில்லாது. எனவே என் பாதங்களே! நீங்கள் தலைவனுடன் உடன்போக்கில் செல்க என்பதனைக் குறிப்பாச் சொல்வதை எடுத்துரைக்கிறது.

3. நகை: நகையினால் பிறிதொரு பொருள் உணர நிற்றல்:

***"அசையியற் குண்டாண்டோ ரெள்யான் நோக்கப்***

***பசையினள் பைய நகும்" (குறள் : 1098)***

இதில் தலைவியின் நகையினால் (சிரிப்பு) புணர்ச்சி விருப்பம் பற்றிய பிறிதோர் குறிப்புத் தோன்றியமை உணரலாம்.

4. சிறப்பு: இதற்குச் சிறந்தது இது என்று கூறுவதால் பிறிதொரு பொருள் உணர வருவது

***"பனியொரு தளைவிடூஉம் தண்டுரை நல்லூர்"***

இதில் 'தாமரை' என்ற கருப்பொருளுக்குச் சிறப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவையே அன்றி முடிவில்லாததாகிய சிறப்பினால் ஆகிய அகப்பொருள் ஒழுக்கமாகிய இன்பம் அனைத்தும் இத்தகைய உள்ளுறைப் பொருண்மையில் விளங்கித் தோன்றும் என்பதை

***"அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்***

***தன்வயின் வருதலும் வகுத்த பண்பே" (பொருளியல் : 47)***

என்று கூறியுள்ளார்.

இதனை அடுத்த மங்கைமொழி, அவையல் மொழி, மாறிலாண்மையில் சொல்லிய மொழி போன்றனவும் உள்ளுறையின் பாற்படும் என்பதை,

***"மங்கல மொழியும் அவையல் மொழியும்***

***மாறில் ஆண்மையும் சொல்லிய மொழியும்***

***கூறிய மருங்கில் கொள்ளும் என்ப" (பொருளியல் : 48)*** என்று கூறியுள்ளார்.

மங்கலமொழி: அமங்கலச் சொற்களை மங்கலச் சொற்களால் உணர்த்தல். செந்தாமரைத் துஞ்சினார் எனல்.

அவையல் மொழி: அவையில் கூறத்தகாதவற்றை இடக்கர் அடக்கிக் கூறுதல்.

மாறிலாண்மை மொழி: ஒருவனைச் 'சிங்கம் வந்தது' என்று கூறுதல்.

தலைமக்கட்கு ஆகாதன:

***"சினனே பேதை நிம்பிரி நல்குரவு***

***அனைநால் வகையும் சிறப்பொடு வருமே" (பொருளியல் : 49)***

வெகுளி, அறியாமை, பொறாமை, வறுமை இவை நான்கும் தலைமக்கட்ப் பொருந்தாதவை ஆகும். ஆயினும் உயர்ந்த பண்புகளில் ஒன்றினைச் சிறப்பிப்பதற்கு வருமாயின் அது தவறில்லை. சான்றாக,

***"தொடிய எமக்கு நீ யாரை பெரியார்க்கு***

***அடியரோ ஆற்றாதவர் --------------------" (கலித் : 88)***

எனும் பாடல் சினம் பற்றி வரினும் காமக்குறிப்பு மிகுந்த தலைமகள் கூற்றாதலின் ஏற்றுக்கொளற்கு உரித்து.

***“பொய்யாதல் யான்யாங்கு அறிகோ மற்றுஐய’ (கலி : 19)***

இது பிரிவாற்றாமையைச் சிறப்பிக்க வந்தது.

***“மகன் அல்லை மன்றஇனி----------------------“ (கலி : 19)***

நிம்பிரியாகிய வெறுப்பு காரணமாயிற்று.

குறுந்தொகை 265-ம் பாடல் தலைவனின் செல்வக் குறைபாட்டினைக் கூறி, பின்பு தலைவியால் செல்வச் சிறப்புப் பெற்றாள் எனக் கூறுவது நல்குரவு பற்றித் தலைவனைச் சிறப்பிக்க வந்தது.

## காட்டலாகாப் பொருள்:

ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, ஏர், எழில், சாயல், நாண், மடன், நோய், வேட்கை, நுகர்வு இவையெல்லாம் வழங்கும் வழக்கினாலே அதன் பொருளை மனத்தினால் உணரலாமே அன்றி இதனது வடிவம் இதுவெனப் பொறிகளால் பிறருக்குத் தெரியக்காட்ட முடியாதவையாகும்.

**ஒப்பு:** தந்தையை ஒக்கம் மகன் என்பது போல

**உரு:** உட்கு. அதாவது பயிலாத பொருள் கடை. இடத்து வரும் மனநிகழ்வு(அச்சம்)

வெறுப்பு: செறிவு

**கற்பு:** மகளிர்க்கு ஆடவாட மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி

**ஏர்:** தளரின்கண் தோன்றுவது போன்றதோர் பொலிவு உறுப்பின்கண் தோன்றுவது.

**எழில்:** அழகு

**சாயல்:** மென்மை

**நாண்:** பெரியோர் ஒழுக்கத்திற்கு மாறாயின் செய்யாமைக்கு நிகழ்வதோர் நிகழ்ச்சி.

**மடன்:** பெண்டிர்க்குரியதோர் இயல்வ.

**நோய்:** துன்பம். இவன் துன்புற்றான் என்று கூறலாமே அன்றி அது எத்தன்மையது என்று காட்ட இயலாது.

**வேட்கை:** விருப்பம்.

இவையேயன்றி அன்பு, அழுக்காறு, பொறை, அறிவு என்பனவும் கொள்ளலாம். இவையெல்லாம் அகம், புறம் என்ற இரண்டிற்கும் பொதுவானவை.

தேவர்கள் உலகத்திலும் இந்நிலவுலகத்திலும் மேற்குறிப்பிட்ட பொருள்கள் இல்லாக் காலம் இன்மையால் இவையாவும் கண்ணுக்குப் புலனாகின்ற வடிவம் இல்லாதவாயினும் அவை உள்பொருள்களாகவே கொள்ளப்படல் வேண்டும் என்பதனை,

***“இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்***
***அவையில் காலம் இன்மை யான்: (பொருளியல் : 52)***

என்று விளக்கியுள்ளார்.

-----------------------------------

**குறு வினாக்கள்:**

1. பொருளியல் என்ற பெயர்காரணம் கூறுக.
2. தொடர்மொழியின் பொருள் இயைபு எத்தகையது?
3. ‘வரைவு கடாதல்’ – குறிப்பு வரைக.
4. தலைமக்கட்கு தோழிக்குரிய திறன் பற்றி எழுதுக.

**கட்டுரை வினாக்கள்:**

1. பொருளியல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
2. ‘பொருளியல் ஒழிபியல் எனவும் பெயர் பெறும்’ - இக்கூற்றை நிறுவுக.
3. பொருளியல் உணர்த்தும் சொல், மரபு வழுவமைதிகளை விளக்குக
4. உள்ளுறையின் வகைகள் குறித்துத் தொகுத்துரைக்க.
5. பொருளியல் காட்டும் தோழி, செவிலி மற்றும் வாயில்கள் பண்புகளைத் தெளிவு செய்க.

------------------------------------------

**கூறு : 06**

## மெய்ப்பாட்டியல்

தொல்காப்பிய பொருளதிகாரத்தின் ஆறாவது இயல் மெய்ப்பாட்டியல். இவ்வியலில் அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் அவ்வப்போது மக்கள் உள்ளத்தின்கண் நிகழும் பலவகை உணர்வுகள் அவர்தம் உடலுறுப்புகளின் வழியாகப் பலவகையில் வெளிப்படும் தன்மையினைச் சுட்டிக் காட்டியுள்ளார். ''மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடு'' என்பார் இளம்பூரணர்.

தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யுள் உறுப்புகள் 26-இல் மெய்ப்பாடு என்பது ஒன்றாகும். செய்யுள் உறுப்புகளில் ஒன்றாயினும் இதன் சிறப்பினை உணர்த்தவே தனியாக ஓரியலில் விளக்கமாக அமைத்துள்ளார். செய்யுள் உறுப்புகளில் இன்றியமையாதவையாக 26 உறுப்புகள் முதலில் தொகுத்துரைக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாக மெய்ப்பாடு இடம் பெறுகிறது. மேலும் இம்மெய்ப்பாடுகள் செய்யுள் யாப்பிற்கே சிறப்பான பகுதி ஆகும்.

**மெய்ப்பாடு – சொல் விளக்கம்::**

மெய்ப்பாடு என்னும் சொல் மெய் பாடு என்னும் இருசொற்களால் அமைந்த கூட்டுச்சொல் என்பர். மெய் என்பது பொருள் அல்லது உண்மை என்றும் பாடு என்பது வெளிப்படும் தன்மை என்றும் பொருள் தரவல்லது. அதாவத உள்ளத்தில் நிகழும் உணர்ச்சிகளின் உண்மை மற்றவர்க்குப் புலனாகுமாறு வெளிப்படுதல் ஆகும். இதுதவிர மெய்-உடம்பு, பாடு-படுதல், தோன்றுதல் என்று பொருள் கொண்டு உள்ளத்து உணர்ச்சிகள் பிறருக்குப் புலனாகுமாறு உடல் உறுப்புகளில் தோன்றுதலே மெய்ப்பாடு என்றும் கூறுவர். தொல்காப்பியர் மெய்ப்பாட்டின் இயல்பினைச் செய்யுளியலில் சுட்டும்போது,

***"உய்த்து உணர்வின்றித் தலைவரு பொருண்மையின்***
***மெய்ப்பட முடிவது மெய்ப்பாடாகும்" (செய்யுளியல் : 204)***

என்கிறார். அதாவது ***"யாதானும் ஒன்றைக் கூறிய வழி அதன்கண் பொருண்மையை விசாரித்து உணர்தலின்றி அவ்விடத்து வரும் பொருண்மையான மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடு"*** என்னும் உறுப்பாம் என்பர் இளம்பூரணர்.

இதற்குச் சான்றாக,

> ***"ஐயோ எனின்யான் புலிஅஞ் சுவலே***
> ***அணைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்***
> ***என்போல் பெருவிதிர்ப்பு உறுக நின்னை***
> ***இன்னா துற்ற அறன்இல் கூற்றே***
> ***நிரைவளை முன்கை பற்றி***
> ***வரைநிழல் சேர நடத்திசின் சிறிதே" (புறம் : 225)***

என்ற புறப்பாடலைக் காட்டுகின்றார். இப்பாடலில் கணவனை இழந்த அன்புடை மனைவியின் உள்ள உணர்வுகள் வெளிப்படுத்தப் படுதலைக் காண்கிறோம். அதிலும் புலவர் தன் கூற்றாகப் பாடாமல் மனைவியின் கூற்றாகவே இப்பாடலைப் பாடியுள்ளார்.

மெய்ப்பாட்டினைச் சுவை என்ற சொல்லாகவும் கூறலாம் என்பர். ஆழ்ந்து நோக்கும்போது சுவை உணர்ச்சியே விருப்பு, வெறுப்பு முதலியவைகளைத் தந்து கண்ணீர் அரும்பல், மெய் மயிர் என்ற பெயர் பொருந்துவதாயிற்று என்பர்.

இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன அறுசுவைகள் ஆகும். இவை நாக்கு என்னும் உறுப்பு வழியாக ஒருவர் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகள் ஆகும். இவ்வுணர்ச்சிகளைத் தரும் பொருள்கள் முறையே கரும்பு, வேம்பு, புளி, உப்பு, கடுக்காய், மிளகாய் போன்றவை. இவை சுவைப்பொருள்கள் ஆகும். கரும்பினை நாவாகிய பொறியால் சுவை உணரும் இடத்து, இனிப்பு எனும் சுவை உணர்ச்சி தோன்றும். அங்ஙனம் தோன்றும்போது அது காரணமாக விருப்புத் தோன்றும். இங்ஙனமே ஏனைய சுவையும் சுவை பொருட்களும் உணர்ச்சிகள் வெளிப்படும் போது தோன்றும் முகமலர்ச்சி. முகச்சுளிப்பு முதலிய மெய்க்குறிகள் உள்ள நிலையை வெளிப்படுத்தும். இம்மெய்க்குறிகளே விறல் அல்லது சத்துவம் எனப்படும் எனவே சுவையின் இயல்பினை அறிய, சுவைக்கு நிலைக்களனாகிய பொருள் சுவை, குறிப்பு, விறல் என நால்வகைப் பொருள்களை அறிகின்றோம்.

**சுவைகளின் தொகை:**

சுவை என்னும் பெயரினவாக, கண்களாலும் செவிகளாலும் அறியப்பெறும் சுவைகள், மெய்ப்பாடுகள் எட்டாகும். அவை: நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை என்பனவாகும்.

இவை சுவைக்கப்படும் பொருள், சுவை, குறிப்பு, விறல் என்ற நான்கு நிலைகளால் தெளிவுபெற சுவை 8 **x 4 =** 32 ஆகும் என்பர்.

இளம்பூரணர் கருத்துப்படி பேய் அல்லது புலியைக் கண்ட ஒருவனுக்கு அச்சம் ஏற்படுகிறது. மயக்கம், கரத்தல், நடுக்கம் மற்றும் வியர்ப்பு தோன்றுகின்றன. இந்நிலையில் அச்சத்திற்குக் காரணமான புலியும் பேயும் சுவைப்படு பொருள். நீங்காது நின்ற அச்சம். சுவை, மயக்கம், கரத்தல், குறிப்பு நடுக்கம், வியர்ப்பு சத்துவம் ஆகும்.

இவையேயன்றி எட்டுவகை சுவைகள் ஒவ்வொன்றும் நான்கு நிலைக்களங்களைக் கொண்டு தோன்ற சுவை முப்பத்திரெண்டு என்றும் விளக்கம் கூறுவர்.

தொல்காப்பியர் கூறும்போது மெய்ப்பாடு பண்ணை என்பதன் வழியாகத் தோன்றும் அவை 32 பொருளாம். அவற்றால் கருதப்பெறும் பொருட்பகுதி 16ஆக அடங்கும் என்பர்.

இக்கருத்தை,

***"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்***

***கண்ணிய புறனே நானான்கு என்ப' (மெய்ப்பாட்டியல் : 1)***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

இளம்பூரணர் 'பண்ணை' என்பது விளையாட்டு. இது ஆகுபெயராகி ஆயத்தைக் குறிக்கும். இந்த ஆயத்தாரிடைத் தோன்றுவனவாய் எள்ளல் முதல் விளையாட்டு ஈறாக உள்ள 32 பொருட்களின் புறத்தே தோன்றுவன 16 மெய்ப்பாடுகள். அவை சுவை 8: சுவைக்குறிப்பு 8 ஆகும் என்பர்.

இம்மெய்ப்பாடுகள் வடமொழி நூலார் கொள்கைப்படி பாவம், ரஸம் என்ற சொற்களால் குறிப்பிடப்படும். மேலும் அவற்றை ஒன்பதாக வகைப்படுத்தி நவரஸம் என்பர்.

| வடமொழி | தமிழ் |
|---|---|
| 1. சிருங்காரம் | உவகை |
| 2. கருணை | அழுகை |
| 3. வீரம் | பெருமிதம் |
| 4. ரௌத்திரம் | வெகுளி |
| 5. ஹாஸ்யம் | நகை |
| 6. பயானகம் | அச்சம் |
| 7. பீபஸ்தம் | இளிவரல் |
| 8. அற்புதம் | மருட்கை |
| 9. சாந்தம் | நடுநிலை |

பரத முனிவர் சாந்த ரஸம் நீங்கிய எட்டனையுமே தமது நூலில் கூறியுள்ளார்.

**மெய்ப்பாட்டியல் செய்திகள்:**

இவ்வியலில் மெய்ப்பாட்டின் வகை இரு திணைக்கும் பொதுவான மெய்பாடுகள் நடுவண் ஐந்திணையில் களவிற்கு உரியவை கற்பிற்கு உரியவை பெருந்திணைக்குரியவை தலைவன் தலைவிக்குரிய ஒப்புமைப் பாகுப்பாடுகள் தலைமகட்கு ஆகாத குணங்கள் புறனடை என செய்திகளைக் கூறியுள்ளார். இனி அவற்றை விரிவாகக் காண்போம்.

**இருதிணைக்கும் பொதுவானவை:**

இருதிணை என்பது அகமும் புறமும் ஆகும். அவை எட்டு வகைப்படும். இந்த எட்டு மெய்ப்பாடுகளையும்,

***"நகையே அழுகை இளிவரல் மருட்கை***
***அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று***
***அப்பால் எட்டு மெய்ப்பாடு என்ப"***

என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

இனி, இவ்வெட்டினையும் விரிவாகக் காண்போம்.

எள்ளல்
- தான் பிறரை எள்ளி நகுதல்
- பிறரால் எள்ளப்பட்டபோது தான் நகுதல்

பேதமை(அறிவின்மை)
- தன் பேதமையால் நகுதல்
- பிறன் பேதமையால் நகுதல்

இளமை
- தான் இளமையால் பிறரை நகுதல்
- பிறர் இளமை கண்டு தான் நகுதல்

மடமை
- தன் மடமையால் நகுதல்
- பிறர் மடமையால் நகுதல்

**1. நகை:**

நகை என்பது சிரிப்பு. அது முறுவலித்து நகுதல், அளவாகச் சிரித்தல், பெருகச் சிரித்தல் என மூவகைப்படும். செயிற்றியனார் தம் நூலில் முடவர் நடை, மடவோர் பேச்சு, பிதற்றிக் கூறும் பித்தப் பேச்சு என்று பலவற்றை நகை தோன்றுவதற்கான காரணங்களாகக் காட்டுவர்.

ஆனால் தொல்காப்பியர் எள்ளல், இளமை, பேதமை, மடன் என்ற நான்கினையே வகைப்படுத்தியுள்ளார். இவையும்,

என உரையாசிரியர்களால் வகை செய்யப்படுகின்றன. இவற்றுள் பேதமை, மடம் இரண்டும் வேறு வேறு ஆகும்.

***பேதமை கேட்டதனை உய்த்துணராது மெய்யெனக் கொள்ளுதல்***

***மடம் பொருண்மை அறியாது திரியக் கொள்ளுதல்***

**எள்ளல் பற்றி வரும் நகை:**

தலைவி தன்னை இகழ்ந்து கூறினாள் என்று அறிந்த, காதற்பரத்தை, தலைவியுடன் வாழ்வோர் கேட்கும்படி,

***எம்மில் பெருமொழி கூறித் தம்மில்***
***கையும் காலும் தூக்கத் தூக்கும்***
***ஆடிப்பாவை போல***
***மேவன செய்யும்தன் புதல்வன்தாய்க்கே (குறுந் 8)***

என்று தலைவனைக் குறைகூறி இகழ்வதை உணரலாம்.

இளமை பற்றி வரும் நகை:

***"நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்" (அகம்:16)***

இது இளமை காரணமாக நகை தோன்றியது. தீஞ்சொல் என்பது மழலைச் சொல்.

பேதமை பற்றிவரும் நகை:

***"நகையாகின்ற தோழி --------------------***
***மம்மர் நெஞ்சினன் தொழுது நின்றதுவே" (அகம் : 56)***

மடன் பற்றிய வரும் நகை:

***நாம் நகையுடையம் நெஞ்சே நம்மொடு***
***தான் வரும் என்ப தடமென் தோளி (அகம் : 121)***

என்ற அடிகளில் தலைவன் தான் சொல்வதற்கு அரிய கொடிய வழியில் தன்னுடன் வரவு விரும்பும் தலைவியின் எண்ணத்தைத் தோழி வாயிலாக அறிந்து, தலைவியின் மடமை குறித்து தானே எண்ணி நகைக்கின்றான்.

**2. அழுகை:**

அழுகை என்பது அவலம். இது இளிவு. இழவு, அசைவு, வறுமை என நான்கு பற்றித் தோன்றும். இளிவு – பிறரால் இகழப்படுதல், இழவு – உயிராலும், பொருளாலும் இழத்தல், அசைவு – தன்னிலையில் தாழ்தல், வறுமை-நல்குரவு, ஏழ்மை ஆகும்.

**இளிவு:**

கலி : 37ஆம் பாடலில் தலைவன் பலமுறை வந்தும் தான் உற்ற காதல் நோயினை உரைக்க இயலாதவனாகத் திரும்பும் இளிநிலைக் கண்டு தனக்கு அழுகை உணர்வு தோன்றுவதாகத் தலைவி கூறுகின்றாள்.

***“தானுற்ற ------------- ---------------- ------------ -----------***
***நோய் உரைக்கல்லான் பெயருமன் பன்னாளும்***
***--------------- ---------------- ----------------- --------------------***
***சேயேன் மன்யானும் துயதர் உழப்பேன்”***

என வருவதைக் காண்க.

**இழவு:**

புறம் 249 ஆம் பாடல், கணவனை இழந்த மனைவி அவன் நினைவாகப் படையல் செய்யுமிடத்தை மெழுகித் தூய்மை செய்ய எண்ணும்போது, தாரை தாரையாக அவளது கண்கள் சிந்தும் கண்ணீரே நீராயிற்று என்கிறது.

***“மெழுகும் ஆப்பி கண்கலுழ் நீரான்”*** எனும் பாடல் உணர்க.

**அசைவு:**

***“இவ்வழங்கு மடமயில் பிணிக்கும்***
***சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே” (புறம் : 252)***

என்ற பாடலடிகள் இப்போது துறவி போலுள்ள இவன், முன் மயில் போன்ற சாயலுள்ள பெண்களைப் பிணிக்கும் சொல் ஆற்றல் உடையவனாயிருந்தான். இப்போதோ எளிய இலைகளைப் பறித்து உண்ணுபவனாயினான் என்று வருந்துவது.

வறுமை:

புறம் 164 இல் வருகின்ற ***“இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை. சுவைத்தொறூஉம் அழும்தன் மகத்து முகம் நோக்கி”*** எனும் அடிகள் குழந்தை பால் பெறா வண்ணம் தான் அடைந்த வறுமையால் எழும் அழுகையைச் சுட்டுகிறது.

**3. இளிவரல்**

இளிவரல் என்பது இழிபு. அதாவது மானக்குறைவு. இது மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்ற நான்கினை நிலைக்களனாகக் கொண்டு தோன்றும்.

| | | |
|---|---|---|
| மூப்பு | - | முதுமை காரணமாக வரும் தளர்ச்சி |
| பிணி | - | நோய் வருத்தம் |
| இடுக்கண் | - | அல்லல் |
| மென்மை | - | ஆற்றல், பொருள் இன்றி எளியராம் நிலைமை |

**மூப்பு:**

***"தாழாத தளரா தலைநடுங்காத தண்டூன்றா***
***விழா விறக்கும் இவள்மாட்டும் காழிலா***
***மம்மர் கொள்மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்***
***அம்மனைக் கோல் ஆகிய ஞான்று" (நாலடி:1)***

**பிணி:**

***"இமயமும் துளக்கும் பண்பினை***
***துணையிலா அளியர் பெண்டிர் இ.்.து எவனே" (குறுந் : 158)***

**வருத்தம்:**

***"தொடர்ப்படு ஞமலியின் இடர்படுத் திரீஇய***
***கேள்இல் கேளிர் வேளாண் சிறுபதம்***
***மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்***
***தான்இரந் துண்ணும் அளவை***
***ஈனமரோ இவ்வுலகத் தானே" (புறம்:74)***

என்ற பாடலில் சேரமான் கணைக்கால் இரும்பொறை சிறைக்காவலரிடம் தண்ணீர் கேட்டும் உடன்பெறாது காலம் தாழ்த்திப் பெற்ற நிலையில் தன்னிடத்து ஏற்பட்ட இழிவு காரணமாக வருத்தம் பிறந்ததைக் காணலாம்.

**மென்மை:**

***"அறம்சாரா நல்குரவு ஈன்ற தாயானும்***
***பிறன்போல நோக்கப் படும்" (குறள் : 107)***

வறுமைமிக்க மகனைக் கண்டு ஈன்ற தாயும் இழிப்புணர்வு கொள்வாள் என்கிறார் வள்ளுவர்.

**4. மருட்கை**

மருட்கை என்பது வியப்பு. இது புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்னும் காரணங்களால் தோன்றும் என்பார் தொல்காப்பியர்.

**புதுமை:**

எவ்விடத்திலும் எக்காலத்திலும் காணப்படாத ஒரு பொருளைக் கண்டபோது வியத்தல்.

எ-டு பறக்கும் மீன், ஐங்கால், முக்கண், அறுவிரல் போன்றவற்றைக் காணும்போது தோன்றுவது.

**பெருமை:**

இதுவரை காணாத பெரிய பொருளைக் கண்டபோது வியத்தல்.

எ-டு மலை, யானை, செல்வம் இவற்றின் பெரும் அளவு கண்டபோது வியத்தல்

**சிறுமை:**

நுண்ணிய பொருள் கண்டு வியத்தல்

எ-டு: கடுகின் பல துளை காணல்

**ஆக்கம்:**

ஒரு பொருள் தன்னாலின்றி, யாதானுமோர் சார்பால் மிகப் பெரியதாயிருத்தல்.

எ-டு: ஒரு மரம் நிலம் சார்பால் பெரியதாக வளர்தல், வறியவன் பிறர் அறியாவண்ணம் செல்வன் ஆதல், இளையவன் ஒருவன் பெருவீரம் காட்டுதல்.

**புதுமை:**

***"மந்தி நல்லவை மருள்வன நோக்கக்***
***கழைவளர் அடுக்கத் தியலி யாடுமயில்"*** ***(அகம்:82)***

என்ற பாடலடிகளில் மயிலர் எய்திய புதுமை மந்திக்கு மருட்கை விளைத்தமையை உணர்த்துகிறது.

**பெருமை:**

தலைவி தன்னிடம் தலைவன் கொண்டுள்ள பெருகிய நட்பினை

***நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆரள வின்றே"*** ***(குறுந் : 3)***

என்று கூறி மருட்கை அடைகின்றாள்.

**சிறுமை:**

தலைவன் ஒருவன் தலைவியின் இடை(இடுப்பு) சிறுமை கண்டு,

***"இடையிற் சிறியதொன் றில்"***

என வியத்தல்.

**ஆக்கம்:**

சிறிய ஆலம் வித்து, முளைத்து பெருமரம் ஆகி நிற்றலை

***"உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி***
***இறப்ப நிழற்பயந் தாஅங்கு"***

என்று நாலடியார் காட்டுகிறது.

**5. அச்சம்**

அச்சம் என்பது பயம், அச்சம் தோன்றுவதற்குக் காரணங்களாக தெய்வம், விலங்கு, கள்வர் தம் அரசர் நான்கினைத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

தெய்வம் என்பதனை அணங்கு என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

அரசன் அன்று கொல்லும்: தெய்வம் நின்று கொல்லும் என்ற தொடர் தெய்வம், அரசன் என்பவர் பொருட்டு அச்சம் தோன்றும் என்பதை உணர்த்துகிறது.

***"யானை தாக்கினும் அரவுமேற் செலினும்***
***நீள்நிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்"***

என்ற பெரும்பாணாற்று அடிகள் விலங்கினால் ஏற்படும் அச்சம் குறித்து வந்தது.

பாலைக்கலி 3ம் பாடல்,

***"வலிமுன்பின் வல்லென்ன யாக்கை, புலிநோக்கின்***
***சுற்றமை வில்லர் சுரிவாள் பித்தையர்***
***அற்றம் பார்த்து அல்கும் கடுங்கன் மறவா"***

என்று கள்வர்தம் தோற்றத்தை வருணிக்கிறது.

***"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்***
***களைகட்ட தனொடு நேர்"     (குறள்:550)***

என்ற குறள் தண்டனை கொடுக்கும் அதிகாரம் படைத்த இறைவன் அச்சம் தருகின்றவன் என்பதை உணர்த்துகிறது.

6. **பெருமிதம்**

பெருமிதம் என்பது வீரம். இது வெறுப்புக்குரிய செருக்கு அன்று. இம்மெய்ப்பாடு கல்வி, தறுகண், புகழ், கொடை என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும்.

**கல்வி:**

***வல்லார் முன் சொல்வல்லேன் என்னைப் பிறமுன்னர்க்***
***கல்லாமை காட்டி யவள் (கலி : 141)***

என்னும் வரிகள் கல்வி பற்றிய பெருமிதம் சுட்டுகிறது.

**தறுகண்:**

அஞ்சத்தக்கன கண்ட இடத்து அஞ்சாமை. அது உள்ளத்தின் உறுதியாகிய வீரம் அனுமன் முன்னே அகம்பன் என்ற அரக்கன் அஞ்சாது பெருமிதத்துடன் வருவதை,

***"இன்றிவன் தன்னை விண்ணாடு***
***ஏற்றி வாள் இலங்கை வேந்தை***
***வெற்றிய னாக்கி மற்றை***
***மனிதரை வெறிய ராக்கி***
***நின்றுளர் நெடிய துன்பம்***
***அமரர்பால் நிறுப்பன என்னா"***

என்ற பாடலில் அகம்பன் தன் வீரம் பற்றிக் கூறுகிறான்.

**கல்வி:**

***'வல்லார் முன் சொல்வல்லேன் என்னைப் பிறமுன்னர்க்'***

***கல்லாமை காட்டி யவள் (கலித் : 141)***

என்னும் வரிகள் கல்வி பற்றிய பெருமிதம் சுட்டுகிறது.

**தறுகண்:**

அஞ்சத்தக்கன கண்ட இடத்து அஞ்சாமை. அது உள்ளத்தின் உறுதியாகிய வீரம் அனுமன் முன்னே அகம்பன் என்ற அரக்கன் அஞ்சாது பெருமிதத்துடன் வருவதை,

***"இன்றிவன் தன்னை விண்ணாடு***
***ஏற்றிவாள் இலங்கை வேந்தை***
***வெற்றிய னாக்கி மற்றை***
***மனிதரை வெறிய ராக்கி***
***நின்றுவார் நெடிய துன்பம்***
***அமரர்பால் நிறுப்பன என்னா"***

என்ற பாடலில் அகம்பன் தன் வீரம் பற்றிக் கூறுகிறான்.

**இசைமை புகழ்:**

வீமன் திரௌபதியைப் பெற்ற தன் புகழை நினைத்து

***"சோராததிற் கொண்டதில்லை – அண்ணே!***
***சூதிற் படைத்த தில்லை***
***வீரத்தினால் படைத்தோம் வெம்போர்***
***வெற்றியினால் படைத்தோம்"***

என்று கூறுகிறான்.

**கொடை:**

கண்ணன் தனது கொடைபற்றிய பெருமிதத்தால் பின்வருமாறு பேசுகிறான்.

***"செருவில் எனதுயிர் அனைய தோழற்காகச்***
***செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர் கோவுக்கு***
***உரைபெறுநற் கவசமும் குண்டலமும் ஈந்தேன்***
***உற்றபெரு நல்வினைப் பேறுனக்கே தந்தேன்"***

என்று பெருமிதம் தோன்ற பேசுகிறான்.

**7. வெகுளி**

வெகுளி என்பது சினம் அல்லது கோபம். இது உறுப்பறை. குடிக்கோள் அலை, கொலை என்ற அடிப்படைகளில் பிறக்கும் மெய்ப்பாடு.

உறுப்பு அறை - உடல் உறுப்புகளை அறுத்தல்

குடிகோள் - தன் கீழ் வாழ்வாரைத் துன்புறுத்தல்

அலை - வைதல், புடைத்தல் (அடித்தல்)

கொலை - கொல்லுவதற்கு உடன்படல்

ஊடலின் போதும் வெகுளி தோன்றும் எனினும் அது இன்பத்தின் காரணமாக என்பா் இளம்பூரணா்.

***"உறுதுப் பஞ்சா துடல்சினம் செருக்கிச்***
***சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை***
***அருஞ்சமம் ததையத் தாக்கி முரசமொ***
***டொருங்ககப் படேஎ னாயின்" (புறம் : 72)***

என்ற பாடல் வெகுளி காரணமாகக் கூறிய வஞ்சினம் ஆகும்.

**8. உவகை**

உவகை என்பது மகிழ்ச்சி. அது செல்வம், புலன், புணா்வு, விளையாட்டு என்ற நான்கினால் தோன்றும்.

செல்வம் - செல்வ நுகா்ச்சி (அனுபவம்)

புலன் - கண்டு, கேட்டு, உணா்வு, உயிா்த்து உற்று அறியும் ஐம்புலன் இன்ப அனுபவம்.

புணா்வு - மகளிரொடு புணா்தல்

விளையாட்டு - சோலை, ஆறு புகுந்து விளையாடல்

இவ்வுவகையினைச் செயிற்றியம் என்றும் நூல் 'சிருங்காரம்' என்று குறிப்பிடும்.

***"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்***
***அம்மா அரிவை முயக்கு" (குறள்:1107)***

என்ற குறள் செல்வ நுகா்ச்சியைச் சுட்டுகிறது.

இவ்வாறு எண்வகை மெய்ப்பாடுகள் மற்றும் அவை தோன்றும் அடிப்படைகளைக் கூறிய தொல்காப்பியா் அவையே அன்றி இவையும் மெய்ப்பாடுகளே என்று சிலவற்றைச் சுட்டுகின்றாா். அவற்றை இங்குக் காண்போம்.

உடைமை முதலாக நடுக்கம் ஈறாக முப்பத்திரெண்டும் மெய்ப்பாடுகளைத் தொகுத்துரைக்கின்றாா். அவற்றைக் காண்போம்.

இவை அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகள் என்பது உரையாசிரியா்கள் கருத்து. மேலும் உலக வழக்கிலும் நாடக வழக்கிலும் இடம் பெறுபவை ஆகும்.

உடைமை: பொருள் உடைமையால் ஏற்படும் மனமகிழ்ச்சி

***'நெடுதல் யானையும் தேரும் மாவும்***
***படையமை மறவரும் உடையம் யாம' (புறம் : 72)***

படையாகிய செல்வம் பெற்ற மகிழ்ச்சி

இன்புறல்: நண்பராகிப் பிரிந்து வந்தவரைக் கண்டபோது மகிழ்தல்.

நடுவுநிலைமை: ஒருபக்கம் சாராமல் நிகழும் மனநிகழ்ச்சி

*'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்*

*கோடாமை சான்றோர்க் கணி' (குறள் : 118)*

அருள்: எல்லா உயிர்க்கும் இரக்கம் செய்தல்

தன்மை: சாதியியல்பு

பார்ப்பார், அரசர், இடையர், குறவர் என்று இவர்களிடை ஒருவரை ஒருவர் பொருந்தாமல் கிடக்கும் இயல்பு.

*'உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்' (புறம்:315)*

*'மறலி அன்ன களிற்றின் மிசையோனே? (புறம்:13)*

*'மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றாயோர்*

*ஆயன்-----------------' (கலி:108)*

*'தேனோடு நீடு மயல்குற மாக்கள்'*

என்று வருவன காண்க. இவை மெய்க்கடமைகளில் வேறுபட்டு வருதலால் அதுவும் மெய்ப்பாடாயிற்று என்பர் இளம்பூரணர்.

**அடக்கம்:** மனம், மொழி, மெய்யின் அடங்குதல், அது பணிந்த மொழி, தானை சேனை அடக்கல், வாய்புதைத்தல் போன்றன.

*''யாகாவா ராயினும் நாகாக்க'*

*'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்'*

*போன்ற குறட்பாக்கள் உணர்த்துவன.*

*வரைவு: செய்யத்தக்க, தகாதன என வரைந்து ஒழுகும் ஒழுக்கம்.*

**அன்பு:** பழகியவரிடத்துச் சொல்லும் காதல்.

*'புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை*

*அகத்துறுப் பண்பி லவர்க்கு' (குறள்:79)*

**கைம்மிகல்**: குற்றமாயினும் குணமாயினும் அளவில் மிகுதல்.

*'காதல் கைம்மிகல்'*

*'குணனிலனாய்க் குற்றம் பலவாயின்'*

நலிதல்: பிறரை வருத்தி நெருங்குதல்.

பகை நலியப் பாசறையு ளான் மன்னன் செயலைக் குறிப்பிடுதல் காண்க.

**சூழ்ச்சி எண்ணம்:**

*'சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன்*

*சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்' (குறள் : 445)*

**வாழ்த்தல்:**

***"வாழி ஆதன் வாழி" இ "எங்கோ வாழிய"***

என்று வாழ்த்துதல்.

**நாணல்**:

தமக்குப் பழி வருவன செய்யாமை

***'பிறர் பழியும் தம்பழியும் நாணுவார்' (குறள் : 1015)***

**துஞ்சல் : உறக்கம்**

"***நனந்தலை உலகமும் துஞ்சும்" (குறுந் : 6)***

அரற்றுதல் : உறக்கத்தின் போது வரும் வாய்ச்சோர்வு. அதாவது ஒருபொருளைப் பலமுறை கூறுதல்.

**முனிதல்: வெறுத்தல்**

பரத்தையினிடம் சென்றுவிட்டுத் தன்னை எண்ணாது வாழும் தலைவனை எண்ணி வருந்தும் தலைவி.

***'தெறுக அம்மஇத் திணைப்பிறத்தல்' (குறுந் : 45)***

என்று தான் பிறந்த பெண்குலத்தை வெறுத்துக் கூறுதல்

நினைத்தல்: கழிந்ததனை நினைத்தல்

***'நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்***
***சினைப்பது போன்று கெடும்' (குறள்:1203)***

**வெரூஉதல்**: அச்சம் போன்ற நீண்ட நேரம் நில்லாமல் விரைவாகத் தோன்றி மறையும்.

**குறிப்பு:**

***'ஒரூஉ நீ எம்கூந்தல் கொள்ளல் யா நின்னை***
***வெரூஉதுங் காணும் கடை' (கலி : 87)***

தலைவி தலைவனை நோக்கி உன்னைக் கண்டால் வெருவுகின்றோம். ஆதலால் எம்கூந்தலைத் தொடாதே விலகு என்பது போன்ற கூற்று.

**மடி**: சோம்புதல்.

***'முடிமை குடிமைகண் தங்கின் தனஒன்னார்க்***
***கடிமை புகுத்தி விடும்' (குறள் : 608)***

**கருதல்:** குறிப்பு அல்லது குறிக்கோள்

***'குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்***
***சிறக்கணித்தாள் போல நகும்' (குறள் : 1085)***

**ஆராய்ச்சி:** ஒரு பொருளின் தன்மையை ஆராய்தல், தேர்தல் அல்லது நாடல்.

***'நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த***
***தன்மையான் ஆளப் படும்' (குறள் : 511)***

விரைவு: காலம் தாழ்த்தாமல் வினைசெய்து முடித்தல். வீட்டிற்கு விரைந்து செல்ல வேண்டிய நிலையில் இருந்து ஓரவன் கட்டில் பின்னுகின்ற தொழிலை முடிக்கும்போது அவனது கையிலுள்ள ஊசியை விரைந்து செலுத்துதல் இயல்பு. அதுபோன்றது ஒரு வீரனின் போர்த்தொழில் அமைந்தது என்று கூறுகிறது. **'போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ'** என்னும் புறநானூற்று அடிகள்.

உயிர்ப்பு: இயல்பான அளவிலன்றி நெடுமூச்சு விடுதல்

கையாறு: காதலர் பிரிந்தால் ஏற்படும் துன்பமும் அந்நிகரான பிறவும்.

இடுக்கண்: துன்பமுறல் கையாறு என்பது இன்பம் பொறாமையால் வரும் துன்பம். இடுக்கண் என்பது துன்பமாயின வருதல்.

***'அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற***
***இடுக்கண் இடுக்கண் படும்' (குறள் : 625)***

கையாறு: மனத்தில் தோன்றுவது. இடுக்கண் மனத்திலும், மெய்யிலும் வெளிப்படுவது.

பொச்சாப்பு: மறத்தல்

பொறாமை: பிறரது ஆக்கம் அல்லது உயர்வு கண்டு பொறுத்துக் கொள்ளாமை.

***'அழுக்காறு எனவொரு பாவி திருச் செற்றுத***
***தீயுழி உய்த்து விடும்' (குறள் : 168)***

(அழுக்காறு – பொறாமை)

வியர்த்தல்: மனத்தில் சினம் தோன்றியபோது தோன்றுகின்ற புழுக்கம்.

***''பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்***
***துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்'' (குறள் : 487)***

ஐயம்: ஒரு பொருளை இதுவெனத் துணியாத மனநிலையை

"***அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை***
***மாதர்கொல் மாலும்என் நெஞ்சு'' (குறள் : 1081)***

மிகை: ஒருவனை நன்கு மதியாமை

நடுக்கம்: ஏதாவது ஒரு பொருளை இழக்கின்றோம் என்னும்போது உண்டாகும் மனநிகழ்ச்சி: இவை அனைத்தும் அகம், புறம் என்னும் இரண்டிற்கும் உரியவை.

## அகத்திற்கே உரிய மெய்ப்பாடுகள்

தலைவன் தலைவியரை இணைப்பது தெய்வத்தின் அல்லது நல்லூழின் செயல்பாடு என்பது தொல்காப்பியர் கருத்து. அந்நிலையில் அன்பில் சிறந்த இருவரும் எதிர்ப்பட்ட இடத்து, காட்சி தொடங்கி நடைபெறும். நிகழ்வுகள் அனைத்தும் உள்ளத்து உணர்வினை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள் ஆகும். இவை ஒவ்வொன்றும் நான்கு பகுதிகளையுடையதாக ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறுவன.

இந்நிகழ்வுகளை இளம்பூரணர் அவத்தைகள் எனக் கொள்வர். அது களவியல் 9-ஆம் நூற்பாவில் சுட்டப்படுகின்ற 1. வேட்கை, 2. ஒருதலை உள்ளுதல் 3. மெலிதல், 4. ஆக்கம் செப்பல், 5. நாணுவரையிறத்தல் 6. நோக்குவ எல்லாம் அவையே போறல், 7. மறத்தல், 8. மயக்கம், 9. சாக்காடு என்று உணர்த்தபட்டுள்ளது. இவ்வொன்பதினோடு 'காட்சி' என்பதை முதல் நிலையாகக் கொண்டு அவத்தைகள் பத்து என்று வகைசெய்வார்.

இவற்றுள் காட்சி முதல் நாணுவரையிறத்தல் ஈறாக உள்ள ஆறு அவத்தைகள் தலைவன் தலைவியின் கூட்டம் இணைவு நிகழ்வதற்கு முன் பெண்பாலார் அனைவருக்கும் பொதுவானவை. இவை ஒத்த காமம் ஆகிய நடுவண் ஐந்திணைக்கு உரியன. 7வது பெருந்திணைக்குரியது. எட்டாவது உன்மத்தம், ஒன்பதாவது மயக்கம், பத்தாவது சாக்காடு.

இனி ஒவ்வொரு நிலையையும் தொல்காப்பிய வழி நின்று விளக்கமாகக் காண்போம்.

### முதல்நிலை: காட்சி:

இது புதுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல், நகுநயம் மறைத்தல், சிதைவு பிறர்க்கின்மை என்ற நான்கு நிலைகளை உடையது.

காட்சி என்பது தலைவன் தலைவியைக் கண்டவுடன் வரும் ஐயம் மற்றும் துணிவு என்ற இரண்டினையும் உள்ளடக்கியது.

1. புதுமுகம் புரிதல்: தலைமகன் தலைமகளை பெற வேண்டும் என்னும் குறிப்புடன் தலைமகளைக் காணவரும் செயலை அவள் விரும்புதல், தலைவி விரும்பவில்லை எனின் அது நடுவண் ஐந்திணை ஆகாது. தலைவன் தலைவியை நோக்கிய பின்,

***'கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரால்***
***நோக்கம் இம்மூன்றும் உடைத்து' (குறள் : 1085)***

என்று ஐயுற்றுப் பேச, தலைவி அவ்விடம் விட்டு நீங்காமல் அதனை விரும்பி நிற்றல் ஆகும்.

2. பொறிநுதல் வியர்த்தல்: தலைவிக்கு அச்சமும் நாணமும் மேலிட நெற்றி வியர்த்தல். அகம் 736-ஆம் பாடலில் புள்ளி புள்ளியாக அரும்பிய வியர்வையைத் தலைவி தன் புத்தாடையால் எடுப்பாயாக என்று தலைவன் கூறுவதாக அமைகின்றது.

3. நகுநயம் மறைத்தல்: அதன்பிறகு தலைவன் கூறுதைக் கேட்டு நகைப்பு வர, அதனைப் புலப்படுத்தாது மறைத்தல்.

4. சிதைவு பிறர்க்கின்மை: தலைன் காரணமாகத் தனது மனம் நெகிழ்வதைப் பிறர்க்கு வெளிப்படுத்தாது மறைத்தல்.

இவையே முதல் அவத்தைக்குரிய நான்கு நிலைகள்.

**இரண்டாம் நிலை: வேட்கை:**

கூழை விரித்தல். காதொன்று களைதல், ஊழண தைவரல், உடைபெயர்த்து உடுத்தல் என்ற நான்கு நிலைகளை கொண்டது. இந்நான்கு செயல்களையும் காமக்குறிப்பு இல்லாதவர் செய்யார்.

1. கூழை விரித்தல்: நகுநயம் மறைத்த தலைவி, தன் மனம் தலைவன் மேல் செல்ல, அவ்விடம் விட்டு நீங்காது சிறிது நேரம் நிற்பாள். அப்போது தன் மனக்குறிப்பினை உணர்த்த தன் கூந்தலைச் சிதைப்பாள்.

2. காதொன்று களைதல்: காதணி ஒன்றினை விழச் செய்து அதனைத் தேடுபவள் போல நிற்பாள்.

3. ஊழனி தைவரல்: முறைப்படி அணிந்துள்ள அணிகலன்களைச் சரிசெய்தல் தடவிப் பார்த்தல் தொட்டுப்பார்த்தல்.

4. உடைபெயர்த்துடுத்தல் : ஆடையைக் குலைத்து பின்பு சரிசெய்தல்.

**மூன்றாம் நிலை: ஒரு தலையுள்ளல்:**

அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல், இல்வலியுறுத்தல், இருகையும் எடுத்தல், என்ற நான்கு நிலைகளால் வெளிப்படும்.

1. அல்குல் தைவரல்: மேல் உடை பெயர்த்து உடுத்தவள். இடுப்பின்கீழ் வலம், இடமாகிய இருபக்கங்களையும் தடவுதல்.

2. அணிந்தவை திருத்தல்: அணிகலன்களை முறைப்படி மாற்றி அமைப்பதாக நிற்றல்.

3. இல்வலியுறுத்தல்: தம்மைச் சார நினைத்த தலைவனிடம் தனது இறப்பிறப்பினைச் (குடிப்பிறப்பு) சுட்டி, இசைவில்லாதவரைப் போல மறுத்துக் கூறல்.

4. இருகையும் எடுத்தல்: மறுத்துக் கூறினும் தமது இரண்டு கைகளையும் பிறிதோர் காரணம் பற்றி ஒன்றோடொன்று இணைத்துக் கிளர்த்தல்.

(பெண்கள் கைகளைக் கிளர்த்தல் புணர்ச்சிக்கு ஒருப்பட்டதை உணர்த்தும் என்பர்)

**நான்காம் நிலை: மெலிதல்:**

நான்காம் நிலை பாராட்டு எடுத்தல், மடந்தப உரைத்தல், ஈரமிரல் கூற்றம் ஏற்று அவர் அலர் நாணல், கொடுப்பவை கோடல் எனும் நான்கு நிலைகளை உடையது.

1. பாராட்டு எடுத்தல்: தலைமகன் நின்ற நிலைமையும் கூறிய சொற்களையும் தனித்து நின்றபோது தலைவி எடுத்துப் பேசுதல்.

***‘நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***

***நீரினும் ஆரளவு இன்றே: சாரல்***

***கருங்கோல் குறிஞ்சிப் பூக் கொண்டு***

***பெருந்தேன் இழைக்கும் நாடானொடு நட்பே’ (குறுந் : 3)***

என்று தலைவன் இல்லாத வேளையில் தலைவி அவனது அன்பின் உயர்வைக் கூறுகிறாள்.

2. மடந்தப உரைத்தல்: தலைமகன் பேசும்போது அதற்குப் பதில் கூறலன்றித் தன் வேட்கை தோன்றக் கூறுதல். பெண்களின் இயல்பான மடப்பம் கெடும்படி ஒருசில கூறுதல்.

3. ஈரம் இல் கூற்றம் ஏற்று அவர் நாணல்: ஊரிலும், சேரியிலும் கூறும் அருளில்லாத பழிச் சொற்களைக் (அலர்) கேட்டு நாணம் கொள்ளுதல்.

1. கொடுப்பவை கோடல்: கண்ணி, தழையாமை என தலைவன் கொடுப்பனவற்றை ஏற்றுக் கொள்ளுதல்.

## ஐந்தாம் நிலை: ஆக்கம் செப்பல்:

தெரிந்து உடம்படுதல், திளைப்பு வினை மறுத்தல், கரந்திடத்து ஒழிதல், கண்டவழி உவத்தல் என்ற நான்கு நிலைகளில் நிகழப்பெறும்.

1. தெரிந்து உடம்படுதல்: தலைவன் கொடுப்பவற்றை ஏற்றுக்கொண்ட தலைவி ஆராய்ந்து உடன்படுதல்.
2. திளைப்பு வினைமறுத்தல்: விளையாட்டுக்குரிய தோழியர் கூட்டத்தோடு கலந்து திரிபவள், இப்போது விளையாட்டினை விரும்பாது மறுத்தல்.

   ***பாலும் உண்ணாள்: பந்துடன் மேவாள்:***

   ***விளையாட்டு ஆயமொடு அயர்வோள் இனிமே (குறுந்: 396)***

   என்ற பாடலைக் காண்க.
3. கரந்திடத்து ஒழிதல்: தனித்திருக்கும் தலைவி தலைமகனைக் காண வேண்டும் என்ற விருப்பத்தால் மறைந்து இருந்த இடத்தினின்று வெளிவரல்.
4. கண்டவழி உவத்தல்: தலைவனைக் கண்டபோது மகிழ்தல்.

   ***‘தான் நோக்கி மெல்ல நகும்’ (குறுந்: 396)***

## ஆறாம் நிலை: நாணுவரையறுத்தல்:

ஆறாம் நிலை புறஞ்செயச் சிதைத்தல், புலம்பித் தோன்றல், கலங்கி மொழிதல், கையற உரைத்தல் என்ற நான்கு நிலைகளைக் கொண்டது.

1. புறம் செயச் சிதைத்தல்: தலைமகன் கோலம் செய்யும் வழி (அழகு செய்தல்) அதனை விரும்பாதவள் போலத் தோன்றுதல்.
2. புலம்பித் தோன்றல்: அழகு அழிந்து தோன்றுதல்.
3. கலங்கி மொழிதல்: கூறும் சொற்களைக் கலக்கமுற்றுக் கூறுதல்.

4. கையுறவுரைத்தல்: செயலற்ற தன்மை தோன்றும்படி பேசுதல்.

இந்நிலைகளை இலக்கண விளக்க மேற்கோள் பழம்பாட்டு ஒன்று எடுத்துக்காட்டுகிறது.

***"இவளே***
***அணியினும் பூசினும் பிணியுழந்து அசைஇ***
***பல்கிளை நாப்பண் இல்கிளை போல***
***மொழிவகை அறியாள் பொழிகணீர் துடைத்து***
***யானே கையற அலம்வரும்***
***கூறாய்பெரும நின் தேறும் ஆறே"*** *(இ.வி.ப. 535)*

இந்த ஆறு அவத்தைகள் அல்லது நிலைகள் பெண்பாலார் எல்லார்க்கும் பொதுவானவை. இவை கற்பிற்கு காரணத்திற்கு (திருமண நிகழ்விற்கு) உரிய நிமித்தங்கள்.

***'வினை உயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே'***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

***"அவையும் உளவே அவைச அலங்கடையே"***

என்ற நூற்பாவில் மேல்சொல்லப்பட்ட புகுமுகம் புரிதல் முதலான நிலைகள் நடுவண் ஐந்திணை அல்லாத கைக்கிளைக்கும் உரியனவாக வருதல் உண்டு என்று சுட்டுகிறார்.

### பெருந்திணைக்குரிய மரபு:

'பெருந்திணை' என்பது பொருந்தாக் காமம்: 'இன்பத்தை வெறுத்தல்' தொடங்கி இருபது நிலைகளைப் பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளைக் காட்டுகின்றார்.

இன்பத்தை வெறுத்தல்: தன்னை அழகு செய்தல், மற்றும் இன்பம் தருகின்ற தென்றல், நிலவு போன்றவற்றை வெறுத்தல்.

***"சிறுகுழல் லோசை செறிதொடீஇ வேல்கொண்டு***
***எறிவது போலும் எமக்கு'*** *(குறள்:1127)*

என்னும் குறளில் இனிய குழலின் இசை, வேல்கொண்டு எறிவது போலிருந்தது. தலைவனைப் பிரிந்து வாழும் தலைவிக்கு என்னும் கருத்து உள்ளது.

துன்பத்துப் புலம்பல்: காம இன்பம் கடல் அளவினது. பிரிவு ஏற்படும்போது ஏற்படும் துன்பம் அக்கடலினும் பெரிது என்பதை,

***'இன்பம் கடல் மாற்றுக்காமம் அ·.து அடுக்கால்***
***துன்பம் அதனிற் பெரிது'*** *(குறள் : 1166)*

என்ற குறள்வழி உணரலாம்.

எதிர்பெய்து பரிதல்: தலைவன் தன்முன் இல்லாத வேளையிலும், அவன் நிற்பதாகக் கொண்டு பரிந்து பேசுதல்.

***'கண்உள்ளில் போகார்: இமைப்பின் பருவரார்***

***நுண்ணியர்எம் காத லவர்' (குறள் : 1126)***

என்று தலைவி கூறுகிறாள்.

ஏதம் ஆய்தல்: அதாவது குற்றம் காணல். அதாவது இன்பம் செய்யக்கூடிய இந்த நட்புக் காலத்திலேயே துன்பம் செய்கின்ற தலைவர், துன்பம் செய்யக்கூடிய பகைமைக் காலத்தில் எதனைச் செய்ய மாட்டார்? எமக்குக் தெரியவில்லை என்று கூறுவது.

பசி அட நிற்றல்: உணவு உண்ணாது பசியால் துன்புறுதல். காதலர் என் நெஞ்சினுள்ளே வாழ்கின்ற காரணத்தால் வெப்பமான உணவினை நான் எப்படி உண்பேன்? உணவின் வெப்பத்தால் அவர் வெந்துபோவாரே என்று வருந்துவதாக,

***'நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்***
***அஞ்சுவதும் வேபரக்கு அறிந்து' (குறள் : 1128)***

என்ற குறள் அமைந்துள்ளது.

பசலை பாய்தல்: உடல் மெலிந்து நிறம் வெளிறிக் காணப்படல்.

உண்டியில் குறைதல்: உணவு சுருங்குதல்

***'பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு' (அகம்:48)***

'பழங்கண்' என்பது துன்பம் என்ற பொருள் தருவது.

உடம்பு நுனி சுருங்குதல்: தலைவியின் உடல் மிகவும் மெலிதல்-இயற்கை அழகினை இழத்தல்-வளையல்கள் கழன்று விழுதல் போன்றவை.

கண்துயில் மறத்தல்: உறங்காமை

கனவொழு மயக்கல்: கனவை நனவென எண்ணி மயங்கி வருந்துதல்.

பொய்யாக் கோடல்: தலைவன் கூறியதை பொய்யாகக் கொள்ளுதல்

***'வாயல்லா வெண்மை உரையாது கூறுநின்***
***மாயம் மருள்வார் அகத்து' (கலி : 88)***

என்னும் பாடலில் உண்மையல்லாத பொய்களை என்னிடம் கூறாதே. நின் பொய்மைகளை மெய் என்று ஏற்பாரிடத்துக் கூறு என்று கூறுவதைக் காணலாம்.

மெய்யே என்றல்: தலைவன் கூறியவற்றை உண்மை என்று கூறுதல்.

***'கானம் கார் எனக் கூறினும்***
***யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே' (குறுந் : 21)***

என்ற பாடலில் இயற்கை மாற்றங்கள் கார்காலம் வந்துவிட்டது என்று உணர்த்தினாலும் யான் அதனை ஏற்கமாட்டேன். ஏனெனில் எம் தலைவர் பொய்யே கூறமாட்டார் என்று தலைவி கூறுவதைக் காணலாம்.

ஐயம் செய்தல்: தலைவனது குறிப்பினைக் கண்டு ஐயம் கொள்ளுதல்.

***'ஒண்நுதல் நீவுவர் காதலர் மற்றுஅவர்***

***கண்ணுவது எவன்கொல் அறியேன்’ (கலி:4)***

தலைவன் தனது நெற்றியைத் தடவ அவனது மனக்குறிப்பு என்னவோ என்று தலைவி ஐயமுறுகின்றாள்.

அவன் தமர் உவத்தல்: தலைவன் சுற்றத்தாரைக் கண்ட இடத்து மகிழ்தல்.

அறன் அழித்துரைத்தல்: தலைவன் முன்பு காட்டிய அற உணர்வினை அழித்துப் பேசுதல்.

தலைவன் முன்பெல்லாம் என்னிடம் நாம் இருவரும் வேறு வேறு அல்ல என்று சொல்லுவாரே. ஆனால் இன்றோ அவ்வாறான் எண்ணமும் அவரிடம் இல்லையே. அதனை நினைத்து இனிய எனது உயிர் போய்க் கொண்டிருக்கிறதே என்று தலைவி வருந்துவதாக.

***‘விளியும் என் இன்னுயிர், வேறல்லம் என்பார்***
***அவியின்மை ஆற்ற நினைத்து’ (குறள் : 1222)***

என்னும் பாடல், மயங்கிய நிலையில் உள்ள தலைவி மாலைக்காலத்தை நோக்கி, எம்மைப்போல நீயும் துணையிழந்து நிற்கின்றாயோ, அதனால்தான் ஒளி இழந்து உள்ளாயோ என்று கேட்பதாக அமைந்துள்ளது.

ஒப்புவழி உவத்தல்: தலைமகனோடு பிறிதொன்று ஒத்திருப்பதைக் கண்ட இடத்து மகிழ்தல்.

***‘யாவரும் காணுநர் இன்மையின் செத்தனள் பேணி’***

என்னும் வரிகளில், வேறு யாரும் காணாத நிலையில் சிறுவன் தன் தலைமகனைப் போன்றுள்ளான் என்று ஒப்புமைக்கண்டு மகிழ்வதாகச் சுட்டப்படுகிறது.

உறுபெயர் கேட்டல்: தலைவன் பெயர் கேட்டு மகிழ்தல், என்னால் விரும்பப்பட்ட தலைவன் என்னிடத்து அன்பு இல்லாதவரே என்றாலும் அவரைப்பற்றிய ஏதாவது ஒருசொல்லும் கூட என் காதுகளுக்கு இனிமையாக உள்ளது என்று கூறுவதாக,

***‘நசைஇடயர் நல்கார் எனினும் அவர்மாட்டு***
***இசையும் இனிய செவிக்கு’ (குறள் : 1199)***

என்ற குறள் அமைந்துள்ளது.

கலக்கம்: தலைவி மனம் கலங்கிப் பேசுதல். கலி 144ஆம் பாடலில், தலைவி சந்திரனுள்ளே காணப்படும் சிறு முயலை நோக்கி கடல் சூழ்ந்த உலகெல்லாம் சுற்றி வரும் முயலே! என் தலைவனிடத்துச் சென்றுவிட்ட நெஞ்சினை யான் மீண்டும் பெற்று வருத்தம் நீங்கி வாழ அவ்விடத்தை எனக்குக் காட்டுவாயாக என்று மனம் கலங்கிப் பேசுவதாக உள்ளது.

இதுவரையில் பேசப்பட்டது பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் ஆகும்.

**புறனடை:**

இனிமனம் அழிவு நிகழாத இடத்துத் தோன்றும் மெய்ப்பாடுகளாக எட்டினைச் சுட்டுகின்றார். அவை

1. முட்டுவயின் கழறல்
2. முனிவு மெய் நிறுத்தல்
3. அச்சத்தின் அகறல்
4. அவன் புணர்வு மறுத்தல்
5. தூது முனிவு இன்மை
6. துஞ்சிச் சேர்தல்

7. காதல் கைம்மிகல் 8. கட்டுரை இன்மை

என்பன.

முட்டுவயின் கழறல் என்பது களவொழுக்கம் நிகழ்கின்ற காலத்தில் நிலவு வெளிப்படுதல், ஊரில் காவலர் விரைந்து வருதல், தாய் தூங்காமல் இருத்தல், ஊர்மக்கள் தூங்காமல் இருத்தல் போன்ற காரணங்களால் தலைவன் தலைவியைக் குறித்த இடத்தில் வந்து காண்பதற்குத் தடை ஏற்படும்போது அதனைச் சுட்டிக்காட்டித் தலைவி தோழியிடம் கூறுதல். (அகம்: 122)

முனிவு மெய் நிறுத்தல் என்பது வெறுப்பினைப் பிறருக்குப் புலப்படுத்தாமல் தனது மெய்யின்கண் மறைத்தல். அகம் 52ஆம் பாடலில், இனி உயிரே போவதானாலும், உன் மகளிடத்துத் தோன்றிய பசலைநோய் காமத்தால் ஏற்பட்டது என்று தாயிடம் சொல்லிவிடாதே என்று தலைமகள் வெறுத்துப் பேசுகின்றாள்.

***"இன்னுயிர் கழிவதாயினும் நின்மகள்***
***ஆய்மலர் உண்கண் பசலை***
***காமநோய் எனச் செப்பாதே"***

அச்சத்தின் அலறல் என்பது தனது களவொழுக்கம் பிறருக்குப் புலனாகிவிடுமோ என்ற அச்சத்தால் தோழியர் கூட்டத்திலிருந்து பிரிந்து நிற்றல். குறள் 1146 இல் 'நான் தலைவனைக் கண்டது ஒரே ஒரு நாள். ஆனால் திங்களைப் பாம்பு பற்றிக் கொண்டது போல அலர்(பழிச்சொல்) என்னைப் பற்றிக் கொண்டது. எனவே இந்த களவொழுக்கம் பொருந்தாது. திருமணம் செய்து கொள்வதே தகும் என்று எண்ணுவதாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அவன் புணர்வு மறுத்தல் என்பது தலைமகன் காண வராத காலத்தில் மணம் அழியாது தலைமகள் நிற்றல் என்பர் இளம்பூரணர். ஆனால் பேராசிரியர், தலைவன் கூட்டத்திற்கு முற்படுதலைத் தலைவி மறுத்தல் என்று பொருள் கூறுகின்றார்.

தூதுமுனிவு இன்மை என்பது, தலைவன் தூதுவிட்ட நிலையை வெறுக்காமல் ஏற்றுக்கொள்வது,

துஞ்சிச் சேர்தல் என்பது தலைவன் தனக்கு உரியவனாதலை அறிந்து உறக்கம் நிகழ்தல். காதல் கைம்மிகல் என்பது, காதல் அளவு கடந்து தோன்ற, செய்வதறியாது கையற்று வருந்துதல்.

***'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினுள் ஆரள வின்றே'***

என்று தலைவனின் அன்பு மிகுதியாய் நிற்றலைத் தலைவி கூறி மகிழ்தல்.

தோழியும் உரையாட, தலைமகள் உரையாடாமல் இருந்தே, தனது உள்ளக் கருத்தினை, மேலும் தெய்வம் அஞ்சல் தொடங்கி, புறஞ்சொல் மாணாக் கிளவி வரை உள்ள பத்து மெய்ப்பாடுகள் அழிவில் கூட்டத்திற்குரியவை என்று சுட்டப்படுகின்றன.

### தெய்வம் அஞ்சல்:

***'மன்ற மராஅத்து பேமுதிர் கடவுள்***
***கொடியோர்த் தெறூஉம் என்ப'*** ***(குறுந் : 87)***

என்பதில் தலைவன் கொடுமை செய்யின் தெய்வச் சினம் துன்புறுத்தும் என்று அஞ்சுதல் கூறப்படுகிறது.

### புரையறம் தெளிதல்:

தலைவனது பரத்தமை ஒழுக்கம் கண்டு தலைவி கோபம் கொள்ளாமல் இதனைப் பொறுத்துக் கொள்ளுதல் இல்லற மகளிர் கடன் என்று ஏற்றுக் கொள்ளுதல்.

இல்லது காய்தல்:

தலைமகனிடத்து இல்லாத குறிப்பினை அவனிடம் இருப்பதாகக் கொண்டு சினம் கொள்ளுதல்.

***'யாரினும் காதலம் என்றோமா ஊடினாள்***
***யாரினும் யாரினும் என்று'*** ***(குறள் : 1314)***

என்னும் குறட்பாவில் தலைவி தன்னைத் தவறாக குற்றம் சாட்டுவதாக உள்ளது.

### உள்ளது உவர்த்தல்:

தலைவன் செய்கின்ற தலையளியை(அன்புச் செயலை) வெறுத்தல்.

### புணர்ந்துழி உண்மை:

ஊடல் இருப்பினும் புணர்ச்சி காலத்தின் தன்மன விருப்பத்தினை மறைத்துக் கூறாமல் உண்மையினைக் கூறி விடுதல்.

***'ஊடி இருப்பினும் ஊரன் நறுமேனி***
***கூடல் இனிதாம் எமக்கு'*** ***(ஐந்திணை ஐம்பது : 30)***

### பொழுது மறுப்பாதல்:

தலைவன் வரும் பொழுது பகலா, இரவா என்பதனை அறியாத நிலையில் அப்பொழுதுகளை வெறுத்துரைத்தல் கலி144ஆம் பாடலில், தலைவன் மீண்டு வந்து என்னைக் கூடும் காலம் இரவோ, பகலோ என்பது அறியேன். பகற்பொழுது என்னை வருத்த, இது போய் இராப்பொழுது ஆவதாக என்றும், அது நீங்கி இரவானது அதனை வெறுத்துப் பேசுகின்றேன். யான் அடைந்த துன்பத்தினை நீக்குவாரைப் பெறாதிருக்கின்றேனே என்று தலைவி கூறுகின்றாள்.

### அருள் மிக உடைமை:

தலைமகனிடத்து அருள் புலப்படுத்துதல், தன்னிடத்து அன்பு காட்டிய தலைவன் பாம்பின் புற்றுக்கள் நிரம்பியதும் மக்கள் நடப்பதற்கு அரிதானதுமான வழியில் சென்றுள்ளானே என்று தலைவி வருந்துதல். (அகம்:88)

**அன்பு மிக நிற்றல்:**

தலைமகனிடத்து அன்பு பாராட்டுதல்

***'கொடியன் ஆயினும் ஆக***

***அவனே தோழி என் உயிர் காவலனே'***

**பிரிவாற்றாமை:**

தலைமகன் பிரிவைத் தாங்கிக் கொள்ள இயலாமை

***'சொல்லாமை உண்டேல் எமக்குரை: மற்றுநின்***

***வல்வரவு வாழ்வார்க்(கு) உரை' (குறள் : 1151)***

**மறைத்தவை உரைத்த புறஞ்செயல்:**

தலைவன் மற்றும் தலைவியின் களவொழுக்கம் பற்றி ஊரில் எழுந்த பழிச்சொல்லிற்கு நாணுதல்.

***'நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு***

***செலவு அயர்ந்திசனால் யானே***

***அலர்சுமந்து ஒழிக இவ்வெழுங்கள் ஊரே' (நற்: 149)***

ஆக சொல்லப்பட்ட பத்தும் அழிவில் கூட்டப் பொருள் ஆகும்.

இவையும் நடுவண் ஐந்திணைக்குரிய பொருளாம். இதனைத் தொடர்ந்து தலைவன் தலைவிக்கு அமைய வேண்டிய ஒப்புமைப் பண்புகள் அவை எனக் கூறுகின்றார். பத்து இயல்புகளில் ஒத்திருக்க வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

1. **பிறப்பு**: அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர், குறவர் என வரும் குல ஒப்புமை.
2. **குடிமை:** குலத்திற்கேற்ற ஒழுக்க நிலை
3. **ஆண்மை**: ஆள்வினை மற்றும் வலிமை. அதாவது பெருமை, உரன் ஆகியவற்றை ஆடவரும், நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு ஆகியனவற்றை மகளிரும் பெற்றிருத்தல்.
4. **ஆண்டு:** ஒத்த வயது. ஆடவன் பதினாறு வயதும் பெண் பனிரெண்டு வயதும் ஆகும்.
5. **உரு:** வனப்பு அல்லது அழகு.
6. நிறுத்த காமவாயில்: ஒருவர் மீது ஒருவருக்கு நிகழும் அன்பு
7. **நிறை:** அடக்கம்
8. **அருள்:** பிறர் துன்பப்படும்போது ஏற்படும் கருணை
9. **உணர்வு:** அறிவு
10. **திரு:** செல்வம்

ஒப்புமை காட்டிய ஆசிரியர் தலைமகட்கு ஆகாத குணங்கள் இவை என்றும் கூறுகின்றார்.

**அவையாவன:**

1. **நிம்பரி:** அழுக்காறு அதாவது பொறாமை
2. **கொடுமை:** அறநிலையில் மாறி பிறருக்குக் கேடு எண்ணுதல்
3. **வியப்பு:** தம்மைத் தாமே பெரியவராக எண்ணுதல்
4. **புறமொழி:** புறங்கூறுதல்
5. **வன்சொல்:** கடுஞ்சொல் கூறுதல்
6. **பொச்சாப்பு:** தம்மைத் தமது நிலையில் வைத்துக் கொள்ளாமல் சோர்வடைதல். அல்லது மறதி.
7. **மடிமை:** முயற்சியின்மை
8. **குடிமை இன்புறல்:** தன் குடியிருப்பு எண்ணி, தம்மையே மதித்து இன்புறுதல்.

1. **ஏழமை:** நுண்ணறிவின்மை
2. **மறப்பு:** கற்றது, கேட்டது, பயின்றது மறத்தல்
3. **ஒப்புமை:** ஆண்பாலாயினும் பெண்பாலாயினும் தான் காதலிக்கப்பட்டவரை போன்றோரைக் கண்ட போது அவர் போன்றவர் என ஒரு மன நிகழ்வு. இது மேன்மக்கட்கு ஆகாது. கீழ்மக்களிடத்து நிகழ்வது.

இவ்வாறான பண்புகள் தலைவன் தலைவியரிடத்து இடம்பெறுதல் கூடாது.

இவ்வியலின் இறுதி நூற்பா புறநடைப் பாடல் ஆகும். மேற்கூறப்பட்ட மெய்ப்பாடுகள் எல்லாம் கண்ணாலும், செவியாலும், விளங்கிக் கொள்ளக் கூடிய நுண்மாண் நுழைபுலம் உடையவர்க்கல்லாமல் ஏனையோர்க்கு உணர்ந்து கொள்ள இயலாது. எனவே அறிவுடை மாந்தரே விளங்கிக் கொள்வார் என்கின்றார்.

## பயிற்சி வினாக்கள்

## I. குறுவினாக்கள்

1. 'மெய்ப்பாடு' சொற்பொருள் விளக்கம் தருக.
2. மெய்ப்பாடு பற்றிய வடமொழியாளரின் கருத்து என்ன?
3. 'உள்ளப்பட்ட நகை நான்கென்ப' எவை?
4. யாப்புற வந்த இளிவரல் நான்கே – விளக்குக?
5. மருட்கை தோன்றும் நிலைக்களன்கள் எவை?
6.. அழுகை தோன்றும் நிலைக்களன்களை சுட்டுக.

7. அச்சம் தோன்றுவதற்கான நிலைக்களன்கள் எவை?
8. பெருமிதம் தோன்றுவது எச்சூழல்களில்?
9. வெகுளி பிறப்பதற்கான நிலைக்களன்கள் எவை?
10. உவகை பிறப்பது எப்போது?
11. தலைவன் தலைவிக்கு உரிய ஒப்புமைப் பண்புகள் யாவை?
12. தலைமக்களுக்கு ஆகாத பண்புகள் யாவை?

## II. கட்டுரை வினாக்கள்

1. எண்வகை மெய்ப்பாடுகள் குறித்து எழுதுக.
2. அகத்திற்கும் புறத்திற்குமுரிய மெய்ப்பாடுகள் எவை?
3. எண்வகை மெய்ப்பாடுகள் தவிர வேறுபட்டு வரும் மெய்ப்பாடுகள் எவை?
4. அகத்திற்கே உரிய மெய்ப்பாடுகள் அல்லது அவத்தைகள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
5. பெருந்திணை மெய்ப்பாடுகள் குறித்துத் தொகுத்துரைக்க.
6. அழிவில் கூட்டத்திற்குரிய மெய்ப்பாடுகளை விளக்குக (அல்லது)
   மணம் அழிவில் நிகழாத இடத்துத் தோன்றுகின்ற மெய்ப்பாடுகள் குறித்து விளக்கி வரைக.

--------------------------------------

## கூறு : 07

## உவமையியல்

பொருளதிகாரத்தின் ஏழாவது இயல் உவமையியல். ஒரு பொருளின் தன்மையை இதுவரையில் அறிந்திராத ஒருவர்க்கு அறிவிக்கும்போது, அதனை ஒத்த வேறொரு பொருளை சுட்டிக்காட்டி, இதுபோலும் இது என்று கூறுவதே உண்மையாகும்.

எடுத்துக்காட்டாக, காட்டில் வாழும் காட்டுப்பசுவை ஆமா என்பர். அதனைக் கண்டிராத ஒருவருக்கு நம் வீட்டில் உள்ள பசுவைக் காட்டி(ஆ) இதனைப் போன்றது ஆமா என்று விளக்கிவிட்டால், காட்டிற்குள் செல்லும்போது காட்டுப்பசுவை காணும்போது, உவமையை நினைவில் கொண்டு இதுதான் ஆமா என்று உணர்ந்து கொள்வார். இத்தகைய ஒப்புணர்வு பொருளை விளக்கிக் கொள்ள உதவும்.

இதில் ஆ-உவமை, ஆமா-உவமேயம்

இவ்வாறு ஒரு பொருளை புலப்படுத்துவதற்கும் ஒரு பொருளைச் சிறப்பித்துப் புனைந்து கூறுவதற்கும், செய்யுளுக்கு அலங்காரமாக அமைவதற்கும் உவமை பயன்படும். எ.டு: தேன்போன்ற இன்சொல், தளிர்போல் மேனி. எனவே இருதிணைப் பொருட்களை உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் புரிந்து கொள்ளவும், கற்கும் போது இன்பம் அடையவும் உவமைகள் பயன்படும். உவமைகள் அகம், புறம் என்ற இருவகைப் பொருள்களிலும் கையாளப்பெறும்.

இனி, தொல்காப்பியர் வகைப்படுத்தி, விளக்குகின்ற முறைகளைக் காண்போம்.

உவமை வகை:

***'வினை பயன் மெய் உரு என்ற நான்கே***
***வகை பெற வந்த உவமத் தோற்றம்'*** (உ.வ.இ:1)

என்ற நூற்பா தொழில், பயன், வடிவம், நிறம் என்ற நான்கு வகைகளில் உவமை அமையும் என்று கூறுகிறது.

எ-டு:

| | | |
|---|---|---|
| புலி போலப் பாய்ந்தான் | - | வினை தொழில் |
| மாரி அன்ன வண்கை | - | பயன் |
| துடி போன்ற இடை | - | மெய் வடிவம் |
| தளிர் போலும் மேனி | - | உரு நிறம் |

இவற்றுள் வினையும் நீட்டல், மடக்கல், விரித்தல், குவித்தல் போன்றனவும் அடங்கும். பயன் நன்மை தருவன, தீமை தருவன என இரண்டும் அடங்கும்.

மெய் - வட்டம், சதுரம், முக்கோணம் என்பன.

மேலும் உவமை கட்புலனாவன. கட்புலனாகாதன என இருவகைப்படும். கண்ணுக்குப் புலப்படாத அன்றி ஏனைய,

1. செவிப்புலனால் அறியப்படும் ஓசை
2. நாவினால் அறியப்படும் சுவை
3. மெய்யினால் அறியப்படும் வெம்மை, தன்மை முதலியன
4. மூக்கால் அறியப்படும் நாற்றம், மணம்
5. மணத்தால் அறியப்படும் இன்பம், துன்பம் முதலியனவும் கட்புலன் ஆகாதனவற்றுள் அடங்கும்.

குயில் போன்ற மொழி – செவிப்புலன்

வேம்பு போலக் கசக்கும் - நாப்புலன்

தீப்போலச் சுடும் - மெய்ப்புலன்

ஆம்பல் நாறும் வாய் - மூக்கு

'தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்

அம்மா அரிவை முயக்கு' (மனப்புலன்) இது மனத்தால் உணரப்படுவது.

**உவமையின் தன்மைகள் இயல்புகள்:**

மேற்சொல்லப்பட்ட வினை, பயன், மெய், உரு என்ற உவமையின் பொதுத்தன்மைகள் ஒவ்வொன்று ஓர் உவமையில் வருதல் அன்றி இரண்டும் பலவுமாக விரவி கலந்து வருகின்ற மரபினை இலக்கியங்களில் காணலாம் என்பதனை,

***'விரவியும் வரூஉம் மரபின என்ப'*** (உ.இ:2)

என்ற நூற்பா வழி அறியலாம்.

இலங்கு பிறையன்ன விளங்கு வால் வையெயிறு (அகம் கடவுள் வாழ்த்து) வானத்தில் விளங்கி நிற்கும் பிறைச்சந்திரனை ஒத்த வெண்ணிற கூர்மையான பற்கள் என்னும் இடத்தில் வெண்மை என்ற நிற(உரு) உவமையும் கூரிய என்ற வடிவ(மெய்) உவமையும் விரவி வந்துள்ளன.

உவகை கூறும் போது உவமைகள் உயர்ந்தனவாதல் வேண்டும் என்பதனை,

***'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை'*** (உ.இ:3)

என்று கூறுகிறார்.

எ.டு: 'அரிமா அன்ன அணங்குடைத் துப்பு' (பட்டினப்பாலை : 298)

என்பதில் வலிமையுடைய பலவற்றிலும் அரிமா(சிங்கம்) உயர்ந்ததாதல் சுட்டப்பெற்றது.

தாமரை புரையும் காமர் சேவடி (குறுந் : வாழ்த்து)

மலர்களில் சிறந்தது மற்றும் உயர்ந்தது தாமரை.

அவ்வாறானால்,

**"கொங்கியர் ஈன்ற மைந்தரின்**
***மைந்துடை உழுவை திரிதரும் காடு"***
***"கட்டில் நிணக்கும் இழிசினன் கையது***
***போழ் தூண்டு ஊசியின் விரைந்தன்று***
***------------ --------- நெடுந்தகைப் போரே"***

என்னும் இடங்களில் இழிந்த பொருட்கள் உவமைகளாக வந்துள்ளதே என்றால் கொங்கு நாட்டு மைந்தர் பிறநாட்டு (நிலத்து) மக்களோடு ஒரு நிகரர் அல்லர்: உயர்ந்தோர் அதேபோன்று ஊசியின் விரைவு மற்ற விரைவுகளை விட உயர்ந்தது என்று இளம்பூரணர் விளக்கம் தருகிறார்.

இனி, உவமை தோன்றுகின்ற நிலைகளை பற்றிக் காண்போம்.

சிறப்பு, நலன், காதல், வலி என்ற நான்கனுள் ஒன்று நிலைக்களனாக அமைய உவமை தோன்றும்.

எ-டு: ***'முரசு முழங்கு தானை மூவரும் கூடி***
***அரசவை இருந்த தோற்றம் போலப்***
***பாடல் பற்றிய பயனுடை எழாஅல்'*** (பொருநர் : 54)

என்னும் பாடலடிகள் மூவேந்தர் அரசவையில் ஒன்றாக இருந்த காட்சி போன்றது. நிருத்தம், கீதம், வாச்சியம் என்ற மூன்றும் கூடி அமைந்த பாடல் என்பது சிறப்பு பற்றி வந்த உவமை.

2. **"ஓவத்தன்ன இடனுடை வரைப்பு"**

என்பதில் ஓவியம் வரைந்தது போன்ற நகர் என்று கூற அது நலம் பற்றி உரைக்கப்பட்டது.

3. **"கண் போல்வான் ஒருவன் உளன்"**

இதில் காதல் நிலைக்களன்களாக உவமை அமைந்துள்ளது.

4. **"அரிமா அன்ன அணங்குடைத் துப்பு**
**வலிமை நிலைக்களன்களாக தோன்றியது.**

இவ்வாறு நான்கு நிலைக்களன்களைக் கூறிய தொல்காப்பியர்.

***'கிழக்கிடும் பொருளொடு ஐந்தும் ஆகும்'*** (உ.இ)

என்னும் நூற்பாவில் தாழ்ந்த பொருளோடும் உவமை பொருந்தும் இடத்தும் உவமிக்கப்படும். எனவே நிலைக்களன் ஐந்தாயிற்று என்கிறார்.

சில இடங்களில் உவமேயம் பொருள் உவமானமாகவும், உவமானம் உவமேயமாகவும் வருதலால் இவ்வாறு கூறவேண்டியதாயிற்று என்பர் உரையாசிரியர். இதற்கு பேராசிரியர்,

அரவினால் (பாம்பு) பற்றப்பட்ட மதி போன்று ஒளி இழந்த முகம் என்பதனை உதாரணம் காட்டுகிறார்.

இனி உவமையில் இடம்பெறும் சில மரபுகளைப் பற்றிக் காண்போம்.

1. முதற்பொருள், சினைப்பொருள் என்ற இரண்டு பற்றி உவமை கூறும் இடத்தில் முதலுக்கு முதல், சினைக்கு சினை என்று உவமை வருதலோடு முதலுக்குச் சினையும், சினைக்கு முதலும் உவமையாக வரலாம். அவ்வாறு வரும்போது மரபு பிறழாமல் வருதல் வேண்டும்.

***"வரை புரையும் மழ களிறு"*** - முதலுக்கு முதல்

*"தாமரை புரையும் காமர் சேவடி"* - சினைக்கு சினை

ஆனால்,

***"நெருப்பின் அன்ன சிறுகண் பன்றி" - முதலுக்குச் சினை***

***"அடைமரை ஆயிதழ்ப்போது போல் கொண்ட***

***குடைநிழல் தோன்றுநின் செம்மல்-------------"***

இதில் போது(மலர்) என்னும் சினை செம்மல்(அரசன்மகன) என்ற முதலும் உவமை ஆயிற்று.

2. **சுட்டிக் கூறா உவமை:**

'சுட்டிக் கூறா உவமம் ஆயின்

பொருள் எதிர் புணர்த்தும் புணர்ந்தன கொளலே'

என்பது அதற்குரிய நூற்பா.

***"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து***

***நோக்கக் குழையும் விருந்து.***

என்ற குறட்பாவில் அனிச்சமலர் முகர்ந்து பார்த்தால் வாடி விடும். அதுபோல விருந்தினர் நமது இன்னாத, கொடிய முகம் பார்த்தால் வாடிவிடுவர் என்று கூறப்பட்டுள்ளது. இக்குறட்பாவில் 'அதுபோல' என்ற உவமஉருபு சுட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உவமஉருபு சுட்டப்படாதது சுட்டிக் கூறா உவமம் என்பர் இளம்பூரணர் - "பவள வாய்"

உவம உருபும், பொதுப்பண்பும் சுட்டப்படாதது என்பர் பேராசிரியர் பவள வாய் - சுட்டிக் கூறா உவமம்.

பவளம் போல் செந்துவர்வாய் – சுட்டிக் கூறிய உவமம்

3. உவமான உவமேயங்கள் ஒத்திருத்தல் வேண்டும். அதாவது உவமை இரட்டைக்கிளவியாக(சொல்) வந்தால், உவமேயமும் இரட்டைக் கிளவியாகவே வருதல் வேண்டும்.

**"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**

**கற்றாரே டேனை யவர்"**

என்ற குறள் விலங்கு, மக்கள் இடையிலான வேறுபாடு எத்தகையதோ அது போன்றதே கற்றவருக்கும் கல்லாதவருக்கும் உள்ள வேறுபாடு என்கிறது.

உவமை: விலங்கு - மக்கள்

உவமேயம்: கற்றார் - கல்லாதவர்

இதே போன்று உவமை அடையடுத்து வந்தாலும் தொழில்பட்டு வந்தாலும், ஒன்றும் பலவுமாகி வந்தாலும் உவமேயமும் அவ்வாறே வருதல் வேண்டும் என்பர் இளம்பூரணர். உவமானமும் உவமேயமும் மிகுதியும் குறைவும் இல்லாமல் இடம்பெறுதல் மரபு.

4. **உவமேயம் உவமானம் ஆதல்:**

***'பொருளே உவமம் செய்தனர் மொழியினும்***

***மருளறு சிறப்பின் அஃதுவம ஆகும்'*** *(உ.இ: 9)*

என்னும் நூற்பா உவமேயத்தை உவமானம் ஆக்கி உவமானத்தை உவமேயம் ஆக்கிச் சொல்வதும் உண்டு என்கிறது. அவ்வாறு சொல்லும்போது உவமேயம் குற்றமற்ற சிறப்புடையது என்று உலகோரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

***'திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை'*** (சிறுபாண் : 323)

என்பதில் முகம் போல மலர்ந்த தாமரை என வருகிறது. 'தாமரை போல முகம்' என்பதே இயல்பு. முகத்தைச் சிறப்பிக்க வேண்டி இவ்வாறு கூறுதலும் ஓர் இலக்கிய மரபாகும். இதனைப் பிற்காலத்தவர் உருவகத்திற்கு அடிப்படையாகக் கொண்டனர் எனலாம். புறநானூற்றுப் பாடல் ஒன்றில் போர்க்காட்சி வருணிக்கப்படும் நிலையில்

சுருங்கை யானை கொண்மூவாக – மேகம்

வாள் மின்னலா – மின்னல்

பல்லியம் முரசு முழக்காக - இடி

புரவி வீசு வளியாக – காற்று

கணை துளியாக – அம்பு என்று வருவதைக் காணலாம்.

3. உவமையின் அளவு:

உவமையும் பொருளும் (உவமேயமும்) ஒத்து வருதலே அன்றி பெருகக்கூறலும் சிறுகக் கூறலும் உண்டு. அவ்வாறு கூறப்படும்போது சிறப்பினைத் தருவதாக உவமை அமைதல் வேண்டும் என்பதனை

***'பெருமையும் சிறுமையும் சிறப்பின் தீராக்***

***குறிப்பின் வரூஉம் நெறிப்பாடு உடைய'*** (உ.இ : 10)

என்று கூறுகிறது தொல்காப்பியம்.

மிகுதியாக உயர்த்திக் கூறுதலும், மிகுதியாகத் தாழ்த்திக் கூறுதலும் பொருந்தாது.

**'அவாப் போல் அகன்றதன் அல்குல்மேல் சான்றோர்**

**உசாப் போல்உண்டே மருங்குல்'**

அல்குல் பெரியது என்பதால் ஆசையோடும் இடை(மருங்குல்) சிறியது என்பதால் சான்றோர் உசாவோடும் உவமை செய்தது பொருந்தும் என்பர். (உ.சா)

இவ்வாறன்றி 'இந்திரனே போலும்' 'இளஞ் சாத்தன்' – என்று உவமிப்பது வழக்கு ஆகாது என்பர் இளம்பூரணர்.

'நாய்க்கு முன் மான்கூட்டம் போலும்' என்று மிகவும் இழிந்த பொருளுடன் (நாய்) உவமை கூறுதல் ஆகாது.

இவ்வாறாக உவமையின் பயன், வகைகள், நிலைக்களன், உவமை கூறும் மரபுகள் இதுவரையில் எடுத்துரைக்கப்பட்டன.

இனி உவமஉருபுகள் பற்றிய தொல்காப்பியக் கருத்துக்களைக் காண்போம்.

உவமானம் உவமேயங்களுக்கு இடையில் தோன்றும் சொல் உவம உருபு எனப்படும்.

உவம உருபு வெளிப்படையாக வரலாம் - பால் போல் வெண்மை

உவம உருபு தொக்கு (மறைந்து) வரலாம் - பவள வாய்

இவ்வாறு வரக்கூடிய உவமஉருபுகள் 36 என்றும் அவை வினை, பயன், மெய், உரு என்பனவற்றிற்கு உரியனவாக வரப்பெறும் என்கின்றார் தொல்காப்பியர்.

***'அவைதாம்,***
***அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப***
***என்ன மான என்றவை எனாஅ***
***ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க***
***என்ற வியப்ப என்றவை எனாஅ***
***எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக***
***கள்ள கடுப்ப ஆங்கவை எனாஅக்***
***காய்ப்ப மதிப்பத் தகைய மருள***
***மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்***
***புல்ல பொருவப் பொற்பப் போல***
***வெல்ல வீழ ஆங்கவை எனாஅ***
***நாட நளிய நடுங்க நந்த***
***ஓடப் புரைய என்றவை எனாஅ***
***ஆறாறு அவையும் அன்னவை பிறவும்***
***கூறுங்காலைப் பல்குறிப்பினவே'*** (உ.அ.:11)

அன்னவை பிறவும் என்றதால் நோக்க, நேர, அனை, அற்று, இன், ஏந்து, ஏர், சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்பனவற்றையும் உவம உருபுகளாகக் காட்டுவர் உரையாசிரியர்.

இவை பெயரெச்சமாக, வினையெச்சமாக, முற்றாக வரப்பெறும்.

புலி போன்ற வீரன் - பெயரெச்சம்

புலி போல பாய்ந்தான் - வினையெச்சம்

புலி போன்றவன் - வினைமுற்று

உருபுகளுக்குச் சில சான்றுகள்:

1. வேலொன்று கண் 2. கயல் என்ற கண் 3. குன்றின் அனையர் 4.மூத்தோர் முறுவல்(ஏர்) 5. யாழ்கெழு குரல் 6. கிளை செத்து மொய்த்த தும்பி 7. மதியம் பொற்ப வாண்முகம் 8. மருப்பின் திரிந்து வீழ்தாடி(இன்) 9. மணிநிற மாற்றிய மாமேன் 10. படங்கெழு நாகம் நடுங்கும் அல்குல்

**உவம உருபுகளின் பயன்பாடும் வகையும்**:

**வினை உவமத்திற்கு உரிய உருபுகள்:**

அன்ன, ஆங்க, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்கு என்ற எட்டும் வினை உவம உருபுகள் (உ.இ:12)

| | | |
|---|---|---|
| எ.டு: கொன்றன்ன இன்னா செயினும் | - | அன்ன |
| கடல் கண்டாங்கு | - | ஆங்கு |
| சிலை மான செவ்வரிக் கயலொடு | - | மான |
| புலி இறப்ப ஒலி தோற்றலின் | - | இறப்ப |
| புலி என்ன ஆரவாரம் | - | என்ன |
| இடி உறழ் தடக்கை | - | உறழ் |
| புலி தகையப் பாய்ந்தான் | - | தகைய |
| மான் நோக்கு நோக்கு மடநடையார் | - | நோக்கு |

இவற்றுள் அன்ன என்ற உருபு, பயன், மெய், உரு என ஏனைய வகைகளிலும் வரப்பெறும். (உ.இ:31)

1. மாரி அன்ன கை - பயன்
2. கமுகுஈன் பசுங்காய் கருவிருந்தன்ன
   கண்கூடு சிறுதுளை - மெய் வடிவம்
3. செவ்வான் அன்ன மேனி - உருநிறம்

## பயன் உவமத்திற்குரிய உருபுகள்:

எள்ள, விழைய, புல்ல, பொருவ கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ என்ற எட்டும் பயனுவம உருபுகள். (உ.இ:14)

எ.டு:

***எழிலி வானம் எள்ள வண்கைக் கடுமான் தோன்றல் - எள்ள***

***மழை விழைய தடக்கை எவ்வி***

***புத்தேள் உலகின் பொன்மரம் புல்ல***

***விண்பொருவபுகழ் விறல்வஞ்சி***

***கார்கள்ள உற்ற பேரிசை உதவி***

***இருநிதி மதிக்கும் பெருவாள் ஈகை-மதிப்ப***

***வீங்கு சுரை நல்லான் வென்ற ஈகை-வெல்ல***

***பேரியாறு வீழ வரையாது சுரக்கும் வள்ளல்-வீழ***

**மெய் உவமத்திற்குரிய உவம உருபுகள்:**

கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப என்ற எட்டும் மெய் உவம உருபுகள் ஆகும்.

எ.டு:

***விண்ணதிர் இழிஇசை கடுப்ப***

***அகலிரு விசும்பின் குறைவில் ஏய்ப்ப***

***வேய்மருள் பணைத்தோள்***

***வேய்புரை மென்தோள்***

***வேய்ஒட்டிய மென்தோள்***

***பாம்புஉரு ஒடுங்க வாங்கிய நுசுப்பு***

***செந்தீ ஒட்டிய அம்சுடர்ப் பருதி – ஒட்ட***

***கண்ணொடு நிகர்க்கும் குவளை –*** நிகர்ப்ப

உரு உவமத்திற்குரிய உருபுகள்:

போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த என்ற எட்டும் உரு உவம உருபுகள்.

எ.டு:

***பொன் போல மேனி***

***மணி நிற மறுத்த காயம்பூ (மறுப்ப)***

***செங்காந்தள் ஒப்ப கைவிரல்***

***நெய்தல் காய்த்திய கண்ணியம் (காய்ப்ப)***

***கான்றைப் பொன் நேர் புதமலர்***

***தண்டளிர் வியப்பத் தகை பெறு மேனி.***

நளிய, நந்த என்னும் உருபுகள் அரிய வழக்கின.

மேற்கூறிய உவம உருபுகள் கூறியவாறு அல்லாமல் தத்தம் மரபில் பெருவழக்காகவும் சிறுபான்மை மாறுபட்டும் வரப்பெறும் என்பதை

***'தத்தம் மரபில் தோன்றுமென் பொருளே'*** (உ.இ:17)

என்ற நூற்பாவில் உணர்த்துகின்றார்.

எ.டு:

'முழவு உறழ் தடக்கை' – என்பதில் வினை உவமத்திற்கு உரிய உறழ் என்னும் உருபு மெய்உவமத்திற்கு வந்தது.

'வேய் வென்ற தோள்' – வென்ற என்னும் பயன் உவம உருபு வடிவிற்கு வந்தது.

'பொன்னுரை கடுக்கம் திதலையர்' – 'கடுப்ப' என்னும் மெய் உவம உருபு உரு உவமத்திற்கு வந்தது.

மாரி வீழ் இடுங் கூந்தல் - வீழ் என்னும் பயன் உவம உருபு உவமத்திற்கு வந்தது. இவ்வாறு உவமை மற்றும் உவம உருபுகளை வகைப்படுத்திய தொல்காப்பியர் இலக்கியங்களில் அவை பயன்படும் முறைகள் பற்றிய செய்திகளைக் கூற வருகின்றார். அவற்றைக் காண்போம். அவற்றில் முதற்கண்,

***'நாலிரண்டாகும் பாலுமார் உண்டே'*** (உ.இ.18)

என்ற நூற்பாவில் வினை, பயன், மெய், உரு என்ற நான்கு வகைப்படும் என்று முன்பு கூறிய ஆசிரியர் அது எட்டுவகையிலும் அமையும் என்று எடுத்துக் கூறுகின்றார். அதாவது

| | | |
|---|---|---|
| வினை | - | வினை, யற வினைக்குறிப்பு எனவும் |
| பயன் | - | நன்மை பயத்தல், தீமை பயத்தல் எனவும் |
| மெய் | - | வடிவம், அளவு எனவும் |
| உரு | - | நிறம், குணம் எனவும் வர எட்டாகும். |
| வினைக்குறிப்பு | - | பொன் அன்ன செல்வத்தன் |
| தீமை பயத்தல் | - | ஞாயிறு அனைய நின் பகைவர்க்கு |
| அளவு என்பது | - | பாம்பென இழிதரும் கடுவரல் கலுழி |
| குணம் என்பது | - | பாலன்ன மொழி |

ஏனையவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் முன்னர் தரப்பட்டுள்ளன.

உவமைகள் பொருளோடு ஒத்து வருதலே அன்றி பெருகக் கூறல், சிறுகக் கூறல் என்று வழக்கில் வரும்போது மெய்ப்பாடு வெளிப்பட தோன்ற வேண்டும் என்பதை,

***"பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்***
***வழி மருங்கறியத் தோன்றும் என்ப"*** (உ.இ:19)

என்று கூறுகிறார். இல்லையெனில் இவ்வாறு சொல்லுதலால் பயனில்லை என்பது கருத்து.

***"அவாப்போல் அகன்றதன் அல்குல்போல் சான்றோர்***
***உசாப் போல உண்டே மருங்குல்"***

என்பது பெருமையும் சிறுமையும் பெற்று வந்த உவமைகள். இதில் உவகை எனும் மெய்ப்பாடு நிகழ்கிறது.

அதே போன்று, 'கலம் கவிழ்ந்த நாய்கன் போன்று' என்னும் உவமையில் அவலம் தோன்றுகிறது.

***'பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல***

***வரும் செல்லும் பேரும் என் நெஞ்சு'***

எனும் பாடலில் வறுமையடைந்த ஒருவன் செல்வர்தம் இல்லத்திற்கு பொருள் கேட்டுச் செல்லும்போது தாழ்மை உணர்வு காரணமாகப் போவதும் தயங்கிப்பின் வருவதுமாக நிற்பர். அதுபோலத் தன்னைக் காதலித்தவரிடம் மனம் போவதும் வருவதுமாக உள்ளது என்று கூறுவதால், இளிவரல் என்ற மெய்ப்பாடு வெளிப்படுகிறது.

தொடர்ந்து உவமான, உவமேயங்களைக் கண்டுகொள்ளும் வகை பற்றிக் கூறுகின்றார். எடுத்துக்காட்டாக,

***'ஐதேய்ந்தன்று பிறையுமன்று***
***மைதீர்ந்தன்று மதியுன்று***
***வேயம் அன்றன்று மலையுமன்று***
***பூவும் அன்றன்று சுனையுமன்று***
***மெல்லவியலும் மயிலுமன்று***
***சொல்லத்தளரும் கிளியுமன்று'*** (கலி:55)

என்ற பாடலைக் காண்போம்.

இப்பாடலில் பிறை, மதி, மலை, சுனை, மயில், கிளி என்னும் உவமைப்பொருட்கள் இடம்பெறுகின்றன. ஆனால் உவமேயங்கள் சுட்டப்படவில்லை. இவ்வாறுள்ள இடங்களில் உவமைகளைக் கொண்டு சொல்லுகின்றவன் குறிப்பினை அறிந்து உவமேயங்களாகிய பொருட்களை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு உணர்ந்து தெளிவு செய்யும் போது இலக்கிய மரபிற்கு ஒத்ததாகத் தெளிவு செய்தல் வேண்டும். அந்நிலையில் இப்பாடலைப் பார்த்தால், அதன் பொருள் பின்வருமாறு அமையும்.

வியக்கும்படியாகத் தேய்ந்துள்ளது. ஆனால் பிறையன்று என்பதால் நுதல் என்றும், களங்கம் நீங்கியுள்ளது. ஆனால் திங்கள் அன்று என்பதால் முகம் என்றும், மூங்கில் வளர்ந்துள்ளது. ஆனால் மலையன்று என்பதால் தோள் என்றும், பூக்கள் மலர்ந்துள்ளன. ஆனால் சுனை அன்று என்பதால் கண் என்றும், மெதுவாக இயங்குகின்றது. ஆனால் மயில் அன்று என்பதால் சாயல் என்றும், பேசுகின்றது. ஆனால் கிளி அன்று என்பதால் மொழி என்றும் துணிந்து கொள்ளலாம்.

இக்கருத்தினை,

***'உவமப் பொருளின் உற்றது உணரும்***
***தெளி மருங்கு உளவே திறத்திய லான்''*** (உ.இ:20)

என்ற நூற்பாவில் உணர்த்துகின்றார். அது இலக்கிய மரபுப்படியே துணியப்படும் என்பதனை,

***''உவமப் பொருளை உணரும் காலை***
***மருவிய மரபின் வழக்கொரு வருமே''*** (உ.இ:21)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

இனி உவமையில் இரண்டு சொற்கள் அடுக்கி வந்தால், உவமிக்கப்படும் பொருளிலும் இரண்டு சொற்கள் வருதல் வேண்டும் என்பதனை,

***"இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே"*** (உ.இ:22)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

அடுத்து உவமை அமைப்பில் காணப்படுகின்ற ஒரு வேறுபாடு குறித்துக் கூறுகின்றார். அதாவது உவமைப்பொருள் தான் அண்மையான், உவமைப் பொருளுடன் இணையாமல், அப்பொருள் தோன்றிய இடத்தோடு மரபின் வழி அவர் துணிந்த துணிவின்கண் உவமை வரும் என்பதை,

***"பிறிதொரு படாது பிறப்பொடு நோக்கி***
***முன்ன மரபின் கூறுங் காலைத்***
***துணிவோடு வருஉம் துணிவினோர் கொளினே"*** (உ.அ:23)

என்ற நூற்பாவில் உணர்த்துகின்றார். இதற்கு எடுத்துக்காட்டு தருகின்ற இளம்பூரணர்,

***"நிலவுக் காண்பது போல அணிமதி ஏர்தா"*** (கலி:119)

என்ற பாடல் வரிகளைக் காட்டுகின்றார். அதாவது மதியானது தன் நிலவால் இருளினைப் புறங்காண்பது போல அழகுடன் தோன்றி விளங்கியது என்று விளக்கம் தருகிறார்.

மதி தோன்றத் தோன்ற இருள் விலகி ஓடுகிறது. இயல்பில் நிகழும் இந்நிகழ்வைப் பிற்காலப் புலவர் மதியானது இருளைப் புறங்காட்டி ஓடச் செய்வது போலத் தோன்றியது எனத் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவர். எனவே இது தற்குறிப்பேற்றம் என்பர் பிற்காலத்தவர்.

ஆனால் பேராசிரியரோ இது உள்ளுறை உவமம் பற்றிய நூற்பா என்பர்.

உவமை வேறுபாடுகளை உணர்த்தி வருகின்ற தொல்காப்பியர் உவமையைப் போன்று வருவது ஒன்று உண்டு என்று கூறி, அதனை உவமப்போலி என்று அழைக்கிறார். மேலும் அது ஐந்து வகைப்படும் என்பர்.

**"உவமப் போலி ஐந்தென மொழிய"** (உ.இ. 24)

**உவமப்போலியின் வகைகள்:**

1. இதற்கு உவமை இல்லை

எ-டு: ***"நின்னோர் அன்னோர் பிறர் இவர் இன்மையின்"*** (புறம் : 373)

என்பதில் நினக்கு ஒப்பானோர் வேறு ஒருவரும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

2. இதற்கு இதுதானே உவமை.

***"மன்னுயிர் முதல்வனை ஆதலின்***
***நின்னோர் அனையை நின்புகழொடும் பொலிந்தே"*** (பரி: 1)

என்பதில் உனக்கு நீயே ஒப்புமையாகிப் புகழொடு விளங்குகின்றாய் என உள்ளது.

3. பல பொருள்களிலும் உள்ள உறுப்புகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு சேர்த்தால் இதற்கு உவமை ஆகும்.

***'சொல்வாய முகம் கண் முலை தோள் இடை அல்குல் கைகால்***

***பல்வார் குழல் என்றிவற்றால் படிச்சந்த மானாள்'***

என்பதில் பிறபெண்டிரது வாய் முதலாகச் சொல்லப்பட்டவை எல்லாம் இயைந்து அழகு பொருந்தியவளாயினாள் என்று வருகிறது.

4. பல பொருளிலும் உள்ள அழகு ஓரிடத்து வந்தால் இதற்கு உவமை.

***"நாள்கோள் திங்கள் ஞாயிறு கனைஅழல்***

***வந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனைய'*** (பதிற்று :14)

என்பது போன்றது.

5. கூடா உவமை:

***"------------ --------------------மலைநாடன்***

***ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழல்கயத்து***

***நீருள் குவளை வெந்து அற்று"*** (கலி:41)

என்ற பாடலில் அருள் நிறைந்த தலைவன் உள்ளத்தில் கொடிய நிலை (பண்பு) தோன்றினால் அது நீரின் கண் உள்ள குவளை மலர் வெந்த தன்மையைப் போன்றதாகும் என்று பொருந்தாதது உவமையாக்கப்பட்டது.

(குளிர்ந்த நீரில் மலர் வெந்து போவது இயல்பன்று)

இதனையும் பேராசிரியர் உள்ளுறை உவமையின் வகைகள் எனவே கூறுவார். தொடர்ந்து உவமை கூறுவதில் உள்ள சில வரையறைகளைக் கூறுகின்றார் தொல்காப்பியர். இன்னா இன்னார் இந்த வகையில் உவமை கூறற்குரியர் என்று வரையறுக்கின்றார். அவற்றைக் காண்போம்.

**தலைவி உவமை கூறும் முறை:**

இல்லத்தின் உள்ளே வாழுகின்றவள் தலைவி. எனவே அவள் உவமை கூறும்போது அவள் அறிந்த பொருட்களையே உவமை கூறல் வேண்டும் என்பதை,

***"கிழவி சொல்லின் அவளறி கிளவி"*** (உ.இ.26)

என்கிறது தொல்காப்பியம்.

எ.டு: "***சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி***

***வானமீனின் வயின்வயின் இமைக்கும்***

***ஓங்குமலை நாடன்"*** (குறுந் : 150)

இதில் கொள்ளிகள் வானத்தின்கண் மின்னும் விண்மீன்கள் போல அங்கங்கே கண்சிமிட்டும் உயர்ந்த மலை எனத் தலைவி தான் அறிந்த பொருளை உவமை கூறுகின்றாள்.

"அணிப்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகம்"

இதிலும் தலைவி தான் அறிந்து அணில்பல்லை உவமை கூறினாள்.

**தோழி உவமை கூறல்:**

தோழி உவமை கூறினால் தான் வாழுகின்ற நிலத்தில் உள்ளன அன்றிப் பிற நிலத்துள்ளவற்றை உவமை கூறுவதாகச் செய்யுள் செய்தல் கூடாது என்னும் கருத்து.

***'தோழிக்காயின் நிலம் பெயர்ந்து உரையாது'*** (உ.அ:27)

என்ற நூற்பாவில் பெறப்படுகின்றது.

குறுந்தொகை 18ஆம் பாடலில் தோழி தலைவியின் அன்பு மிகுதியைத் தலைவனிடத்து எடுத்துக் கூறும்போது,

***"சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள்***
***உயிர்தவச் சிறிது காமமோ பெரிது"***

என்று கூறுகிறாள். இது அவள் வாழும் நிலத்திற்கண்ட கருப்பொருள் ஆகும். (சிறிய கிளையில் தொங்குகின்ற பெரிய பழம் போல)

**தலைவன் உவமை கூறல்:**

தலைவன் உவமை கூறுவானானால் அது அறிவோடு பொருந்தியிருக்கும் என்பதை,

***'கிழவோற்கு ஆயின் உரனோடு கிளக்கும்' (உ.இ. 28)***

என்று சுட்டுகிறார்.

ஏனெனில் தலைவன் தான் வாழும் நிலத்தை விட்டுப் பல இடங்களுக்கும் சென்று வருகின்ற வாய்ப்பு பெற்றவன் ஆகின்றான்.

***"குன்றுஇழி அருவியின் வெண்தேர் முடுக***
***இளம்பிறை அன்ன விளங்குசுடர் நேமி***
***விசும்புவீழ் கொள்ளியின் பைம்பயிர் துமிப்பக்***
***காலியாட செலவின் மாலை--------"***

(காலியர் செலவு – காற்றின் வேகம். நேமி-தேர்ச்சக்கரங்கள்)

இவரல்லாத பிறர் கூறும் உவமைகளுக்கு எல்லை வரையறை இல்லை என்பதை,

**"ஏனோர்க் கெல்லாம் இடம் வரைவின்றே"** (உ.இ:29)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

ஏனோர் என்பது நற்றாய் செவிலி போன்றவரைக் குறிக்கும்.

தலைவன், தலைவி, தோழி இவர்களது உவமைகள் மகிழ்ச்சி மற்றும் துன்பம் வெளிப்படுத்தும் தன்மையன என்பதை,

***"இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்***
***உவம மருங்கில் தோன்றும் என்ப"*** (உ.இ. 30)

என்று கூறுகிறார்.

***"---------------------------------வானத்து***

***அணங்கரும் கடவுள் அன்னோள்"*** (அகம்:16)

நின் மனைவி என்பது இனிதுறு கிளவி.

குறுந்தொகை 117ஆம் பாடலில்,

***"கயிறு அரி எருத்தின் கதழும் துறைவன்"***

என்ற வரிகளில், பெண்டிர் தடுக்கக் கயிறறுத்துக் கொண்டு ஓடுகின்ற எருது போலப் போய்விட்டாய் என்று கூறுவது துனியுறு கிளவி ஆகும்.

இனி உவமை கூறும் இடம் பற்றிய செய்திகளை காண்போம்.

**தலைமகள்:**

இன்பம் மற்றும் துன்பம் பயத்தல் என்று வரும் இரண்டிடங்களிலும் தலைவி உவமை கூறுதற்குரியவள்.

**தலைமகன்:**

***"கிழவோற்கு ஆயின இடம் வரைவின்றே"***

என்பதால் இன்ன இடம் என்ற வரையறை இன்றி எவ்விடத்தும் தலைவன் உவமை கூறலாம் என்கிறார்.

**தோழி, செவிலி:**

இவர்கள் கூறுகின்ற உவமைகள் ஏற்றுக்கொள்ளுவதற்கு உரியவைகளே என்று கேட்போர் ஏற்கத்தக்க இடங்களைத் தேர்ந்து எடுத்துக் கூறல் வேண்டும் என்பர். இதற்கு

***"பருதிஅம் செல்வன் விரிகதிர்த் தானைக்கு***

***இருள்வளைப் புண்ட மருள்புட பூம்பொழில்"***

என்பதனை இளம்பூரணர் உதாரணம் காட்டுகின்றார். அதாவது மரங்கள் செழித்து வளர்ந்து அடர்ந்து இருப்பதால் சோலை இருள் அடைந்தது போல் உள்ளது. இதனைக் கூற விரும்பிய தோழி, சூரியனுடைய விரிந்த கதிர்களாகிய படைகளால் வளைக்கப்பட்ட இரள் தோற்றோடி வந்து மயங்கிக் கிடக்கிறது சோலை என்கிறாள்.

இவ்வாறு மேலே எடுத்துக் கூறப்பட்ட இலக்கணங்களிலிருந்து வேறுபட்டு வருகின்ற உவமைகளை, கூறப்பட்ட மரபுகளை மனத்தில் கொண்டு, விதிகளுக்கேற்ப பொருத்தி ஏற்றுக் கொள்க என்று,

**"வேறுபட வந்த உவமைத் தோற்றம்**

**கூறிய மருங்கின் கொள்வழிக் கொளாஅல்"** (உ.இ:34)

என்ற புறநடை நூற்பாவில் உணர்த்தியுள்ளார்.

**உவமை அமையும் வேறுசில முறைகள்:**

1. ***"ஓரீஇக் கூறலும் மரீஇய பண்பே"*** (உ.இ:34)

என்ற நூற்பா. உவமையும் பொருளும் இந்தக் காரணங்களால் ஒப்பாகாது என்று விளக்கிக் கூறலும் உவமை மரபாகும் என்று கூறுகிறது.

***"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்***
***அடிக்கு நெருஞ்சிப் பழம்"***

என்பதில் இம்மரபு இடம்பெறுகின்றது.

மேலும் புறம் 8ம் பாடலில் கதிரவனே! நீ பகற்பொழுது மட்டும் என்ற வரையறை கொண்டுள்ளாய்: திங்கள் தோன்றினால் புறம் காட்டி ஓடிவிடுகின்றாய் தெற்கும் வடக்குமாக மாறி மாறி வருகின்றாய். மலைக்குப் பின் சென்று மறைந்து விடுகின்றாய். இப்படிப்பட்ட நீ பகலிலும் இரவிலுமாக ஆணை செலுத்துபவனும், பிறருக்குப் புறம்காட்டி ஓடாதவனும் சொல் மாறாது நிலையாக ஆட்சி செய்பவனும் என்றும் புகழ் மறையாது வாழ்பவனும் ஆகிய

***"கடந்தடு தானைச் சேர லாதனை***
***யாங்ஙனம் ஒத்தியோ"***

என்று வினவுவதாக வரும் உவமைகள் ஒத்து நோக்கற்பாலன.

2. உவமையை மட்டும் கூறி உவமேயத்தைக் கூறாமல் விடுவதும் ஒரு மரபாகும். (உ.இ.36)

***"பாரி பாரி என்றுபல ஏத்தி***
***ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்***
***பாரி ஒருவனும் அல்லன்***
***மாரியும் உண்டுஈண்டு உலகு புரப்பதுவே"*** (புறம் : 107)

என்ற பாடலில் மாரி போன்று (மழை) கைம்மாறு கருதாமல் உதவுபவன் பாரி என்று கூற நினைத்த புலவர் அதனைமட்டும் கூறவில்லை. மாறாக பாரி மட்டும் அல்லன்: மழையும் அவ்வாறு செய்கின்றதே என்று கூறியுள்ளார்.

3. உவமை கூறும்போது பல ஐய வினாக்கள் எழுப்பியும் பொருளைச் சிறப்பித்தல் உண்டு என்பதை,

***"தடுமாறு உவமம் கடிவரை யின்றே"*** (உ.இ.37)

என்று சுட்டுகிறார். இது தடுமாறு உவமம் அல்லது ஐய உவமம் எனப்படும்.

***"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்***
***நோக்கம் இம்மூன்றும் உடைத்து"*** (குறள் : 108)

என்பதில் பெண்ணின் பார்வை சிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. ஓரிடத்துப் பல உவமைகள் தொடர்ந்து வருகின்ற மரபும் உண்டு என்கின்றார் தொல்காப்பியர். அது நிரல்நிறுத்தமைத்தல், நிரல்நிறை, சுண்ணம் என்று மூன்று வகைப்படும் என்று கூறுகிறது நூற்பா 38.

எடுத்துக்காட்டாக தாழைமடல் வெண்சங்கு போன்றுள்ளது என்று கூறி, அந்த வெண்சங்கு வெண்திங்கள் போன்று உள்ளது என்று அடுக்கிக் கூறுதல்.

1. **நிரல் நிறுத்து அமைத்தல்:**

பல உவமைகள் வரிசையாக வர பின் உவமேயத்திற்கு உரிய உவமச் சொல்லால் ஒப்புமைப்படுத்திக் கூறுதல்.

***"நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின்***

***அளப்பரி யையே"*** ***(பதிற்:14***)

என்பதில் சேரமன்னனைச் சிறப்பித்துப் பாட நினைத்த புலவர் அவளது பொறுமைக்கு நிலத்தையும், இரக்கப்பண்பிற்கு நீரினையும், ஆற்றலுக்குக் காற்றையும் (வளி) கல்விப் பெருக்கத்திற்கு வானத்தையும் உவமையாக்கி உள்ளார்.

(நிரல் நிறுத்தல் - வரிசையாக அமைத்தல், வளி-காற்று, 'இன' –உவம உருபு)

2. **நிரல்நிறை:** உவமைகள். உவமானங்களைத் தனித்தனியாக வரிசைப்படுத்தி அமைத்தல்.

***"கொடி குவளை கொட்டை நுசுப்பு உண்கண் மேனி***

***மதிபவளம் முத்தம் முகம்வாய் முறுவல்"***

என்பதின் முதல்வரியில்,

கொடி, குவளை, கொட்டை உவமைகள்

நுசுப்பு(இடை), உண்கண், மேனி உவமேயங்கள்

அடுத்து,

மதி, பவளம், முத்து - உவமைகள்

முகம், வாய், முறுவல்- உவமேயங்கள்

பொருள் கொள்ளும் போது கொடி போன்ற இடை, குவளை, போன்ற கண்கள், கொட்டை போன்ற மேனி, மதி போன்ற முகம், பவளம் போன்ற வாய், முத்து போன்ற பற்கள் என்று இணைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

1. **சுண்ணம்:** உவமையும், உவமேயமும் தனித்தனியாக நிற்க, பொருள் பொருத்தமுற அவற்றை இணைத்துப் பொருள் சிறக்கும் தொடராக்கிக் கொள்ளுதல்.

கானக நாடன் சுனையில்,

***"சுரை ஆழ அம்மி மிதப்ப***

***யானைக்கு நீத்து முயற்கு நிலை என்ப"***

என்று பாடப்பட்டுள்ளது. இதில் உள்ளவாறே பொருள் கொள்ள கருத்து முரண்படும். எனவே, சுனையில் சுரை மிதக்கும், அம்மி ஆழும், யானை நிற்கும், முயல் நீந்தும் என்று பொருத்தமுற இணைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறாக உவமை பற்றிய பல செய்திகள் உவம இயலில் தெளிவு செய்யப்பட்டுள்ளன.

## உவம இயல் - பயிற்சி வினாக்கள்

### I. குறு வினாக்கள்

1. உவமையின் இலக்கணம் என்ன?
2. உவமை வகைகளைச் சான்றுகாட்டி நிறுவுக.
3. உவம உருபுகளைத் தொகுத்துரைக்க.
4. “விரவியும் வரூஉம் மரபின என்ப” – விளக்குக.
5. உவமை தோன்றும் நிலைகளன்கள் யாவை?
6. வினை உவம உருபுகள் எவை?
7. பயன் உவம உருபுகள் எவை?
8. மெய் உவம உருபுகள் எவை?
9. உரு உவம உருபுகள் எவை?
10. “நாலிரண்டாகும் பாலுமார் உண்டே” – விளக்குக.
11. உவமப் போலியின் வகைகளைக் கூறி அவற்றுள் ஒன்றினைச் சான்று காட்டி நிறுவுக

### II. கட்டுரை வினாக்கள்:

1. உவம இயல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
2. உவமையின் வகைகளை விளக்குக.
3. உவம உருபுகளை வகைப்படுத்தி விளக்குக.
4. ‘உவம போலி’ குறித்துக் கட்டுரை வரைக.
5. உவமைக் கூறுதற்குரியார் யார் யார்? அவர்கள் பின்பற்ற வேண்டிய மரபுகள் யாவை?
6. உவமை மரபுகளைச் சான்றுடன் விளக்குக.

**கூறு : 8**

## செய்யுளியல்

ஆழமான உணர்ச்சிகளைத் தங்கு தடையில்லாமல் வெளிப்படுத்துவது கவிதை என்பார் வோர்ட்ஸ்வொர்த். அதன் அடிப்படையில் சுருங்கச் சொல்லல் பொருளின் ஆழம், இனிய சொற்கள், பொருள்கள், பொருள் ஒருமை ஆகிய பண்புகளைப் பெற்றதே கவிதை எனலாம்.

***"உள்ளத்துள்ளது கவிதை - இன்ப***
***உருவெடுப்பது கவிதை***
***தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை***
***தெரிந்துரைப்பது கவிதை"***

என்பது கவிதை அல்லது செய்யுளுக்கு கவிமணி தரும் விளக்கம் ஆகும்.

தொல்காப்பியரிடம் முழுமையான இலக்கிய மற்றும் இலக்கண அறிவும் பயிற்சியும் அமைந்துள்ளன. செய்யுள் இலக்கணம் பற்றிய ஒருசில செய்திகளை எழுத்து மற்றும் சொல்லதிகாரத்தில் தேவையின் அடிப்படையில் கூறிச் சென்றுள்ள தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் உள்ள செய்யுளியலில் செய்யுள் பற்றிய முழுமையான இலக்கணத்தை விளக்குகின்றார். இச்செய்யுளியலைப் பின்பற்றியே அமிதசாகரனாரின் யாப்பருங்கலம் மற்றும் காரிகை போன்ற யாப்பு நூல்கள் வெளி வந்துள்ளன.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் எட்டாவது இயல் செய்யுளியல் ஆகும். செய்யுள் இலக்கணம் கூறியமையால் செய்யுளியல் என்ற பெயரைப் பெற்றது. இளம்பூரணர் பார்வையில் இவ்வியல் 235 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. பேராசிரியர் மற்றும் நச்சினார்க்கினியர் போன்றோர் 243 நூற்பாக்கள் உள்ளன என்று கூறுகின்றனர்.

இனி, செய்யுளியல் செய்திகளைக் காண்போம்.

செய்யுள் உறுப்புகள்:

''மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ'' என்ற முதல் நூற்பாவில் செய்யுள் உறுப்புகளாக 34 குறிப்பிடுகின்றார். அவற்றை 'ஆறு தலையிட்ட அந்நூல் ஐந்து எனவும்'' பொருந்தக் கூறிய எட்டு என்றும் இரண்டு பகுதியாகப் பிரிந்துரைக்கின்றார். இப்பாகுபாடு வடிவ அமைப்பு மற்றும் பொருள் அமைப்பு அடிப்படையிலமைந்தது.

**26 உறுப்புகளாவன:**

மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவு, திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம் என்பன.

**8 உறுப்புகளாவன:**

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன. இவற்றுள் முதலிய கூறிய 26 தனிநிலைச் செய்யுட்களுக்கும், பின்னர் கூறிய 8 உறுப்புகள் தொடர்நிலைச் செய்யுட்களுக்கும்(காப்பியம்) உரியவை என்பது பேராசிரியர் கருத்து.


இனி உறுப்புகள் பற்றிய செய்யுளியல் செய்திகளைக் காண்போம்.

**1. மாத்திரை:**

எழுத்துக்களை உச்சரிப்பதற்கு ஆகும் கால அளவே மாத்திரை எனப்படும். கண்ணிமைத்தல் மற்றும் கைநொடித்தலே மாத்திரை வரையறை செய்வதற்கான அடிப்படைகள் மாத்திரை பற்றிய செய்திகள் எழுத்ததகாரத்தில் சொல்லப்பட்டுள்ளன.

குறில் - 1மாத்திரை, நெடில் - 2மாத்திரை, அளபெடை – 3மாத்திரை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், மெய் - தனித்தனியே ½ மாத்திரை, ஒற்றளபெடை – 1மாத்திரை, ஐகாரக்குறுக்கம் - மாத்திரை, மகரக்குறுக்கம் - ¼ மாத்திரை, உயிர்மெய் - ஏறிய உயிரின் அளவாகும். மேற்கூறிய மாத்திரைகளின் அளவு செய்யுளில் ஓசைவேறுபாட்டை உணர்த்தவல்லன.

**எழுத்துவகை:** எழுத்துக்களைச் செய்யுளுக்கு ஏற்ப இயற்றிக் கொள்வது எழுத்தியல் எனப்படும்.



க,ச,ட,த,ப,ற ங,ஞ,ண,ந,ம,ன ய,ர,ல,வ,ழ,ள

என்று பாகுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த எழுத்துக்களை:

1. அசைக்கு உறுப்பாவன (குறில், நெடில், குற்றுகரம்)
2. தொடைக்கு உறுப்பாவன (நெடில், அளபெடை, உயிர், உயிர்மெய், மூவினம், ஐகார ஔகாரக் குறுக்கங்கள்)
3. வண்ணத்திற்கு உறுப்பாவன (குறில், நெடில், அளபெடை) என்று பிரித்துக் காட்டலாம்.

அசை வகை:

யாப்பின் அடிப்படையில் சந்தம், சந்தம் கவிஞரின் எண்ணமாற்றத்திற்கு ஏற்ப அமையும். இது அசைகளின் அமைப்பால் பிறப்பது. இந்த அசையை இயலசை, உரியசை என இரண்டாகப் பிரிப்பர் தொல்காப்பியர்.

நேரசையும் நிரையசையும் இயலசைகள், நேரசை என்பது நான்கு நிலைகளில் வரப்பெறும்.

| | | |
|---|---|---|
| நெடில் தனித்து வருவது | - | கோ |
| குறில் தனித்து வருவது | - | ழி |
| நெடில் ஒற்றுடன் இணைந்து வருவது | - | கால் |
| குறில் ஒற்றுடன் இணைந்து வருவது | - | கல் |

நிரையசை நான்கு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| குறில், இணைந்து வருவது | - | வெறி |
| குறில், நெடில் இணைந்து வருவது | - | பலா |
| குறில் இணைந்து ஒற்றுடன் வருவது | - | பகல் |
| குறில், நெடில் இணைந்து ஒற்றுடன் வருவது | - | குரால் |

இக்கருத்துக்களை கூறும் நூற்பா பின்வருமாறு:

***"குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்***
***ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி***
***நேரும் நிரையும் என்றிசின் பெயரே"*** (செ.இ.5)

**உரியசை:**

நேர்பு, நிரைபு அசைகள் உரியசை என்ற பெயரால் வழங்கப்படுகின்றன.

மேற்கூறிய நேர் அசையுடன் குற்றியலுகரமும் முற்றியலுகரமும் இணைய அமைவது நேர்பு அசை. ஆனால் அவற்றுள் தனிக்குறிலாகிய நேரசையுடன் இருவகை உகரங்களும் சேர்ந்து நேர்பு ஆகாது.

எ-டு:

காது - நேரசை, குற்றியலுகரம்
காற்று - நேரசை, குற்றியலுகரம்
கன்று - நேரசை, குற்றியலுகரம்
நாகு
கல்லு } - நேரசை+குற்றியலுகரம்

**நிரைபு:**

வரகு
அரக்கு
மலாடு
பனாட்டு } - நிரையசை+குற்றியலுகரம்

கதவு
புணர்சு
வினாவு } - நிரையசை+முற்றியலுகரம்

நேர்பு, நிரைபு அசைகளைக் காக்கைபாடினியார் போன்ற சில ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்வது இல்லை. மாறாக தேமா, புளிமா என்றே பிரித்தனர். ஆனால் வெண்பாவின் ஈற்றில் வந்த குற்றுகர நேர் ஈற்று இயற்சீரைத் தேமா, புளிமா என்று பிரித்தால் செப்பலோசை குன்றும் என்பதால் அவ்விடத்தில் மட்டும் காசு, பிறப்பு என்று உதாரணம் காட்டினார்கள். அத்துடன் சீரும், தளையும் சிதையும் இடத்துக் குற்றியலுகரம் அலகு பெறாது என்றும விதி கூறினார்கள். வெண்பா ஈற்றிலும் முற்றுகரம் ஒரு சில இடங்களில் வரும் என்று உடன்பட்டார்கள். எனவே இவற்றை நேர்பு அசை, நிரைபு அசை என்று கொள்ளுவதே சிறப்புடையது என்று இளம்பூரணர் கூறுகிறார்.

அலகிடும் போது நேரசை ஓரலகு, நிரையசை இரண்டலகு, நேர்பு அசை மூன்றலகு, நிரைபு நான்கலகு பெறும் என்பர் இளம்பூரணர். அலகிடுதல் என்பது பிற்காலத்தில் அசை பிரித்தல் ஆயிற்று.

**அசைக்கு உரிய மரபுகள்:**

***"தனிக்குறில் முதலசை மொழி சிதைந்து ஆகாது"*** என்பதால் தொடர்மொழியில் மொழியைச் சிதைக்கும் தனிக்குறிலை நேரசையாகக் கொள்ளக்கூடாது.

எ.டு: புளிமா என்பதனை நிரை நேர் என்று கொள்ள வேண்டுமே அல்லாமல் புளிமா என்று பிரித்து நேர் நிரை என்று கொள்ளுதல் கூடாது. இதுவே, மொழி சிதைத்தல் என்பது.

மொழி சிதையாதபோது, தனிக்குறில் நேரசை ஆகும்.

***"அ அவனும் இ இவனும் உ உவனும்...."*** என்பதில் அ, இ, உ என்ற மூன்றும் விட்டிசைத்து வருவதால் அங்கு அவை நேரசை ஆகின்றன.

விட்டிசை என்பது ஏவல், குறிப்பு, தற்சுட்டு, வினா சுட்டு என்ற ஐந்து பொருளில் வரும் என்பார் இளம்பூரணர். குற்றியலிகரம் அசை பிரித்தலின் போது எவ்வாறு கொள்ளப்படும் என்று காண்போம்.

***"ஒற்றெழுத்து இயற்றே குற்றியலிகரம்"***

என்று தொல்காப்பியர் கூறுவதால் அசை பிரித்து அலகிடும்போது குற்றியலிகரம் ஒற்றெழுத்தின் இயல்பைப் பெறும் என்பது கருத்து.

"பேதை என்ப தியாதென் வினவின"

என்பதில் என் / ப – தேமா

தியா /தென் - கருவிளம்

என்று பிரித்தால் மா முன் நிரை வந்து அகவலோசை பிறழ்கிறது. குற்றியலிகரத்தை(தி) விட்டு விட்டுக்(தி) யா /தென என்று பிரித்தால் மா முன் நேர் வந்து ஓசை குன்றாது. எனவே குற்றியலிகரத்தை விட்டுவிட வேண்டும். அதாவது அதனை ஒற்றெழுத்தாகக் கொண்டுவிட வேண்டும்.

**முற்றியலுகரம்:**

நிலைமொழியில் இயல்பாக முற்றியலுகரம் இருந்தால்தான் அதனை நேர்பு, நிரைபு என்று கொள்ளலாம்.

***"அங்கண் மதியம் அரவுவாய்ப் பட்டென"***

என்பதில் அரவு என்பது இயல்பாக நின்று நிரைபு அசை ஆயிற்று. ஆனால்

***"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்"***

என்ற அடியில் வருமொழியிலுள்ள 'முத்' என்பது 'பெரு' என்ற நிலைமொழியுடன் இணைந்து வகையுளியாக 'பெருமுத' என்று நிற்கிறது.

இதனை நிரைநேர் என்று அலகிட வேண்டுமே அல்லாமல் நிரைபு அசை என்று அலகிடல் கூடாது. முற்றியலுகரம் ஈற்றடிக்கண் விலக்கப்படும் என்ற முற்றியலுகரக் கருத்துக்கள்,

***"முற்றிய லுகரமும் மொழி சிதைந்துக் கொளாஅ***

***நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்"***

என்ற நூற்பாவால் பெறப்படுகின்றது.

இனி, வகையுளி என்றால் என்ன என்று காண்போம். அசையும் சீரும் ஓசையோடு இணைந்து செல்லவேண்டும். அலகிடும்போது தளையும் சீரும் சிதைந்தால் அப்போது ஓசையை நோக்கி அதன்வழி இணைக்க வேண்டும்.

***'நிலமிசை நீடுவாழ் வார்'***

என்ற அடியில் பொருள்அடிப்படையில் 'வாழ்வார்' என்று பிரித்தால் வெண்பாவிற்குரிய செப்பலோசை கெடும். எனவே ''நீடுவாழ் வார்' என்று பிரித்துக் காண வேண்டும். இதுவே வகையுளி எனப்படும்.

வகையுளி இரண்டு வகைப்படும். எழுத்து வகையுளி, சொல்வகையுளி என்பன.

நீடு – கொடி – நேர்பு நிரை இதனை வகையுளி செய்வோர் நீடு-கொ-டி-நேர் நிரை நேர் என்று ஆக்கவர். இது எழுத்து வகையுளி.

அசைகளை இவ்வாறு பொருளுக்கேற்ப ஓசையோடு சேர்த்து இணைத்தால் அது சொல்வகையுளி ஆகும்.

***'அசையும் சீரும் இசையோடு சேர்த்தி***

***வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆரே'*** என்பது நூற்பா.

**அளபெடை:**

உயிரெளபெடையும், ஒற்றளபெடையும் பெரும்பாலும் அசை கொள்ளப்படும். சிறுபான்மை அசை பெறாமல் விலக்கப்படும்.

***'கடாஅ உருவொடு --------------------'*** என்ற குறட்பாவில் உயிரளபெடை அலகு பெறுகிறது. பெறாவிட்டால் 'கடாஅ' என்பது ஓரசை ஆகி வெண்பா இலக்கணம் சிதையும் எனவே கடா..ஃ.அ நிரை, நேர் என்று கொள்ளப்படும்.

'உப் /போ /ஒ என /வுரைத் /து' இதனை நேர் நேர் நேர் - நிரை நிரை நேர் எனக் கொண்டால் காய் முன் நிரை வந்து செப்பலோசை குன்றும். எனவே இதில் வரும் அளபெடையை விட்டுவிட்டு

***'உப்போ எனவுரைத்து'*** எனக் கொள்ளும்போது தேமா முன் நிரை வர செப்பலோசை குன்றாது. இவ்வாறே ஒற்றளபெடைக்கும் கொள்ள வேண்டும்.

கண் /ண /டண் /ண ணெனக்' என்ற வரியில் முதல் சொல்லை நேர் நேர் என்று கொள்ள வேண்டும். ஆனால் 'டண்ண ணெனக்'' என்பதில் 'டண்ண' என்பது நேர்: 'ணெணக்' என்பது நிரை. எனவே 'கண் /ண் டண்ண ணெணக' என்பது நேர் நேர் நேர் நிரை என்றே அலகு பிரிக்கப்படுகிறது.

இதுவரையில் கூறப்பெற்றது அசை பற்றிய செய்திகள். இனி அசையால் ஆகும் சீர் பற்றிய செய்திகளை நோக்குவோம்.

**சீர்:** அசையால் அமைவது சீர். இரண்டு அசைகள் அல்லது மூன்று அசைகள் இணைந்து பொருந்தி வருவது சீர் எனப்படும்.

''தா /மரை புரை /யும் கா /மர் சே /வடி'' - ஈரசை இணைவு

''எந் /நன் /றி கொன் /றார்க் /கு முய் /வுண் /டா முய் /வில் /லை'' - மூவசை இணைவு

**சீர் பாகுபாடு:**

***'இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை***

***உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்'***

என்பதால் இயலசை இணைவு.

இயற்சீர்: உரியசை இணைவு ஆசிரிய உரிச்சீர் என சீர் இரண்டு வகைப்படும் என்பது தெரிகிறது.

ஓரசையால் அமையும் சீர்கள் 4

அவை நேர், நிரை, நேர்பு, நிரைபு

**ஈரசைச் சீர்கள்: 16**

ஓரசைச் சீர்கள் நான்கும் தம்மின் உறழ்ப் பிறப்பவை ஈரசைச் சீர்கள். அவை

| | | | |
|---|---|---|---|
| நேர் நேர் | - | தேமா | இவை இயற்சீர் |
| நிரை நேர் | - | புளிமா | |
| நேர் நிரை | - | கூவிளம் | |
| நிரை நிரை | - | கருவிளம் | |

| | | | |
|---|---|---|---|
| நேர்பு நேர்பு | – | ஆற்று நோக்கு | இவை ஆசிரிய உரிச்சீர் |
| நிரைபு நேர்பு | – | வரகு சோறு | |
| நேர்பு நிரைபு | – | ஆற்று வரவு | |
| நிரைபு நிரைபு | – | வரகு தவிடு | |

| | | | |
|---|---|---|---|
| நேர்பு நிரை | - | ஆற்றுமடை | உரியசை முன் இயலசை வந்தசீர்கள் 4 |
| நிரைபு நிரைபு | - | குளத்துமடை | |
| நேர்பு நேர் | - | ஆற்றுக்கால் | |
| நிரைபுநேர் | - | குளத்துக்கால் | |

| | | | |
|---|---|---|---|
| நேர் நேர்பு | - | மாங்காடு | இயல்அசை முன் உரியசை வந்த சீர்கள் 4 |
| நிரை நேர்பு | - | களங்காடு | |
| நேர் நிரைபு | - | பாய்குரங்கு | |
| நிரை நிரைபு | - | கடிகுரங்கு | |

இவற்றுள் இயற்சீர் 10 ஆசிரிய உரிச்சீர் 6 ஆக 16.

**மூவசைச் சீர்கள்: 64**

ஈரசைச் சீர்கள் பதினாறுடன் நேர், நிரை, நேர்பு தனித்தனியே பொருந்த மூவகைச்சீர்கள் 64 ஆகும். இவற்றுள் இயற்சீர் நான்கின் பின் நேரசை இணைந்த மூவகைச்சீர்கள் நான்கு வெண்பா உரிச்சீர் ஆகும்.

***"இயற்சீர் இறுதிமுன் நேர் அவண் நிற்பின்***
***உரிச்சீர் வெண்பா ஆகும் எனப"*** என்பது தொல்காப்பியம்.

1. நேர் நேர் நேர் - மா /வாழ /கான்
2. நிரை நேர் நேர் - புலி /வாழ் /கான்
3. நிரை நிரை நேர் - புலி /வரு /கான்
4. நேர் நிரை நேர் - மா /வரு /கான்

## வஞ்சியுரிச்சீர் 60:

வெண்சீர் அல்லாத ஏனைய 60 மூவசைச்சீர்களும் வஞ்சியுரிச்சீர் ஆகும். இவற்றுள் நேர் ஈற்று வஞ்சி உரிச்சீர் ஆகும். அவை ஈரசைச்சீர் 12 உடன் நேர் இணையப்பிறப்பவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நேர்பு | நேர்பு | + நேர் | 1. பாம்பு போகு கான் |
| 2. | நிரைபு | நேர்பு | | 2. பாம்பு போகு கான் |
| 3. | நிரைபு | நிரைபு | | 3. களிறு வழங்கு கான் |
| 4. | நேர்பு | நிரைபு | | 4. பாம்பு வழங்கு கான் |
| 5. | நேர்பு | நிரை | | 5. பாம்பு வரு கான் |
| 6. | நிரைபு | நிரை | | 6. களிறு வரு கான் |
| 7 | நேர்பு | நேர் | | 7. பாம்பு வாழ் கான் |
| 8. | நிரைபு | நேர் | | 8. களிறு வாழ் கான் |
| 9. | நேர் | நேர்பு | | 9. மா போகு கான் |
| 10. | நிரை | நேர்பு | | 10. புலி போகு கான் |
| 11. | நேர் | நிரைபு | | 11. மா வழங்கு கான் |
| 12. | நிரை | நிரைபு | | 12. புலி வழங்கு கான் |

நிரை ஈற்று வஞ்சி உரிச்சீர்கள் 16 உடன் நிரை இணையப் பிறக்கும்.

**மூவசைச்சீர்கள் பின்வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| நேர் | நேர் | + நிரை | மா வாழ் நெறி |
| நிரை | நேர் | | புலி வாழ் நெறி |
| நிரை | நிரை | | புலி வரு நெறி |
| நேர் | நிரை | | மா வரு நெறி |
| நேர்பு | நேர்பு | | பாம் போகு நெறி |
| நிரைபு | நேர்பு | | களிறு போகு நெறி |
| நிரைபு | நிரைபு | | களிறு வழங்கு நெறி |
| நேர்பு | நிரைபு | | பாம்பு வழங்கு நெறி |
| நேர்பு | நிரை | | பாம்பு வரு நெறி |

| | | |
|---|---|---|
| நிரைபு | நிரை | களிறு வரு நெறி |
| நேர்பு | நேர் | பாம்பு வாழ் நெறி |
| நிரைபு | நேர் | களிறு வாழ் நெறி |
| நேர் | நேர்பு | பாம்பு வாழ் நெறி |

| | | | |
|---|---|---|---|
| நிரை | நிரைபு | + நிரை | மா போகு நெறி |
| நேர் | நிரைபு | | புலி போகு நெறி |
| நிரை | நிரைபு | | மா வழங்கு நெறி |
| | | | புலி வழங்கு நெறி |

நேர் ஈற்று

ஈரசைச் சீர்கள் நேர்பு

மேற்கூறிய 16 உடன் நிரைபு இணைய வருபவை.

மேற்கூறிய வாய்ப்பாடுகளுடன் இறுதியில் பொருப்பு எனும் நிரைபு அசை இணையப் பிறப்பவை.

எ.டு: மா வாழ் பொருப்பு

புலி வாழ் பொருப்பு

புலி வாழ் பொருப்பு

மா வரு பொருப்பு

என வரும் 16 சீர்கள்.

இவையே வஞ்சிஉரிச்சீர்கள் 60 ஆகும்.

இனி, இச்சீர்கள் பாக்களில் இடம்பெறும் தன்மை பற்றிய செய்திகள் காண்போம்.

பாக்களை ஆக்குவன சீர்கள் அந்நிலையில் எந்தெந்த பாவில் எந்தெந்த சீர்கள் இடம்பெறும் என்று காண்போம்.

### 1. வெண்பா:

இயற்சீர் நான்குநேர் வந்த மூவசைச் சீர்கள் நான்கும் வெண்பாவிற்குரியன. இப்பாவடியில் வெண்பா உரிச்சீரும் ஆசிரிய உரிச்சீரும் ஒருங்கு இணைந்து நிற்பதில்லை.

***'வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்***

***இன்பா நேரடிக்கு ஒருங்கு நிலை இலவே'***

என்கிறார் தொல்காப்பியர்.

### 2. வஞ்சிப்பா:

வஞ்சி உரிச்சீர்கள் அறுபதும் வஞ்சிப்பாவில் இடம்பெறும் வெண்பா உரிச்சீரும் ஆசிரிய உரிச்சீரும் வரப்பெறும். அடி இறுதியில் தேமா, புளிமா என்ற நேரீற்று இயற்சீர்கள் வராது.

### 3. கலிப்பா:

வெண்பா உரிச்சீரும், ஆசிரிய உரிச்சீரும் சிறுபான்மை ஒருங்கு நிற்கப் பெறும். நேரீற்று இயற்சீர்கள் (தேமா, புளிமா) வரப்பெறாது.

### 4. ஆசிரியப்பா:

வெண்பா உரிச்சீர் பயின்று வரலாம். சிறுபான்மை வஞ்சி உரிச்சீரும் வரலாம்.

இவ்வாறு கூறியவர்,

***"இசைநிலை நிறைய நிற்குவ தாயின்***

***அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே"***

என்று தொல்காப்பியர் கூறுவதால், இசைநிலையால் சீர்தன்மை பெறுமானால் ஓரசையும் சீர்நிலை பெறும் தகுதி உடையது என்பது தெரிகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 'கழறொழ மன்னாதங் கை' | - | நேரசை | - | நாள் |
| 'புனனாடன் பேரே வரும' | - | நிரையசை | - | மலர் |
| 'எய்போற் கிடந்தானென் னேறு' | - | நேர்பு | - | காசு |
| 'மேவாரை யட்ட கனத்து' | - | நிரைபு | - | பிறப்பு |

### பாக்களில் வரும் அடிகளும் இலக்கணமும்:

**வஞ்சிப்பா:**

இரண்டு சீர்களை உடைய அடி வஞ்சிப்பாவிற்கு உரியது. சிறுமை மூன்று எழுத்து பெருமை ஆறு எழுத்து வஞ்சியடி சில இடங்களில் முச்சீராலும் வரப்பெறும். இது சிறப்பற்றது.

1 2 3 4

''துங்குகையான் ஓங்குநடைய உறழ்மணியாள் உயிர்மருப்பின்''

முதற்சீர் - 3 எழுத்துளு இரண்டாம் சீர் - 4 எழுத்து

மூன்றாம் சீர் - 5 எழுத்துளு நான்காம் சீர் - 6 எழுத்து

இருசீரடி, முச்சீரடி ஆகிய இருவகை வஞ்சி அடியிலும் அசை கூனாகி வரப்பெறும். (கூன்- அடி முதலில் பாவினது பொருளைத் தழுவி நிற்கும் அசையும் சீரும்)

எ.டு: ***வாள் வாந்தரப் மறுப்பட்டன***

***அடி அதர்சேர்தலி னகஞ்சிவந்தன***

***வண்டு மலர் சேர்ந்த பரிபாடின***

இவற்றை விளக்கும் தொல்காப்பிய நூற்பாவில் பின்வருமாறு

***'வஞ்சி அடியே இரு சீர்த்தாகும்'***
***'தன்சீர் எழுத்தின் சிறுமை மூன்றே'***
***'முச்சீரால் வரமிடன் உடைத்தே'***
***'அசை கூன் ஆகும் அவ்வயின் ஆன'*** (செய்யுள் : 43-46)

குறளடி முதலாக அளவடியளவும் வஞ்சியுர்ச்சீர் வந்து உறழும் நிலை இல்லை.

வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இயல்பினைப் பெற்றது ஈற்றயலடி மூன்று அல்லது நான்கு சீர்களால் வரப்பெறும்.

எ-டு: ***"பூந்தாமரைப் போதலமர"*** எனத் துவங்கும் வஞ்சிப்பாடலில்

***"மகிழு மகிழ்தூங் கூரன்***

***புகழ்த லானாப் பெருவன் மையனே"***

என்று ஈற்றயலடி மூச்சீர்களால் அமைந்துள்ளது.

***"தொடியுடைய தோள் மணந்தனன்"*** என்ற பாடலுள்

***"இடுக ஒன்றோ சுடுக வொன்றோ***

***படுவழிப் படுவிப் புகழ்வெய்யோன் தலையே"***

இக்கருத்தினை,

***"வஞ்சித் தூக்கே செந்துக்கு இயற்றே"*** (செய்யுள் : 68)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

(செந்தூக்கு – ஆசிரிய இறுதி)

இனி ஆசிரியப்பாவில் வரும் அடிகளும் அவற்றின் தன்மைகளும் பற்றிக் காண்போம். ஆசிரியப்பா நாற்சீரால் வரும் குறளடி முதலான ஐவகை அடிகளும் வரப்பெறும்.

தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து – 4 எழுத்து – குறளடி

போது சாந்தம் பொற்பவேந்தி – 7 எழுத்து – சிந்தடி

காமஞ் செப்பாது கண்டது மொழிமோ – 10 எழுத்து – சிந்தடி

ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர்சடை – 15 எழுத்து – நெடிலடி

கடுஞ் சினத்த கொல் களிறும் கதழ்பரிய கலிமாவும் 18 எழுத்துக்கள் - கழிநெடிலடி

***"ஐவகை அடியும் ஆசிரியக் குரிய"***

என்பது தொல்காப்பிய நூற்பா ஆகும். மேலும்

***"விராஅய் வரினும் ஒருஉ ருநிலை இலவே"*** (செய்யுள் - 50)

என்பதால் ஐவகை அடிகளும் ஆசிரியப்பாவில் ஒரே பாடலிலும் விரவி (கலந்த) வருவதும் நீக்கப்படாது என்பது அறியப்பெறுகிறது.

நேரொன்றாசிரியத் தளை, நிரையொன்றாசிரியத் தளை என்னும் இரண்டு ஆசிரியப்பாவிற்கு உரிய தளைகள்.

எ.டு: "அக /லிரு விசும் /பின் பா / யிருள் ப / ருகி

நி நி நி நே நே நி நி நே

நிரையொன்றாசிரியத்தளை நேரொன்யாசிரியத்தளை

இதனை,

***“சீரியல் மருங்கின் ஓரசை ஒப்பின்***

***ஆசிரியத் தளை என்று அறியல் வேண்டும்”*** (செய்யுள் : 53)

என்ற நூற்பாவில் அறியலாம்.

இயற்சீர் வெண்டளை ஆகிய வெண்பா அடி ஆசிரியப்பாவில் வரப்பெறலாம். எனவே தளை விரவுதல் பெரும்பான்மை அடி விரவுதல் சிறுபான்மை என்பார் இளம்பூரணர்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ‘கடல் / | பா | டொழி / | யா | இன / | மீன் | முகந் / | து’ |
| நி | நே | நி | நே | நி | நே | நி | நே |
| இயற்சீர் | வெண்டளை | | வெண்டளை | இயற்சீர் | வெண்டளை | | இயற்சீர் |

இவ்வாறு,

***‘இயற்சீரும் வெள்ளடி ஆசிரிய மருங்கின்***

***நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே’***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

ஒரே பாடலில் ஆசிரியப்பாவிற்குரிய தளைகளும் வெண்பாவிற்குரிய தளைகளும் விரவியும் வரலாம்.

***‘வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்***

***ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப***

***அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு***

***நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே’*** (செய்யுள் : 60,61)

ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீர் பெற்று வருவதே பெரும்பான்மை. இடையிலும் முச்சீர் வரும்.

***‘நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்***

***சாரச் சார்ந்து தீரத் தீரும்***

***சாரல் நாடன் கேண்மை***

***சாரச் சாரச் சார்ந்து***

***தீரத் தீரத் தீர்பொல் லாதே’***

இடையிடையே மூன்று சீர்கள் வந்துள்ள ஆசிரியப்பா. இவ்வியலினை

*“ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கில்*

*தோற்ற முச்சீர்த் தாகும் என்ப”*

*“இடையும் வரையார்தொடையுணர்ந் தோரே”* (செய்யுள் : 65,66)

ஆசிரியப்பாவில் சீர் முழுவதும் கூனாகி வரப்பெறும்.

***“சீர் கூன் ஆதல் நேரடிக்கு உரித்தே”*** (செய்யுள் : 67)

வெண்பாவில் வரும் அடிகளும் அவற்றின் இயல்புகளும்:

வெண்பாவில் அளவடியும் சிந்தடியும் வரப்பெறும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரப்பெறும்.

**இயற்சீர் வெண்டளை:** நிரை முன் நேர்

: நேர் முன் நிரை வருதல்

**வெண்சீர் வெண்டளை:** காய் முன் நேர் வருதல்

எ.டு:

'மட்/ டுத் /தா னுன் / டு மணஞ் / சேர்த் / து விட் / டுக்'
நே நே நே நே நே நே நி நே நே நே

'களி /யா னை /கொண் /டு /வா வென் /றான் அளி / யார் / முன'
நி நே நே நே நே நே நே நே நி நே நே

'யா /ரோ வெதிர் /நிற் பவர்
நே நே நி நே

இரண்டு தளையும் விரவி வந்துள்ளது.

"மலர் / மிசை ஏ / கினாள் மா / ணடி சேர்ந் / தார்
நி நி நே நி நே நி நே நே

நிரை முன் நேர் மட்டும் வந்து இயற்சீர் வெண்டளை.

" முக /மறி /யார் மூ / துணர்ந் /தார் முள் /ளெயிற்/ றார் கா / மம்
நி நி நே நே நி நே நே நி நே நே நே
கருவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய்

காய் முன் நேர் வந்து வெண்சீர் வெண்டளை ஆயிற்று.

வெண்பாவின் ஈற்றடி மூன்று சீர்களை உடையது. இறுதிச் சீர் அசைச் சீராகும். இறுதிச்சீரின் அயல் (முந்திய) சீர் நேர் ஈற்று இயற்சீராக வந்தால் (தேமா, புளிமா) இறுதி வரை, நிரைபு ஆகிய அசை பெற்று முடியும். அயல்சீர் நிரை ஈற்று இயற்சீராக வந்தால் (கருவிளம், கூவிளம்) இறுதி நேர், நேர்பு ஆகிய அசை பெற்று முடியும். அயல் வெண்பா உரிச்சீராக வந்தால் நேர் அல்லது நேர்பு அசையில் முடியும்.

எ.டு:

***"கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்***
***தாளை வணங் காத் தலை"***
***"வானொடு தேன்கலந் தற்றே பணிமொழி***
***வாலெயி லூறிய நீர்"***

***“நனறி மறப்பது நன்றன்று நன்றல்லது***
***அன்றே மறப்பது நன்று”***
***“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்***
***இறைவ னடிசேரா தார்”***
***“இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்***
***பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு”***

போன்ற குறட்பாக்களை அலகிட்டுக் காண்க.

மேற்கூறிய செய்திகளை,

***“வெண்பா ஈற்றடி முச்சீர்த் தாகும்***
***அசைச் சீர்த் தாகும் அவ்வழி யான்”***
***“நேரீற்று இயற்ச்சீர் நிரையும் நிரையும்***
***சிரேற் றிநூஉம் இயற்கைய என்ப”***
***நிரை அவண்நிற்பின் நேரும் நேர்பும்***
***வரைவின்று என்ப வாய்மொழிப் புலவர்”*** (செய்யுள் : 66,70,71)

என்ற நூற்பாக்கள் மூலம் அறியலாம்.

### கலிப்பாவில் வரும் அடிகளும் இயல்புகளும்:

அளவடி மற்றும் நெடிலடியால் அமையப்பெறும் வெண்பா உரிச்சீர் நிற்க அதன்முன் வெண்சீர் (நேர் முன் நிரை) வந்து இணைதல் கலித்தளை ஆகும்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உரு | /பணி | /கண் | உறைப் | /பவு | /நீ | ஒழி | /பொல் | /லாய் | செவ | /லித் | /தல் |
| நி | நி | நே | நி | நி | நே | நி | நே | நே | நி | நே | நே |

என்று வந்தவாறு காண்க.

கலிப்பாவில் வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவி வரும். ஒரு சில இடங்களில் வஞ்சித்தளையும் வரப்பெறும்.

இவ்வாறு ஓரசைச்சீர் தளை கொள்ளும்போது சிதைவில்லாமல் இருக்கவேண்டுமானால் அதை இயற்சீர் வெண்டளை போலக் கொள்ள வேண்டும். வெண்சீர் ஈற்றசை ஆயின் அதனை நிரையீறாகக் கொள்ள வேண்டும் என்பதை

***“இயற்சீர் பாற்படுத்துத் தியற்றினர் கொளலே***
***தளைவகை சிதையாத் தன்மை யான”***
***“வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே***
***என்ற நூற்பாக்கள் உணர்த்துகின்றன”***

***“ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பம்”*** என்பர் பாரதியார். இத்தகைய இனிய ஓசை, இன்பம் தருவதற்கு இன்றியமையாத உறுப்புகளாவன அசை, சீர் பற்றி இதுவரையில் கண்டோம். இனி அடுத்து வரும் பாடப்பகுதியில் அடி மற்றும் தளை பற்றிக் காண்போம்.

**அடி மற்றும் தளை:**

செய்யுளில் 31 முதல் 75ஆம் நூற்பா வரையில் அடி இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அக்கருத்துக்களை காண்போம்.

**அடி இலக்கணம்:**

சீர் இரண்டோ பலவோ தொடர்ந்து வர அமையும் உறுப்பு அடி ஆகும். அவற்றுள் நாற்சீரடியே சிறப்பானது.

***"நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே"*** என்கிறார் தொல்காப்பியர்.

அடியின் கண் பயின்று வருவன தளையும், தொடையும். அவை நான்கு சீரடியில் வருமே அன்றி ஏனையவற்றில் வருதல் இல்லை. எனவே அடிவரையறை இல்லாதனவற்றில் தளையும் தொடையும் கொள்ளக் கூடாது.

***"அடிஉள்ளனவே தளையொடு தொடையே"***

***"அடி இறந்து வருதல் இல்லையென மொழிப"***

என்கிறது தொல்காப்பியர்.

இந்த அடியின் சிறப்பால் அமைவதே வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் பாக்கள்.

தொல்காப்பியர் எழுத்தின் அடிப்படையில் அடிகளை வரையறை செய்கின்றார். அடிகள் குறளடி, சிந்தடி, நேரடி அல்லது அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்று ஐந்து வகைப்படும். இனி இவை ஒவ்வொன்றையும் காண்போம்.

### 1. குறளடி:

4 முதல் 6 எழுத்தளவுள்ள மூன்று நிலத்தை உடையது குறளடி.

போர்ந்து சென்று சார்ந்து சார்ந்து – 4

தோர்ந்து தோர்ந்து மூசி தோர்ந்தது – 5

வண்டு சூழ விண்டு வீங்கி - 6

இப்பாடலில் உள்ள மெய்யெழுத்துக்களையும் குற்றியலுகரங்களையும் நீக்கி விட முதலடியில் நான்கு எழுத்து, இரண்டாம் அடியில் ஐந்து எழுத்து, மூன்றாம் அடியில் ஆறு எழுத்து வந்துள்ளதைக் காணலாம். (கோடிட்ட எழுத்துக்களை எண்ணுக)

### 2. சிந்தடி:

7 முதல் 9 எழுத்துக்கள் வரை அமைந்த 7,8,9 என்ற மூன்று நிலங்களை உடையது.

நீர்வாய் கொண்டு நீண்ட நீல - 7

நீர்வா யூதை வீச வூர்வாய் - 8

மணியே நுண்டோ டொல்கி மாலை - 9

7,8,9 எழுத்துக்களைக் கொண்ட சிந்தடி.

**3. அளவடி:**

10-14 எழுத்து அளவிலான 5 நிலத்தை உடையது.

நன்மணங் கமழும் பன்னெல்லூர - 10

வமையோர் மென்றோ ளம்பரி நடுங்க - 11

ணினையீ ரோதி யேந்திள வனமுலை - 12

யிறும் பமன் மலரிடை யெழுந்த மாவி- 13

னறுந்தழை துயல்வரூஉந் செறிந்தேங் தல்கு – 14

**4. நெடிலடி:**

15-17 எழுத்துக்கள் வரை அமைந்த மூன்று நிலங்களை உடையது.

**5. கழி நெடிலடி:**

நளிமுழவு முழங்கிய வணிநிலவு மணிநக - 18

ரிருந்தளவு மலரளவு கரும்புலவு நறுந்தோடை- 19

கலனளவு கலனளவு நலனளவு நலனளவு - 20

இவ்வாறான அடிகள் பற்றிய கருத்துக்களை கொண்ட தொல்காப்பிய நூற்பாக்கள் பின்வருமாறு

***"நாலெழுத்து ஆதியாகி ஆறெழுத்து***
***ஏறிய நிலத்தே குறளடி என்ப,***
***ஏழெழுத்து என்ப சிந்தடிக்கு அளவே"***
***"ஈரெழுத்து ஏற்றம் அல்வழி யான***
***பத்தெழுத்து என்ப நேரடிக்கு அளவே"***
***"ஒத்த நாலெழுத்து ஏற்றலங் கடையே***
***மூவைந்து எழுத்தே நெடிலடிக்கு அளவே"***
***"ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப"***
***"மூவாறு எழுத்தே கழிநெடிற்கு அளவே***
***ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப"***

ஒரு நீர் நேர் வாய்ப்பாட்டில் முடிந்தால் அதில் ஐந்து எழுத்துக்கள் வரை வரலாம். நிரை இறுதி பெற்ற வஞ்சி உரிச்சீராயின் ஆறு எழுத்துக்கள் வரை வரலாம். வஞ்சிச்சீர் மூன்று சீர் கொண்ட அடியாக வருமே அல்லாமல் நான்கு சீர் கொண்டதாக வராது. எனவே இருபது எழுத்தின் மேற்பட்ட நாற்சீரடி வராது. இதனை,

***"சீர்நிலை தானே ஐந்தெழுத்து இறவாது***
***நேர் நிரை வஞ்சிக்கு ஆறும் ஆகும்"*** (செய்யுள் : 40)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

இவ்வாறு அடிகள் பல தொடுக்கும்போது, அடிக்கு 'அடி' எழுத்தால் குறைந்தாலும் சீர்கள் நான்கை விட குறைவதும் இல்லை. மிகுவதும் இல்லை.

***"எழுத்தளவு எஞ்சினும் சீர்நிலை தானே***
***குன்றலும் மிகுதலும் இன்றென மொழிப"*** (செய்யுள் : 41)

அடிக்குரிய எழுத்து வரையறை பற்றிக் கூறும்போது எழுத்துக்களைக் கணக்கிடும்போது மெய், ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம் இவற்றை எண்ணக்கூடாது. உயிர் மற்றும் உயிர்மெய்யாகிய ஒரு மாத்திரை அளவில் குறையாத எழுத்துக்களே எண்ணப்படவேண்டும் என்கிறது.

***"உயிரில் எழுத்தும் எண்ணம் படாஅ***
***உயிர்த்திறம் இயக்கம் இன்மையான்'*** (செய்யுள் : 42)

**ஐவகை அடிகளின் விரிவு:**

குறளடி முதலான ஐவகை அடிகளை விரித்து உணரும்போது அவற்றின் எண்ணிக்கை 625 ஆகும்.

***"ஐவகை அடியும் விரிக்கும் காலை***
***மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்***
***எழுபது வகையின் வழுவிலவாகி***
***அறநூற்று இருபத்து ஐந்தாகும்மே"***
***"அங்ஙனம் விரிப்பின் அளவிறந் தனவே***
***பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை"*** (செய்யுள் : 48,49)

என்ற நூற்பாக்களைக் காண்க.

அடிகள் இயற்சீரடி, ஆசிரிய உரிச்சீரடி, இயற்சீர் வெள்ளடி, வெண்சீரடி, வஞ்சியடி, அசைச்சீரடி என்ற பெரும்பிரிவுகளைக் கொண்டது. இனி அவற்றில் உட்பிரிவுகளைத் தொகுத்துக் காண்போம்.

**1. இயற்சீரடி**

நேரீற்று இயற்சீரடி, நிரையீற்று இயற்சீரடி என 2 வகைப்படும்.
அவை ஒவ்வொன்றும் 5, 5 பிரிவுகளை உடையது.

**நேரீற்று இயற்சீரடி:**

1. நேர் முன் நேர் - இயற்சீர்
2 நேர் முன் நேர்பு - ஆசிரிய உரிச்சீர்
3. நேர் முன் நேர் - வெண்பா உரிச்சீர்
4. நேர் முன் நேர் - வஞ்சி உரிச்சீர்
5. நேர் முன் நேர் - ஓரசைச்சீர்

இவ்வாறே நிரையீற்றயற்சீரடியும் 5 வகைப்படும்.

ஆக இயற்சீரடி 10 வகைப்படும்.

**1. ஆசிரிய உரிச்சீரடி:**

1. நேர்பு முன் நேர் - இயற்சீர்
2. நேர்பு முன் நிரைபு - ஆசிரிய உரிச்சீர்
3. நேர்பு முன் நேர் - வெண்பா உரிச்சீர்
4. நேர்பு முன் நேர் - வஞ்சி உரிச்சீர்
5. நேர்பு முன் நேர் - ஓரசைச்சீர்

இவ்வாறே நிரைபு ஈற்று ஆசிரிய உரிச்சீரடியும் 5 வகைப்படும்.ஆக ஆசிரிய உரிச்சீர் 10 வகைப்படும்.

## 1. இயற்சீர் வெள்ளடி

1. நேர் முன் நிரை - இயற்சீர்
2. நேர் முன் நிரை - வெண்பா உரிச்சீர்
3. நேர் முன் நிரை - வெண்பா உரிச்சீர்
4. நேர் முன் நிரை - வஞ்சி உரிச்சீர்
5. நேர் முன் நிரை - ஓரசைச்சீர்

இவ்வாறே நிரை இறுதி இயற்சீர் வெள்ளடி 5 வகைப்படும். ஆக இயற்சீர் வெள்ளடி 10 வகைப்படும்.

## 2. நிரையீற்று வஞ்சியடி:

இது நிரையீற்று வஞ்சிஉரிச்சீர் முதல் அசையுடன் ஒன்றுவது, ஒன்றாதது என இருவகைப்படும்.

1. நிரை முன் நிரைபு - இயற்சீர்
2. நிரை முன் நிரைபு - ஆசிரிய உரிச்சீர்
3. நிரை முன் நிரைபு - வெண்பா உரிச்சீர்
4. நிரை முன் நிரைபு - வஞ்சி உரிச்சீர்
5. நிரை முன் நிரைபு - ஓரசைச்சீர்

இதே போன்று நிரை முன் நேர், நேர்பு என வர ஒன்றாதன் 5 வகைப்படும்.

ஆக நிரையீற்று வஞ்சியடி 10 வகைப்படும்.

## வெண் சீரடி:

1. நேர் முன் நேர்

2. நேர் முன் நேர்பு
3. நேர் முன் நேர்பு
4. நேர் முன் நேர்
5. நேர் முன் நேர்

இவ்வாறே வெண்சீர் நிரை முதலுடன் வருதல் 5 வகைப்படும்.

1. நேர் முன் நிரைபு
2. நேர் முன் நிரைபு
3. நேர் முன் நிரை
4. நேர் முன் நிரை
5. நேர் முன் நிரை ஆக வெண்சீரடி 10 வகைப்படும்.

உரியசை ஈற்று வஞ்சியடி { ஒன்றுவன / ஒன்றாதன என்ற 5,5

ஆக 10 வகைப்படும்.

அசைச்சீரடி : இது நேர் (நேர்பு) முன் நேர் 5 வகையும்

நிரை(நிரைபு) முன் நிரை 5 வகையும்

இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர், ஓரசைச்சீர் வர அசைச்சீரடி 10 வகைப்படும்.

இவ்வகையில் தளை ஏழு வகைப்படும்.

1. இயற்சீர் வருஞ்சீர் முதல் அசை நேர் - நேரொன்றாசிரியத்தளை
2. இயற்சீர் நிரை – நிரையொன்றாசிரியத்தளை
3. மாமுன் நிரை விளம் முன் நேர் - இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் நேர் - வெண்சீர் வெண்டளை
5. வெண்சீர் நிரை – கலித்தளை
6. வஞ்சி உரிச்சீர் வருஞ்சீர் முதலசை ஒன்றுதல் - ஒன்றிய வஞ்சித்தளை
7. வஞ்சி உரிச்சீர் வருஞ்சீர் முதலசை ஒன்றாதது – ஒன்றாத வஞ்சித்தளை

இக்கருத்துக்களை,

***'நிரை முதல் வெண்சீர் வந்து நிரைதட்டல்***

***வரைநிலை யின்றே அவ்வடிக்கென்ப'***

***"விராஅய தளையும் ஒரூஉ நிலை இவ்வே"*** ***(செய்யுள் : 57,58)***

என்ற நூற்பாக்கள் உணர்த்துகின்றன.

எ.டு:

***“இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்***
***உமையமர்ந்த துயர்மலை இருந்தனன் ஆக***
***ஐயிரு தலையி னரக்கர் கோமான்”***

என்ற பாடலில் இயற்சீர் வெண்டளை, நிரையொன்றாசிரியத்தளை மற்றும் நேரொன்றாசிரியத்தளை விரவி வருதலைக் காணலாம்.

மேலும் ஐஞ்சீரடி, அறுசீரடி மற்றும் எழுசீரடியும் கலிப்பாவில் வரப்பெறும்.

ஆக தளை என்பது நின்ற சீரின் ஈற்று அசையும் வரும்சீரின் முதல் அசையும் தம்முள் ஒன்றியும் (பொருந்தியும்) ஒன்றாமலும் (பொருந்தாமலும்) வர, இரண்டு சீர்கள் தம்முள் கட்டப்பெற்றுநிற்றல் ஆகும். தொல்காப்பியர் தளையைத் தனித்தோர் உறுப்பாகக் காட்டவில்லை. காக்கைப்பாடினியாரும் அவரைத் தொடர்ந்து இலக்கணம் எழுதிய காரிகையாரும் தளையை உறுப்பென்று கொண்டனர். சீர் மற்றும் அடி பற்றி விளக்குகின்ற நூற்பாக்களிலேயே தளை பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. செய்யுளில் 27,28,32,48,52,53,55,57,58,59,60,61 ஆகிய நூற்பாக்கள் தளை பற்றியன. இளம்பூரணர் தமது உரையில் தளைகள் பற்றி விளக்கியுள்ளார்.

அதேபோன்று எழுத்தெண்ணி அடிவகுப்பது தொல்காப்பிய அடிப்படை பின்வந்தோர் சீர் அடிப்படையில் அடி வகுத்தனர்.

**யாப்பு மற்றும் தொடை வகைகள்:**

பாட்டுக்கு உயிர்ப்பு தருவது யாப்பு ஆகும். யாப்பு என்னும் சொல் பிற்காலத்தில் செய்யுள் வடிவை மட்டுமே குறித்தது. தொல்காப்பியர் யாப்பு என்பதைச் செய்யுள் உறுப்பாகவும் வகையாகவும் சுட்டுகின்றார். யாத்தல் என்னும் சொல் அடிப்படையில் பிறந்ததே ‘யாப்பு’ யாத்தல் என்றால் கட்டுதல் என்பது பொருள். இத்தகைய யாப்பு பற்றியும், செய்யுளை அணி செய்யும் தொடை என்னும் உறுப்பு பற்றியும் இப்பாடப்பகுதியில் நோக்குவோம்.

யாப்பு என்றால் என்ன?

***‘‘எழுத்து முதலா ஈண்டிய அடியில்***
***குறித்த பொருளை முடிய நாட்டல்***
***யாப்பென மொழிப யாப்பறி புலவர்’’*** (செய்யுள் : 74)

அதாவது எழுத்து, அசை, சீர், அடி என்று சொல்லப்பட்ட உறுப்புகளால் புலவன் தான் சொல்லக் கருதிய பொருளைச் சொற்கள் குறையாமலும் மிகாமலும் இறுதி அடிவரையில் முற்றுப் பெற நிறுத்தலே யாப்பு எனப்படும். எனவே குறித்த பொருளை விளக்குதற்குரிய சொற்கள் குறையாமலும் மிகாமலும் இருத்தல் வேண்டும்.

**யாப்பு வகைகள்:**

யாப்பாவது பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்று ஏழு வகைப்படும். அது சிறந்த புகழை உடைய சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தரது

ஆட்சிக்கு உட்பட்ட தமிழகத்தின் நான்கு பேரெல்லைக்கு உட்பட்ட நிலப்பகுதியில் வாழுகின்ற தமிழ் மக்கள் பயன்படுத்துகின்ற தொடர் மொழி அமைப்பின் வழி நடைபெறுவது என்று,

***''பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே***
***அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்'***
***'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்***
***நாற்பேரெல்லை அகத்தவர் வழங்கும்***
***யாப்பின் வழியது என்மனார் புலவர்''*** (செய்யுள் : 75)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

எனவே யாப்பு ஏழுவகைப்படும். இவற்றுள் பாட்டு தவிர ஏனைய ஆறும் அடிவரையறை இல்லாதனவாகும். இனி இவற்றை முறையே காண்போம்.

### அடிவரையறை இல்லாதன:

பல சொற்கள் தொடர்ந்து பொருள் தரும் நிலையில் ஓசையுடன் இணைந்து வருவது பாட்டு ஓசை இல்லாமல் செய்யுள் தன்மை பெற்று வருவது நூல். இவ்விரண்டு தன்மையும் இல்லாமல் வருவதே உரை ஆகும். இவ்வுரை நான்கு வகைப்படும். அவையாவன,

1. பாட்டிடை வைத்த குறிப்பு
2. பாவின்றெழுந்த கிளவி
3. பொருள் மரபு இல்லாப் பொய்மொழி
4. பொருளொடு புணர்ந்த நகைமொழி

### பாட்டிடை வைத்த குறிப்பு:

பாட்டின் இடையே வரும் உரையாடல் குறிப்பு. இது தனிப்பாடல், தொடர்நிலைச்செய்யுள் என்ற இரண்டிலும் இடம்பெறும் என்பது இளம்பூரணர் கருத்து.

எ.டு: ***''ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்''*** என்னும் குறிஞ்சிக் கலியுள் இடையில் வரும்.

***''இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து''*** என்பதும்

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் இடம்பெறும்

***''கயல் எழுதிய இமய நெற்றியின்***

***அயலெழுதிய புலியும் வில்லும்***

***நாவலந்தண் பொழில் மன்னர்***

***எவல் கேட்பப் பார் அரசாண்ட***

***மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலும்***

------------- ----------- ----------------------

-------------- ------------- ------------------

***இடைமுதுமகள் வந்து தோன்றுமன்''***

என்பதும் உரைக்குறிப்பாகும் என்பர் இளம்பூரணர். இத்தகைய யாப்பு சிறுபான்மையாகவே வரப்பெறும்.

### பாவின்று எழுந்த கிளவி:

உலக வழக்கில் தனியே வழங்கும் வசன நடை இவ்வகையைச் சாரும். ஏறக்குறைய ஒரு நூலுக்கு எழுதப்படும் உரைகள் எனலாம். வழக்கின் கண் ஒரு பொருளைக் குறித்து வினவுதலும் அதற்கு விடை கூறுதல் போன்றது என்பர் இளம்பூரணர்.

### பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி:

கதை நிலையில் வழங்கப்படும் உரைநடை ஆகும். ஒரு யானையும் ஒரு குருவியும் தம்முள் நட்புக் கொண்டு இன்ன இடத்தில் இன்னவாறு செய்தன என்று அவற்றின் இயல்பிற்குப் பொருந்தாத வகையில் பொருந்திப் பேசுவது என்று விளக்கம் தருவார் இளம்பூரணர்.

### பொருளோடு புணர்ந்த நகைமொழி:

நகை மொழியாவது மேற்சொல்லப்பட்ட உரை பொருந்தாது என இகழ்ந்து கூறுதல். அந்த இகழ்ச்சியின் பின்னர்ப் பொருளை உணர்த்தும் உரை கூறப்பெறும்.

ஆக உரையாப்பு நான்கு வகைப்படும். என்பதனை,

***“பாட்டிடை வைத்த குறிப்பினானும்***
***பாவின் றெழுந்த கிளவி யானும்***
***பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்***
***பொருளோடு புணர்ந்த நகைமொழி யானும் என்று***
***உரைவகை நடையே நான்கென மொழிப”*** (செய்யுள் : 166)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

இவ்வாறு நான்கு வகையாகச் சொல்லப்பட்ட உரை 1. மைந்தர்க்கு உரைப்பன 2. மகளிர்க்கு உரைப்பன என இருவகையில் அடங்கும். இவற்றுள் முதல் வகை எல்லார்க்கும் உரியது. இரண்டாம் வகை செவிலிக்கு உரியது. இதனை,

***“அதுவே தானும் இருவகைத்தாகும்”***
***“ஒன்றே மற்றும் செவிலிக்கு உரித்தே”***
***“ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே”*** (செய்யுள் : 167,168)

என்ற நூற்பாக்கள் வழி அறியலாம்.

### நூல் யாப்பு:

சொல்ல எடுத்துக் கொண்ட பொருளைத் தொடக்கம் முதல் முடிவு வரை மாறுபாடு இல்லாமல் தொகுத்தும் வகுத்தும் காட்டி விளக்கமாகக் கூறுவது நூல் எனப்படும். நூல் யாப்பும் நான்கு வகைப்படும். அவை

1. யாதானும் ஒரு பொருளைக் குறித்துக் கூறும் சூத்திரம்
2. ஓரினப் பொருளைக் கூறுகின்ற ஓத்து.
3. பல பொருட்கும் பொதுவான இலக்கணம் கூறுகின்ற படலம்.
4. இம்மூன்றையும் உறுப்பாகக் கொண்ட பிண்டம்

இக்கருத்துக்களைச் செய்யுளியல் உ159-161 வரையிலுள்ள நூற்பாக்கள் உணர்த்துகின்றன. இனி இவற்றை விளக்கமாக காண்போம்.

### சூத்திரம்:

ஆடி(கண்ணாடி) அளவில் சிறியதாயினும் அகன்றுபட்ட பொருளைக் காட்டுதல் போல. சூத்திரம் என்பது அதனைப் படித்த அளவில், ஆராய்ந்து காணும் அவசியமின்றிப் பொருள் தெளிவாகத் தோன்றும் அமைந்திருக்க வேண்டும். சொற்கள் தெளிவாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக,

***"வேற்றுமை தாமே ஏழென மொழிப***
***விளிகொள்வதன் கண் விளயோடு எட்டே"***

என்று தொல்காப்பிய வேற்றுமையியல் நூற்பா போன்று அமைவது,

சூத்திரம் இன்னது என்பதை,

***"அவற்றுள்***
***சூத்திரம் தானே***
***ஆடிநிழலின் அறியத் தோன்றி***
***நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க***
***யாப்பினும் தோன்ற யாத்தமைப் பதுவே"*** (செய்யுள் : 162)

என்ற நூற்பா மூலம் அறியலாம்.

### ஓத்து:

ஒரே இனமான மணிகளை ஒன்றாகக் கோர்த்து வைத்தது போல ஒரே இனமாக வருகின்ற பொருளை ஒருசேர ஓரிடத்திலிருந்து தொகுத்துக் கூறுவது ஓத்து எனப்படும். வேற்றுமை பற்றிய செய்திகளை ஒரே இடத்துத் தொகுத்துக் கூறும் வேற்றுமை இயல் ஓர் ஓத்து ஆகும்.
இதனைத் தொல்காப்பியர்,

***"நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு***
***ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது***
***ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர்"*** (செய்யுள் : 163)

### படலம்:

படலம் என்பதை அதிகாரம் என்றும் கூறலாம். ஓரினப் பொருளையே அல்லாமல் பலவகைப்பட்ட பொருள்கள் பொதுநிலையால் தொடர்பு படின் அதனைத் தொகுத்து உணர்த்தும் பகுதி 'படலம்' எனப்படும். எழுத்தின் இலக்கணங்களைத் தொகுத்துக்கூறும் எழுத்ததிகாரம் ஒரு படலம் ஆகும். இதனை,

***"ஒரு நெறியின்றி விரவிய பொருளால்***
***பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்"*** (செய்யுள் : 164)

என்பது தொல்காப்பியர்.

**பிண்டம்:**

சூத்திரம், ஓத்து, படலம் என்ற மூன்று உறுப்புகளையும் தன்னுள் கொண்டது பிண்டம் ஆகும். இது பின்வரும் நிலைகளில் அமையும்.

1. சூத்திரம் பல வந்து ஓத்தும் படலமும் பெற்று வருதல் - இறையனார் களவியல்
2. ஓத்துப் பல வந்து படலம் இன்றி வருதல் - பன்னிரு படலம்
3. அதிகாரத்தால் வருதல் - தொல்காப்பியம்

***"மூன்று உறுப்பு அடக்கிய தன்மைத்தாயின்***
***தோன்றுமொழிப் புலவர் அது பிண்டம் என்ப"*** (செய்யுள் : 165)

**வாய்மொழி யாப்பு:**

வாய்மொழி என்றாலும் மந்திரம் என்றாலும் ஒன்றே. நிறைந்த மொழி(அறிவு) உடைய மாந்தர் தமது ஆணையால் சொல்லப்பட்ட மறைந்த மொழி மந்திரம் ஆகும். அதன் பொருளை வல்லாரிடத்துக் கேட்டு உணர்க என்று கூறுகிறார் இளம்பூரணர்.

மந்திரம் அல்லது வாய்மொழி இன்னது என்பதனை,

***"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த***
***மறைமொழி தானே மந்திரம் என்ப"*** (செய்யுள் : 171)

என்ற நூற்பா வழி அறியலாம்.

**பிசி யாப்பு:**

பிசி இரண்டு வகைப்படும். அவையாவன,

1. ஒப்பொடு புணர்ந்த உவமை நிலையால் வருவது
2. தோன்றுவதனைச் சொன்ன துணிவினால் வருவது

முதல் வகைக்கு இளம்பூரணர் எடுத்துக்காட்டாக,

***"அச்சுப் போலே பூப்பூக்கும்***
***அமலே என்னக் காய் காக்கும்"***

என்பதைக் காட்டுகிறார். இது விடுகதை போன்றது. பேராசிரியர் விளக்கும் போது, “பிறை கவ்வி மலை நடக்கும்” எனக் காட்டுவார். அதாவது காட்டப்பட்ட உவமை கொண்டு அது யானை என்று தெளிவதாகும்.

இரண்டாம் வகையாவது, ஒன்று சொல்ல மற்றொன்று தோன்றும் துணிவுபட வருவது ஆகும். பேராசிரியர் தரும் எடுத்துக்காட்டைக் காண்போம்.

***“நீராடான் பார்ப்பான் நிறம் செய்யான், நீராடின்***
***ஊராடு நீரின் காக்கை”***

என்பது குறிப்பினால் நெருப்பு என்பதை உணர்த்தும் என்பார்.

பிசியின் இலக்கணத்தை

***“ஒப்பொடு புணர்ந்த உவமத்தாலும்***
***தோன்றுவது கிளந்த துணிவி னாலும்***
***என்றிரு வகைத்தே பிசிநிலை வகையே”*** (செய்யுள் : 169)

என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம்.

## அங்கத யாப்பு:

அங்கதம் என்பது செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் என இருவகைப்படும்.

## செம்பொருள் அங்கதம்:

இது ‘வசை’ என்றும் குறிப்பிடப்பெறும். வாய்காவாமல் கூறப்படும். வெண்பாவில் வருவதே பெரும்பான்மை, சிறுபான்மை பிறபாக்களிலும் வரப்பெறும்.

எ-டு: ***“பாட்டும் உரையும் பயிலாதன இரண்டு***
***ஓட்டுடைச் செவியும் உள”***

வசை என்பது வெளிப்படையாகப் பாடப்படுவது.

## பழிகரப்பு அங்கதம்:

கூறும் சொற்களை (பொருளை) மறைத்துப் பேசுவது. புறம் 204-ல்

***“தெண்ணீர் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்***
***உண்ணார் ஆகுவர் நீர் வேட்டோரே”***

என்ற பாடலில், கடல்நீர் விரிந்து பரந்தது ஆயினும் வேட்கையுள்ளோர் அதனைப் பருகார் என்று கூறப்பட்டுள்ளது நேர்ப்பொருள். ஆனால் அது மன்னனை நோக்கி, நினது செல்வம் கடல்போல் பெரிதே ஆயினும் பிறரால் இனிது நுகரப்படாது என்ற குற்றம் இதில் மறைவாகச் சுட்டப்பட்டுள்ளது.

***“அங்கதம் தானே அரில்தபத் தெரியின்***
***செம்பொருள் கரந்தது என இரு வகைத்தே”***
***“செம்பொருள் ஆயின் வசை எனப்படுமே”***

***"மொழி கரந்து மொழியின் அது பழிகரப்பாகும்"*** (செய்யுள் : 121,122)

என்ற நூற்பாக்கள் அங்கதம் பற்றியன.

அங்கதம் என்பது குறிப்பு மொழி போன்றது என்பர் ஒரு சிலர். ஆயின் அவற்றிடை வேறுபாடு உண்டு என்பர் இளம்பூரணர். சொல்லினால் உணரப்படும் பொருட்குப் புறத்தே வேறொரு பொருள் புலப்படுவது குறிப்பு மொழி ஆகும். இக்குறிப்பு வசை குறித்தே வரப்பெறும். புகழ் குறித்து வரக்கூடாதா என்றால், புகழ் என்பது கூறுவார்க்கும், கூறக் கேட்பவர்க்கும் இன்பம் தருதலால் குறிப்பினால் கூற வேண்டியது வசையே என்பது அவர் தரும் விளக்கம். இதனை, எழுத்தொடும் சொல்லோடும் புணராதாகிப்

***"பொருள் புறத் ததுவே குறிப்பு மொழி"*** (செய்யுள் : 172)

என்பர் தொல்காப்பியர்.

## பழமொழி யாப்பு:

முது சொல், முதுமொழி, மூதுரை, பழமொழி என்பன ஒரு பொருள் குறித்த சொற்கள் நுண்மை, சொல் சுருக்கம், ஒளியுடைமை(விழுப்பம்) மென்மை(எளிதில் பொருள் விளங்கல்) இவை பெற்று, கருதின பொருளை விளக்குதற்குரிய ஏதுவைக் குறித்து வருவது முதுமொழி ஆகும். இக்கருத்தினை,

"***நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்***
***மேன்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்***
***குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்***
***ஏது நூதலிய முதுமொழி என்ப"*** (செய்யுள் : 170)

என்ற தொல்காப்பிய நூற்பா உணர்த்துகிறது.

இனி பாக்களுக்கு உரிய ஓசை பற்றிய தொல்காப்பியக் கருத்துக்களைக் காண்போம்.

தூக்கு என்பது ஓசைக்குரிய மறு பெயர் தூக்கு என்னும் சொல் துணித்தல், நிறுத்தல், பாடுதல் என்ற பொருள்களைத் தரவல்லது.

## அகவல் ஓசை:

அகவல் ஓசை ஆசிரியப்பாவிற்கு உரியது. அகவிக் கூறுவதால் அகவல் என்று கூறப்பட்டது. மேலும் இது சொல்லுதல் என்ற பொருளையும் தரவல்லது.

எ-டு: ***"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த***
***செங்கோல் அம்பின் செங்கோட் டியானை***
***கழல்தொடிச் சேஎய் குன்றம்***
***குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"*** (குறுந் : 1)

என்ற பாடலில் எழுத்தளவு மிகாமலும் குறையாமல் உச்சரிக்கும் போது இடம்பெறுகின்ற ஓசையே அகவல். இது ஆசிரியப்பாவிற்கு உரியது.

**செப்பல் ஓசை:**

செப்பல் ஓசை வெண்பாவிற்கு உரியது. அகவல் போன்று ஒருவரை அழைத்துக் கூறாமல், ஒருவற்கு ஒருவர் இயல்பாக ஒரு பொருளை எடுத்துக் கூறும் போது எழும் ஓசை செப்பல் ஓசை ஆகும்.

எ-டு: ***"பொன்னார மார்பிற் புனைகழற்கால் கிள்ளிபேர்***
***உன்னேனென் றூழலக்கை பற்றினேற் - கென்னோ***
***மன்னோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்***
***புனல் நாடன் பேரே வரும்"***

இப்பாடல் செப்புதலாகிய வாக்கியம் போன்றது.

**துள்ளல் ஓசை:**

துள்ளல் ஓசை கலிப்பாவிற்கு உரியது. ஒழுகுநடை இல்லாமல் (ஒன்றுபோல் செல்லுதல் இல்லாமல்) இடையிடையே உயர்ந்து வருதல். கன்று துள்ளியது போல் என்பர் இளம்பூரணர்.

எ-டு:

***"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்***
***பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்"*** (கலி : 11)

என்ற பாடலில்,

அரி /தா /ய அற /னெய /தி
நி நே நே நி நே நே
புலி வாழ் கான்

என்னும் இடத்தில் புலி வாழ் கான் என்பது வெண்பா உரிச்சீர். இதன் முன் நேர் வந்தால் செப்பலோசை தோன்றி வெண்பாவாக அமைந்திருக்கும். மாறாக நிரை வந்து புணர்ந்ததால் அவ்வோசை துள்ளலோசை ஆயிற்று.

**தூங்கல் ஓசை:**

***"தூங்கல் ஓசை வஞ்சியாகும்"*** (செய்யுள் : 80)

என்பது தொல்காப்பியம்.

***"சுறமறிவன துறையெல்லாம்***
***இறவீன்பன இல்லெல்லாம்***
***மீன்திரிவன கிடங்கெல்லாம்***
***தேன்தாழ்வன பொழிலெல்லாம், எனத்***
***தண்பணை தழீஇய இருக்கை***
***மண்கெழு நெடுமதில் மன்னன் ஊரே"***

என்ற பாடல் தூங்கல் ஓசை பெற்ற வஞ்சிப்பாடலாகும்.

**மருட்பாவிற்கான ஓசை:**

மருட்பாவிற்கு உரிய ஓசை இதுவென கூற இயலாது. வெண்பாவும், ஆசிரியப்பாவும் கலந்து வருவதே மருட்பா ஆனதால் இவ்விரண்டின் ஓசைகளே தனக்குரியதாகப் பெற்று வரும். செப்பலோசை முன்னும் அகவலோசை பின்னுமாக வரப்பெறும்.

***"மருட்பா ஏனை இருசார் அல்லது***
***தான்இது என்னும் தன்மை இன்றே"*** (செய்யுள் : 81)

என்ற நூற்பா இக்கருத்தை வலியுறுத்தும்.

எ-டு:

***"திருநுதல் வோரும்புந் தேங்கோதை வாடும்***
***இடருநிலனும் சேவடி யெய்தும் - அரிபரந்த***
***போகிழத் உண்கண் இடைக்கும்***
***ஆகு மற்றிள் அகலிடத் தணங்கே"***

எனும் பாடல் முன்னிரண்டு அடிகள் வெண்பா ஓசையையும், பின்னிரண்டு அடிகள் ஆசிரியப்பா ஓசையும் பெற்றுள்ளன.

எனவே மேலே சொல்லப்பட்ட நான்கு ஓசை வகையால் அல்லது வேறு பா அமையாது. சீர், தளை, அடி, தொடை பெறினும் ஓசை இல்லையெனில் அது 'பா' என்று கூறப்பெறாது. அது 'நூல்' அல்லது 'உரை' என்றே பெயர் பெறும். எனவே பாவிற்கு இன்றியமையாதது 'ஓசை' ஆகும். இதனையே தொல்காப்பியர்,

***'அவ்வியல்பு அல்லது பாட்டாங்கு கிளவார்"***

என்றும்

***'தூக்கியல் வகையே யாங்கென மொழிப'***

என்றும் தெளிவு செய்கிறார்.

## தொடையும் அதன் வகைகளும்

'தொடை' என்றால் தொடுக்கப்படுவது என்று பொருள். மலர்களால் தொடுக்கப்பெறும் மாலை தொடை, தொடையல் என்று சுட்டப்பெறும். செய்யுள் அழகுற அமைய அடியோடு அடி தொடுக்கப் பெறுவதால் 'தொடை' என்னும் பெயர் காரணக் குறியாயிற்று.

தொல்காப்பியர் பத்துவகையான தொடைகளைக் காட்டுகிறார். நான்கு நூற்பாக்களில் அவற்றை வகை செய்கிறார்.

***"மோனை எதுகை முரணே இயைபு என***
***நால்நெறி மரபின்"*** ***(செய்யுள் : 84)***

என்பதால் மோனை, எதுகை, முரண், இயைபு என்ற நான்குவகை பெறப்படுகிறது. இந்நூற்பாவைத் தொடர்ந்து,

***"அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும"*** (செய்யுள் : 85)

***'பொழிப்பும் ஒரூஉம் செந்தொடை மரபும்***
***அமைந்தவை தெரியின் அவையுமாருளவே'***
***"நிரணிறுது அமைத்தலும் இரட்டை யாப்பும்***
***மொழிந்தவற்று இயலான் இரட்டை யாப்பும்***
***மொழந்தவற்று இடயலான் முற்றும் என்ப"*** (செய்யுள் : 86,87)

என்று கூறுவதால் அளபெடை, பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, நிரல்நிறை, இரட்டை என்பனவும் தொடை வகைகளாகும் என்று அறிகிறோம். இவற்றுள் மோனை, எதுகை, முரண், இயைபு இவையே சிறப்புடையனவாகும்.

இனி இவை குறித்து ஒவ்வொன்றாகக் காண்போம்.

**மோனைத் தொடை:**

அடித்தோறும் முதல் எழுத்து ஒன்றுபோல் அமைவது மோனைத் தொடை ஆகும். (செய்யுள் : 880)

எ-டு:

***'முத்தமிழ் மும்மத மும்மொழி யானை'***

***'மாவும் புள்ளும் வதிவயின் படர***
***மாநீர் விரித்த பூவும் கூம்ப***
***மாலை தொடுத்த கோதையும் கமழ***
***மாலை வந்த வாடையும்***
***மாயோய் நின்வயின்-----------'***

**எதுகைத் தொடை:**

முதல் எழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் அமைவது எதுகைத் தொடை ஆகும். (செய்யுள் : 89)

எ-டு: ***அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்***
***கடியவே கனங்குழா அய் ---------------------------------------------***
***துடியடிக் கயந்தலை -----------------------------------------------------***
***பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு ------------------------------------'*** (கலி : 11)

மோனை, எதுகை ஆகியவற்றில் வந்த எழுத்தே வருதல் இன்றி வருக்க எழுத்தும் உரியதாகும். இதனை,

**'ஆயிரு தொடைக்கும் கிளை எழுத்து உரிய'** (செய்யுள் : 90)

என்று கூறுகிறது தொல்காப்பிய நூற்பா.

**வருக்க மோனை:**

எ-டு:

***'பகலே, பல்பூங்----------- -------------------- ----------***

***பாசிலைக் குளவியோடு ----------- -------------------***

***பின்னுப்பிணி அவிழ்ந்த ------------ ----------------***

***பீங்கப் பெய்து தேம்படக் கருதி'*** ---------------

என்ற பாடலில் ப,பா,பி,பீ என பகர வருக்க எழுத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

**வருக்க எதுகை:**

ஆற்றடி அந்தணர்க்கு ----------- -----------------

தேறுநீர் சடைகரந்து ------------ -----------------

கூறாமல் குறித்ததன் --------------- -----------------

மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் ---------

ற, று, றா என றகர வருக்க எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

**முரண் தொடை:**

முரண்தொடை என்பது சொல், முரண், பொருள் முரண் என்று இருவகைப்படும்.

எ-டு: ***'சிறுகுடிப் பரதவர் மடமகள்***

***பெருமதர் மழைக்கண்ணும் -----------'***

என்பதில் குடி, கண் என்பன முரண்படாமல் சிறுமை, பெருமை என்ற சொற்கள் முரண்பட்டமையால் இது சொல் முரண்.

ஆனால்,

***'இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை***

***பொன்னின் இன்ன நுண்தா துரைக்கும்''***

என்னும் பாடலில் இரும்பு, பொன் என்பன மாறுபட்ட பொருள்கள். எனவே இது பொருள் முரண்.

**முரண்:**

இதனை,

'***மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே'*** (செய்யுள் : 91)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

முரண் தொடையைப் பேராசிரியர் ஐவகைப்படுத்துவர்.

1. சொல்லும் சொல்லும் முரணுதல்

***'செவ்வி வாய்த்த ------- ----------***

***வெள்ளை வெண்மறி ------ ---------'***

2. பொருளும் பொருளும் முரணுதல்

*'நீரோ ரன்ன சாயல்*

*தீயோ ரன்ன என் --------- (நீர், தீ)'*

3. சொல்லும் பொருளும் சொல்லோடு முரணுதல்

*'தண்ணிய லற்ற ------ -------------*

*வெந்நீர்ப் பொருணசைஇ ------- -------------' (தண்மை, வெய்மை)*

4. சொல்லும் பொருளும் முரணுதல்

*'தீநிர் நஞ்சம் திருமிடற்*

*உவரி யன்ன உடைப்பருஞ் செல்வர்'*

5. சொல்லும் பொருளும் சொல்லோடும் பொருளோடும் முரணுதல்

*'செவ்வேல் சேஎய் --------- -----------------*

*கருவின் கானவன் ------------- ---------------'*

என ஐந்துவகையாகப் பகுக்கின்றார்.

**இயைபுத் தொடை:**

*அடிதோறும் இறுதி எழுத்து ஒன்றி வருவது.*

எ-டு: *'இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே*

*நன்மா மேனிச் ----------------- --------------அணங்கே*

*ஆடமைத் தோளி ------------------------- அணங்கே*

*அரிமதர் மழைக்கணும் அணங்கே*

*திருநுதல் பொறித்த திலதமும் அணங்கே'*

*"இறுவாய் ஒப்பின் அஃது இயைபு என மொழிப'* (செய்யுள் : 92)

**அளபெடைத் தொடை:**

அடிதோறும் அளபெடை வருவது அளபெடைத் தொடை ஆகும்.

எ-டு: *"ஓஒ இனிதே எமகிந் நோய் செய்தகண்*

*தாஅம் இதற் பட்டது"*

*"கஃறென்னும் கல்லாதர்க் கானிடைச்*

*சுஃறென்னுந் ---------- ------------- பெண்ணை"*

**பொழிப்புத் தொடை:**

எ-டு: **"ஒருசீர் இடையிட்டு எதுகை ஆயின்**

**பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே" (செய்யுள் : 94)**

என்பதால் 1,3 சீர்களில் எதுகை வருவது பொழிப்புத் தொடை ஆகும்.

நூற்பாவில் எதுகை மட்டும் கூறினாலும் வந்தது கொண்டு வராதது முடித்தல் என்ற உத்தியால் மோனை, இயைபு, முரண், அளபெடையும் பொழிப்பு (1,3) நிலையில் அமையப் பெறும் என்பர் இளம்பூரணர்.

***"அரிக்குரல் கிண்கிணி அரற்றும்சீரடி"*** – பொழிப்பு மோனை
***"பன்னரும் கோங்கின் நன்னலம் கவற்றி"*** – பொழிப்பு மோனை
***"சுருங்கிய நுசுப்பின் பெருகுவடந் தாங்கி"*** – பொழிப்பு மோனை
***"கடலே கானலங் கழியே -------------"*** – பொழிப்பு இயைபு
***"பூஉங் குவளைப் போஒ தருந்தி"*** – பொழிப்பு அளபெடை

**ஒரூஉத் தொடை : 1,4**

இரண்டு சீர்கள் இடையிட்டு மோனை முதலாயின் வரப்பெறுவது ஒரூஉத் தொடை ஆகும்.

***"அம்பொன் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி"*** – ஒரூஉ மோனை

***"மின்னிவர் ஒளிவடந் தாங்கி மன்னிய"*** – ஒரூஉ எதுகை

**"காஅய் ----------- ------------ போஒய்"** – ஒரூஉ அளபெடை

***"குவிந்து அணங் --------- ------------ விரிந்து"*** – ஒரூஉ முரண்

**"நிழலே இனியதன் அயலெ கடலே"** – ஒரூஉ இயைபு

**செந்தொடை:**

மேற்குறிப்பிட்ட தொடைகள் போலன்றி வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனப்படும். (செய்யுள் : 96)

***"பூத்த வேங்கை வியன்சினை ஏறி***
***மயிலினம் அகவும் நாடன்***
***நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தானே"***

என்ற பாடல் எவ்விதத் தொடைநலமும் இல்லாதது.

**நிரனிறைத் தொடை:**

பொருளையும் பயனையும் தனித்தனியே நிறுத்துவது

***"அடல்வேல் அமர்நோக்கி நின்முகம் கண்டே***
***உடலம் இரிந்தோடும் ஊழ் அலரும் - பார்க்கும்***

**பொருள்:**

***"கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்***
***தடமதியம் யாமென்று தாம்"***

இப்பாடலில் கடல், இருள், ஆம்பல், பாம்பு என்பன பொருள்கள் உடலும் (ஆர்ப்பரிப்பு), இரிந்தோடுதல், அலருதல், பார்த்தல் என்பன பயன்கள்.

காரிகையார் இதனைப் பொருள்கோள் என்பார்.

### இரட்டைத் தொடை:

ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வருதல் இரட்டைத் தொடை எனப்படும்.

எ-டு: ***“ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்***

***விளக்கினில் சீறெரி ஒக்குமே உக்கும்”***

என்று வருவது.

இத்தொடைகள் பலவகைகளில் வரப்பெறுவதை மொழியின் இயல்பாகக் கண்ட தொல்காப்பியர் தொடையின் பாகுபாடுகள் 13, 699 ஆகும் என்பதை,

***“மெய்பெறு மரபின் தொடைவகை தாமே***

***ஐய யாயிரத் தாறைஞ் நூற்றொடு***

***தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று***

***ஒன்ப.்.து என்ப உணர்ந்திசினோரே”*** (செய்யுள் : 97)

என்ற நூற்பாவில் கூறுகிறார்.

ஆனால் இத்தொடைகளை ஆராய்ந்து அதன் வகைகளைக் கணக்கிட்டால் அவற்றின் எண்ணிக்கை வரம்பில்லாமல் போகும் என்பதை,

***“தெரிந்தனர் விரிப்பின் வரம்பில் ஆகும்” (செய்யுள் : 98)***

என்று கூறினார்.

மேலும் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்பனவற்றுடன் இணை, கூழை, முற்று, மேற்கதுவாய், கீழ்கதுவாய், கடை, கடையிணை, கடைக்கூழை, இடைப்புணர் என்பனவற்றை இணைத்துக் காண அமையும் தொடை வகைகளே ஆகும்.

இணைமோனை, கூழைமோனை, முற்றுமோனை என்று இணைத்துக் காணவும்.

இதே போன்று எழுத்து அந்தாதி, அசை அந்தாதி, சீா அந்தாதி, அடி அந்தாதி, உயிர் மோனை, உயிரெதுகை, நெடில் மோனை, நெடில் எதுகை, வருக்க மோனை, வருக்க எதுகை, இனமோனை, இனஎதுகை, ஆசெதுகை போன்ற வகைகள் இலக்கியங்களில் இடம்பெறுகின்றன.

எனவே “தொடை அற்ற பாட்டு நடை அற்றுப்போகும்” என்ற வாக்கிற்கேற்ப பாடலுக்கு இன்றியமையாதது இசை அமைதி, இவ்விசை அமைதி, ஒலிகள் அளவாலும், தன்மையாலும், முயற்சியாலும், வேறுபட்டு ஒழுங்காக அமைந்து, வந்த அமைப்பே திரும்பத் திரும்ப வந்து இனிமை பயப்பதால் ஏற்படுகிறது. அந்த இனிமை தரும் அமைப்பு முறைகளே தொடை வகைகள் என்று வரையறை செய்யப்பட்டுள்ளன.

### பாவகைகள் பற்றிய விளக்கங்கள்:

***‘ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென***

***நாலியற்று என்ப பாவகை விரியே’*** (செய்யுள் : 101)

என்ற நூற்பாவில் பா ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என நான்கு வகைப்படும் என்பது தெரிகிறது. இவை நான்கும் ஆசிரியப்பா, வெண்பா என இரண்டாக அடங்கும். ஆசிரியம் போன்ற நடை உடையது வஞ்சி, வெண்பா போன்ற நடை உடையது கலி. (செய்யுள் : 103,104)

இனி, நால்வகைப்பட்ட பாக்களின் வகைகள் பற்றிக் காண்போம்.

**ஆசிரியப்பா:**

மண்டிலம், குட்டம் என்ற பாவகைகள் இரண்டும் அகவலோசையால் வரப்பெறும் என்பதை,

**'மண்டிலம் குட்டம் என்றிவை இரண்டும்**
**செந்தூக்கு இயல என்மனார் புலவர்'** (செய்யுள் : 90)

என்ற நூற்பா மூலம் அறியலாம்.

1. ஆசிரியப்பா பெரும்பான்மையாக இயற்சீர், ஆசிரிய உரிச்சீர் வர ஆசிரியத் தளை இடம்பெற அகவலோசை பெற்று நாற்சீரடியில் வரப்பெறும்.
2. சிறுபான்மை ஒழிந்த சீர், தளை, அடியால் வரப்பெறும்.

ஆசிரியப்பா அடிநிலையால் பெயரிட்டு வழங்கப்பெறுகிறது. அவையாவன:

## 1. நேரிசை ஆசிரியப்பா:

முச்சீரான் வருவது

எ-டு: 'முதுக்குறைந் தனளே முகுக்குறைந் தனளே"
1 2 3
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே"

## 2. இணைக்குறள் ஆசிரியப்பா:

இடையிடை முச்சீராய் வருவது.

எ-டு: ***"நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்***
***சாரச் சார்ந்து தீரும்***
***சாரல் நாடன் கேண்மை***
***சாரச் சாரச் சாந்து***
***தீரத் தீரத் தீர்பொல் லாதே"***

## 3. நிலைமண்டில ஆசிரியப்பா

எல்லா அடிகளும் ஒத்து வருவது.

எ-டு: ***"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்***
***சாரல் நாட செவ்வியை ஆகுமதி***
***யாரா தறிந்திசி னோரே சாரற்***
***சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியோ யாங்கியவள்***

***உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே”*** (குறள் : 18)

## 1. அடிமறி மண்டில ஆசிரியப்பா:

எல்லா அடிகளும் ஒத்து வருவது. இவ்வகையில் எந்த அடியை எப்படி மாற்றி உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் மாறாது அமையும்.

எ-டு: ***“சூரல் பம்பிய சிறுகான் யாறே***

***சூரர மகளிர் ஆரணங் கினரே***

***வாரல் எனினே யானஞ் சுவலே***

***சாரல் நாடநீவர லாறே”***

இப்பாடலில் அடிதோறும் பொருள் முற்றுப் பெறுவதால் அந்த அடியை எங்கு மாற்றி வைத்துப் படித்தாலும் ஓசையும் பொருளும் மாறுவது இல்லை.

**2. அடிமயங்கு ஆசிரியப்பா:**

முச்சீரடி முதலாக அறுசீரடி இறுதியாக மயங்கி வருவது.

**3. வெள்ளடி மயங்காசிரியப்பா:**

வெண்பா அடிகள் இடையிடை வருவது (எ-டு, குறுந்:12)

**4. வஞ்சியடி மயங்காசிரியம்:**

வஞ்சிப்பாவிற்கு அடிகள் இடையிடையே வருவது.

(புறம் 363வது பாடலில்)

***“உப்பிலாஅ அவிப்புழுக்கல்***

***கைக்கொண்டு பிறக்குநோக்கா***

***திழி பிறப்பினோன் ஈயப்பெற்று”***

என்ற மூன்று அடிகளும் வஞ்சியடிகள் ஆகும்.

இவையே ஆசிரியப்பாவின் இயல்புகளும் வகையும் ஆகும். இனி, வஞ்சிப்பா பற்றிய கருத்துக்களை காண்போம்.

**வஞ்சிப்பா:**

வஞ்சி உரிச்சீர் மற்றும் ஏனைய சீர்கள் வரப்பெற்று, இருசீரடி மற்றும் முச்சீரடியால் அமைவது. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை தனிச்சொல் பெற்று சுரிதகத்தால் முடிவது.

வஞ்சிப்பா இருசீரடி வஞ்சிப்பா முச்சீரடி வஞ்சிப்பா என இரு வகைப்படும்.

**1. இருசீரடி வஞ்சிப்பா:** வஞ்சிப்பாவின் பொது இலக்கணம் பெற்று இருசீரடியால் அமையும்.

எ-டு:

***“பூந்தாமரைப் போதலமரத்***
***தேம்புனலிடை மீன்திரிதரும்***
***வளவயலிடைக் களவயின்மகிழ்***

***வினைக்கம்பலை மனைச்சிலம்பும்***
***மனைச்சிலம்பிய மணமுரசமும்***
***வயற்கம்பலைக் கயலார்ப்பவும் நாளும்***
***மகிழின் மகிழ்தூங்கூரன்''***

மேற்கூறப்பெற்ற இயல்புகளை அன்றி ஆசிரியம், வெண்பா, மற்றும் கலி அடிகளோடும் மயங்கி வரப்பெறும் பட்டினபாலையில்

***''நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்*** - ஆசிரிய அடி"
***''கோழி எறிந்த கொடுங்காற் கனங்குடை –*** வெண்பா அடி"
***''வயலாமைப் புழுக்குண்டு வறளடும்பின் மலர் மலைந்து –*** கலியடி"

என விரவி வருதலைக் காணலாம்.

**வெண்பா வகைகள்:**

வெண்பா என்பது வெண்சீர் மற்றும் இயற்சீரால் அமையும். வெண்டளை வரப்பெறும் செப்பலோசையில் அமையும். அளவடி மற்றும் முச்சீரால் பாடப்பெறும்.

வெண்பா அளவு, தொடை, பொருள், இனம் ஆகியவற்றால் வேறுபடுத்தப்படும். இனி வெண்பா வகைகளை காண்போம்.

### 1. குறள்வெண்பாட்டு:

இரண்டு மற்றும் மூன்றடியால் வருவது. இரண்டடியால் வருவது குறள் வெண்பா. விகற்ப குறள் வெண்பா என இருவகைப்படும்.

**குறள் வெண்பா:**

ஓர் எதுகைத் தொடையால் வருவது:

எ-டு: ***''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை***
***பொறுத்தானோ டூர்ந்தான் இடை''***

### விகற்ப குறள் வெண்பா:

விகற்பத் (மாறுபட்ட) தொடையால் வருவது.

எ-டு: ***''உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்***
***கச்சாணி அன்னன் ருடைத்து''***

### 2. சிந்தியல் வெண்பா:

மூன்றடியால் வரும் வெண்பா. இது இன்னிசைச் சிந்தியல் வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா என இருவகைப்படும்.

### இன்னிசை சிந்தியல்:

மூன்று அடியும் ஒத்து ஒரு தொடையால் வருவது

எ-டு: ***''நறுநீல நெய்தலும் கொட்டியும் தீண்டப்***
***பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி***

***பிறநாட்டுப் பெண்டிர் அடி"***

**நேரிசைச் சிந்தியல்:**

வேறுபட்ட தொடையால் வருவது.

எ-டு: ***"நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார் கொண்டு***
***சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே பெற்றோரான்***
***பாவைநல் வாயின் மகள்"***

**1. சமநிலை வெண்பா:**

நான்கடியால் வருவது. இது நேரிசை, இன்னிசை வெண்பா என இரு வகைப்படும்.

**நேரிசை வெண்பா:**

இரண்டாம் அடியின் இறுதி ஒரூஉத் தொடை பெற்று வருவது. இது வருக்க எதுகையாகவும் அமையலாம்.

எ-டு: ***"அறுசுவை உண்டி அமாந்தில்லாள் ஊட்ட***
***மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்***
***சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்***
***றுண்டாக வைக்கற்பாற் றன்று"*** ***(நாலடி)***

மூன்றாம் அடியின் இறுதியிலும் தனிச்சொல் வரலாம்.

**இன்னிசை வெண்பா:**

ஒரூஉத் தொடை பெறாமல் வருவது.

**2. நெடுவெண் பாட்டு:**

ப∴றொடை வெண்பா என்ற மறுபெயர் கொண்டது. 5 முதல் 12 அடி வரை வரப்பெறும். இது நேரிசைப் ப∴றொடை, இன்னிசை ப∴றொடை என இரண்டு வகைப்படும்.

எ-டு: ***"பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்"*** என்ற பாடலில் இடம்பெறும் மூன்றாம் அடி, "பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடை" என ஒரூஉத் தொடை பெற்றது.

**இன்னிசை ப∴றொடை வெண்பா:**

ஒரூஉத் தொடைபெறாது. கலி வெண்பா அல்லது வெண்கலிப்பா ப∴றொடை வெண்பா எனப்படும். அதாவது புணர்ச்சி முதலாகிய பொருள்களுள் ஏதாவது ஒரு பொருளைக் குறித்துத் திரிபின்றி முடிகின்ற ப∴றொடை வெண்பா கலிவெண்பா எனப்படும். இதனை,

***"ஒரு பொருள் நுதலிய வெள்ளடி இயலால்***
***திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே"*** ***(செய்யுள் : 147)***

என்ற நூற்பாவால் அறியலாம்.

**3. கைக்கிளை வெண்பா:**

இது கைக்கிளைப் பொருள் பற்றி வருவது. இவ்வகையில் முதலிரண்டடி வெண்பா யாப்பிலும் இறுதி இரண்டடி ஆசிரிய யாப்பிலும் பாடப்பெறும். இவ்வாறு வருவதை மருட்பா எனக் குறிப்பிடுவர். ஆனால் இளம்பூரணர் வெண்பா யாப்பினால் வருவதே கைக்கிளை வெண்பா. ஆசிரியப்பாவினால் வரப்பெறாது. அவ்வாறு வரின் அது பாடாண்பாட்டுக் கைக்கிளை ஆகும்.

**1. பரிபாடல்:**

“பா” இது என்று சொல்லப்படும். இலக்கணம் இன்றி எல்லாப்பாவிற்கு பொதுவாக அமைவது என்பதனை,

***“பரிபாடல்லே தொகைநிலை வகையின்***
***இதுபா என்னும் இயல்நெறி இன்றிப்***
***பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப” (செய்யுள் : 116)*** என்ற நூற்பாவால் அறியலாம்.

பரிபாடல் பொதுவாக நிற்றலே அன்றிக் 1. கொச்சம், 2. அராகம், 3. சுரிதகம், 4. எருத்து என்ற நான்கு உறுப்புகளையும் பெற்று காமப் பொருள் பற்றி பாடப்பெறும் என்பதால் அறம், பொருள் பற்றி பரிபாடல் அமையாது என்பது பெறப்படுகிறது. பரிபாடல் வெண்பா யாப்பில் அமையும்போது கடவுள் வாழ்த்தாகி வரும் என்பர் இளம்பூரணர்.

இனி, பரிபாடல் உறுப்புகள் பற்றிக் காண்போம்.

### கொச்சகம்:

ஐஞ்சீர் அடுக்கி, ஆசிரியவடி, வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற்சீரடி, முடுகியடி என்று சொல்லப்பட்ட ஆறுவகைப்பட்ட அடிகளாலான பாக்களை உறுப்பாகப் பெற்று வரும். கொச்சகம் வருமிடத்துத் தரவும் சுரிதகமும் இடையிடையே வருதலும் உண்டு.

### அராகம்:

ஈரடியாலும் பல அடியாலும் குற்றெழுத்து மிகுதியாக இடம்பெற அமைவது பெருமை 6 அடி, சிறுமை 2 அடி.

**சுரிதகம்:**

ஆசிரியம் அல்லது வெண்பா இயல்பு பெற்று பாட்டில் கருதிய பொருளை முடித்து நிற்பது. இது ‘அடக்கியல்’ எனவும் வழங்கப்பெறும்.

### எருத்து:

இரண்டடிச் சிறுமை, பத்தடிப் பெருமையாக வரும் உறுப்பு. ஒரு பாட்டின் முகம் தரவு: கால் சுரிதகம்: இடைநிலைப் பாட்டு தாழிசை, கொச்சகம், அராகம் என்பதால் ‘எருத்து’ என்பது கழுத்தின் புறம் என்று பொருள் படுதலால் அவ்வுறுப்பு முகம் எனப்படும் தரவைச் சார்ந்து நிற்க வேண்டும் என்பர் இளம்பூரணர்.

இவையே அன்றி சொற்சீரடி மற்றும் முடுகியலடி என்பனவும் பரிபாடலின் உறுப்புகள் ஆகும்.

### சொற்சீரடி:

சொல்தானே சீராகும் தன்மை பெற்று நிற்பது பாட்டில்லாமல் தொடுக்கப்படும் கட்டுரையில் சொல்லுவது போல அமைவது.

***“வடவேங்கடத் தென்குமரி ஆயிடை”***

***“அ இ உ***

***எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்”***

என்பன போல வருபவை.

### முடுகியலடி:

5, 6, 7 அடிகளால் குற்றெழுத்து மிகுதியாக வர அமைவது முடுகியலடி (செய்யுள் : 118,119)

### 1. அங்கதம்:

செம்பொருள், கரந்தது என இருவகைப்படும்.

அங்கதம்-வசை என்று பொருள் (செய்யுள் : 120)

“செம்பொருளாயின் வசையெனப்படுமே” (செய்யுள் : 121)

என்பது தொல்காப்பியம்.

“மொழி கரந்து மொழியின் அது பழிகரப்பாகும்” (செய்யுள் : 122)

இவற்றின் அடிப்படையிலான செய்யுட்கள் இரண்டு வகையில் கொள்ளப் பெறும். அவை செம்பொருள் செவியுறை, பழிகரப்பு அங்கதம் என நான்கு வகைப்படும். (செய்யுள் : 123,125)

### கலிப்பா:

1. ஒத்தாழிசைக் கலிப்பா 2. கலிவெண்பாட்டு

2. கொச்சகக் கலிப்பா 4. உறழ்கலி

என்று கலிப்பா நான்கு வகைப்படும். (செய்யுள் : 126)

அகப்பொருளை பாடுவதற்கு உரியது கலிப்பா என்பது இளம்பூரணர் கருத்து. இனி கலிப்பா வகைகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

### 1. ஒத்தாழிசைக் கலிப்பா:

ஒத்துஆம் இசை என்ற பொருளுடையது. ஒத்தாழிசை என்ற உறுப்புடைய கலிப்பா ஒத்தாழிசைக்கலிப்பா என்று பெயர் பெறும். இது இரண்டு வகைப்படும் என்பதை,

அவற்றுள்,

***‘ஒத்தாழிசைக்கலி இருவகைத்தாகும்’***

***‘இடைநிலைப்பாட்டே, தரவு போக்கு அடைஎன***

***நடை நவின்று ஒழுகும் ஒன்றென மொழிப’ (செய்யுள் : 127,128)***

என்ற தொல்காப்பியம் நூற்பாக்கள் வழி அறியலாம்.

1. தாழிசை, தரவு, சுரிதகம், அடைநிலைக் கிளவி என்ற நான்கு உறுப்புகளைப் பெற்றது. இது இடைநிலைப்பாட்டு எனக் குறிக்கப்பெறும்.

போக்கு, சுரிதகம், வாரம், அடக்கியல் என்பன ஒருபொருள் குறித்த சொற்கள். அடை எனினும் தனிச்சொல் எனினும் பொருள் ஒன்றே.

**தரவு:**

தரவை விடச் சுருங்கி வரும். எனவே மூன்லடியாலும் இரண்டடியாலும் வரும். ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வருவது தாழிசையின் சிறப்பு. (செய்யுள் : 130)

**தனிச்சொல்:**

தாழிசைக்குப் பின்னர் தனிச்சொல் வருவது சிறப்பானது. (செய்யுள் : 131)

**சுரிதகம்:**

வைப்பு என்றும் கூறப்பெறும் தானோடு ஒத்த அளவுடையதாகவும், அதைவிடக் குறைந்த அளவுடையதாகவும் பாட்டின் இறுதியில் இடம்பெறும் சிறுமை – 4அடி பெருமை 12அடி. இது ஆசிரியம் அல்லது வெண்பாவால் அமையும். இவ்வகைக் கலிப்பா நேரிசை ஒத்தாழிசைக்கலி எனவும் சுட்டப்பெறும் என்பர் இளம்பூரணர். (செய்யுள் : 132)

1. முன்னிலையில் தேவரைப் பரவும் பொருள் கொண்டது:

இது, வண்ணாக ஒத்தாழிசை ஒரு போகு ஒத்தாழிசை என இருவகைப்படும். (செய்யுள்: 133,134)

**வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா:**

தரவு, தாழிசை, எண், சுரிதகம் என்னும் நான்கு உறுப்புகளைக் கொண்டது. இவற்றுள் தரவு: 4, 6, 7 என்னும் அளவடியால் வரப்பெறும்.

**தாழிசை:**

தரவிற் சுருங்கித் தம்முள் அளவு ஒத்து மூன்றாகி வரப்பெறும். சுரிதகம்: தரவிற்கு இணையான இலக்கணம் கொண்டது. எண் என்பது முதல் தொடுக்க உறுப்புப் பெருகிப் பின் தொடுக்கும் உறுப்பு சுருங்கி வருவது. தனிச்சொல் என்ற உறுப்பு வந்தபோது தவறாமல் ‘எண்’ எனும் உறுப்பு வருதல் வேண்டும்.

**ஒருபோகு ஒத்தாழிசைக் கலிப்பா:**

இது கொச்சக ஒருபோகு, அம்போதரங்க ஒருபோகு என இருவகைப்படும். (செய்யுள் : 141, 142)

**1. கொச்சகக் கலிப்பா:**

ஒருபோகு ஓர் உறுப்புப்போதல், அதாவது ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குச் சொல்லப்பட்ட உறுப்புகளில் ஓர் உறுப்பு வராதது என்று பேராசிரியர் கூறுவார். எனவே

***தரவு இல்லாமல் தாழிசை பெற்றும்,***

***தாழிசை இல்லாமல் தரவு பெற்றும்,***

***எண் பெற்று தனிச்சொல் பெறாமலும்***

***சுரிதகம் பெறாமல் தரவு அடிநிமிர்ந்து வந்தும்***

இவ்வாறாக அமைவது கொச்சக ஒருபோகு எனப்படும். அத்துடன் ஒத்தாழிசைக்குரிய யாப்பினின்று வேறுபட்டு வரும். அதற்குரிய கடவுள் வாழ்த்து என்ற பொருளிலும் பாடப்பெறாது. (செய்யுள் : 143)

மேலும்,

***'ஒருபான் சிறுமை, இரட்டியதன் உயர்பே' (செய்யுள் : 144)***

என்பதால் கொச்சக ஒருபோகு 10 அடிச் சிறுமை 20 அடிப்பெருமை பெற்று அமையும்.

எ-டு: கலித்தொகை: 149 – தரவு இன்றித் தாழிசை, தனிச்சொல், சுரிதகம் பெற்று வந்துள்ளது.

கலித்தொகை : 19 – தாழிசை இன்றித் தரவு, சுரிதகம் பெற்று வந்துள்ளது.

கலித்தொகை : 133 – சின்னம் இன்றித் (தனிச்சொல்) தரவு எண், சுரிதகம் பெற்று வந்துள்ளது.

கலித்தொகை : 21 – சுரிதகம் இன்றித் தரவு அடிநிமிர்ந்து வந்துள்ளது காண்க.

### 1. அம்போதரங்க ஒருபோகு:

தரவு, கொச்சகம், அராகம், சிற்றெண், சுரிதகம் என்ற ஐந்து உறுப்புகளை உடையது. இதன் பெருமை 60 அடி, சிறுமை 30 அடி (செய்யுள் : 145,146) .

இங்குச் சொல்லப்பட்ட உறுப்புகளே பரிபாடல் உறுப்புகள் என்றாலும் மேற்கூறியுள்ள முறை மாறாமல் வரும்போது அது அம்போதரங்க ஒருபோகு என்றும் 60 அடியின் குறைந்து, உறுப்புகள் முறை மாறி வந்தால் அது பரிபாடல் என்றும் இளம்பூரணர் விளக்குவர்.

கலி : 102 அம்போதரங்க ஒருபோகில் அமைந்த கலிப்பா என்று இளம்பூரணர் எடுத்துக்காட்டு தருகிறார்.

### கலிவெண்பா:

கலிவெண்பா, வெண்கலிப்பா என்பன ஒரே பொருள் தரும் பெயர்கள். இறுதி அடி வரையில் ஒரு பொருள் குறித்து வெள்ளடி இயல்பால் முடிவது கலிவெண்பா ஆகும்.

வெள்ளடி இயல்பு என்பது வெண்டளை வந்த ஈற்றடி மூச்சீரால் வருவதும் பிறதளைகள் வந்து ஈற்றடி மூச்சீரால் வருவதும் ஆகும்.

எ-டு. கலி : 6,111 காண்க.

இக்கலிவெண்பாவிற்கு அடிவரையறை இல்லை. அது வேண்டியவாறு வரப்பெறும். (செய்யுள் : 153)

### கொச்சகக் கலிப்பா:

தரவு, சுரிதகம் என்ற உறுப்புகள் முறைப்படி முதலிலும் இறுதியிலும் வருதல் இன்றி இடையிடை வருதல்: ஐஞ்சீரடி பல வருதல்: தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், சொற்சீரடி, முடுகியலடி அல்லது அராகம் என்னும் ஆறு உறுப்புகளையும் பெற்றும் பெறாமலும் வருதல் ஆகியன கொச்சகக் கலிப்பாவின் இயல்புகளாகும். (செய்யுள் : 148)

எ.டு: 'காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள' என்ற கலி 39-ஆம் பாடல் தரவு, கொச்சகம், தனிச்சொல், தாழிசை, பேரெண், கொச்சகம், தனிச்சொல், சுரிதகம் என்ற உறுப்புகள் மயங்கி வர அமைந்துள்ளது.

**உறழ்கலி:**

கூற்றும் மாற்றமும் கலந்து வந்து (உரையாடல்) சுரிதகம் இல்லாமல் முடிவது உறழ்கலிப்பா எனப்படும்.

***'கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்***
***போக்கு இன்றி ஆகல் உறழ்கலிக்கு இயல்பே' (செய்யுள் : 149)***

இவ்வாறாக பாக்களின் இயல்புகளும், வகைகளும் விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டன.

**நோக்கு:**

ஒரு பாடலில் எல்லா உறுப்புகளும் அமைந்து இருந்தாலும் அதில் 'நோக்கு' அமையாவிட்டால் அது பாட்டு ஆகாது. அத்தகைய இன்றியமையாத உறுப்பு பற்றி இனிக்காண்போம்.

***'மாத்திரை முதலா அடிநிலை காறும்***
***நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே' (செய்யுள் : 100)***

இது நோக்கு பற்றிய தொல்காப்பிய நூற்பா.

அதாவது ஏதாவது ஒரு பொருளைக் குறித்துச் செய்யுள் இயற்றும்போது அப்பொருளை முடிக்கும் வரையில் பிறிது பொருள் நோக்காமல் அதனையே நோக்கி (குறித்து) நிற்றல் ஆகும். இது ஒரு நோக்காக ஓடுதல், பல்நோக்காக ஓடுதல், இடையிட்டு நோக்குதல் என்று மூவகைப்படும் என்பர் இளம்பூரணர்.

***'அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட***
***மறுசிதை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்***
***சென்றிரப்பர், ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்***
***றுண்டாக வைக்கற்பாற் றன்று'***

இப்பாடல் 'செல்வம் நில்லாது' என்ற ஒரு பொருளே பற்றி அமைந்துள்ளதால் இது ஒரு நோக்காக ஓடியது என்பர்.

***'அறமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்***
***பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்***

*வெறுமின் வினைதீயார் கேண்மை எஞ்ஞான்றும்*

*பெறுமின் பெரியார்வாய்ச் சொல்'*

என்னும் இப்பாடல் ஒருவர் பின்பற்ற வேண்டிய பல அறங்களைக் கூறியுள்ளதால் இது ***'பல்நோக்காக ஓடியது'*** என்பர்.

ஒரு பாடலுள் ஒரு மாத்திரையையோ அசையையோ, சீரையோ நீக்கினாலும் மாற்றினாலும் பாடலின் பொருள் கெட்டுவிடும் என்று சொல்லக்கூடிய அளிவிற்கு அவை ஒவ்வொன்றையும் ஒரு காரணம் கருதிப் பொருந்திய இடத்தில் அமைத்துப் பாட்டின் பொருளைச் சிறக்கச் செய்வது நோக்கின் சிறப்பு ஆகும். இவ்வுறுப்பு ஏன்? என்ற கேள்விக்குக் காரணம் காட்டி, இது இவ்விடத்துத் தேவையானதே என்று அதன் இன்றியமையாமையை உணர நிற்பதே நோக்கு.

நோக்கு என்பதனைச் சொல் நோக்கு, பொருள் நோக்கு, வண்ண நோக்கு என மூன்றாக்கி அவை முறையே வடமொழி பதஅவுசித்தியம், வலது அவுசித்தியம், குண அவுசித்தியம் என்பவற்றோடு ஒப்புமை உடையன என்று கூறுவர் பேரறிஞர் தமிழண்ணல் அவர்கள்.

இதுவரையில் யாப்பு அடிப்படையிலான பாக்கள் மற்றும் அவற்றின் வகைகள் பற்றி அறிந்து கொண்டோம். இனி, பொருள் அடிப்படையிலான பாக்கள் பற்றிக் காண்போம். பாக்களின் யாப்பு பற்றிக் கூறிய தொல்காப்பியர், அப்பாக்கள் செம்மையாகப் பொருள்வழிச் செல்லாவிட்டால் அசை சிறப்படைய மாட்டா என்பதை நன்கு உணர்ந்தவர். எனவே அக்கருத்து அடிப்படையிலான செய்திகளைக் காண்போம்.

### பாக்களுக்குரிய பொருண்மை:

ஆசிரியம் முதலாகிய நால்வகைப் பாக்களும் பொதுவாக நின்றவழி அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று முதற்பொருட்கண் பாடப்பெறுவதைச் சான்றோர் செய்யுள் இடத்துக் காணலாம்.

*'அந்நிலை மருங்கின் அறமுதலாகிய*

*மும்முதற் பொருட்கும் உரிய என்ப' (செய்யுள் : 192)*

என்பது அக்கருத்து உணர்த்தும் நூற்பா.

மேற்கூறிய நான்கு பாவிற்கும் வாழ்த்தியல் பொருள் உரியதாகும் என்பதை

*'வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே'*

என்கிறது தொல்காப்பியம். இதில் வகை என்பது தேவரை, முனிவரை, ஏனையோரை வாழ்த்துதல் என்பார் இளம்பூரணர்.

வாழ்த்து புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து என இருவகைப்படும். அவை குறித்துப் பார்ப்போம்.

### புறநிலை வாழ்த்து:

நீ வழிபடும் தெய்வம் நின்னைப் புறம்காப்பக் குற்றம் தீர்ந்த செல்வத்தோடு வழிவழியாகச் சிறந்து பொலிமின் என்று வாழ்த்துவத புறநிலை வாழ்த்து எனப்படும். இது கலி மற்றும் வஞ்சியால் பாடப்பெறாது என்பதால் ஆசிரியம், வெண்பாவால் பாடப்பெறும் என்பது தெரிகிறது. ஆசிரியம் வெண்பா கலந்த மருட்பாவிலும் பாடப்பெறும். இதனை

***'வழிபடு தெய்வம் நிற்புறதம் காப்பக்***
***பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து***
***பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே***
***கலிநிலை வகையும் வஞ்சியும் பொறஅ'*** ***(செய்யுள் : 106)***

எ-டு: ***'இமையா முக்கண் ணிலங்குசுடர் வாய்ந்த***
***உமையொரு பாகத் தொருவன் காப்பநின்***
***பல்கிளைச் சுற்றமொடு நல்லிதி னந்தி***
***நீபல வாழிய ----------- ---------------------"***

எனும் பாடலில் **"உமையொரு பாகத்தான் காப்ப நீ வாழிய"** என வந்துள்ளமையால் இப்பாடல் புறநிலை வாழ்த்து ஆயிற்று. இது ஆசிரியப்பாவால் அமைந்தது.

அதே போன்று,

***'------------------- ------------------- ----------------------***

***------------------- ------------------ ----------------திங்கள்***

***கறைபெற்ற கற்றைச் சடைக்கடவுள் காப்ப***

***நிலைபெற்று வாழியரோ நீ'***

எனும் வாழ்த்துப்பாடல் வெண்பாவால் அமைந்துள்ளது காண்க.

**வாயுறை வாழ்த்து:**

வேம்பும் கடுவும் உண்ணும்போது கசந்தாலும் பின்பு மருந்தாகி உடலுக்கு நன்மை தருவது போல, முன்பு வெறுப்பைக் கொடுத்துப் பின் நன்மை பயக்கும் கொடுமையான சொற்களால் வருங்காலத்துப் பயன் கருதிக் கூறுகின்ற அறிவுரைச் செய்திகளே வாயுறை வாழ்த்து ஆகும் என்பதனை,

***'வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்***

***வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்***

***தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று***

***ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே'***

என்ற நூற்பாவால் அறியலாம்.

இத்தகைய பலபாடல்களில் புலவர்கள் நாடாளும் அரசர்க்கு அறிவுரை கூறும் நிலையில் புறநானூற்றில் அமைந்திருப்பது காணலாம்.

புறம் 363ல் உலகம் முழுவதும் ஒருகுடைக் கீழாக ஆண்ட மன்னா் பலரும் மாய்ந்தனா். எனவே அழியாத உயிா் உலகில் இல்லை. ஆதலால் கூற்றுவன் (எமன்) உயிரைக் கவர வரும் முன்னா் எண்ணிய நல்வினையைச் செய்க என்று அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளது.

**அவை அடக்கியல்:**

அவையினா் முன் நான் அறியாதன சொல்லினும் அதனைப் பாகுபடுத்திக் கோடல் (கொள்ளுதல்) வேண்டும் எனக் கூறுதல். (செய்யுள் : 106)

**செவியறிவுறூஉ:**

பெரியோா் நடுவில் வெகுளுதல் இன்றித் தாழ்ந்து நடத்தல் கடன் என்று செவிக்கு அறிவுறுத்தல் செவியறிவுறூஉ ஆகும்.

***"செவியுறை தானே***
***பொங்குதல் இன்றிப் புரையோா் நாப்பண்***
***அவிதல் கடன் எனச் செவியுறுத் தன்றே"*** ***(செய்யுள் : 110)***

என்பது தொல்காப்பியம்.

எ-டு ***"பணிவுடைய னின்சொல் லாத லொருவற்***
***கணியல்ல மற்றுப் பிற"*** ***(குறள் : 95)***

புறநிலை வாழ்த்தும் கலிப்பா மற்றும் வஞ்சிப்பாவால் பாடப்பெறாது. மருட்பாவால் பாடப்பெறும்.

**பண்ணத்தி:**

பாட்டின் கண் கலந்த பொருளை உடையனவாகி பாட்டின் இயல்பை உடையது பண்ணத்தி ஆகும். இது பிசியொடு ஒத்த அளவினது என்பா் தொல்காப்பியா்.

***'அதுவே தானும் பிசியொடு மானும்' (செய்யுள் : 174)***

பிசி இரண்டடியால் வருவது. பண்ணத்தியும் அவ்வாறே. நாற்சீரடியால் மிக்கு வரும் பாட்டுப் பனிரெண்டும். அவ்வாறு அவ்வடியின் வேறுபட்டு வருவனவும் பண்ணத்தி என்று கொள்ளப்பெறும். இவை இருசீரடி முதலிய எல்லா அடிகளாலும் மூன்றடிச் சிறுமையாக அமைந்து வரும் பாவினம் ஆகும் என்பா். (செய்யுள் : 165)

இனி பாவினம் பன்னிரெண்டு பற்றிப் பாா்ப்போம்.

**பாவினம்:**

ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்று சொல்லப்பட்ட நான்கு பாவினங்களோடு தாழிசை, துறை, விருத்தம் என்ற மூன்றும் பொருந்திவர இனம் 12 ஆகும்.

**தாழிசை 4:**

**1. ஆசிரியத் தாழிசை:**

மூன்றடி ஒத்து வருவது. ஒரு பொருள்மேல் அளவொத்து மூன்றடுக்கி வருவது என்பர் இளம்பூரணர். எடுத்துக்காட்டாக சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் வரும்.

***'கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்'***

எனவரும் பகுதியைக் காட்டுவர்.

1. **வஞ்சித் தாழிசை:**

குறளடி நான்கினால் ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வருவது.

2. **வெண்டாழிசை**:

மூன்றடிகள் வந்து வெண்பா போல முடிவுறும்.

எ-டு: ***"நண்பி தென்று தீய சொல்லார்***
***முன்பு நின்று முனிவு செய்யார்***
***அன்பு வேண்டு பவர்."***

3. **கலித்தாழிசை**:

அடிவரையின்றி ஒத்துவந்து ஈற்றடி சிலசீா் மிக்கும் குறைந்தும் வருவது

**துறை 4:**

1. **ஆசிரியத் துறை:**

நான்கு அடியாய் இடையிடை சீர் குறைந்து வருவது.

2. **வஞ்சித் துறை:**

குறளடி நான்கினால் தனித்து வருவது.

எ-டு: ***'முல்லைவாய் முறுவலித்தன***
***கொல்லைவாய்க் குருந்தீன்றன***
***மல்லல்வான் மழை முழங்கின***
***செல்வர்நேர் வரவுகாண்குமே'***

3. **வெண்டுறை:**

மூன்றடிச் சிறுமையாக ஏழடிப் பெருமையாக வந்து இறுதியடிகளில் சில சீர் குறைந்து வருவது.

4. **கலித்துறை:**

நெடிலடி நான்கினால் வருவது. அதாவது ஐஞ்சீராய் வருவது 16,17 எழுத்துப்பெற்ற நான்கடியால் வருவனவும் கலித்துறை ஆகும்.

விருத்தம்:

1. **ஆசிரிய விருத்தம்:**

அறுசீரடியால் நான்கடியும் ஒத்து வருவது.

**2. வஞ்சி விருத்தம்:**

***'முச்சீரடி நான்காகி வருவது***
***இருதி வேற்றுமை இன்மையால்***
***சுருதி மேற்றுறக் கத்தினோ***
***டரிது வேற்றுமை யாகவே***
***கருதி வேல்தடங் கையினாய்'*** ***(சூளாமணி, சீயகதை : 170)***

**1. வெளிவிருத்தம்:**

நான்கடியாயினும் மூன்றடியாயினும் அடிதோறும் தனிச்சொல் பெற்று வருவத.

எ-கா: ஆவா என்றே அஞ்சினா் ஆழ்ந்தார் - ஒரு சாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டார் - ஒரு சாரார்
மாமா என்றே மாய்ந்தனா் நீத்தார் - ஒரு சாரார்
ஏகீர் நாய்கீர் என்செய்தும் என்றார் - ஒரு சாரார்

**2. கலி விருத்தம்:**

நாற்சீரடி நான்கினால் வருவது.

எ-டு: சூளாமணி, நகர : 17 காண்க.

இவையே பாவினம் பன்னிரெண்டு பற்றிய செய்திகளாகும்.

**அடிவரையுள்ளனவும் இல்லனவும்:**

எழுத்துக்களின் இணைவிற்கு ஏற்ப அடிகள் அமைந்து ஓலச்சிறப்புப் பெறுகின்றன. (செய்யுள் : 31 -24). தமிழில் நாற்சீரடியே மிகுதியாகப் பயன்பட்டதால்,

***'நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே'***

என்று சிறப்பிக்கப்பட்டது. பாக்களின் அடிவரையறை பாடல் வடிவத்திற்குத் துணை செய்கின்றன. அந்நிலையில் அடிவரையறை உள்ள பாக்கள், அடிவரையறை இல்லாத பாக்கள் என இரண்டு வகையில் பாக்கள் அமைகின்றன.

அடிவரையறை உள்ளன:

1. ஆசிரியப்பா: மூன்றடி சிற்றெல்லை 100 அடி பேரெல்லை. பத்துப்பாட்டு, சிலம்பு, மணிமேகலை இவற்றில் இத்தகைய அடிகள் மிகுந்த ஆசிரியப்பாக்களைக் காணலாம்.

**வஞ்சிப்பா:**

அடிவரையறையினைத் தொல்காப்பியர் தனியே குறிப்பிடவில்லை. ஆனால் 1000 அடிப்பெருமை எனக் கூறுவர் இளம்பூரணர்.

**வெண்பா:**

குறுவெண்பாட்டு : அளவடி, சிந்தடி

நெடுவெண்பாட்டு : பன்னிரெண்டு அடி (செய்யுள் : 151)

**கலிப்பா:**

கலிப்பாவில் தரவு, தாழிசை போன்ற உறுப்புகள் அடிவரையறை பெறும். ஒத்தாழிசைக் கலியில் தரவு: சிற்றெல்லை நான்கடி பேரெல்லை பன்னிரெண்டடி. தாழிசை: தரவை விடச் சுருங்கி வரும்.

வண்ண ஒத்தாழிசையில்:

தரவு: 4,6,8 ஆகிய அளவடியினால் வரும்.

தாழிசை: தரவிற் சுருங்கி தம்முள் அளவொத்து வரும்.

எண்: வரையறை இல்லை.

சுரிதகம்: தரவு போன்றது.

**கொச்சக ஒருபோகில்:**

சிற்றெல்லை பத்து அடி, பேரெல்லை இருபது அடி

**அம்போதரங்க ஒரு போகில்:**

சிற்றெல்லை முப்பது அடி, பேரெல்லை நானூறு அடி.

கலிவெண்பாட்டில்: அடிவரையறை இல்லை.

பரிபாடல்: சிற்றெல்லை இருபத்தைந்து அடி: பேரெல்லை நானூறு அடி

பண்ணத்தி: பிசி போன்ற இரண்டடியால் வரப்பெறும்.

பாவினங்களுக்கான அடிவரையறையினை பாவினம் என்ற பகுதியில் கண்டு கொள்க.

## அடிவரையறை இல்லாதன

உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுச்சொல் என்ற ஆறும் அடிவரையில்லாத பாவகைகள் ஆகும். இவை பற்றிய செய்திகள் மற்றும் இலக்கணங்கள் யாப்பும் தொடை வகைகளும் என்ற தலைப்பின் கீழ் முன்னரே விளக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து உணர்க. செய்யுளியல் 153-176 வரையிலான நூற்பாக்கள்.

## திணை முதலிய செய்யுள் உறுப்புகள்

திணை என்பது ஒழுக்கம் ஆகும். செய்யுளில் கூறப்படும் ஒழுகலாறுகள் அகத்திணை, புறத்திணை என்று பகுத்து அறியப் பயன்படுவதே திணை என்னும் உறுப்பு. திணை பற்றிய களவியல், கற்பியலும், பொருள் பற்றியன பொருளியலிலும் மெய்ப்பாடு. மரபு பற்றியன மெய்ப்பாட்டியல், மரபியலிலும், தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளன. அவை செய்யுட்கு உறுப்பாவது எங்ஙனம் என்று காண்போம்.

**திணை:**

திணை என்பது நிலம், பருவம், பொழுதுகள், இயற்கை இவற்றை அடிப்படையாகக் கொண்டது. இவற்றின் பின்னனியில் பாடப்பெறுவதே திணை இலக்கியம் ஆகும்.

திணை அகம், புறம் என இரண்டு வகைப்படும். அகம் இன்பம் பற்றியது. பொருள் இன்பம் அல்லாத ஏனைய அறம், பொருள், வீடு பற்றியது.

அகத்திணை-கைக்கிளை முதலாகப் பெருந்திணை வரையிலான ஏழு வகைப்படும்.

புறத்திணை-வெட்சி முதலாகப் பாடாண் வரையிலான ஏழு வகைப்படும்.

**கைக்கோள்:**

அகத்திணை ஒழுக்கம் விகற்பமாகிய களவு மற்றும் கற்பு என்னும் பாகுபாடுகள் கைக்கோள் எனப்படும். இவற்றுள் களவு நால்வகைப்படும். அவையாவன,

1. இயற்கைப் புணர்ச்சி 2. இடந்தலைப்பாடு
3. பாங்கற் கூட்டம் 4. தோழியிற் கூட்டம் என்பன. (செய்யுள் : 178)

இயற்கைப் புணர்ச்சி என்பது ஒத்த தலைவனும் தலைவியும் தாமே கூடும் கூட்டம். இயற்கைப் புணர்ச்சி போது தலைவன் தலைவியின் நலம் பாராட்டுவதாக அமைந்துள்ள,

***'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' – (குறுந் : 2)***

என்ற பாடலைச் சான்றாகக் கொள்ளலாம்.

2. இடந்தலைப்பாடு என்பது இயற்கை புணர்ச்சி. புணர்ச்சி நீங்கிய தலைவன் மீண்டும் அதே இடம் சென்று தலைவியைக் காண எதிர்ப்படுதல்.

எ-டு: நற்றிணை 39

3. பாங்கற் கூட்டம் என்பது தலைவன் தலைவியை அடைய பாங்கள்(தோழன்) துணையை நாடுவான். பாங்கன் முதலிய உரைத்தாலும் பின்னர் இணைவான். குறியிடம் சென்று தலைவியைக் காண்பான். தலைவனிடம் வந்து அவள் நிலை உரைப்பாள். இதுவே பாங்கற் கூட்டம்.

குறுந்தொகை 58 ஆம் பாடலில் தன்னை இடித்துக் கூறி அறிவுரை பகன்ற தோழனிடம் (பாங்கனிடம்) தலைவன்

***'ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்***
***கையில் ஊமன் கண்ணில் காக்கும்***
***வெண்ணெய் உணங்கல் போலப்***
***பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற் கரிதே'***

என்று தன் காமநோயின் தன்மையை எடுத்துக் கூறுவதைக் காணலாம்.

**3. தோழியிற் கூட்டம்:**

களவுக் கூட்டம் நீட்டிக்க விரும்பிய தலைவன் தோழியை இரந்து வேண்டிப் பின்னர் அவள் துணை பெற்றுத் தலைவியைக் கூடுதல்.

எ-டு: குறுந்தொகை 222-ஆம் பாடல் காண்க.

இவை நான்குமே களவின் நிலைகள் ஆகும். இனி கற்பு என்னும் கைக்கோள் வகைகளை நோக்குவோம்.

**கற்பின் நிலைகள்:**

1. மறைவெளிப்படுதல்: மறைந்து ஒழுகும் ஒழுக்கமாகிய களவு பிறருக்கு வெளிப்படுதல்.

2. தமரிற் பெறுதல்: தலைவியின் சுற்றத்தார் தலைவியைத் தனக்கு அளிக்க, திருமணச் சடங்கின் வழி பெறுதல் ஆகிய இரண்டுடன் மலிதல், புலத்தல், ஊடல், உணர்வு, பிரிதல் என்ற ஐந்து ஒழுகலாறுகள் கற்பிற்கு உரியவை என்கிறார் தொல்காப்பியர். (செய்யுள் : 17)

இவற்றுள் மலிதல் என்பது இல்லற இன்பத்தால் மகிழ்தல். புலவி என்பது புணர்ச்சியால் ஏற்பட்ட மகிழ்ச்சி குறைவுபடாமல் காலம் கருதி அனுபவிப்பதோர் உள்ள நிகழ்ச்சி. ஊடல் என்பது உள்ளத்தில் நிகழ்ந்ததனைக் குறிப்பு மொழியால் அன்றிக் கூற்று மொழியால் உரைப்பது. உணர்வு என்பது ஊடல் நிகழ்ந்த போது இல்லாத ஒன்றினை உண்டோ என்று ஐயுற்ற போது அம்மயக்கம் தீர உணர்த்துதல். பிரிவு என்பது ஓதல், தூது, பகை, பொருள், காவல், பரத்தை காரணமாகப் பிரியும் பிரிவை உணர்த்தியது.

எ-டு: ***"எம்மனை முந்துறத் தருமோ***

***தம்மனை உய்க்குமோ யாதவன் குறிப்பே" (அகம் : 915)***

***'தமர்தர***

***ஓரில் கூடி உடன்புணர் கங்குல் (அகம் : 85)***

***என்பது தமரில் பெறுதல்.***

***'நாணும் கடும் குரைய ளாகிப்***

***புலவி வெய்யள்யான் முயங்குங் காலே' (அகம் : 39)***

என்பது புலவி.

***'நோய்சேர்ந்த திறம்பண்ணி நின்பால் எம்மனை***

***தீசேர்ந்த வில்லினாய் வராமல் பெறுகபின்' (கலி : 77)***

என்பது ஊடல் பற்றியது என்று பேராசிரியர் எடுத்துக்காட்டுக்கள் தருகிறார்.

'மெய்பெறும் அவையே கைக்கோள் வகையே' (செய்யுள் : 180)

என்று தொல்காப்பியர் கூறுவதால் களவு, கற்பு என்ற இரண்டுமட்டுமே கைக்கோள் வகைகளாயிற்று.

இனி கூற்று பற்றிக் காண்போம்.

**கூற்று:**

"இதனைக் கூறுகின்றார் இன்னார்" என்று கூறுவது அல்லது குறிப்பிடுவது கூற்று எனப்படும். கூற்று நிகழ்த்துகின்றவரைக் களவில் கூற்று நிகழ்த்துபவர், கற்பில் கூற்று நிகழ்த்துபவர் எனப் பிரிக்கலாம்.

**களவின்கண் கூற்று நிகழ்த்துபவர்:**

பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி என்று சொல்லப்பட்ட அறுவரும் களவில் கூற்று நிகழ்த்துபவர் ஆவர்.

இவருள் பார்ப்பான் உயர்குலத்தானாகிய தோழன்: பாங்கன் ஒத்த குலத்தானும் இழிந்த குலத்தானும் ஆகிய தோழன் என்பார் இளம்பூரணர்.

**பாங்கன் கூற்று:**

எ-டு: ***'காமங் காம வென்ப காமம்***
***மணங்கும் பிணியும் அன்றே நினைப்பின்***
***மூதைச்சுவற் கலித்த முற்றா விளம்பல்***
***மூதா தைவந் தாங்கு***
***விருந்தே காமம் பெருந்தோ ளோயே'*** ***(குறுந் : 204)***

**தோழி கூற்று:**

எ-டு: ***'ஏனல் கால லிவளு மல்லள்***
***------------ ---------------- -------------***
***சொல்லு மாடுப கண்ணி னானே***

இவைபோல் ஏனையோர்க்குரியன அகப்பாடல்களில் காணலாம்.

**கற்பின்கண் கூற்று நிகழ்த்துவோர்:**

களவின்கண் கூற்று நிகழ்த்தும் அறுவரோடு பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் இவரும் கற்பின்கண் கூற்றுக்குரியோர் ஆவர். (செய்யுள் : 182)

**பாணன் கூற்று:**

'செவ்வழி நல்யா ழிசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுண மெய்நிறுத்
தவர்திறஞ் செல்வேன் கண்டனென் யானே' (அகம் : 14)

**கூத்தன் கூற்று:**

***'ஆடலிற் பயின்றனை யென்னா தென்னுரை***
***யூடலிற் தெளிதல் வேண்டும்'***

**கண்டோர் கூற்று:**

***'மரந்தலை மணந்த நனந்தலைக் கானத்து***

***நறுந்தண் ணியன்கொ னோகோ யானே' (நற் : 394)***

இவைபோல் வருவனவாகிய பிற அகப்பாடல்கள் காண்க.

இனி, இருவகைக் கைக்கோளிற்கும் உரிய மரபுகள் பற்றித் தொல்காப்பியர் கூறுவனவற்றைக் காண்போம்.

தலைமகன் வாழும் ஊரில் உள்ளவர்கள். அவனது அயல் மனையில் வாழ்பவர், சேரியில் வாழ்பவர், அவளது நோயின் காரணத்தைக் குறிப்பினால் அறிவோர், தந்தை, தமையன் ஆகிய இவர்கள் கூறியதாகப் பிறர் கூறலாமே ஒழிய இவர்களே கூறியதாகச் செய்யுள் செய்தல் இல்லை. (செய்யுள் : 183)

எ-டு: எந்தையும்

***'நிலனுறப் பெறாஅன் சீறடி சிவப்ப***

***எவன்இல குறுமகள் இயங்குதி என்னும்' (அகம்:12)***

இது தோழி கூற்று. ஆனால் தந்தை உட்கொண்டு கூறியதாக அமைந்துள்ளது.

***ஊஉ ரலரெழச் சேரி கழலென***

***வானா தலைக்கு மறனி லன்னை' (குறுந் : 262)***

மேற்காட்டிய தோழி கூற்று ஊரார், அன்னை இவர்தம் கூற்றுகள் உட்கொண்டன.

### நற்றாய்க்குரிய மரபு:

***'கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்***

***நற்றாய்க் கூறல் முற்றத் தோன்றாது' (செய்யுள் : 184)***

என்பது தொல்காப்பியம்.

தலைவனோடும் தலைவியோடும் நற்றாய் நேரிடையாகக் கூறியதாக செய்யுள் செய்தல் மரபு இல்லை. எனவே ஏனையோரை நோக்கியே நற்றாய் கூற்று நிகழ்த்துவாள். இதற்குப் பேராசிரியர் அகம்: 15ஆம் பாடலைச் சான்று காட்டுகின்றார்.

### கண்டோர்க்குரிய மரபு:

நற்றாய், தோழி, செவிலி போன்ற பெண்களோடும் தலைவன் மற்றும் தலைவியோடும் கண்டோர் கூற்று நிகழ்த்துதற்கு உரியர் என்பர் தொல்காப்பியர் (செய்யுள் : 185)

எ-டு: ***'வில்லோன் காலன கழலே தொடியோள்***

***மெல்லடி மேலன சிலம்பே' (குறுந் : 7)***

என்பது செவிலியிடம் கண்டோர் கூறியது.

### தலைவனுக்குரிய மரபு:

தலைவன், தலைவியை உடன்கொண்டு போகும் இடைச்சுரத்தில் உலகியல் நெறியை உளங்கொண்டு தனது ஆற்றலால் தோன்ற ஆணைமொழியைக் கூறுவதற்கு உரியன் என்பதை,

***'இடைச்சுர மருங்கில் கிழவன் கிழத்தியோடு***

***வழக்கியல் ஆணையிற் கிளத்ததற்கும் உரியன்'*** *(செய்யுள் : 186)*

என்ற நூற்பா மூலம் அறிகிறோம்.

எ-டு: நற்றிணை 362 ஆம் பாடலில், வேங்கை மரத்தின் புறமிருந்து மறவர் வந்துவிட்டால் போர் புரிந்து காப்பேன். உனது சுற்றத்தார் வந்துவிட்டால் மறைந்து கொள்வேன்.

***'நீ விளை யாடுக சிறிதே'***

என்று அவள் அயர்வு நீக்குமாறு தலைவன் கூறுவதைக் காணலாம்.

தலைவனும் தலைவியும் அல்லாதார்க்கு உரிய மரபு:

தலைவன், தலைவி அல்லாத ஏனைய பதின்மரும்(10பேரும்) தலைவன், தலைவியுடன் இடமும் காலமும் கருதிக் கூற்று நிகழ்த்துதல் வேண்டும். (செய்யுள் : 187)

இனி, கேட்போர் பற்றிய தொல்காப்பியச் செய்திகளைக் காண்போம்.

***'இன்னார்க்குச் சொல்லுகின்றது இது எனத் தெரிவித்தல் கேட்போர் என்பதாகும்'***

***'மனையோள் கிளவியும் கிழவன் கிளவியும்'***

***நினையுங் காலைக் கேட்குநர் அவரே (செய்யுள் : 188)***

என்பது நூற்பா.

நூற்பாவில் இடம்பெறுகின்ற 'அவரே' என்னும் சுட்டு முன் நூற்பாவின் 'ஒழிந்தோர்' என்பதைக் குறிக்கிறது. எனவே தலைவனும் தலைவியும் கூற, அதனைக் கேட்போர் பாணர், கூத்தர், விறலி, பரத்தையர், அறிவர், கண்டோர், பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி என்ற பத்துப்பேர் என்பர் இளம்பூரணர்.

***'நின்கோள், புதுவது பன்னா ளும்பாரட்ட யானு***

***மிதுவொன் றுடைத்தென வெண்ணியது தேர'*** *(கலி : 24)*

இது தோழி கேட்ப தலைவி கூறியது.

***'மனையோன் சொல்லெதிர் சொல்லில் செல்லேன்'*** *(அகம் : 14)*

இது பாணன் கேட்ப தலைவி கூறியது.

***'தண்டா ரகமுள் முண்ணுமோ பலியே'*** *(குறுந் : 362)*

இது கண்டோர் கேட்ப தலைவி கூறியது.

***'இடிக்கும் கேளிர் நும்குறை யாக'*** *(குறுந் : 129)*

இது பாங்கன் கேட்ப தலைவன் கூறியது.

***'சான்றவர் வாழியோ சான்றவி ரென்றும்'*** *(கலி : 139)*

இது கண்டோர் கேட்ப தலைவன் கூறியது.

மேலும் பார்ப்பார், அறிவார் என்ற இவ்விருவர் கூற்று எல்லோரும் கேட்கப் பெறுவர். (செய்யுள் : 189)

பார்ப்பார், அறிவர் என்பவர் புலன் நன்குணர்ந்த அறிவு உடையோர் ஆதலால் இவர்வழி நிற்றல் தலைவன் தலைவியர் கடனாகும்.

பரத்தையும் வாயில்களும் தலைமகள் கேட்க வேண்டி கூற்று நிகழ்த்துவர் என்பது,

***'பரத்தை வாயில் என இரு கூற்றும்***
***கிழத்தியைச் சுட்டாக் கிளப்பும் பயனிலவே' (செய்யுள் : 190)***

என்ற நூற்பா உணர்த்தும் செய்தியாகும்.

வாயில்கள் என்பவர் தலைவி தலைவனிடம் கொண்டுள்ள ஊடல் தீர்க்கவே கூறவேண்டுதலால் தலைவி கேட்பவே மொழிவர்.

வாயில்கள் தமக்குள் தாமே வினாவுமிடத்துத் தலைமகளை நோக்காமல் தமக்குள் கேட்டுக் கொள்ளுதல் மரபு.

***'தண்ணந் துறைவன் நோக்கி***
***நம்மு னாணிக் கரப்பா கும்மே'***

என்று கூறுவதாக அமைந்துள்ளது குறுந்தொகை 6ஆம் பாடல்.

மேலும் தலைமக்கள் காம மிகுதியால் துன்புறும் வேளையில் பேசமாட்டாத, கேட்கமாட்டாத பொருள்களைப் பேசுவன போலவும், கேட்பது போலவும் எண்ணிக் கொண்டு அவற்றிடம் கூற்று நிகழ்த்துவது மரபே ஆகும் என்கிறார். அவ்வாறு எண்ணக்கூடியன இவை இவை என்றும் வரையறுத்துக் கூறுகின்றார்.

***'ஞாயிறு திங்கள் அறிவே நாண்***
***கடலே கானல் விலங்கே மரனே***
***புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே***
***அவையல பிறவு நுதலிய நெறியால்***
***சொல்லுந போலவும் கேட்குந்த போலவும்***
***சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்' (செய்யுள் : 191)***

என்பதே அந்நூற்பா.

கலி 143ஆம் பாடல் ஞாயிறு கூறப்பட்டது.

***'மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்***
***காதலை வாழி மதி' (குறள் : 1118)***

இதில் திங்கள் கூறப்பட்டது.

***'வருந்திணை வாழிய நெஞ்சமே***
***இதில் நெஞ்சு கூறப்பட்டது' (அகம் : 79)***

இவ்வாறாக பிற பொருள்களும் இடம்பெறுவதை அகப்பாடல்கள் கற்போர் நன்கு உணர்வர்.

வினை நிகழ்பு நடந்த இடம் - நிகழ்பவை உணரச் செய்த காலம் - அதன் பயன் மற்றும் மெய்ப்பாடு. எச்ச வினைகள் - முன்னம் - பொருள்வகை – துறைவகை – வண்ணம் - வனப்பு போன்ற செய்யுள் உறுப்புகள் பற்றி இனிக் காண்போம்.

**களன்:**

இது இடம் எனப்படும்.

***'ஒரு நெறிப் பட்டாங்கு ஓரியல் முடியும்***
***கரும நிகழ்ச்சி இடமென மொழிப'***

என்பார் தொல்காப்பியர்.

ஒரு நெறிப்படுத்தலாவது அகம் அல்லது புறம் என்னும் ஒரு பொருள் மேல் வருதல். ஓரியல் முடிதல் என்பது களவு, கற்பு என்பனவற்றுள் ஒன்று பற்றியோ அல்லது புறத்தின் கண் நிரை கவர்தல் - மீட்டல், எயில் வளைத்தல் முதலியவற்றுள் ஒன்று பற்றியோ வருதல். கரும நிகழ்ச்சி என்பது மேற்கூறிய வினை நிகழ்வு.

எ-டு: ***'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்***
***வல்வரவு வாழ்வார்க் குரை' (குறள் : 115)***

இது அப்பொருளில் கற்பு என்னும் கைக்கோளில் பிரிவு என்னும் கரும நிகழ்வில் தோழி தன் முன்நிற்கும் தலைவனிடம் கூறியது.

இதனை இடத்திற்கு தக்கவாறு பேச வேண்டும் என்பதற்குரிய விளக்கமாகவும் இளம்பூரணர் காட்டுவார்.

**காலம்:**

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூன்று காலத்திலும் நிகழ்கின்ற நிகழ்ச்சி இது என்று ஆராய்ந்து உணருமாறு செய்யுளில் அமைப்பது காலம் என்னும் உறுப்பாகும்.

எ-டு: ***'பொன்னேர் மேனி மணியில் தாழ்ந்த***
***நன்னெடும் கூந்தல் நரையொடு முடிப்பினும்***
***நீத்த லோம்புமதி பூக்கேழ் ஊர' (நற் : 10)***

என்னும் பாடலில் முதல் இரண்டு அடிகள் நிகழ்காலம் மற்றும் இளமைப்பருவம் என்பது தோன்ற வந்துள்ளது.

***'நீந்துதல் ஓம்புமதி'*** என்பது எதிர்காலம் குறித்து நின்றது என்பர் இளம்பூரணர். இக்கருத்தினை,

***'இறப்பே நிகழ்வே எதிரது என்னும்***
***திறத்தியன் மருங்கின் தெரிந்தனர் உள்ளப்***
***பொருள் நிகழ்வு உரைப்பது காலம் ஆகும்' (செய்யுள் : 194)***

என்ற நூற்பா உணர்த்துகிறது.

**பயன்:**

ஏதாவது ஒரு பொருளைக் கூறிய இடத்து, இதன் பின்பும் இதனைப் பயக்கும் (விளைவிக்கும்) என்று விரித்துக் கூறாமல் முன்பு சொல்லிய சொல்லினாலே தொகுத்துக் கூறுதல் பயன் எனப்படும்.

எ-டு: ***"சூரல் பம்பிய சிறுகான் யாறே***
***சூரர மகளிர் ஆரணங் கினரே***
***வாரல் எனினே யானஞ் சுவலே***
***சாரல் நாட நீவர வாறே"***

என்னும் பாடலில் சாரல் நாடனே! நீ வருகின்ற பாதையில் அச்சம் தரும் காடு, ஆறு மற்றும் துன்பம் செய்யும் மகளிர் உள்ளதால் நான் அஞ்சுகிறேன் என்ற பொருள் வெளிப்படையாக உள்ளது. இதன் பயன் என்ன என்றால், தலைவியை நீ விரைவில் மணந்து கொள்ளல் வேண்டும் என்பது. இதனை விளக்கும் நூற்பா பின்வருமாறு:

***"இதுநனி பயக்கும் இதன்மாறு என்னும்***
***தொகுநிலைக் கிளவி பயன் எனப்படுமே" (செய்யுள் : 195)***

**மெய்ப்பாடு:**

உள்ளத்து நிகழ்ச்சி ஒருவனது மெய்யின்கண் வெளிப்பட்டுக் காண்பவர்க்குப் புலனாதல் என்பது மெய்ப்பாட்டியல் தரும் விளக்கம். ஆனால் இங்கு மெய்ப்பாடு என்பதற்கு இளம்பூரணர் இவ்வாறாக விளக்கம் தருகிறார். அதாவது 'யாதானும் ஒன்றைக் கூறியபோது, அதன் பொருண்மையை ஆராய்ந்து உணர்தல் இன்றி அவ்விடத்து வரும் பொருண்மையாலே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது' என்கிறார். அது நகை முதலிய எட்டுவகை மெய்ப்பாட்டு நெறிகளில் பிழையாது வரப்பெறும் என்பர் தொல்காப்பியர்.

**எச்ச வகை:**

பிறிதொரு சொல்லோடும் பிறிதொரு குறிப்போடும் முடிவு கொள்ளும் இயற்கையை பொருந்திய செய்யுள் எச்சம் ஆகும். எச்சம் இரண்டு வகைப்படும். இவை சொல்லெச்சம், குறிப்பெச்சம் என்பன

***'சொல்லோடும் குறிப்போடும் முடிவுகொள் இயற்கை***
***புல்லிய கிளவி எச்சம் ஆகும்' (செய்யுள் : 198)***

என்பது நூற்பா.

தொல்காப்பிய சொல்லதிகார எச்சவியல் 34-ம் நூற்பா. பிரிநிலை, வினை, பெயர், ஒழியிசை, எதிர்மறை, உம்மை, என, சொல் என்ற எட்டும் சொல் எச்சம் என்றும் குறிப்பு. இசை என்ற இரண்டும் குறிப்பெச்சம் என்றும் எச்சங்களை வகை செய்கின்றது.

ஏதாவது ஒரு சொல் எஞ்சி நிற்பது சொல் எச்சம் 'வந்த' என்பதில் 'குதிரை' என்ற சொல்லும் 'வந்து' என்பதில் 'பார்த்தான்' என்ற சொல்லும் பொருள் முடிய எஞ்சி நிற்பதால் இப்பெயர் எச்ச, வினை எச்சங்கள் ஆயின.

குறிப்பெச்சத்தில் கருத்து குறிப்பாக புலனாகுமாறு எஞ்சி நிற்பது.

எ-டு: ***இளையதாக முள்மரம் கொல்க களையுநர்***
***கைகொல்லும் காழ்த்த இடத்து (குறள் : 879)***

என்ற இடத்தில் முள்மரத்தை முளையிலேயே அழிக்க வேண்டும் முற்றி மரமாகி விட்டால் அதை நீக்குபவர் கைகளையே துன்புறுத்திவிடும் என்பதே குறளின் பொருள். இது, 'தீய நண்பர்களைத் தொடக்கத்திலேயே நீக்கி விடுக' என்ற பொருளைக் குறிப்பாகத் தருவதால் இது குறிப்பு எச்சம் ஆகும்.

**முன்னம்:**

***'இவ்விடத்து இம்மொழி இவர்இவர்க்கு உரியவென்று***
***அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்' (செய்யுள் : 199)***

என்பது தொல்காப்பிய நூற்பா ஆகும். எனவே இடமும் காலமும் உணர்ந்து கேட்போர்க்குத் தக்கவாறு மொழிதல் 'முன்மை' எனும் செய்யுள் உறுப்பாகும்.

***'முன்னம்' என்பது குறிப்பு எனப் பொருள்படும்.***

***எ-டு: 'யாரிவன் என்கூந்தலைக் கொள்வான்' (கலி : 89)***

என்ற பாடலில் எம் கூந்தலைத் தொடுவதற்கு இவன் யார்? என்று கூறுவதால் இவ்வாறு கூறுபவள் தலைவியே என்பது பெறப்படுவதால் இச்செய்யுள் 'முன்னம்' எனனும் செய்யுள் உறுப்பைப் பெற்றுள்ளது எனலாம்.

## பொருள் வகை

இன்பமும், துன்பமும், புணர்தலும், பிரிதலும், ஒழுக்கமும் எனப்பட்ட ஒழுக்கநெறிகள் இத்திணைக்கு இது பொருள் என்று குறிப்பிட்டுக் கூறும் உரிப்பொருளே அன்றி, எல்லா உரிப்பொருட்கும் ஏற்பப் பொதுவாகி நிற்கும் பொருளே பொருள்வகை என்பர் தொல்காப்பியர். (செய்யுள் : 200)

எல்லா உரிப்பொருளும் எல்லா நிலத்திற்கும் உரியதாக பொதுவாக வரப்பெறுவது பொருள்வகை என்பர் நச்சினார்க்கினியர்.

**துறைவகை:**

***'அவ்வவ் மாக்களும் விலங்கும் அன்றிப்***
***பிற அவண் வரினும் திறவதின் நாடித்***
***தத்தம் இயலான் மரபொடு முடியின்***
***அத்திறத்தானே துறையெனப் படும்' (செய்யுள் : 201)***

என்பது துறைவகை பற்றிய தொல்காப்பிய நூற்பா.

ஒரு பாடலில் முதற்பொருளும் கருப்பொருளும் முறை மாறி வந்தாலும் இ∴து இதன் பாற்படும் என்று ஒரு துறைக்கு உரியதாக்க உதவும் கருவி துறை எனப்படும்.

**மாட்டு:**

சொற்களை ஒன்றோடு ஒன்று கூட்டி இணைக்குமாறு, பொருள் ஒன்றை ஒன்று விரும்பி நிற்றல், அதாவது செய்யுளில் ஆங்காங்கே நிற்கும் பொருள்களையும் சொற்களையும் கொண்டு வந்து ஒரு தொடராக முடித்தல் 'மாட்டு' என்னும் உறுப்பாகும்.

***"அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையிலும்***
***இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்***
***மாட்டு என மொழிப பாட்டியல் வழக்கின்" (செய்யுள் : 202)***

என்பது நூற்பா.

மாட்டு என்பது அகன்ற மாட்டு, அண்மை மாட்டு என இருவகைப்படும்.

எ-டு: பட்டினப்பாலையுள்,

***'முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்***
***வாரிருங் கூந்தல் வயங்கிடை யொழிய***
***வாரேன் வாழிய நெஞ்சே' (218-220)*** என்ற வரிகள்,
***"வேலினும் வெய்ய கானமவன்***
***கோலினும் தண்ணிய தடமென் தோளே" (300-301)***

என்ற வரிகளுடன் இணைந்து பொருள் தருதலால் இது அகன்ற மாட்டு.

**அண்மை மாட்டு:**

***'திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாத***
***ரிறந்துபடிற் பெரிதா மேதம் – உறந்தையர் கோன்***
***தண்ணார மார்பிற் தமிழர் பெருமானைக்***
***கண்ணாரக் காணக் கதவு'***

என்னும் பாடலில் 'கண்ணாரக் காணக் கதவு' என்னும் இறுதியடி பாடலின் முதல் சொல்லான 'திறந்திடுமின்' என்பதனோடு இணைந்து பொருள் தந்தமையால் இது அண்மை மாட்டு ஆயிற்று.

எச்சம், மாட்டு முதலிய உறுப்புகள் இன்றியும் செய்யுள் அமையலாம். எனவே இவை பிற செய்யுள் உறுப்புகள் போல அத்துணை இன்றியமையாதன அல்ல என்பது உணரப்படும். இவ்வுறுப்புகள் இல்லாமலே செய்யுள் செய்யப்பெறும் என்பது தொல்காப்பியர் கருத்து.

***"மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி***
***உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே' (செய்யுள் : 203)***

என்கிறது தொல்காப்பியம்.

**வண்ணம், வனப்பு:**

தொடர்நிலைச் செய்யுளில் இன்றியமையாத உறுப்புகள் வண்ணமும் வனப்பும் ஆகும். செய்யுளில் தோன்றும் ஓசை விகற்பமாகிய சந்த வேறுபாடு வண்ணம் எனப்படும். செய்யுள் அழகு வனப்பு எனப்படும். அவற்றுள் வண்ணம் பற்றி முதற்கண் காண்போம்.

**வண்ணம்:**

வண்ணம் இருபது வகைப்படும் என்பர் தொல்காப்பியர். அவை பற்றிய விளக்கங்களைக் காண்போம்.

1. பாஅ வண்ணம்: சொற்சீராகி (சொல்லே சீராகி) செய்யுளில் இடம் பெறுவது.

   எ-டு. "வடவேங்கடம் தென்குமரி' என்பன போல வருவன.

2. தாஅ வண்ணம்: இடையிட்ட எதுகையால் தாவி வருவது.

   எ-டு: ***'தோடார் எவ்வளை நெகிழ நாளும்***
   ***நெய்தல் உண்கண் பைதல் கலுழ***
   ***வாடா அள்ளி தகைஇப் பசலையும்***
   ***வைத் தோறும் பைப்பயப் பெருக***
   ***நீடார் இவணென் நீமனம் கொண்டோர்'***

   இடையிட்டு எதுகை அமைந்துள்ளது.

3. வல்லிசை வண்ணம்: வல்லெழுத்துக்கள் மிகுதியா வருவது.

   (க ச ட த ப ற)

எ-டு. ***'கற்க கசடற கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக'***

4. மெல்லிசை வண்ணம்: மெல்லின எழுத்துக்கள் மிகுதியாக வருவது.

   (ங ஞ ண ந ம ன)

எ-டு. ***'மணியின் அன்ன நெய்தலங் கழனி***
***மனவென உதிரு மாநீர்ச் சேர்ப்ப***
***மாண்வினை நெடுந்தேர் பூண்மணி யொழிய'***

5. இயைபு வண்ணம்: இடையின எழுத்துக்கள் மிகுதியாக வருவது.

   (ய ர ல வ ழ ள)

எ-டு: ***'வால்வெள் ளருவி வரைமிசை இடழியவும்***
***கோள்வல் உழுவை விடரிடை இயம்பவும்***
***வாளுகிர் உளியம் வரையகம் இசைப்பவும்'***

6. அளபெடை வண்ணம்: அளபெடை மிகுதியாக வருவது.

எ-டு: ***"தா அட் டாஇ --------- --------- --------------***

***பூஉக் குவளைப் போஒ தருத்திக்***

***காஅய்ச் செந்நெல் ------------ -----------------***

***மாஅத் தாளள் மோஒட் டெருமை"***

7. நெடுஞ்சீர் வண்ணம்: நெட்டெழுத்து மிகுதியாக வருவது.

எ-டு: ***"நீரூர் பானா யாற காடே***

***நீலூர் காயாப் பூவி யாவே***

***காரூர் பானா மாவே யாவே"***

8. குறுஞ்சீர் வண்ணம்: குற்றெழுத்துக்கள் மிகுதியாக வருவது.

எ-டு: ***"உறுபெய லெழிலி தொகுபெயல் பொழியச்***

***சிறுகொடி அவரை பொரிதளை யவிழக்"***

1. சித்திர வண்ணம்: நெடிலும் குறிலுமாக இணைந்து வருவது.

எ-டு: ***"ஒரூர் வாழினுஞ் சேரி வாரார்***

***சேரி வாரினும் ஆர முயங்கார்"***

2. நலிபு வண்ணம் ஆய்த எழுத்து மிகுதியாக வருவது.

எ-டு: *"அ.:.காமை செல்வத்துக் கியாதெனின் வெ.:.காமை"*

3. அகப்பாட்டு வண்ணம்: பாட்டின் இறுதியை உணர்த்தும் ஏகாரம் போன்றவை இடம்பெறாமல் இடையடிகள் போல நின்றே பாடல் பொருள் முடிந்து நிற்பது.

***"பன்மீன் உணங்கற் படுபுள் றோப்பியும்***

***---------- --------------- ------------------------***

***ஓடுகலம் எண்ணும் துறைவன் தோழி"***

இப்பாடல் 'தோழியே' என இடம்பெறாமல் 'தோழி' என நின்று முடிந்துள்ளது.

4. புறப்பாட்டு வண்ணம் : முடிந்தது போன்று முடியாததாகி நிற்பது.

5. ஒழுகு வண்ணம்: ஆற்றொழுக்கு போன்று ஒழுகிய ஓசையால் அமைவது.

6. ஒரூஉ வண்ணம்: அடிதோறும் பொருள் அறுந்து அறுந்துச் (விட்டுவிட்டு) செல்லுதல். இது ஒழுகு வண்ணத்திற்கு மாறுபட்டது.

எ-டு. குறுந்:87ஆம் பாடல்

7. எண்ணு வண்ணம்: எண் பயின்று வருவது.

எ-டு: ***"நிலம் நீர் வளிவிசு பென்ந நான்கின்***

***அளப்பரியையே"*** ***(பதிற்றுப் : 14)***

நிலமும் நீரும் வளியும் விசும்பும் என வருதல் காண்க.

8. அகைப்பு வண்ணம்: ஒருவழி நெடிலும் ஒரு வழி குறிலுமாக வந்து ஓசை அறுந்து அறுந்து செல்லுதல்.

9. தூங்கல் வண்ணம்: வஞ்சியுரிச்சீரான நிரை நேர் நிரை மிகுதியாக வருவது.

எ-டு: வசை /யில் /புகழ் வயங்கு /வெண் /மீன்

நி நே நி நிரைபு நே நே

திசை /திரிந் /து /தெற் /கே /கினும்

நி நி நே நே நே நி

10. ஏந்தல் வண்ணம்: சொல்லிய சொல்லே மீண்டும் மீண்டும் வந்து பொருள் சிறப்பது.

எ-*டு* ***"சுடுவர் கூடல்கள் கூடல் எனப்படா***

***கூடலுள் கூடலே கூடலுங் கூடல்***

***பிரிவிற் பிரிவே பிரிவு"***

11. உருட்டு வண்ணம்: உருட்டிச் செல்லும் ஓசை உடையது.

12. முடுகு வண்ணம்: நாற்சீரடியின் மிகுந்து அராகத்தோடு ஒத்து வருவது. இவையே இருபது வகையான வண்ணங்கள் பற்றிய செய்திகளைச் செய்யுளியல் 235-255 வரையிலான நூற்பாக்கள் உணர்த்துகின்றன.

வண்ணங்கள் இருபதும் எழுத்து, சொல், தொகை, ஓசை மற்றும் வடிவ நடை அடிப்படையின. அந்நிலையில்

1. எழுத்து அடிப்படையில் வல்லிசை, மெல்லிசை, இயைபு, நெடுஞ்சீர், குறுஞ்சீர், சித்திர நலிபு வண்ணங்கள்.

1. சொல் சீர் அடிப்படையின: பாஅ எண்ணு, ஏந்தல் வண்ணங்கள்
2. தொகை அடிப்படையின : தாஅ, அளபெடை வண்ணங்கள்
3. ஓசை அடிப்படையின : ஒழுகு, ஒரூஉ. அகைப்பு. தூங்கல், உருட்டு, முடுகு வண்ணங்கள்.
4. வடிவ நடை அடிப்படையின : அகப்பாட்டு, புறப்பாட்டு வண்ணங்கள்

**வனப்பு:**

வனப்பு எட்டு வகைப்படும். அவைபற்றி விளக்கமாகக் காண்போம்.

1. அம்மை: சிலவாகிய மெல்லிய மொழிகளால் தொடுக்கப்பட்ட அடிநிமிர்வு இல்லாச் செய்யுள்.

   எ-டு. ***"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்***

   ***தன்நோய்போற் போற்றாக் கடை"*** ***(குறள் : 315)***

2. அழகு: செய்யுட்குரிய இயற்சொல், திரிசொல், திசைச்சொல் மற்றும் வடச்சொல்லால் ஓசை இனிதாக அமைக்கப்பெறுவது.
3. தொன்மை: உரையொடு பொருந்திப் பழமையாகிய பொருள்மேல் வரும் செய்யுள்.

   எ-டு. பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை போன்றன.

4. தோல்: 'இழும' என்னும் ஓசையுடன் மெல்லிய மொழியால் விழுமிய பொருளைப் பரந்த மொழியால் அடிநிமிர்ந்து செல்லுதல்.

எ-டு: "கூத்தராற்றுப்படை" எனப்படும் மலைபடுகடாம்.

5. விருந்து: முன்புள்ளார் சொன்ன நெறி மாறி புதிய யாப்பின் வழி நூல் செய்வது.
   எ-டு. 'முத்தொள்ளாயிரம்', அந்தாதி, கலம்பகம் போன்றன.
6. இயைபு: ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்ற பதினோரு புள்ளியும் இறுதியில் வர செய்யுள் செய்தல்.
7. புலன்: வழக்கச் சொல்லினால் செய்யப்பட்டுப் பொருள் ஆராய வேண்டாமல் புலனாவது
8. இழைபு: ஒற்றொடு இணைந்து வல்லெழுத்து மிகுதியாகவராமல், ஆசிரியப்பாவிற்குச் சொல்லப்பட்ட 4-20 வரையிலான எழுத்து அடிப்படை ஐவகை அடிகளால் அமைவது.

இவையே செய்யுளியல் தரும் எண்வகை வனப்புகள் ஆகும். இவைபோன்று வருவன உளவாயின் அவையும் கொள்க என்று புறனடையால்(செய்யுள் : 235) கூறுகிறார்.

வண்ணமும் வனப்பும் அமையப்பாடும் பாடல்களே எண்ணம் கவர்ந்து நிலைகொள்ளும் சிறப்புடையனவாகும்.

## செய்யுளியல் பயிற்சி வினாக்கள்

### I. குறு வினாக்கள்:

1. எழுத்துக்களின் மாத்திரை குறித்து எழுதுக.
2. தொல்காப்பியம் காட்டும் எழுத்து வகைகள் யாவை?
3. இயலசை, உரியசை குறிப்பு வரைக.
4. சீர் வகைகள் யாவை?
5. வகையுளி விளக்குக.
6. அலகிடும்போது ஒற்று, குற்றியலுகரம், குற்றியலிகரம், அளபெடை பெறும் இடம் குறித்து விளக்குக.
7. மூவகைச் சீர்கள் 64 ஆவது எவ்வாறு?
8. வஞ்சியுரிச்சீர் - குறிப்பு வரைக.
9. நால்வகைப் பாக்களுக்குரிய சீர்களை வகைசெய்க.
10. 'அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே' – விளக்குக.
11. எழுத்தடிப்படையிலான அடிகளை விளக்குக.

1. நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே – ஏன்?
2. தளை வகைகளை விளக்குக.

3. நால்வகைப் பாக்களுக்குரிய அடிகளை வரையறுக்க.
4. யாப்பு – குறிப்பு வரைக.
5. யாப்பின் வகைகளைச் சுருக்கி வரைக.
6. அடிவரையில்லாத யாப்பு வகைகள் எவை?
7. சூத்திரம், ஓத்து, பிண்டம் - குறிப்பு வரைக.
8. அங்கத யாப்பு – விளக்குக.
9. பாக்களுக்குரிய ஓசைகள் பற்றி எழுதுக.
10. 'அளபெடைத் தலைப்பெய ஐந்தும் ஆகும்' – எவை ஐந்து?
11. ஆசிரியப் பாவின் வகைகள் கூறி ஒன்றினைச் சான்று காட்டி நிறுவுக.
12. வஞ்சிப்பாவின் வகைகள் குறித்து எழுதுக.
13. வெண்பாவின் வகைகள் கூறி, அவற்றுள் ஏதேனும் ஒன்றினை விளக்குக.
14. நோக்கு குறிப்பு வரைக.
15. பண்ணத்தி விளக்குக.
16. வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ – குறிப்பு வரைக.
17. பாவினம் பன்னிரெண்டு ஆவது எங்ஙனம்?
18. அடிவரையறை உள்ள பாக்கள் எவை? ஏன்?
19. திணை, கைக்கோள் - இவை செய்யுள் உறுப்பாவது எங்ஙனம்?

## II. கட்டுரை வினாக்கள்:

1. செய்யுள் உறுப்புகளைத் தொல்காப்பியர் பாகுபடுத்தும் முறை குறித்து ஒரு கட்டுரை வரைக.
2. தொடர்நிலைச் செய்யுளுக்குரிய உறுப்புகள் எவை?
3. அசை வகை குறித்து ஒரு கட்டுரை வரைக.
4. தொல்காப்பியர் காட்டும் சீர்களை பா அடிப்படையில் வகை செய்க.
5. அடிவரையில்லாத யாப்பு வகைகளைத் தொகுத்துரைக்க.
6. அடிவரையுள்ள யாப்பு வகைகளைத் தொகுத்துரைக்க.
7. தொடை வகைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
8. பா வகைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
9. கலிப்பாவின் வகைகள் மற்றும் உறுப்புகளைத் தெளிவு செய்க.
10. உரை யாப்பின் வகைகளைத் தெளிவு செய்க.
11. வெண்பாவின் வகைகள் குறித்து எழுதுக

## கூறு : 9

## மரபியல்

தொல்காப்பிய பொருளதிகாரத்தின் ஒன்பதாவது இயல் 'மரபியல்'. மரபு என்பது முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறிப்பிட்டார்களோ அப்பொருளை அதே சொல்லால் நாமும் குறிப்பிடல் ஆகும். அதனை நாம் பின்பற்றுதல் கடன் என்பதை உணர்ந்த ஆசிரியர் அம்மரபுகளை அதன் வழிப்பட்ட பெயர்களை மற்றும் வழக்குகளை இவ்வியலில் கூறுகின்றார். மரபியல் பிழைகள், பொருள் குழப்பத்தைத் தோற்றுவிக்கும் என்பது தொல்காப்பியரின் எண்ணம் இதனை,

***"மரபுநிலை கரியின் பிறிது பிறிது ஆகும்"*** *(மரபு:93)*

என்ற நூற்பாவில் சுட்டுகின்றார்.

மரபியலில் தொல்காப்பியர் கூறுகின்ற செய்திகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

| **பொருள்** | **நூற்பா** |
|---|---|
| 1. இளமைப்பெயர்கள் | 1 |
| 2. ஆண்பால் பெயர்கள் | 2 |
| 3. பெண்பால் பெயர்கள் | 3 |
| 4. இன்னவற்றிற்கு இணை இளமைப்பெயர்கள் | 4-26 |
| 5. உயிர்களின் பாகுபாடு | 27-34 |
| 6. ஆண்பால் பெயர்களின் மரபு | 35-52 |
| 7. பெண்பால் பெயர்களின் மரபு | 53-69 |
| 8. கடியலாகா(நீக்கலாகா)மரபுகள் | 70-71 |
| 9. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் மரபுகள் | 72-86 |
| 10. ஓரறிவுயிர் மரபுகள் | 87-90 |
| 11. உலக, இயல் நெறி வழுவாமை | 91 |
| 12 நூல் பற்றிய செய்திகள் | 92-112 |

என்ற முறையில் செய்திகள் அமைந்துள்ளன. இவற்றை இனி தனித்தனியே காண்போம்.

### 1. இளமைப்பெயர்கள்:

பலவகை உயிர்கட்கும் வேறு வேறாக வழங்கி வரும் இளமைப்பெயர்கள் ஒன்பது என்று உரைக்கிறார். அவை பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி என்பன.

### 2. ஆண்பாற் பெயர்கள்:

“ஏறு, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி, கடுவண் என்னும் பதினைந்தும் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்கள் ஆகும்.

### 3. பெண்பாற் பெயர்கள்:

பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி என்ற பதின்மூன்று பெயர்கள் பெண்பாற் பெயர்கள்.

### 4. இன்ன பெயர் இன்னவற்றிற்கு என வரையறுத்தல்:

மேற்குறிப்பிட்ட பெயர்களுள் பார்ப்பு, பிள்ளை என்ற இரண்டும் பறவைகளுக்கு உரிய இளமைப்பெயர்கள். இவை இக்காலத்தும் அருகிய வழக்கு ஆயினும் சான்றோர் செய்யுட்களில் காணலாம்.

***“மேல் கவட்டு இருந்த பார்ப்பினம்” (அகம் : 31)***

***“இல்லறை பள்ளிதம் பிள்ளை------------“ (குறுந் : 49)***

பார்ப்பு – பருந்து, பிள்ளை – ஊாக்குருவி

இப்பெயர்கள் ஊர்வனவற்றிற்கும் ஆகும் என்று கூறியமையால் (மரபு5) ஆமை, உடும்பு, ஒந்தி, முதலை போன்றவற்றிற்கு இப்பெயர்கள் பொருந்தும்.

***“யாமைப் பார்ப்பு -------------------- “ (குறுந் : 152)***

***தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலை (ஐங் : 41)***

### ஆ. குட்டி:

மூங்கா, வெருகு, எலி, அணில் என்னும் நான்கிற்கு உரிய இளமைப்பெயர் குட்டி என்பதாகும். மேலும் இவை ‘பறழ்’ எனப்பட்டாலும் தவறில்லை என்பர். பறழ் என்பது குரங்கின் இளமைப்பெயராகவும் வரப்பெறும் என்பதனை,

***‘கைம்மை உய்யாக் காமர் மந்தி***
***கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி’ (குறுந் : 69)***

ன்றை பாடலடிகளால் அறியலாம்.

(மூங்கா – கீரி, வெருகு – காட்டுப்பூனை

**இ. குருளை:**

நாய், பன்றி, புலி, முயல், நரி என்பவற்றின் இளமைப்பெயர்

***'திறவாக் கண்ண சாய்செலிக் குருளை' (சிறுபாண் : 130)***

(குருளை – நாய்க்குருளை)

***'இரும்புலிக்குருளை' (குறுந் : 47)***

'குருளை கோட்படல் அஞ்சிக் குறுமுயல்'

என்று வருவன காணலாம்.

மேலே குறிப்பிட்ட ஐவகை உயிர்கள் குட்டி, பறழ் என்ற பெயர்களையும் பெற்று வரும் அத்துடன் நாய் தவிர மற்றவை 'பிள்ளை' என்ற பெயராலும் வழங்கப்படும்.

***"வயநாய் எறிந்து வன்பறழ் தழீஇ"***

***"புலிப்பறழ் ஓம்பும்"***

***"நரிப்பறழ் கவர நாய் முதல் காக்கும்"***

என்பன எடுத்துக்காட்டுகளாகும்.

**ஈ. மறி:**

ஆடு, குதிரை, நவ்வி (புள்ளிமான்) முழை (முழா) ஓடுகின்ற புல்வாய் இவை மறி என்ற இளமைப்பெயரால் வழங்கப்பெறும்.

அடுத்து மரக்கிளையிலே வாழுகின்ற குரங்கு குட்டி, மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்னும் பெயர்களால் வழங்கப்பெறும் என்கிறார். எடுத்துக்காட்டாக,

***"மகவுடை மந்தி போல"***

***"குரங்கு பிள்ளை"***

***"வரையாடு வன்பறழ்த் தந்தை" (குறுந் : 26)***

***"பார்புடை மந்தி--------------" (குறுந் : 278)***

***"------------- முசுவின் குருளை" (குறுந் : 38)***

**உ. கன்று:**

கன்று என்னும் இளமைப்பெயர் யானை, குதிரை, கழுதை, கடமை, மான், எருமை, மரை, கவரி, கராகம்(கரடி), ஒட்டகம் என்பனவற்றிற்கு உரியது என்கின்றார். (மரபு : 14-17)

**ஊ. குழவி:**

குழவி என்பது ஆ, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊகம் என்பவற்றிற்கான இளமைப்பெயர். (மரபு : 19-22)

***"ஓய்யென எழுந்த செவ்வாய் குழவி" (அகம் : 165)***

*(குழவி : யானை)*

*“மடக்கண் குழவி” (குறுந் : 64)*

*ஆவிற்குரியது*

*“மோட்டு எருமை முழக்குழவி” (பட்டினப் : 15 -15)*

### எ. மக்கட்குரிய இளமைப்பெயர்கள்:

மேலே சுட்டப்பட்ட இளமைப்பெயர்கள் குழவி, மகவு என்ற இரண்டு மட்டுமே மக்கட்கு உரியவை ஆகும். (மரபு : 23)

### ஏ. ஓரறிவுக்குரியன:

பிள்ளை, குழவி, கன்று, போத்து என்ற நான்கு பெயர்கள் ஓரறிவு பெற்ற உயிர்களுக்கான இளமைப்பெயர்கள் ஆகும்.

“கமுகம் பிள்ளை, தென்னம் பிள்ளை, தாழக்குழவி” (பெரும்பாண் : 357)

இப்பெயர்கள் நெல், புல் என்னும் ஓரறிவு உயிர்களுக்குப் பொருந்தாது என்பார். (மரபு: 24,25)

ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்கள், இளமைப்பெயர்கள் உணர்த்தி, பின்பு உயிர்களின் அறிவு அடிப்படையிலான பாகுபாடு உணர்த்துகின்றார். அவற்றைக் காண்போம்.

## உயிர்களின் பாகுபாடு

உலகத்து உயிர்களை அவற்றின் அறிவு அடிப்படையில் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐந்தறிவுயிர், ஆறறிவுயிர் என வகைப்படுத்துகின்றார்.

***“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே***
***இரண்டறி வதுவே அதனொடு நாவே***
***மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே***
***நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே***
***ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே***
***ஆறறி வதுவே அவற்றொடு மனனே***
***நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.” (மரபியல் :27)***

ஓரறிவுயிர் - வெப்பம், தட்பம், வன்மை, மென்மை இவற்றை உடம்பினால் அறிவது

ஈரறிவுயிர் - உடம்போடு நாவினால் அறிவது. கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, இனிப்பு என்னும் சுவைகள் அறிதல்

மூவறிவுயிர் - உடம்பு, நாக்கு மற்றும் மூக்கினால் அறிதல்

நாலறிவுயிர் - உடம்பு, நாக்கு, மூக்கு மற்றும் கண்களால் அறிதல்

ஐயறிவுயிர் - உடம்பு, நாக்கு, மூக்கு, கண் மற்றும் செவியினால் அறிதல்

ஆறறிவுயிர் - உடம்பு, நாக்கு, மூக்கு, கண், செவி மற்றும் மனத்தால் அறிதல் என்ற தெளிவான பாகுபாட்டினைக் காண்கிறோம். (மரபு : 27)

இனி, எந்தெந்த உயிர் எவ்வகையைச் சாரும் என்று காண்போம்.

**ஓரறிவுயிர்:**

புல், மரம் இவை ஓரறிவு பெற்றன. புல் என்பது புறப்பகுதி வயிரம் கொண்டது. அவை தென்னை, பனை போன்றன. மரம் என்பது உட்பகுதி வயிரம் கொண்டது. தேக்கு போன்றன. (மரபு : 28)

**ஈரறிவுயிர்:**

நந்து, முரள் ஈரறிவுயிர்கள் ஆகும்.

நந்து – சங்கு, நத்தை, அலகு, நொள்ளை

முரள் - சிப்பி, கிளிஞ்சல், ஏரல் (மரபு: 29)

**மூவறிவுயிர்:**

சிதல், எறும்பு மற்றும் அட்டை போன்றன மூவறி உயிர்கள். (மரபு : 30)

**நாலறிவுயிர்:**

நண்டு, தும்பி மற்றும் ஞிமிறு, சுரும்பு போன்றன. (மரபு : 31)

**ஐயறிவுயிர்:**

நான்கு கால்களை உடைய விலங்குகள் மற்றும் பறவைகள். பிற என்றதனால் பாம்பு, மீன், முதலை, ஆமையும் கொள்ளப்படும். (மரபு : 32)

**ஆறறிவுயிர்:**

மக்கள், தேவர், அசுரர், இயக்கர் போன்றோர் மற்றும் குரங்கு, யானை. கிளி போன்றவையும் என்கிறார். (மரபு : 33,34)

ஆண்பால் மற்றும் பெண்பால் பெயர்களுக்கான வரையறையை அடுத்த சில நூற்பாக்களில் காட்டுகின்றார். அவற்றைக் காண்போம். இச்செய்திகள் மரபியல் 35-69 வரையிலான நூற்பாக்களில் அமைந்துள்ளன. அவற்றைக் காண்போம். முதலில்

அ. ஆண்பால் பெயர்களைத் தொகுத்துக் காண்போம்.

| **உரியன** | | **ஆண்பாற் பெயர்கள்** |
|---|---|---|
| வேழம் | - | களிறு, ஓரத்தல், ஏற்றை |
| பன்றி | - | ஒருத்தல், ஏற்றை |
| புல்வாய் | - | ஒருத்தல், ஏறு, ஏற்றை, போத்து, இரலை, கலை |
| புலி | - | ஒருத்தல், போத்து, ஏற்றை |
| உழை | - | ஒருத்தல், ஏறு, ஏற்றை, கலை |
| மரை | - | ஒருத்தல், ஏறு, போத்து, ஏற்றை |

| | | |
|---|---|---|
| கவரி | - | ஒருத்தல், ஏறு, ஏற்றை |
| கராம் | - | ஒருத்தல், ஏறு, ஏற்றை |
| எருமை | - | ஒருத்தல், ஏற்றை, போத்து, கண்டி |
| கறவு | - | ஏற்றை |
| வரால், வாளை | - | போத்து |
| பெற்றம் | - | போத்து, ஏறு, ஏற்றை, எருது |
| முசு | - | கலை |
| குரங்கு, ஊகம் | - | கலை, கடுவன் |
| யாடு | - | மோத்தை, தகர், உதள், அப்பர் |
| மயில் | - | ஏழால், போத்து, ஏற்றை (மரபு : 35-50) |

**ஆ. பெண்பால் பெயர்கள்:**

| **உரியன** | | **பெண்பாற்பெயர்** |
|---|---|---|
| யானை | - | பிடி |
| ஒட்டகம் | - | பெட்டை |
| குதிரை | - | பெட்டை |
| கழுதை | - | பெட்டை, நாகு, ஆ |
| மரை | - | பெட்டை, பேடை, பெடை |
| கோழி | - | அளகு |
| கூகை, மயில் | - | அளகு |
| புல்வாய் | - | பிணை, பிணவு, பிணவல், பாட்டி |
| நவ்வி | - | பிணை |
| உழை, கவரி | - | பிணை |
| பன்றி, நாய் | - | பிணவு, பிணவல், பாட்டி |
| பெற்றம், எருமை | - | ஆ, நாகு |
| மக்கள் | - | பெண், பிணவு |
| நந்து | - | நாகு |
| ஆடு | - | மூடு, கடமை |
| நரி | - | பாட்டி |
| குரங்கு | - | முசு, ஊகம், மந்தி (மரபு : 52,69) |

இவற்றுள் சில மருவி வந்த வழக்குகள் என்கிறார். அவை குரங்கினுள் ஏற்றைக் கடுவன் எனல்.

***"கூகையைக் கோட்டான் எனல்***

***கிளியைத் தத்தை எனல்***

***வெருகினைப் பூசை எனல்***

***குதிரையுள் ஆணினைச் சேவல் எனல்***

***பன்றியை ஏனம் எனல்***

***எருமையுள் ஆணினைக் கண்டி எனல்"***

என்று 69ம் நூற்பாவில் சுட்டுகிறார்.

இதனைத் தொடர்ந்து அந்தணர் முதலான நால்வகைப் பிரிவினருக்கு உரியவை இவை என்று சுட்டுவதைக் காணலாம்.

**அந்தணர்க்குரியவை:**

சமுதாயத்தில் உயர்நிலையினராக மதிக்கப்பெற்றவர் அந்தணர். அவர்களுக்கு முப்பரிநூல் நீர்மொண்டு வைக்கும் பாத்திரமான கரகம், முக்கோல் மற்றும் மணை உரியன என்கிறார். (மரபு : 71)

***"உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்" (கலி:9)***

***"தண்டொடு பிடித்த தாழ் கமண்டலத்துப்***

***படிவ உண்டிப் பார்ப்பன மகனே" (குறுந் : 156)***

என்ற பாடல்களைக் காணலாம்.

**அரசர்க்குரியவை:**

படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார்(மாலை) முடி என்பன அரசர்க்குரியன. "பிறவும்" என்றதனால் ஆரம், கழல் போன்றவையும் கொள்ளலாம். இவையேயன்றி அந்தணர்க்கு உரிய சிலவும் அரசர்க்குரியன ஆகும் என்கிறார் தொல்காப்பியர். இதற்குப் பேராசிரியர் அந்தணர்க்குரிய வேள்வி கலப்பை என்று கூற, இளம்பூரணர் அந்தணர்க்குரிய ஈதல், வேட்டல், வேட்பித்தல் மற்றும் ஈதல் என்பார்.

மரபியல் 74ல் பரிசில் கடாநிலை, பரிசில் விடை, பாடாண் திணைக்குரிய கைக்கிளைப் பொருள், கொடைத்தொழில் என இவற்றைக் கூறியும். அவற்றிற்கேற்ப நெடுந்தகை, செம்மல், காளை, இளையோன் என்பன கூறியும் புனைந்துரை வகையால் கூறினல்லது, சாதி வகையால் கூறுதல் அந்தணர்க்குரியது என்று தொல்காப்பியர் கூறுவதாக இளம்பூரணர் விளக்குகிறார்.

ஊரும், இயற்பெயரும், சிறப்புப் பெயரும், தத்தம் தொழிலுக்கேற்ப கருவியும் போன்றன எல்லாரையும் சார்த்தி வரப்பெறும். அவரைத் தலைமைக்குணம் உடையவராக கூறுதலும் அவரவர் திரைமைக்கேற்றவாறு வரப்பெறும். அவ்வாறு வரும்போது மிகுதியாக உயர்த்தல் மற்றும் மிகுதியாகத் தாழ்த்தல் என்பது பொருந்தாது. (மரபு : 75,76)

**படைவகை பெறுவோர்:**

அரசரும் வணிகரும் படைக்கலம் பெறுவதற்கு உரியர் என்பர். (மரபு : 77)

**வாணிகத்திற்குரியோர்:**

***"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை" (மரபு : 78)***

என்பதால் வைசிகன் (வணிகன்) வாணிக வாழ்க்கைக்கு உரியன் என்பது பெறப்படுகிறது. இதுவே அன்றி எண்வகை உணவுப்பொருட்களை உண்டாக்கும் உழவுத்தொழிலும் வணிகர்க்கு உரியது என்பர். (மரபு:79)

எண்வகை உணவாவன: நெல், கொள், வரகு, சோளம், திணை , சாமை, புல், கோதுமை என்பன.

இவர்க்குக் கண்ணியும் தாரும் சொல்லப்பெறும் என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

கண்ணி என்பது சூடும் பூ.

தார் என்பது ஒரு குடி பிறந்தார்க்கு என்று வரையறுத்துக் கூறப்பெறுவது என்று பேராசிரியர் கூறுவார்.

**வேளாண் மாந்தர்குரியவை:**

வேளாண் மாந்தர்க்கு உரிய தொழில் உழவுத்தொழில் ஆகும். வேந்தரால் ஏவப்படுகின்ற தொழிலும் இவர்க்கு உண்டு என்பதால் படையும் கண்ணியும் இவர்க்குச் சொல்லப்பெறும். (மரகு 81,82)

மேற்குறிப்பிட்ட நிலையில் உரியவை இன்ன இன்ன என்று வரையறுக்கப்பட்டாலும் அந்தணர் என்பவர் அரசர் தன்மை பெறுவதற்கும் உரியவர் என்கிறார் தொல்காப்பியர். அதாவது அந்தணர் சேனாதிபதி நிலை பெறுவதற்கு உரியவர். அஃதாவது மந்திரி மற்றும் புரோகிதனாகிய போது கொடி, குடை, கவரி, தார் போன்றவை பெற்று அரசரோடு ஒரே நிலையாக வாழ்தல் அந்தணர்க்கு உண்டு. (மரபு : 83)

வணிகரும், வேளாளரும் வில், வேல், கழல், கண்ணி, தார், ஆரம், தேர், மா ஆகியவை பெற்று அரசர் மரபினரைப் போல மதிப்பும் சிறப்பும் பெறுதல் உண்டு என்கிறார் தொல்காப்பியர். (மரபு : 85)

**பாடம்:**

தொடர்ந்து புல் மற்றும் மரம் பற்றிய செய்திகளைக் கூறுகிறார்.

புறப்பகுதி வயிரமுடையவை புல்: உள்பகுதி வயிரமுடையவை மரம் எனப்படும். (மரபு:86,87)

எ-டு: புல் - தெங்கு, பனை,கமுகு, மூங்கில்

மரம் - இலுப்பை, புளி முதலாயின.

**புல்லின் உறுப்புகள்:**

தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை என்று சொல்லப்பட்டவை புல்லின் உறுப்புகள் ஆகும். (மரபு : 88)

**மரம் எனப்படுவனவற்றின் உறுப்புகள்:**

இலை, முறி, தளிர், கோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை என்பன மரத்தின் உறுப்புகள் ஆகும். (மரபு : 89)

**புல், மரம் ஆகிய இருவகைக்கும் உரிய பொதுப்பெயர்கள்:**

காய், பழம், தோல், செதில், வீழ் என்று சொல்லப்பட்ட பெயர்கள் இருவகைக்கும் உரியவை என்பது தொல்காப்பியர் கருத்து. (மரபு : 90)

இவ்வாறு உலகத்து உயிர்களை அறிவின் அடிப்படையில் பாகுபடுத்தி, விளக்கிய தொல்காப்பியர் ஒரு சில மரபு குறித்து செய்திகளைக் கூறுகின்றார். அவற்றை இங்கு நோக்குவோம்.

உலகம் என்பது நிலம், நீர், தீ, வளி(காற்று), வெளி(ஆகாயம்) என்ற ஐம்பூதங்கள் கலந்த மயக்கம். ஆதலால் மேற்சொல்லப்பட்ட பொருள்களைத் திணையும் பாலும் வழுவாமல் திரிபுபடாத(மாறுபடாத) சொற்களாலே கூறுதல் மரபு என்கிறார். (மரபு 91)

கலத்தல் அல்லது கலந்த மயக்கம் என்பதற்கு இளம்பூரணர் பின்வருமாறு விளக்கம் தருகிறார். அதாவது, கலத்தல் என்பது முத்தும், பவளமும், நீலமும், மாணிக்கமும் கலந்து நிற்றல் போன்றது.

மயக்கம் என்பது பொன்னும், வெள்ளியும், செம்பும், உருக்கி ஒன்றாதல் போன்றது.

உலகம் என்பது உலகினையும் உலகிலுள்ள பொருளையும் குறித்தது.

உலகமாவது முத்தும், மணியும் கலந்தாற் போல ஐம்பூதங்கள் கலந்து(விரவி) நிற்பது.

பொன்னும், வெள்ளியும், செம்பும் உருக்கியவழி ஒன்றாதல் போல, உலகிலுள்ள பொருள் வேற்றுமைப்படாமல் நிற்கும். இவையே உயர்திணை, அஃறிணை என்ற இரு திணைகளாகவும், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து நிலைகளாகவும் அமைந்துள்ள முறையிலிருந்து மாறுபடாமல் திரிபற்ற சொற்களால் சொல்லப்பட வேண்டும். இதுவே மரபு ஆகும் என்பர்.

இங்குச் சொல்லப்பட்ட மரபுநிலையில் இருந்து மாறுபடுதல் செய்யுட்கு இல்லை. எனவே மரபுச் சொற்களினால் மட்டுமே செய்யுள் அமைதல் வேண்டும் என்பதனால் வழக்கினுள் சில திரிந்தும் வரப்பெறலாம் என்பது தொல்காப்பிய விதி (மரபு 92) அவ்வாறு மரபுநிலை திரிந்து வேறுபடுமானால் சொற்கள் பொருள் இழந்து சிதைவுறும் குழப்பத்தை உண்டு பண்ணும் என்கிறது தொல்காப்பியம். (மரபு : 93)

வழக்கு என்பது கற்றுயர்ந்த பெரியோர் வழங்குகின்ற முறை அல்லது மரபு. காரணம் உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் உயர்ந்தோரையே சார்பாக கொண்டு நிகழ்கின்றன. (மரபு : 94)

தொல்காப்பியர் கூறும் நூல் பற்றிய மரபுகளைக் காண்போம்.

மரபு நிலையிலிருந்து மாறுபடாமல் அமைகின்ற நூல் இருவகைப்படும். அவை முதல்நூல் மற்றும் வழிநூல் என்பவை. (மரபு : 95)

சார்பு நூல் என்ற ஒரு வகையும் உண்டு. ஆனால் அது இரண்டு ஆசிரியர் கூறியவற்றிற்கு உடம்பட்டு வருதலால் அது வழிநூலுள் அடங்கும் என்பர் இளம்பூரணர்.

**முதல்நூல்:**

வினையினின்று நீங்கி (தீய செயல்கள் மற்றும் தீய ஒழுக்கம்) விளக்கம் பெற்ற அறிவுடைய சான்றோன் ஒருவனால் முதல் முதலில் செய்யப்பட்டது முதல் நூல். (மரபு : 96)

ஒவ்வொரு துறையிலும் அதற்கு முன் இதனை ஒருவரும் அறியவில்லை என்று முதல்முதலில் கூறப்படுவது முதல்நூல் ஆகும்.

இவ்வாறு முதல்வன் இயற்றிய முதல்நூலினை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுவது வழிநூல் ஆகும். (மரபு : 97)

இவ்வழிநூல் நான்கு வகைப்படும் என்பர் உரையாசிரியர். அவையாவன

1. தொகைநூல் முதல்நூலில் விரிவாகச் சொல்லப்பட்டதைத் தொகுத்துக் கூறல்.
2. விரிநூல்: முதல்நூலில் தொகுத்துச் சொல்லப்பட்டதை விரித்துக் கூறல்.
3. தொகைவிரிநூல்: தொகுத்தும், விரித்தும் கூறுதல்.
4. மொழிபெயர்ப்பு: பிறமொழி நூல் ஒன்றை மொழிபெயர்த்துத் தமிழில் செய்தல். (மரபு : 98,99)

**நூலுக்குரிய இலக்கணம்:**

சூத்திரம் மற்றும் காண்டிகையால் பொருளை வகைப்படுத்திக் கூறும்போது பத்துவகை குற்றங்களும் இல்லாமல், நுண்மையாகிய முப்பத்திரண்டு வகையான தந்திர உத்திகளும் பொருந்த அமைவதே நூல் ஆகும். (மரபு:100)

இதுவேயன்றிச் சூத்திரத்திற்கு உரையை விரித்துக் கூறும்போதும், சூத்திரத்தின் பொருள் விளங்கக் காண்டிகை உரை கூறும்போதும், இப்பொருள் இவ்வாறு கூற வேண்டும் என்று விதித்தலும், இப்பொருள் இவ்வாறு கூறல் கூடாது என்று விலக்கலும் என்ற இருவகையோடு பொருந்தியும் அமைவது நூல் என்பர் தொல்காப்பியர். (மரபு : 101)

மேலே சொல்லப்பட்ட தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்ப என்று சொல்லப்பட்ட நான்கு வகையாலும் சொல்லப்பட்ட பொருளோடு சில எழுத்துக்களால் ஆகிய செய்யுளாகி, சொல்லக் கருதிய பொருளையெல்லாம் தன்னுள் கொண்டு, நுண்மையான பொருளை உடையதாக, பொருளுக்கு விளக்கம் தரக்கூடிய துணைச் சூத்திரங்களை கொண்டு, அரிய பொருளை உணர்த்தி பலவகையாலும் பயனைத் தரவல்லது சூத்திரம். இதனையே செய்யுளியலில்,

***"சூத்திரம் தானே***
***அடி நிழலின் அறியத் தோன்றி***
***நாடுதல் இன்றிப் பொருள் நனி விளக்கி***
***யாப்பினுள் தோன்ற யாத்தமைப்பதுவே"*** என்கிறார்.

### காண்டிகை இயல்பு:

குற்றமில்லாத சூத்திரம் சொன்ன பொருளைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் விளக்குவது காண்டிகை.

மேலும் சூத்திரம் சொல்கின்ற பொருளின்று விலகாமல், விரிந்த விளக்கங்களுடன் பொருந்தி, சூத்திரப் பொருளை விளக்குதற்குரிய வழிகளையும், எடுத்துக்காட்டுகளையும் பயன்படுத்தி பொருளை விளக்குவது என்றும் விளக்கம் தருகிறார். (மரபு : 103,104)

### உரையின் இயல்பு:

சூத்திரம் கூறுகின்ற பொருளே அன்றி, அந்நூல் பொருளுக்கும், யாப்பிற்கும் பொருந்தும் படியாக இன்றியமையாத விளக்கங்களை எல்லாம் உரைப்பது உரை ஆகும்.

மேலும் உரை என்பது கேள்வியும், விடையும் என்ற அமைப்பினைக் கொண்டு, ஐயம் மற்றும் மயக்கநிலையினை நீக்கி, பல்வேறுபட்ட நூல்களில் சொல்லப்பட்ட மேற்கோள்களை எடுத்துரைத்து அதன்வழி இதுவே நூற்பொருள் என்று தெளிய வைப்பது ஆகும். (மரபு : 105,106)

சூத்திரம், காண்டிகை, உரை என்ற மூன்றும் மேல்சொல்லப்பட்ட இலக்கணங்களுடன் பொருந்தி வருதல் சிறப்புடையது என்றாலும் நூலாசிரியரின் கருத்திலிருந்து மாறுபட்டு வருமே ஆயின் அது சிதைவு எனப்படும். (மரபு : 107,108)

வழிநூல் செய்கின்றவன் முதல்நூலை அடியொற்றிச் செய்தாலும், அவன் ஆற்றலுடையவன் அல்லன் என்றால் அது ஆற்றல் அற்றவனால் செய்யப்பட்ட வரம் போன்றது. (மரபு : 109)

(வாரம் : பாட்டில் பிறகூறு)

சிதைவு என்பது பத்துவகையான குற்றங்கள். இக்குற்றங்கள் இல்லாதபோதுதான் நூல் சிதைவின்றி அமையும்.

### பத்துவகைக் குற்றங்கள்:

1. கூறியது கூறல்: ஓரிடத்தில் கூறிய கருத்தினை மீண்டும் கூறுதல்.
2. மாறுகொளக் கூறல்: கருத்துக்கள் மாறுபடுமாறு கூறுதல், அதாவது 'தவம் நன்று' என்று ஓரிடத்தில் கூறிவிட்டுப் பின்பு அதே நூலில் 'தவம் தீது' என்று கூறுதல்.
3. குன்றக் கூறல்: சொல்ல நினைத்த கருத்துக்களுள் ஒருசிலவற்றைக் கூறாமல் விட்டு விடுதல்
4. மிகைப்படக் கூறல்: சொல்லவேண்டிய கருத்துக்களுக்குத் தேவையில்லாதவற்றையும் கூறுதல், அதாவது தமிழிலக்கணம் பற்றி விளக்கும் போது வடமொழி இலக்கணம் பறறிக் கூறுதல்.

5. பொருளில் கூறல்: முன்னும் பின்னும் வருகின்ற பொருளுக்கு ஒப்புமையின்றிப் பயனில்லாதவை கூறல்.
6. மயங்கக் கூறல்: கற்பாருக்குத் தெளிவு தோன்றாதவாறு குழப்பமாகக் கருத்துக்களைக் கூறல்.
7. கேட்போர்க்கு இன்னாயாப்பிற்று ஆதல்: சூத்திரம் இனிய ஓசை இல்லாமல் இருத்தல், அதாவது கற்பவருக்கு இன்பம் பயவாமை.
8. பழித்த மொழியால் இழுக்கக் கூறல்: உலக வழக்கத்திற்கு மாறுபட்டுக் கூறல்.
9. தன்னால் ஒரு பொருள் கருதிக் கூறல்: தானாகவே ஒரு பொருளைக் கருதிக் கொண்டு கூறல்.
10. என்ன வகையினும் மணங்கோள் இன்மை: எழுத்தினாலும், சொல்லினாலும், பொருளினாலும் மனம் கொள்ளும்படி (ஏற்கும்படி) கூறாமை என்ற பத்துமே ஈரைங் குற்றமாகக் கொள்ளப்பட்டது. (மரபு : 110)

இப்பத்து வகைக்குற்றங்களே அல்லாமல் கற்போர் ஆசிரியர் தம் கருத்தினை எதிர்மறுத்து உணருமாறு நூல் அமைவதும் குற்றமேயாகும். (மரபு:111)

எ-டு: பாவம் செய்தான் நிரயம்(நரகம்) புகுவான் என்பதைக் கருதி நூல் செய்கின்றவன். தவம் செய்தான் சுவர்க்கம் புகுவான் என்று கூறுதல். இதில் சுவர்க்கம் பெறுவான் என்ற பொருள் நிரயம்புகுவான் என்ற பொருளைத் தராமையால் இதுவும் குற்றமே என்கிறார்.

மரபியலின் இறுதி நூற்பா தந்திரவுத்தி பற்றி அமைகிறது. அதனைக் காண்போம்.

### 32 வகை உத்திகள்:

“உத்தி” என்பது கருத்துக்களை வெளியிட ஆசிரியரின் கையாளுகின்ற வழிமுறைகள் ஆகும்.

1. நுதலியது அறிதல்: சொற்பொருளே அன்றி அதன் கருத்து இது என்று கூறுதல்.
2. அதிகார முறை: உயர்திணை, அஃறிணை எனக் கூறிவிட்டு, பின்பு ஆடுஉ, அறிசொல், மகடூஉ அறிசொல் என விரித்துக் கூறுதல்.
3. தொகுத்துக் கூறல்: கருத்துக்களைத் தொகுத்து கூறுதல்.
4. வகுத்து மெய்ந் நிறுத்தல்: தொகைபடக் கூறியதை வகுத்துக் கூறுதல்.
   எழுத்துக்கள் முப்பது என்று கூறிவிட்டு அவற்றுள் குறில் ஐந்து, நெடில் ஏழு என்பன போன்று கூறுதல்.
5. மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்: முந்தின நூற்பாவுடன் பொருந்தும்படிக் கூறுதல்.
6. மொழியாததனை முட்டின்றி முடித்தல்: எடுத்துக் கூறாத பொருளையும் உரையில் எடுத்துக் கூறுதல்.
7. வாராததனால் வந்தது முடித்தல்: கருத்துக்களை வருவித்துப் பொருத்தமாகக் கூறுதல்.
8. வந்தது கொண்டு வராதது முடித்தல்.
9. முந்து மொழிந்ததன் தலைதடுமாற்றம் இலக்கணம் கூறுவதற்காக வரிசைப்படுத்திக் கூறப்பட்ட

பொருளை, ஒரு பயன் கருதி, அவ்வரிசையை முன்னும் பின்னுமாக மாற்றிக் கூறுதல்.

10. ஒப்பக் கூறுதல்: ஒரு பொருளுக்கு ஒப்பானவற்றை எல்லாம் கூறி முடித்தல்.
11. ஒருதலை மொழிதல்: நூற்பா பலபொருள் தோன்றுமாறு அமையின் அவற்றுள் ஒன்றனைத் துணிந்து கூறுதல்.
12. தன்கோட் கூறல்: பிற நூலாசிரியர் கூறியவாறு கூறாமல் தன் கோட்பாட்டைக் கூறல் வேற்றுமை தாமே எட்டு என்று கூறுவது.
13. உடம்பொடு புணர்த்தல்: சூத்திரத்தில் கூறப்பட்ட அமைப்பின்படியே இலக்கணம் கூறுதல்.
14. பிறன் உடம்பட்டது தான் உடம்படுதல்: பிற நூலாசிரியரின் கருத்திற்கு உடன்படுதல்.
15. இறந்தது காத்தல்: முன் சூத்திரத்தில் கூறாது விட்ட பொருளைப் பின்வருகின்ற சூத்திரத்தில் கூறுதல்.
16. எதிரது போற்றல்: பின்வருகின்ற சூத்திரப் பொருளைப் பின்வருகின்ற சூத்திரத்தில் சுட்டிக் காட்டுதல்.
17. மொழிவாம் என்றல்: சில பொருள்களைக் கூறி, அவற்றுள் ஒன்றனை இன்ன இடத்தில் கூறுவோம் எனல்.
18. கூறிற்று எனல்: ஏற்கனவே கூறப்பட்டது எனல்.
19. தான் குறிப்பிடுதல்: உலக வழக்கின்றி ஆசிரியர் தானே பெயரிடல்.
20. ஒருதலை அன்மை முடிந்தது காட்டல்: ஒரு கருத்ததைப் பிறபொருட்கும் பொதுவாக முடித்துக் காட்டல்.
21. ஆணை கூறல்: காரணம் காட்டாமல் தன் கட்டளை போல் கூறுதல்.
22. பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்: ஒரு சூத்திரம் பல பொருள்களைத் தருமாயின் அவற்றுள் நல்லதனைப் பொருளாகக் காட்டல்.
23. தொகுத்த மொழியான வகுத்தனா் கோடல்: தொகுத்துக் கூறிய சொல்லாலே பிறிதும் ஒரு பொருள் வகுத்துக் காட்டுதல்.
24. மறுதலை சிதைத்துத் தன் துணிபு உரைத்தல்: பிற நூலாசிரியன் கூறிய பொருளை மறுத்துவிட்டுத் தான் துணிந்த பொருளைக் கூறுதல்.
25. பிறன் கோட் கூறல்: பிற நூலாசிரியன் கூறிய கொள்கையை ஏற்றுக் கூறுதல். "வேற்றுமை தாமே ஏழென மொழிப" என்றாற் போலவன்.
26. அறியாது உடம்படல்: தான் ஒரு பொருளை அறியாத போது பிறா் கூறியவற்றிற்கு உடம்படுதல்.
27. பொருளிடையிடுதல்: தான் ஒரு பொருளை கூறும்போது, அதற்கினமான பொருள்களை எல்லாம் சோ்த்துக் கூறாமல், இடையீடுபடக் கூறுதல்.

பெண்மை சுட்டிய பெயர்களைக் கூறிவருகின்றவா். இடையில் ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி பற்றிக் கூறுதல் போன்றது.

28. எதிர்ப் பொருள் உணர்த்தல்: இனிக் கூற வேண்டுவது இது என்று உணர்த்துதல்.
29. சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல்: பரிநிலை எச்சம் முதலாகச் சொல்லப்பட்ட எச்சங்களைக் கொண்டு பொருளை விளக்குதல்.
30. தந்து புணர்ந்து உரைத்தல்: முன்னாயினும், பின்னாயினும் உள்ள சூத்திரத்தின் சொல்லை இடைநின்ற சூத்திரத்திலும் கொண்டு சேர்த்துப் பொருள் உணர்த்துதல்.
31. இரட்டுற மொழிந்து, இரண்டு சொற்கும் பொருள் கூறுதல்.
32. உய்த்துக் கொண்டு உணர்தல்: ஒரு சூத்திரத்திற்கு ஒரு பொருளை கூறி, அது அதற்குப் பொருந்தவில்லை என்று உணர்ந்தால் அது அதற்குப் பொருந்துமாறு எங்ஙனம் என்பதை உணர்த்துதல். (மரபு:111)

இவ்வாறு மேற்சொல்லப்பட்ட உத்திகளோடு பொருள் பொருத்தமுடைய பிற உத்திகள் வந்தால் அவற்றை ஆராய்ந்து மனத்தினால் தெளிந்து, ஐயம் நீங்க, சொல்லிய இனத்தோடு பாகுபடுத்தி உணர்க என்று மரபியல் இறுதி நூற்பாவில் கூறுகிறார். அவை, அரிமா நோக்கு, தவளைப் பாய்த்து, பருந்து விழுக்காடு, ஆற்றொழுக்கு, சொற்பொருள் விரித்தல் போன்றன.

இவ்வாறான நிலையில் பல்வேறுப்பட்ட மரபு நிலைகள் பற்றிய செய்திகள் மரபியலில் இடம் பெற்றுள்ளன.

## பயிற்சி வினாக்கள்

### I. குறு வினாக்கள்:

1. மரபியல் - பெயர்க்காரணம் தருக.
2. மரபியல் சுட்டும் இளமைப் பெயர்கள் யாவை?
3. மரபியல் தரும் ஆண்பால் மற்றும் பெண்பால் பெயர்களை வகைப்படுத்துக?
4. குருளை என்னும் இளமைப்பெயரின் மரபுகள் யாவை?
5. கன்று, குழவி – எவற்றிற்கான இளமைப் பெயர்கள்?
6. மக்கட்குரிய இளமைப்பெயர்கள் யாவை?
7. மரபியல் அடிப்படையிலான உயிர்பாகுபாட்டினை விளக்குக.
8. களிறு என்னும் ஆண்பாற்பெயர்க்குரிய விலங்குகளைச் சுட்டுக.
9. பிணவு, பிணவல் - எவற்றிற்குரிய பெண்பாற்பெயர்கள்?
10. அந்தணர்க்குரிய பொருட்கள் யாவை?
11. அரசர்க்குரியவை என்று மரபியல் வகைப்படுத்துகின்ற பொருட்கள் மற்றும் பண்புகளைக் குறிப்பிடுக.
12. படை வகை பெறுவோர் யாவர்?

13. வைசிகன் பெறும் வாழ்க்கை குறித்து எழுதுக.
14. புல், மரம் குறிப்பு வரைக.
15. செய்யுளில் மரபுநிலை பெறும் இடம் குறித்து எழுதுக.
16. முதல் நூல், வழி நூல் - விளக்குக.
17. சூத்திரம், உரை இவற்றின் இலக்கணம் தருக
18. பத்து வகைக் குற்றங்கள் யாவை?
19. உத்தி பற்றி சிறுகுறிப்பு வரைக.
20. மரபியல் புறநடை நூற்பாக்கள் தரும் செய்திகள் யாவை?

## II. கட்டுரை வினாக்கள்:

1. மரபியல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
2 ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் மற்றும் இளமைப் பெயர்கள் பற்றிய தொல்காப்பிய கருத்துக்கள் யாவை?
3. நால்வகை வருணத்தார்க்குரிய செய்திகளை மரபியல் கொண்டு தெளிவு செய்க.
4. நூல் வகைகளாக மரபியல் குறிப்பிடுவன யாவை?
5. சூத்திரம், உரை விளக்குக.
6. பத்துவகையான நூற்குற்றங்களை விளக்குக.
7. தந்திர உத்திகள் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.
8. உயிர்கள் பாகுபாடு என்ற பொருளில் தொல்காப்பிய மரபியல் தரும் செய்திகளைத் தெளிவு செய்க.

------------------------------------------------------

**கூறு 10**

**பொருள் இலக்கணக் கொள்கைகளின் விளக்கம்:**

தமிழ் காதல் - வ. சுப. மாணிக்கம் (நூல் முழுவதும்)

தனி நூலாக இருப்பதால் நூல் முழுவதையும் தனியே எடுத்து பயின்று கொள்ளவும்.

**வினாக்கள் அமையும் முறை:**

பகுதி அ (5 x 5 = 25 மதிப்பெண்கள்)

8 வினாக்களிலிருந்து ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

பகுதி ஆ (5 x 15 =75 மதிப்பெண்கள்)

8 வினாக்களிலிருந்து ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

-----------------------------------------